# நிலைத்த புகழ் இந்தியா

## இளமை இந்தியா, காலத்தை வென்ற நாகரிகம்




# அமீஷ்

வழங்கிய கட்டுரைகளும், உரைகளும்

## வெஸ்ட்லேண்ட் பப்ளிகேஷன் லிமிடெட்

# நிலைத்த புகழ் இந்தியா

1974-ல் பிறந்து, ஐஐஎம் கொல்கத்தாவில் படித்து. வங்கி அதிகாரியாக சலிப்புற்று ஆனந்தமான எழுத்தாளர் ஆனவர் அமீஷ். அவரது முதல் புத்தகமான மெலூஹாவின் அமரர்கள் சிவா முத்தொகுதியின் முதல் நூல் அடைந்த வெற்றி, பதினான்கு ஆண்டுகளாக பணியாற்றிய நிதிநிறுவன வேலையை விட்டுவிட்டு எழுத்தில் கவனம் செலுத்த ஊக்கம் தந்தது. வரலாறு தொன்மம், தத்துவம் இவற்றில் ஆர்வம் உள்ளவர், உலகின் அனைத்து மதங்களிலும் அர்த்தத்தையும் அழகையும் காண்பவர்.

அமீஷின் நூல்கள் 40 லட்சம் பிரதிகளுக்கும் அதிகமாக விற்றுத் தீர்ந்தன, 19 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

அமீஷ் தன் மனைவி பிரீத்தி மகன் நீல் ஆகியோருடன் மும்பையில் வசிக்கிறார்.

தொடர்புக்கு:

*www.authoramish.com*

*www.facebook.com/authoramish*

*www.twitter.com/authoramish*

# அமீஷின் பிற நூல்கள்

## மெலூஹாவின் அமரர்கள் (சிவா முத்தொகுதி 1)

கிமு 1900. புவியில் வாழ்ந்த மிகச்சிறந்த அரசர்களில் ஒருவனாகிய ராமன் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு உருவாக்கிய முழுமைபெற்ற பேரரசு மெலூஹா எனும் நாட்டை அந்தக்காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள் அறிவர். இப்போது அவர்களின் முதன்மை நதி சரஸ்வதி மறைந்துகொண்டு வருகிறது. கிழக்கு திசையிலிருந்து எதிரிகளின் தீவிரவாதத் தாக்குதல்களை சந்திக்கிறார்கள். புராண நாயகன் நீலகண்டன் இந்தத் தீமைகளை அழிக்கத் தோன்றுவானா?

## நாகர்களின் இரகசியம் (சிவா முத்தொகுதி 2)

தீயவனாகிய போர்வீரன் நாகா என்பவன் பிரகஸ்பதியைக் கொன்றுவிட்டு இப்போது சதியை தொடர்கிறான். தீமையை அழிப்பவனாக அறிவிக்கப்பட்ட சிவா, அரக்கனின் அழிவு காணாமல் ஓயமாட்டான். கடுமையாக போரிடுவான், சிவா முத்தொகுதியின் இரண்டாவது நூலாகிய இதில் நம்பமுடியாத ரகசியங்கள் வெளிப்படும்.

## வாயுபுத்ரர் வாக்கு (சிவா முத்தொகுதி 3)

சிவா தன் படைகளைத் திரட்டுகிறார். நாகர்களின் தலைநகர் பஞ்சவடியை அடைகிறார். தீமை இறுதியாக தன்னை வெளிக்காட்டுகிறது. தனது உண்மையான எதிரியுடன் நீலகண்டன் ஒரு புனிதப் போருக்குத் தயாராகிறார். அவர் வெற்றி பெறுவாரா? பரபரப்பாக விற்பனையாகும் சிவா முத்தொகுதியின் இந்த கடைசி நூலில் இந்த மர்மங்களுக்கான விடையைக் கண்டடைவீர்.

## ராம்-இக்ஷ்வாகு குலத்தோன்றல் (இராமச்சந்திரா தொகுதி 1)

ஒரு பயங்கரமான போர் உயிர்களைக் கொன்றது, அயோத்தியை பலவீனமாக்கியது. அழிவு மேலும் ஆழமாகிறது. இலங்கை மன்னனாகிய அசுரன் ராவணன், தோற்றவர்கள் மீது ஆட்சியை திணிக்கவில்லை. மாறாக அவன் வணிகத்தைத் திணிக்கிறான். பேரரசிலிருந்து செல்வம் உறிஞ்சப்படுகிறது. மக்கள் சகித்துக்கொண்டிருக்கும் துயரத்தின் ஊடாக, தங்களுக்குள் ஒரு தலைவன் இருப்பதை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை.

விலக்கி வைக்கப்பட்ட ஒரு இளவரசன். ராமன் என்று அழைக்கப்பட்ட இளவரசன் அமீஷின் இராமச்சந்திர தொடர்களில் காப்பியப் பயணத்தைத் தொடங்குவீர்.

**சீதை - மிதிலையின் வீராங்கணை (இராமச்சந்திரா தொகுதி *2)***
கி.மு 3400. இந்தியா ஒரு கைவிடப்பட்ட குழந்தை வயலில் கிடந்து கண்டுபிடிக்கப்படுகிறது. சூழ்ந்திருக்கும் ஓநாய்களிடமிருந்து ஒரு கழுகு பாதுகாத்துக்கொண்டிருந்தது. எல்லோராலும் ஒதுக்கப்பட்ட ஒரு சக்தியற்ற அரசுப்பகுதியான, மிதிலையின் மன்னரால் அவள் தத்தெடுக்கப்படுகிறாள். இந்த குழந்தை பெரிய உயர்நிலைக்கு வருமென்று யாருமே நம்பவில்லை. ஆனால் அவர்கள் தவறாக நினைத்தார்கள். ஏனென்றால் அவள் சாதாரணப் பெண் அல்ல. அவள் சீதை. ராமச்சந்திர வரிசையில் இரண்டாவது நூலோடு புராணம் உடனான பயணத்தைத் தொடருங்கள்: பிரதம மந்திரியான ஒரு தத்தெடுக்கப்பட்ட குழந்தையின் காலக்கிரம வளர்ச்சியைச் சொல்லுவது ஒரு மெய்சிலிர்க்கும் சாதனையாகும்.

அதிரடிச் செய்திகளாக உருவாகும் சில தற்கால விவாதங்களுக்கு விரிவான கருத்தை அறிய விரும்புகின்றவர்களுக்கு, அமீஷ் எளிதாகவும் ஆழமாகவும் எழுதி இதனைப் படித்தே ஆகவேண்டும் என்று உணரக்கூடிய ஒரு நூலாக உருவாக்கியுள்ளார். மிகவும் மாற்றுகருத்துகள் கொண்டதும் தற்போதைய பிரச்சனைகளாகவும் இருக்கக் கூடியதுமானவற்றை சமரசம் செய்து பாதிக்காத தெளிவோடு அமீஷ் எழுதியுள்ளார். ஓரினச்சேர்க்கையாளர்களின் உரிமைகளில் இருந்து ஒரேமாதிரியான சிவில் சட்டம் வரையில் அவர் உள்நுழைந்து பிரச்சனையில் மையக்கருத்துக்கே சென்று எழுதியுள்ளார். இந்திய புராணக் கதைகளுக்கு கவரக்கூடிய புதுமைதரக்கூடிய கருத்துருவாக்கம் தருவதோடல்லாமல் அவர் தன் தலைமுறையாளர்களில் ஒரு சுய சிந்தனையாளராகவும் கூட விளங்குகிறார்.

– அர்னப் கோஸ்வாமி

விமான நிலையப் புத்தகக் கடைகளிலிருந்து அவருடைய புத்தகங்கள் விற்றுத் தீர்ந்து விடுவதைக் கவனித்துக் கொண்டு பல ஆண்டுகளாக அமீஷ் அவர்களோடு நான் நன்கு பரிச்சயமாகி இருந்து வருகிறேன். பிற்காலத்தில் அவரைப்பற்றித் தெரிந்து கொண்டபோது, கடந்த காலத்தைப் பற்றிய பார்வையை வழக்கதிற்கு மாறான, சுயமான, கவரக்கூடிய

தன்மையோடு எடுத்துக்கூறும் ஆழமான சிந்தனைமிக்க மனத்தைப் பெற்றுள்ளார் என்பதை அறிந்தேன்.

– ஷேகர் குப்தா

புதிய, இளமையான தன்னம்பிக்கையுள்ள இந்தியாவைப்பற்றி மிகுந்த அதிகாரபூர்வமாக எழுதுபவர்களில் அமீஷ் த்ருபாதி ஒருவர். ராமாயணக் கதையை மீண்டும் எடுத்துக்கூறுவது உள்ளிட்ட அவருடைய புதினங்கள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. இந்தியாவை உலுக்கிக் கொண்டிருக்கும் சில சமகாலப் பிரச்சனைகள் பற்றியும் அவர் வெளிப்படுத்திக் காட்டுகிறார். குறிப்பிட்டத்தக்க பிரகாசத் தன்மையுடனும் இந்தியத் தன்மை அடிப்படையோடும் அவர் இதனைச் செய்துள்ளார். புதிய இந்தியாவினைப் புரிந்து கொள்வதற்கு நீங்கள் அமீஷ் எழுதிய நூல்களைப் படிக்க வேண்டியது தேவையாகும்.

– ஸ்வப்னா தாஸ் குப்தா

இந்தியாவின் மிகச்சிறந்த கதைச்சொல்பவர்களில் ஒருவரானவர் இன்றைய பற்றி எரியும் பிரச்சனைகளில் பார்வையைச் செலுத்தி காரணத்தையும் வரலாற்றையும் ஒன்றிணைத்து அந்த விவாதங்களை ஆர்வத்துடன் படிக்கக்கூடிய கட்டுரைகளின் மூலம் விவாதங்களைத் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார்.

– வீர் சாங்க்வி

***Westland publications ltd***
*61, II Floor, Silverline Building, Alapakkam Main Road, Maduravoyal, Chennai 600095.*
*93, I Floor, Sham Lal Road, New Delhi - 110002.*

*First Published in English as Immortal India by westland publications ltd 2017First Published in Tamil as Nilaitha Pughazh Indhiya by westland publications ltd 2017 inassociation with Mysticswrite Private Limited, Chennai*

*Copyright © Amish Tripathi 2017*

*All rights reserved*

*10 9 8 7 6 5 4 3 2 1*

*ISBN: 9788193432099*

*This book is sold subject to the condition that it shall not, by any way of trade or otherwise, be lent,resold, hired out, or otherwise circulated without the author's prior written consent, in any form ofbinding or cover other than that in which it is published and without a similar condition includingthis condition being imposed on the subsequent purchaser and without limiting the rights undercopyright reserved above, no part of this publication may be reproduced, stored in or introducedinto a retrieval system, or transmitted in any form or by any means (electronic, mechanical,photocopying, recording or otherwise), without the prior written permission of the copyright owner,except in the case of brief quotations embodied in critical articles or reviews with appropriate citations*

# நிலைத்த புகழ் இந்தியா

## இளமை இந்தியா, காலத்தை வென்ற நாகரிகம்

**அமீஷ்**

**வழங்கிய கட்டுரைகளும், உரைகளும்**

*தமிழில்*

*மிஸ்டிக்ஸ்ரைட்*

MYSTICSWRITE
Content Developers & Editors

பாவனா ராய் அவர்களுக்குக் காணிக்கை

என்னுடைய சகோதரி,
ஒரு ஞான யோகி, ஒரு தத்துவஞானி,
இந்திய அறிவுச் செல்வத்தை மரபுவழி
பெற்ற பெருமிதம் மிக்கவர்,
உலகளாவிய அறிவைத்தேடி நிற்பவர்,
எப்போதும் என் பாதைக்கு ஒளிதருபவர்,
மிகவும் முக்கியமானதாக என்னோடு இணைந்து வருபவர்

ஓம் நமச்சிவாய
உலகம் சிவபெருமானை தலைதாழ்த்தி வணங்குகிறது
நான் சிவபெருமானை தலைதாழ்த்தி வணங்குகிறேன்

ஜனனி ஜன்ம்பூமிஸ்சா ஸ்வர்க்கதபி கரியாசி
தாயும் தாய்நாடும் ஸ்வர்கத்தின் மேலானவை

- ராமாயணத்தில் இராமபிரான்

## பொருளடக்கம்


நன்றி!

நிலைத்த புகழ் இந்தியாவிற்கு அறிமுகம்

# மதமும் புராணத்துவமும்

**சிவபெருமான்: முரண்பாடுகள் கொண்ட தெய்வம்**
மாறுபட்டிருப்பதுதான் அவருடைய வழி. அவர் உருவாக்குகிற மிகப்பெரிய பக்தியின் ரகசியம் அதில் அடங்கியிருக்கிறது.

**சட்டவிதிகளால் அதனை நடத்துதல்; இராமபிரானின் வழி**
நம்முடைய வேலை நம்முடைய கடவுளர்களை மதிப்பிடுவது அல்ல. நம்முடைய வேலை அவர்களிடமிருந்து கற்றுக் கொளவதுதான். இராமபிரானின் கதையிலிருந்து நம்மால் என்ன கற்றுக்கொள்ள முடியும்?

**மதநம்பிக்கையில் மகிழ்ச்சியும் பெருந்தன்மையும்**
மதவாத தீவிரவாதத்தை மதநல்லிணக்கப் பெருந்தன்மையால் மட்டுமே வெற்றி கொள்ள முடியும், கற்பனை உலக எண்ணத்தாலோ, நம்முடைய உயர்ந்தநிலைக் குடும்பங்களால் மதச்சார்பற்றதான பிரசங்களாலோ அல்ல.

**பல்வேறு நம்பிக்கைகளின் கலந்துரையாடல்**
எல்லா மதங்களும் ஒரே மாதிரியாக இருக்கும் என்று சொல்ல முடியாது; அதற்குபதிலாக நாம் வேறுபாடுகளை மதிப்பது தேவையாகும்.

**நடைமுறை புராணங்கள்**
நடைமுறைப் புராணங்கள் தங்கள் ஆன்மாவை உறுதியாக வைத்திருக்கும் சில பழமையான கலாச்சாரங்களில் இந்தியாவும் ஒன்று. இது எப்படி நடந்தது?

**அடக்கமுடியாத சக்தி**
ஆழ்ந்த மதநம்பிக்கைகளை தாக்கிக் கொண்டிருப்பதை விட அவற்றிற்கு மறுகருத்துருவாக்கம் வழங்குதல் மூலம், இன்று பெண்களைப் பற்றி சமுதாயம் கொண்டிருக்கும் பார்வையை நம்மால் மாற்ற முடியும்.

### கடவுளின் நோக்கம்

கடவுள் நமக்கு முன்மாதிரி, அவர் நம்மோடு வாழ்கிறார்; நம்முடைய கடமை கற்றுக் கொள்வதுதான்.

### புராணங்களை மறுசீரமைத்தல்

நம்முடைய கடவுள்கள் இருந்தன என்று நான் நம்புகிறேன். அவர்கள் நம்முடைய முன்னோர்கள் என்று நான் நம்புகிறேன். நம்முடைய நரம்புகளில் அவர்களின் இரத்தம் ஓடுகிறது என்பதை நான் நம்புகிறேன்.

### ஆண்நிலை/பெண்நிலை வழி மற்றும் பிற கேள்விகள்

ஆண்நிலை மற்றும் பெண்நிலை வாழ்க்கைமுறை ஆண் மற்றும் பெண் என்பதில் எதையும் செய்வதில்லை. இது ஒரு வாழ்க்கை முறை பற்றியதுதான்.

### சிவபெருமானின் முந்நிலை முடிவுக்கு வந்தது எப்படி மற்றும் பிறகேள்விகள்

எதிர்காலத்தின் சிலசமயத்தில் வேறுவகையான முடிவை நான் வெளியிடக்கூடும்...

## சமூகப் பிரச்சனைகள்

### எல்ஜிபிடி உரிமைகள் மற்றும் 377 விதி

பழங்கால இந்தியா பெரும்பான்மை மக்களின் பாலுணர்வுச் செயல்பாடுகளில் அடங்காதவற்றின்மீது ஒரு பெருந்தன்மையான சுதந்திரப்போக்கை அனுசரித்தது என்பது இன்று அதிர்ச்சியூட்டக்கூடியதாகத் தோன்றலாம்.

### மதமாற்றங்கள் பற்றி

எல்லா வகையிலும் நேர்மையாகச் சொல்வதென்றால், மதமாற்ற முயற்சிகளினால் பொருளாதார இலாபம் இருக்கலாமேதவிர ஆன்மீக வழியில் இது எப்பொழுதுமே பெரும்பாலும் எதிர்மறையாகத்தானிருக்கும்.

### இந்தியாவில் மதவாத வன்முறை

உண்மையில் இந்தியா மதவாத வன்முறைகள் உருவாக்கும் இடமா? உண்மையில் அப்படியில்லை. இதனை தகவல்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

## நட்பிணக்கமாக விவாதித்தல்

ஊடகங்கள் விவாதிக்கும் தற்போதைய உத்திகளை கலந்து ஆலோசித்து, இந்த பிரச்சனைகள் அமைதியான மனத்துடன் அணுகவேண்டியதன் தேவையை உணர்ந்து தீர்ப்புகளைச் சொல்லுவதற்குமுன் சிறந்த புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்த வேண்டும்.

## சாதியமுறைக்குத் தடை

தற்போதுள்ள பிறப்பு அடிப்படையான சாதியமுறை இந்தியாவின் மீதுள்ள ஒரு களங்கமாகும். இது நம்முடைய பண்டைய கலாச்சாரத்திலிருந்து வேறுபட்டதாகும்.

## ஊழல்குற்ற நடைமுறைகள்

கடந்த காலத்தில் நாம் பாரம்பரியமாக ஊழலில் இருந்தோமா? இல்லை. இன்று நாம் பாரம்பரியமான ஊழலைப் பெற்றுள்ளோமா? இல்லை. காலமாற்றத்திற்கு ஏற்ப நாம் நம்முடையை குறிக்கோளை சாதாரணமாக மாற்றிக் கொண்டிருக்கிறோம்.

## பிரதிநித்துவ அரசு மற்றும் மக்களின் விருப்பம்

ஒரு தேர்தலின் நோக்கம் நன்கு நிர்வகிக்கக் கூடிய ஒரு அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பதுதான். நாட்டில் பல எண்ணங்கள் கொண்டிருக்கும் ஒரு அமைப்பை உருவாக்குவதல்ல.

## ஒருநேரத்தில் ஒன்று மட்டும் செய்க

ஒரு போட்டித்திறன் கொண்ட வங்கியாளர் மற்றும் ஒரு மகிழ்ச்சியான எழுத்தாளரின் காலம் என்ற கருத்துருவாக்கத்தைப்பற்றிய அணுகுமுறையில் மாற்றம்.

## பொருள்நிலைக் காலம்

இன்றையநிலை சமுதாய மாற்றத்தில் மிக அதிகமான சக்திமிக்க சாதனம் பணம் என்பதுதான். வன்முறை அல்ல. சிலர் இந்த காலத்தின் விதிகளை ஏற்றுக் கொள்ளாமல் துன்புறுகின்றார்கள்.

## அறநிலை மற்றும் உள்ளடக்கநிலை பற்றிய பழங்கால இந்திய அணுகுமுறை

குறிப்பிட்ட அணுகுமுறையில், தர்மத்தைப் பெறுகின்றவர் அதனை வழங்குபவருக்கு உண்மையில் அவரது கர்மாவின் சாதகத்தைச் செய்கிறார் என்பது நம்பப்படுகிறது.

### மதநம்பிக்கைப் பெருந்தன்மையாளர்களின் குரல்

புராணங்களை நவீனப்படுத்துவதும் சுற்றுப்புறத்திற்கு ஏற்ப மாற்றுவதும் ஆகிய மரபு இந்தியாவில் நடந்து வந்து கொண்டிருக்கும் ஒன்றாக இருக்கிறது. மதநம்பிக்கையும் பெருந்தன்மையும் ஒருங்கிணைந்து செல்கின்றன.

## வரலாறு

### ஆரியப் படையெடுப்புக் கொள்கைபற்றிய புராணக்கதை

ஆரியப் படையெடுப்புக் கொள்கை என்பது ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்ட ஒரு பெரிய கட்டுக்கதை.

### இளையோர், இந்தியர் மற்றும் துணிந்தநிலை அவமதிப்போர்

புரட்சிகரமான மற்றும் துணிந்தநிலை அவமதிப்போரைக் கொண்ட இந்தியாதான் மிகப்பெரிய இந்தியாவை முன்னரே குறிப்பிட்டுக் காட்டுவதாகும்.

### ஆங்கிலேய பம்பாய், ஆம்ச்சி (நம்முடைய) மும்பை

நம்முடைய ஆம்ச்சி மும்பையின் மக்கள், ஆங்கிலேயர்கள் உருவாக்கிச் சேர்த்து வைத்த செயல்பாட்டுத் தீமைகளை பெரும்பான்மை அளவுக்கு இந்த ஏழு தீவுகளிலும் சுத்தம் செய்து உள்ளனர்.

### நவீன இந்தியாவில் பிரித்தாளும் சட்டங்கள்

சுதந்திரம் அடைந்த இந்தியா என்ற நிலையில் இன்றும் உயர்ந்த இந்தியக் குடிமக்கள் இந்தியாவைப் பிரித்து வைத்துக்கொண்டு ஆங்கிலேய காலனிய கொள்கைகளைப் பின்பற்றுகிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது.

### மன்னியுங்கள்... வரலாற்றை மறக்காதீர்கள்

துன்பம் நிறைந்த கடந்த காலத்தை ஒரு நாடு எவ்வாறு சமாளிப்பது? மறுப்பினாலா வெறுப்பினாலா? அல்லது மூன்றாவது மாற்றுமுறை உள்ளதா?

### மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்கும் போராட்டம்

மத்தியில் அதிகாரக்குவிப்பாலா அல்லது அதிகாரப் பரவலாக்குதலாலா இந்தியா சிறந்து விளங்கும்?

### சக்தி உங்களோடு இருக்கட்டும்!

இன்றைய இளைஞர்கள்தான் சுதந்திரகாலத்தின் குழந்தைகள். ஒருநாள் அவர்கள் இந்தியாவைப் பெருமிதம் மிக்கதாக ஆக்குவார்கள்.

### வேதங்கள் கற்றல்

நம்முடைய வேதநிலை பரம்பரை ஒவ்வொருவருக்கும் சொந்தமானது. அதை நாம் போற்றிப்பாதுகாத்து அதிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

### வஜித் அலி ஷா: நுண்கலைத்திறனாளர்

மிகவும் இன்னல் நிறைந்த காலத்தில் நம்முடைய கலாச்சாரத்தின் முக்கியமான அம்சத்தை பாதுகாத்து வாழவைத்த இந்தியாவின் மிகச்சிறந்த மகனை நாம் நினைத்துப் பார்த்து மதிப்பளிப்போம்.

### எங்கு பேச்சு பயமின்றி இருக்கிறதோ...

வெளிப்படையாகச் சொல்வதென்றால் பேச்சுச் சுதந்திரம் இந்திய மதிப்பீடுகளில் மிகவும் சிறந்ததாகும்; அது 1951 ஆண்டின் முதல் சட்ட திருத்தத்தால் மறுக்கப்பட்டுவிட்டது.

### ஒரு அமைதியான புரட்சிக்காரன்

புரட்சியும் கோபமும் தேவைப்படும் பிரச்சனைகளை எப்போதும் அமைதிகாத்து கவனத்துடன் கையாள்வது பயனுள்ளதாக இருக்கும்.

## ஆழ்ந்த சிந்தனைகள்

### நான் ஏன் எழுதுகிறேன்

எழுத்துத்துறையில் என்னுடைய பயணத்தைப் பற்றிய தனிப்பட்ட கருத்துரை.

### அறிவியல், ஆன்மீகம் மற்றும் என்மகன் நீல்

பிரபஞ்சத்தின் ஒன்றுக்கு ஒன்று இணைந்து செயல்படும் தன்மைகளில் ஒன்றான ஆன்மீக முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கு என் மகன் நீல் எனக்கு உதவிபுரிந்தபோது.

### அறிவுகூர்மைமிக்க மூன்று பெண்கள்

என்னை ஆழமாகப் பாதித்த மூன்று நிகழ்வுகளின் விளக்கம். அவை அனைத்தும் என் வாழ்வில் பெண்கள் சம்பந்தப்பட்டவை என்பது சொல்லத்தேவையில்லை.

### ஒரு தேசப்பற்று பிரகடனம்

சுயதர்மம் தேசதர்மத்தைப்போலவே ஏன் முக்கியமானது? கட்டமைப்பு தேசப்பற்றைப் போலவே தனிப்பட்ட குறிக்கோளும் ஏன் முக்கியமானது?

# நன்றி!

இது புனைகதை அல்லாத என்னுடைய முதல் நூல். பல்வேறுபட்ட பொருளில் நான் சிந்தித்தவற்றின் தொகுப்பாக நான் எழுதிய கட்டுரைகள், நிகழ்த்திய உரைகள், பங்கேற்ற கலந்துரையாடல்கள் ஆகியவற்றின் மூலம் சீரமைமைக்கப்பட்ட வடிவமாக முக்கியமாக இது திகழ்கிறது.

என்னுடைய எண்ணங்களை வலுவாக்கவும், சிலநேரங்களில் உயர்வாக்கவும் உதவியவர்கள் பலர். மற்றும் சிலர் இந்த சிந்தனைகளை பொதுமக்கள் மத்தியில் வெளியிடுவதற்கு உதவினர். நான் அவர்களில் சிலருக்கு நன்றி கூற விரும்புகிறேன்.

என்னுடைய நாடான இந்தியா, செயல்பாடான என் கர்மாவின் நிலமாகும். பெரும்பாலான அளவில் என்னுடைய இந்திய பாரம்பரியத்தினால் நான் வரையறுக்கப்பட்டிருக்கிறேன். என்னுடைய எண்ணங்கள், என் மதிப்பீடுகள், என் வாழ்க்கை முறை ஆகியன என்னுடைய மண்ணின் காலாச்சாரத்தாலும் பாரம்பரியத்தாலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

என்னுடைய மகன் நீல் நான் பெற்ற ஆசிர்வாதம். இந்த நூலின் ஒரு கட்டுரையில் நான் விளக்கியிருப்பது போல, சில வகையில் அவன் எனக்கு ஆசிரியர்.

என் மனைவியான ப்ரீதி எனக்கு நெருக்கமான ஆலோசகர்களில் ஒருவர். என் சகோதரி பாவனா, என் மைத்துனர் ஹிமன்சு, என் சகோதரர்களான அனிஷ், அவிஷ் ஆகியோர் எனக்குப் பல விஷயங்களில் என் கட்டுரைகளுக்கும் உரைகளுக்கும் சிறப்புற அறிவுரை வழங்கினார்கள். என்னுடைய ஒவ்வொரு கட்டுரையையும் ஆழ்ந்து படிக்கத் தன் பொன்னான நேரத்தை ஒதுக்கி அவற்றின் பொருளை நுட்பமான முறையில் அலசி ஆய்ந்து எனக்கு ஆழமான அறிவுரைகள் வழங்கிய என் சகோதரி பாவனா சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். என்னுடைய மைத்துனர் ஹிமன்சு அவர்களும் என் மூத்த சகோதரர் அனிஷ் அவர்களும் கூட

சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். அடிக்கடி, அவர்கள் நான் எடுத்துக்கொண்ட பொருளைப்பற்றி பரந்து விரிந்த நிலையில் அறிவுரை வழங்கி சிலவேளைகளில் என்னுடைய உணர்ச்சி பூர்வமான ஆர்வத்திற்கு அவர்களின் உயர்நிலை அறிவைக்கொண்டு முழுமை வடிவம் பெறச் செய்தார்கள்.

தங்கள் தொடர்ந்த நம்பிக்கை மற்றும் அன்பிற்காக என் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களான உஷா, வினய், மீட்டா, டொனெட்டா, ஷெர்னாஸ், ஸ்மிதா, அனுஜ், ரூடா ஆகிய அனைவருக்கும் நன்றி.

என்னுடைய பதிப்பாளர்களான வெஸ்ட்லேன்ட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான கௌதம் அவர்கள் திறமை, அடக்கம், பழைய உலகப் பழக்க வழக்கம் ஆகிய அனைத்தின் அரிய இணைப்பாக இருப்பவர்.

இந்த நூலின் வர்த்தகப் பணியைத் திறம்படச் செய்த அப்ஹிஜித். அவரை எனக்குப் பல ஆண்டுகளாகத் தெரியும். அவர் எனக்குத் தெரிந்தவர்களில் மிகச்சிறந்த வர்த்தகத் திறமை கொண்டவர். இந்த நூலுக்கு அவர் அளித்த ஆதரவைப் பெறுவதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. வெஸ்ட்லேன்ட் நிறுவனத்தில் எனக்கு தொடர்பு மேலாளராக அமைந்து அங்குள்ள என் அனைத்து செயல்பாடுகளையும் மேற்பார்வையிட்ட நேஹா பல்வகைத் திறமை கொண்ட, ஆர்வமிக்க, கடின உழைப்பாளியான மேலாளர்.

என் பதிப்பு ஆசிரியர் சுதா. அவரோடு இப்போதுதான் முதல்முறையாகப் பணியாற்றி உள்ளேன். அவர் அமைதியான அர்ப்பணிப்புள்ள திறமைமிக்க பதிப்பாசிரியர். இது எனக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. எதிர்காலத்திலும் கூட அவரோடு பணியாற்றும் வாய்ப்பு கிட்டும் என நம்புகிறேன்.

என்னுடைய முகவரான அனுஜ். அவர் தொடக்க காலத்திலிருந்தே அங்கே இருந்து கொண்டிருக்கிறார். அவர் எனக்கு நிலைத்த ஆதரவாகவும் பக்க பலமாகவும் இருக்கிறார்.

சில செய்திப் பத்திரிகை நிறுவனத்தார் எனக்குத் தொடர்ந்து எழுதும் வாய்ப்பை அளித்தார்கள். (நான் எழுதுவதில் காலமுறையில் ஒழுங்காக இல்லாத போதிலும்) அதேபோல பிற ஊடக நிறுவனங்களும் ஒன்று ஒருமுறை அழைத்தன. அவற்றில் சிலவும் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. நான் அவர்களுக்கும்

நன்றிகூற விரும்புகிறேன்.

தி டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகையிலிருந்து ஸ்வாகதோ கங்கூலி மற்றும் நீலம் ராஜ் எனக்கு அவர்கள் பத்திரிகையில் எழுத வாய்ப்பளித்தமைக்கு நன்றி. மிகவும் முக்கியமாக அவர்களது அறிவுரை, ஆதரவு, பொறுமை (குறிப்பாக நான் சிலசமயங்களில் மாதக்கணக்காக ஒரு கட்டுரைகூட எழுதாமலிருந்தபொழுதும்) ஆகியவற்றுக்கு நன்றி.

தி ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையிலிருந்து ஸ்ரீவத்சா நிவாடியா மற்றும் விஜய செரியன் ஆகியோர் எனக்கு எழுத வாய்ப்பளித்து எப்போதும் ஆதரவும் மிகச்சரியான பதில் அளிப்பும் செய்து வந்தமைக்கு நன்றி.

தி ஆசியன் ஏஜ்/டெக்கான் ஹெரால்டு பத்திரிக்கையைச் சேர்ந்த சுபர்ணா ஷர்மா மற்றும் அமி ஃபெர்னான்டஸ் எனக்கு எழுத வாய்ப்பளித்தமைக்கு நன்றி. அவர்கள் எனக்கு நண்பர்களாகவும் ஆரம்பகால முதல் ஆதரவாளர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

தி டெலிகிராஃப் பத்திரிகையின் சம்ஹிதா சக்ரபோர்த்தி மற்றும் சுமித் தாஸ் குப்தா எனக்கு எழுத வாய்ப்பளித்தமைக்கு நன்றி. அதே அளவுக்கு முக்கியமாகவும் அவர்களின் அறிவுரைக்கும் பின்னூட்டங்களுக்கும் நன்றி.

என்னுடைய ஹிந்தி கட்டுரைகளுக்கு வாய்ப்பளித்த ராஜஸ்தான் குழும பத்திரிகைகளுக்கும் நன்றி.

என்னுடைய அஸ்ஸாமிய மொழி கட்டுரைகளை வெளியிட வாய்ப்பளித்த நியோமியா பார்தா இதழின் பனீந்திர குமார் தேவ்சௌதுரி அவர்களுக்கு நன்றி.

இன்டியா டுடே, தி வீக், அவுட்லுக், குட் ஹவுஸ் கீப்பிங், ஃபெமினா, தி ஸ்பீக்கிங் ட்ரீ ஆகிய இதழ்கள் ஒன்று ஒருமுறை என்ற வாய்ப்பைக் கொடுத்தமைக்கு நன்றி.

சதிஷ், ஸ்ரீவத்ஸ், கிருஷ்ணகுமார், தீப்தி, சங்கமித்ரா, நிதி, அருனிமா, சரிதா, அம்ரிதா, விபின், சத்ருகன், நவீன், சன்யோக், திவ்யா, சதீஷ், மது, சத்யஸ்ரீதர், ஜயசங்கர் மற்றும் என்னுடைய பதிப்பாளர்களான வெஸ்ட்லேன்ட் நிறுவனத்தின் சிறப்பு மிக்க குழுவினர் ஆகியோருக்கு நன்றி. அவர்கள் என்னுடைய எல்லா

புத்தக உருவாக்கத்திலும் பங்கேற்றவர்கள்.

என்னுடைய நண்பர் சாகர் புசல்கர், ஜோயல் டி' லீமா, அமித் ராஜ்பார் மற்றும் முற்றிலுமான திறமைமிக்க குழுவினர். அவர்கள் புகைப்படக் கலைஞர் வைபவ் ஷெட்ஜ் உடன் இணைந்து அட்டைப்படத்தை உருவாக்கினார்கள். அது சாதாரண மாதிரிபோல் தோன்றினாலும் பார்க்கும்போது திகைக்க வைக்கிறது!

ஹேமல், நேஹா, ஹிதேஷ், நடாஷா, கேன்டிடா மற்றும் கவர்ந்திழுக்கும் குழுவினர்களான இவர்கள் இந்த நூலுக்கான சமூக ஊடக முகவர். அவர்கள் கடின உழைப்பாளிகள், மிகவும் துடிப்பானவர்கள், ஆழ்ந்த அர்ப்பணிப்பு மிக்கவர்கள். எந்த குழுவிற்கும் அவர்கள் மிகப்பெரிய சொத்து போன்றவர்கள்.

மயங்க், விஷால், பிரியங்கா ஜெயின், தீபிகா, நரேஷ், தனிஷ், ஸ்ரேயா, அபிஷேக், மற்றும் மோவின் கலை குழுவினர். அவர்கள் இந்த நூலுக்கான தொடர்பு உத்திகளையும் வர்த்தக இணைப்புகளையும் நடத்திக் காட்டியவர்கள். அவர்கள் வலுவான பங்குதாரர்களாகவும் நான் இதுவரை செயல்பட்டவர்களில் மிகச்சிறந்த முகவர்களாகவும் இருக்கின்றனர்.

எனக்கு எழுதுவதற்கான அதிக நேரத்தை வழங்கி எல்லாவிதமான செயல்பாடுகளையும் மிகுந்த திறமையுடன் கையாண்ட என்னுடைய மேலாளர்களான மோகன் மற்றும் மெஹுல். மோகன் என்னுடைய தொடர்புகள், உரைகள், ஊடக பரிவர்த்தனைகள் ஆகியவற்றையும் மெஹுல் அலுவலக நிர்வாகத்தையும் கணக்குகளையும் நிர்வகித்துத் திறம்படச் செயல்பட்டனர்.

நிறைவாக ஆனால் குறைவென்று இல்லாமல் இருக்கும் வாசகர்களாகிய நீங்கள். என்னுடைய புனைகதை நூல்களுக்கு பேராதரவு வழங்கிய உங்களுக்கு நன்றி. இப்போது உங்களிடம் புனைகதையல்லாத ஒரு நூலை முன்வைக்கிறேன். உங்களுடைய தொடர்ந்த ஆதரவையும் அன்பையும் பெறும் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

# நிலைத்த புகழ் இந்தியாவிற்கு அறிமுகம்

அல்லாமா இக்பால் குணநலக் குறைபாடுகள் பெற்றிருந்தார். அவர் தன் மதிப்பீட்டில் தவறுகள் செய்துள்ளார். அவற்றில் குறைவான நிலையில் இல்லாத ஒன்று பாகிஸ்தான் பிரிவினைக்கான அவரது ஆதரவு நிலை. அது சுதந்திரத்திற்கு முந்தைய இந்தியாவில் மத நல்லிணக்க நல்லுறவில் விஷமான உணர்வு கலப்பதற்கு முக்கிய பங்காற்றியது. ஆனால் அது அவர் மிகவும் உயர்ந்த நிலை உன்னதக் கவிஞர் என்ற சிறப்பான உண்மையை மறைத்துவிடவில்லை. அவருடைய மிகச்சிறந்த உன்னதக் கவிதை வரிகளில் சில இதோ:

*Yunan-o-Misr-o-Roma sab mit gaye jahan se*
*Ab tak magar hai baki naam-o-nishan hamara,*
*Kuchh baat hai ke hasti mit'ti nahin hamari*
*Sadiyon raha hai dushman daur-e-Zaman hamara*
(கிரேக்கர்கள், எகிப்தியர்கள், ரோமர்கள்
எல்லோரும் இந்த உலகைவிட்டு
எப்போதோ மறைந்து போயினரே
ஆனால் நாமோ இன்றும் தான்
அழகாய் நிலைத்து வாழ்கின்றோம்
நமக்குள் ஏதோ சிறப்பாக
இருந்திட வேண்டும் சரிதானே
இருப்பில் இருந்து நாம் அழியவில்லை.
நூற்றாண்டுகளாக உலகம் தான்
நமக்கு எதிராய் இருந்ததுவே!)

இக்பால் சரியாகச் சொல்லியுள்ளார். பழங்கால கிரேக்க, எகிப்திய, ரோமானிய கலாச்சாரங்கள் இப்போது அருங்காட்சிப் பொருளாகி விட்டன. அவர்களின் அறிவும் தத்துவங்களும் யூத-கிருத்துவ மேற்கத்திய உலகத்தில் பரவியுள்ளது. பழங்கால மத்திய, தெற்கு, வடக்கு அமெரிக்கர்கள், இந்தோ ஐரோப்பிய வம்சத்தினர், ஸ்கான்டிநேவியர், மெசபடோமியர், மற்றும் பல வம்சத்தினர் கடைபிடித்த கலாச்சாரங்கள் இப்போது வழக்கில் இல்லை. ஆனால் பழமையான இந்திய கலாச்சாரம் அடிக்கடி ஏற்பட்ட வன்முறை மற்றும் அறிவார்ந்தநிலை என்று இருவகைப்பட்ட பெருமளவிலான தாக்குதல்கள் எல்லாவற்றையும் மீறி அப்படியே அழிந்து போய்விடாமல் இருக்கிறது.

மாறிவரும் காலத்திற்கேற்றவற்றை அறிவதற்குத் தேவையான அறிவும் நெகிழ்வுத் தன்மையும் சரிசம அளவில் கொண்டு இந்திய கலாச்சாரம் உருவாக்கப்பட்டிருப்பதான உண்மைக்கு இது ஒரு அத்தாட்சியாக உள்ளது. இன்றும் தன் அடையாளத்தை அது நிலைநிறுத்தி உள்ளது. நம்முடைய பழக்கவழக்கங்கள், சடங்குகள், தலைவர்கள், கதைகள், தத்துவங்கள், உணவுப் பழக்கங்கள், உலகளாவிய பார்வை இவற்றை உள்ளடக்கிய இந்திய கலாச்சாரம் இன்றும் பெரும்பாலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான கருத்துக்கள் அடிப்படையில்தான் இருக்கிறது. அந்த கருத்துக்கள் வேத காலம் தொடங்கியும் இந்துத்துவம், புத்தம் மற்றும் ஜைன கொள்கைகளிலிருந்தும் வந்து கொண்டுள்ளன. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக பல்வேறுபட்ட மேலாதிக்கங்களின் இணைப்புநிலையால் மேலும் உயர்நிலை பெற்றுள்ளது. இஸ்லாமும் கிருத்தவமும் மேற்கத்திய நாட்டிலிருந்து வந்திருக்கலாம், ஆனால் அவை ஊடும் பாவுமாக ஒன்றிணைந்து இந்திய துணைக் கண்டத்தின் கலாச்சாரத்திலிருந்து பிரிக்கமுடியாமல் அவை நெய்யப்பட்டுவிட்டன. நம் நாட்டின் வரலாற்றின் மூலமாக, உலகத்தில் உள்ள ஒடுக்கப்பட்டவர்களுக்கு அடைக்கலம் வழங்கியுள்ளமை தெரிகிறது. அதனால்தான் ஜோராஸ்டிரியமும் யூதமும் மற்றவற்றோடு இந்தியாவில் ஒரு பாதுகாப்பான இடத்தைப் பெற்றுள்ளன என்பதில் வியப்பில்லை. நாம் மரபுவழி நீதிகளில் ஈடுபடுள்ளவர்களாக அரிதாகவே இருக்கிறோம். நாம் எப்போதும் நல்லெண்ண வளர்ச்சியில் எப்போதும் சிந்தை வைத்துள்ளோம். சீக்கிய கொள்கைகள் நம்முடைய பழமையான தார்மீக தத்துவங்களுடன் புதிய மறுமலர்ச்சிகளும் ஒன்றிணைந்த அடிப்படையில் இருப்பதைப் பார்க்கலாம்.

இந்த நூலில், என்னுடைய கட்டுரைகள் மற்றும் உரைகள் மூலம் இக்பாலின் கேள்விக்கு நான் பதில் அளிக்க முயன்றுள்ளேன். இந்தியாவை சிறப்பானதாக்குவது எது? நாம் இன்று எப்படி வாழ்கிறோம் என்பதை உயிரோவியமாய் காட்டும் நம்முடைய பழமையான கலாச்சாரம் பற்றிய செய்தி என்ன? நம்முடைய முன்னோர்களிடமிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ள முடியும்? அதேசமயம் அதே அளவுக்கு முக்கியமானதாக நாம் நம்முடைய முன்னோர்களை விமர்சிப்பவர்களாக எந்த முறையில் இருக்க முடியும்?

இந்த எல்லா வினாக்கள் மற்றும் விடைகளின் மூலமாக, நான் பார்த்த நிலையில், இந்தியா எதிர்கொண்டுவரும் நவீன

பிரச்சனைகளை நான் விளக்குவதற்கு முயன்றிருக்கிறேன். ஏனென்றால் ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் எழுபது வயதுடைய ஒரு இளமையான நாடு. ஆனால் நம்முடைய நாடு மிகப்பழமையான நாகரீகத்தை தன்னுடைய உயிர்மூச்சாய்க் கொண்டுள்ளது.

பெரும்பாலான மனித வரலாற்றுக்கு, நம்முடைய முன்னோர்கள் செயல்படுத்திக் காட்டியபோது, இந்தியா உலகநாடுகளிடையே மிகவும் சக்தி வாய்ந்ததாக, செல்வ வளம் மிக்கதாக, சுதந்திர உணர்வுடையதாக, புத்தாக்கத் திறன் பெற்றதாக இருந்தது. நாம் துன்பகரமான சில நூற்றாண்டுகளையும் பெற்றிருந்தோம். அது நடந்தது. பல வருந்தத்தக்க சாதிய முறை போன்ற பல குளறுபடிகளும் கூட வேகமாக வளர்ந்தன. நம்முடைய முன்னோர்களிடமிருந்து கற்றுக் கொள்வதற்கும், சக்கரம் சுழல நாம் தோள்கொடுப்பதற்கும், மறுமலர்ச்சி காணவேண்டியவற்றில் மறுமலர்ச்சி அடைவதற்கும், உருவாக்கப்பட வேண்டியவற்றை உருவாக்குவதற்கும், நம்முடைய நாட்டை அதன் பழைய வரலாற்றில் மீண்டும் கொண்டு வருவதற்கும் இது நமக்கு ஏற்ற நேரம்.

இவை எல்லாவற்றையும் சொன்னபிறகு, நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கும் நாட்டுக்கான பயணம் இன்னும் அதிக தூரம் இருப்பதை நான் உணர்ந்திருக்கும் வேளையில் நான் இன்றைய இந்தியா பற்றிக் கேள்வி கேட்க வேண்டிய தேவை உள்ளது. இது நான் இந்தியாவைப்பற்றியும் இந்தியக் குடிமகன் என்பதைப் பற்றியும் மிகுந்த பெருமிதம் கொள்கிறேன் என்ற உண்மையை இது நீக்கிவிட முடியாது. நான் வாழ்வதற்கு வேண்டிய இடம் வேறு எங்கும் இல்லை. நான் இறக்க விரும்பும் இடமும் உலகில் வேறு எங்கும் இல்லை. என்னுடைய மறுபிறப்பிலும் கூட நான் இங்கேயே மறுபடியும் பிறக்க விரும்புவேன்.

ஜெய் ஹிந்த். இந்தியத்தாய்க்கே புகழ்.

# மதமும் புராணத்துவமும்

# சிவபெருமான்: முரண்பாடுகள் கொண்ட தெய்வம்

சிவபெருமான் என்னுடைய இளம் வாசகர்களில் ஒருவரால் கடவுள்களின் விந்தையான உடையணிந்தவர் என்று விவரிக்கப்பட்டார். நவீனகால ஆண்களிடமும் பெண்களிடமும் அவரை பிரபலமாக்கியிருக்கச் செய்வது எது என்று ஒருவர் வியப்படையக்கூடும்? இத்தனைக்கும் இவர், புலித்தோலின் மீது அமர்ந்திருக்கும் கட்டுப்பாடான ஞானியைப்போல் இருந்து, சாம்பலைத் தன்மேல் பூசிக் கொண்டிருப்பவராக, சுடுகாட்டு நண்பர்களுடன் தன் ஓய்வு நேரத்தில் பாங் (Bhang) குடிப்பவராகவும் இருந்து, சுடுகாட்டில் நடனமிடுபவராகவும் இருக்கிறார். இது ஒரு 'குளிர்ச்சியான' கடவுளாகத் தெரிகிறதா? இது முரண்பாடாகத் தோன்றுகிறது, சரியா? ஆனால் முரண்பாடகத் தோன்றுவதே அவருடைய வழி. அதில்தான் அவர் உருவாக்கும் அளவற்ற பக்தியின் பின்னணி அடங்கியுள்ளது.

நான் சிறிது விலகிச் சென்று, உங்கள் கவனத்திற்கு நீண்ட காலத்திற்கு முன்னே மறைந்துவிட்ட ஆங்கில எழுத்தாளர் சார்லஸ் டிக்கன்ஸ் என்பவரைக் கொண்டு வருகிறேன்; உண்மையில் சார்லஸ் டிக்கன்ஸின் எ டேல் ஆஃப் டூ சிட்டிஸ் என்ற நூலிலிருந்து ஒரு வரி: இதுதான் காலங்களில் சிறந்த நேரம், இதுதான் காலங்களில் மிக மோசமான நேரம். இது தற்போதைய உலகத்தை சுருக்கமாகச் சொல்வதற்கு எழுதப்பட்டிருக்க வேண்டும். நாம் சிக்கலான முரண்பாடுகள் உள்ள காலத்தில் வாழ்கிறோம், மேலும் அது புதிர்களால் மறைக்கப்பட்டிருக்கிறது. சில கருத்துகளில், மீண்டும் ஒருமுறை, இது காலங்களில் தீமையானது என்பது போல மிக நன்மையானதாக இருப்பதாகக் கூற முடியும். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முன்னே இருந்ததைவிட பெண்கள் சிறந்த உரிமைகள் அதிகமாகப் பெற்றவர்களாய் இருக்கிறார்கள, இதுவரை ஒருபோதும் இருந்திராத அளவுக்கு மதம்சார்ந்த பெருந்தன்மை வலுக்கட்டாயமாக உலகில் முன்னிறுத்தப்பட்டிருக்கிறது; தொழில்நுட்பமும் ஆர்வத்தன்மையும் பல்வேறுபட்ட நம்பிக்கை களுக்கிடையில்

ஆரோக்கியமான விவாதத்தை உருவாக்கியுள்ளது. இருந்தபோதிலும், மத அடிப்படைவாதம் உலகத்தை கிழித்துப் பிரித்துக் கொண்டிருக்கிறது.

ஒருவேளை மனித வரலாற்றில் முதல் முறையாக, முன்பெல்லாம் கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாத வாழ்க்கை முறையை ஏழைகள் உரிமையுடன் நினைத்துப் பார்க்க முடிகிறது. இருப்பினும் கழுத்தை நெறிக்கும் அளவுக்குள்ள பொருளாதார வளர்ச்சி சுற்றுச்சூழல் பேரழிவால் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. சமூக ஊடகங்கள் உலகம் முழுமையும் நெருக்கமாக்கி நம்முடைய வாழ்க்கையை மனிதர்கள் தாறுமாறாக கலந்திருக்கும் நிலையை உருவாக்கி இருக்கிறது. இருப்பினும், பலரும் தாங்கள் தனித்திருப்பதாகவே உணர்கிறார்கள். பாலுணர்வு ஊடகங்களையும் பொது இடத்தையும் நிலைநிறுத்தி வைத்துள்ளது. இருப்பினும், மக்கள் பாலுணர்வாலும் ஆசையாலும் நிறைந்த பயங்கரமான உணர்வால் தாக்கம் பெற்றுள்ளார்கள். நாம் காதல் பற்றிய மிகப்பெரிய பொதுநிகழ்வுகளாலும் கொண்டாட்டங்களாலும் சூழப்பட்டிருக்கிறோம். எளிமையான, ஆனால் ஆழமான, மென்மையான நிலைகொண்ட உணர்வுபூர்வமான காதல் காணாமல் போய்விட்டதாகத் தோன்றுகிறது.

ஆம், இந்த காலங்கள் வலுவான மாற்றம் மற்றும் மாறுபாடுகள் உள்ளதாக இருக்கிறது.

இத்தகைய காலங்களில் நம்மைப் பாதுகாக்க முடிகின்ற கடவுள் மாறுபாடுகளோடிருப்பதில் ஆச்சரியம் இருக்கிறதா? அமைதியான சமூகத்தில் ஒருவரும் அணிந்திராத உடைகளை அவர் அணிந்து கொண்டிருக்கிறார், ஆனால் மேல்நிலை மக்கள் விரும்புகின்ற பல்வேறு கலை வடிவங்களை ஆரம்பித்து வைத்தவர் கூட அவர்தான். அவர் நடனத்தின் கடவுளான நடராஜர். இந்திய இசைக்கலையை நாரத முனிவருக்கு நீலகண்டர் வெளிப்படுத்திக்காட்டியதாக பூராணம் கூறுகிறது. பூரண அறிவு நிறைந்த உலகை வெளிப்படுத்தும், ஆனால் உடலுக்குத் தீங்கு விளைக்கும் போதை நிறைந்த பாங் (Bhang) அருந்துகிறார், அதே சமயத்தில் அவர் உடல், மனம், உணர்வு, ஆன்மீக உணர்வு ஆகியவற்றை நெறிப்படுத்தும் யோகத்தின் தொடக்கம் கண்டவரான ஆதி யோகியாவும் கூட இருக்கிறார். அவர் பண்படாதவர்களிடமும் கொடூரமும் கூட மிக்கவர்களாக இருக்கும் சகாக்களிடமும் சகவாசம் கொண்டுள்ளார்.

இருப்பினும் அவருடைய மனைவியை அவர் மதிக்கும் பாங்கும் அன்பு செலுத்தும் முறையும் பெருமை மிக்கது. அவர் ஒரு கட்டுப்பாடு மிக்க துறவுநிலை விரும்பும் ஞானியாக இருந்து உலகத்தொடர்பு விட்டு விலகியிருப்பதற்கு முழுநிலையான குருவாக இருக்கிறார். ஆனால் அவர் தன்மனைவியுடன் பகிர்ந்து கொண்டிருக்கும் தாறுமாறான அன்பு காம உணர்வு நிறைந்ததாகும். சிவலிங்கமாக அவர் அளிக்கும் தோற்றம் பலரால் பிறப்பு உற்பத்திக்கான சின்னமாகக் கருதப்படுகிறது. சக்தியற்றவர்களுக்கும், பொருளற்ற ஏழைகளுக்கும் விளிம்புநிலை மக்களுக்கும் சார்பாக இருக்கும் அவர் ஒரு உயர்நிலையுடையோரை சாராத கடவுளாக இருக்கிறார். ஆனால் அதிகமான சக்திமிக்க மன்னர்கள் மிகப்பெரிய கோவில்களைக் கட்டி அவருக்காக அர்ப்பணித்துள்ளனர். வேதங்களை உருவாக்கியவர் என்பதால், காலங்கடந்தும் உள்ளவற்றை அறியும் ஆற்றல் பெற்றவர்; ஆனால் அவருடைய குழந்தைக்குணம் கொண்ட வெகுளித்தன்மை அவருடைய பக்தர்கள் அவரை போலேநாத் என்று அன்புடன் அழைக்கச் செய்கிறது. அவருடைய "ருத்ர உருவ" நிலைகண்டு பயம் கொள்ளலாம் என்றாலும் அவருடைய பக்தர்களின் அன்பு குறையாமல் இருக்கிறது.

ஒரு கடவுள் ஏன் இத்தனை மாறுபாடுகளுடன் இருக்க வேண்டும்? ஏனென்றால் அதுதான் நாம் விரும்புகின்ற ஒன்று.

அவர் நம்மைக் கவர்ந்திழுக்கிறார். அதன்பிறகு நம்மைச் சமன்படுத்துகிறார்.

அவர் கலைகளின் கடவுள் என்பதால் உயர்நிலை பெருமக்கள் சிவபெருமானால் கவரப்பட்டார்கள். உயர்நிலைப் பெருமக்கள் உண்மையான பக்தர்களாக இருந்தால், ஏதுமற்ற ஏழைகளிடம் மென்மையோடிருப்பதை மகாதேவரிடமிருந்து கற்றுக் கொள்கிறார்கள். சிவபெருமான் தங்களைப்போலவே தங்களுக்குள் ஒருவராக இருப்பதால் பொதுமக்களும் சிவபெருமானால் கவரப்பட்டுள்ளனர். ஆனால் சாதாரண மனிதனும் காலப்போக்கில் சிவபெருமானிடமிருந்து தானும் விரும்பவும் விரும்பியதை அடைந்து சாதிக்கவும் முடியும் என்பதை கண்ணப்ப நாயனாரைப்போலக் கற்றுக் கொள்கிறான். மகாதேவர் கஞ்சா போன்ற போதைப் பொருள் புகைக்கின்ற மனிதரையும் கவர்ந்திழுக்கலாம். ஆனால் அவன் உண்மையான பக்தனாக இருந்தால், நீலகண்டரின் தத்துவத்தில் ஆழ்ந்து

சென்று யோகமும் ஆன்மிகமும் உயர்ந்த நிலைக்குத் தன்னை உயர்த்தும் என்பதை அவன் அறிந்து கொள்கிறான். என்னைப்போன்ற முன்னாள் இறைமறுப்பாளன் சிவபெருமானின் பக்தி உலகத்தில் இழுக்கப்பட்டுள்ளேன். ஏனெனில்... அவர் அதனை விரும்புகிறார். அவர் தன்னுடைய பக்தர்களை மதிப்போடு நடத்துகிறார். மகாதேவரின் கதைகளில் நான் மிகுந்த ஆழ்ந்த புரிதலை மேம்படுத்திக் கொண்டதால், பகவான் நான் எல்லா மதங்களையும் கடவுள்களையும் மதிக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்பதைக் கற்றுக் கொண்டேன். பலசமயங்களில், நம்முடைய வேகமான சக்திமிக்க ஆனால் கடுமையான வாழ்க்கை முறைகளை சமன்படுத்துவதற்காகவும் அமைதி அடைவதற்காகவும் நாம் மாறுபாடுகளை அரவணைத்துக் கொள்ள வேண்டும். சிவபெருமான் மீது கொண்ட பக்தியின் மூலம் நான் என்னுடைய சமன்படு தன்மையையும் அமைதியையும் கண்டு கொண்டேன். இதைப்போல நீங்களும் பெறுவீர்கள் என்று நம்புகிறேன்.

---

**2012 ஆம் ஆண்டு தி வீக் இதழில் முதலில் வெளிவந்தது.**

# சட்டவிதிகளால் அதனை நடத்துதல்; இராமபிரானின் வழி

புராணங்கள் பற்றி எழுதுகிற எழுத்தாளர் என்பதில் உள்ள நன்மைகளில் ஒன்று அவர் இலக்கிய விழாக்களுக்கு அழைக்கப்படுவதுதான். அப்படிப்பட்ட ஒரு கூட்டத்தில் மத தத்துவங்கள் பற்றியும் மதக்கருத்துகொண்ட தனிபர்கள் பற்றியும் கடினமான கேள்விகளை எதிர்கொள்ளும் நிலையினைப் பெற்றேன். ஒரு சம்பவத்தைப்பற்றி விமர்சனம் செய்ய வேண்டிய காரணம் இருந்தபோது எவ்விதத் தயக்கமும் இன்றி அதனைச் செய்தேன். ஒரு தவறாகப்புரிந்துகொள்ளும் சூழ்நிலை எனக்கு வந்தநிலையில், அதனை அமைதியான சமத்துவ நிலையில் முயற்சித்தேன்.

ஒருவருடன் விவாதிக்கும்போது அந்த விவாதம் எனக்கு மனவருத்தம் தந்தது. ஒரு தத்துவார்த்த கருத்தை விளக்கும்போது நான் இராமபிரானைப்பற்றிய உதாராணம் ஒன்றைப் பயன்படுத்தினேன். அந்த நிகழ்ச்சிக்குப்பிறகு நண்பரான ஒரு பெண்மணி என்னோடு பேசினார். அவளையும் அதைப்போலவே அவளுடைய மதநம்பிக்கை பற்றியும் கொண்டுள்ள மதப்பெருந்தன்மை பற்றியும் நான் அறிவேன். இராமபிரானைப் பற்றிக் கூறும்போது மரியாதைக்குரிய 'பிரான்' (Lord) என்ற சொல்லை ஏன் பயன்படுத்தினேன் என்று கேட்டாள். நான் அவரை மதிக்கிறேன் என்றும் வழிபடுகிறேன் என்றும் கூறினேன். அவரை மதிப்பது எனக்கு திருப்தியளிக்கிறது. அவள் என்னை பெண்களை மதிக்கும் பெருந்தன்மை மிக்கவராக நினைப்பதாகக் கூறினாள்; பிறகு தன் மனைவியை நேர்மையற்ற முறையில் நடத்திய இராமபிரானை நான் எப்படி மதிக்கமுடியும்? என்று கேட்டாள். இராமபிரானின் மீது அதிக கடுமையான சில வார்த்தைகளை சொல்லத் தொடங்கினாள்.

வருந்தத் தக்கவகையில், இப்பொழுது இலகுமனப் பெருந்தன்மை யானவர்கள் வட்டத்தில் இராமபிரானை விமர்சிப்பது ஏறக்குறைய ஒரு வழக்கமாக ஆகிவிட்டது. இந்துத்துவத்தில், நாம் கேள்விகள் கேட்பதற்கு

ஊக்குவிக்கப்படுகிறோம். பகவத் கீதையில் இதனை மிகத்தெளிவாக பகவான் கிருஷ்ணர் வெளிப்படுத்தியுள்ளார். எதனைப்பற்றியும் ஆன்மிகத் தத்துவங்கள் மற்றும் கடவுள் பற்றியும் கூட நம்முடைய சொந்த கருத்துக்களை உருவாக்க நாம் அறிவுறுத்தப் படுகிறோம். ஆனால் நம்முடைய கருத்துக்களை முழுமை வடிவமைக்குமுன் அந்த பொருளைப் பற்றிய எல்லா அம்சங்களையும் ஆழ்ந்து சிந்திப்பதற்கும் ஆராய்வதற்கும் ஊக்குவிக்கவும் பட்டுள்ளோம். இராமபிரானைப் பற்றிய விஷயத்தில் காட்டும் நம்முடைய முயற்சியில் நாம் தவறிவிடவும் கூடும்.

இராமபிரான் "மிகச்சிறந்த உயர்மனிதர்" என்று அறியப்படுகிறார். "மர்யாத புருஷோத்தமன்" என்ற சமஸ்கிருத சொல்லுக்கான பெரும்பாலான ஆங்கில மொழிபெயர்ப்புகள் மூலம் இது புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இது ஒரு முழுமை பெறாத மொழிபெயர்ப்பு. ஆங்கிலத்தில் உள்ள 'ஐடியல் மேன்' என்பது 'புருஷோத்தம்' என்பதற்கான மொழிபெயர்ப்பு மட்டுமே. ஆனால் அதில் உள்ள 'மர்யாத' என்ற சொல்லுக்கான மொழிபெயர்ப்பு எங்கே? இது மதிப்பு அல்லது விதிகள் அல்லது பழக்க வழக்கங்கள் என்ற பொருளைக் கொடுக்கும். எனவே 'மர்யாத' மற்றும் 'புருஷோத்தம்" என்ற இரண்டு சொற்களையும் ஒன்று படுத்திப்பார்த்தால், பிறகு "விதிகளைக் கடைப்பிடிப்பதில் சிறந்தவர்" என்பது சரியான மொழிபெயர்ப்பாக இருக்கும்.

இந்து வேதங்களில் இராமாயணம் மற்றும் மஹாபாரதத்தின் பங்கு பற்றி இருக்கும் நிலையைப் பற்றி பார்ப்போம். இந்த இரண்டு இதிகாசங்களும் இறைவனால் அருளப்பட்டதாக உள்ள தத்துவங்களான வேதங்கள் மற்றும் உபநிஷதங்கள் கொண்ட "ஸ்ருதி" என்பதில் சேர்க்கப்படவில்லை. இராமாயணம் மற்றும் மஹாபாரதம் இரண்டும் இதிகாசங்கள் என்று வரலாறு என்பதன் மொழிபெயர்ப்பு போல அழைக்கப்படுகின்றன. "இப்படி நடந்தது" என்று நமக்கும் சொல்லும் கதைகள் அவை. நாம் கற்றுக்கொண்டு அவற்றிலிருந்து அறிவும் தெளிவும் பெறத்தக்க மனிதர்களின் உதாரணங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்துகின்றன. "விதிகளை சரியாகக் கடைப்பிடித்து வாழ்பவர்" என்பதற்கு இராமபிரான் மிகச்சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார். ஆகவே 'விதிகளை சரியாகக் கடைப்பிடித்து வாழ்பவர்" ஆகியவராகிய இராமபிரானின் வாழ்க்கையிலிருந்து நாம் என்ன கற்றுக் கொள்கிறோம்?

அத்தகைய உதாரண புருஷர்களான தலைவர்கள் சமூகம் முழுமையையும் மாற்றத்தக்கவர்கள் என்று நாம் கற்றுக் கொள்கிறோம். அவர்கள் தங்கள் மக்கள் வளமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்க்கை வாழ்வதற்கான நிபந்தனைகளை உருவாக்குகிறார்கள். 'விதிகளை சரியாகக் கடைப்பிடித்து வாழ்பவர்" ஆகிய இத்தகு தலைவர்களின் ஆட்சி, தொடர்ந்து இராம ராஜ்யம் போன்ற உன்னதமான தரமுள்ள பாதுகாப்பு ஆட்சியாக இருக்கும் என்பதில் ஆச்சரியமில்லை. வருந்தத்தக்க அம்சம் என்னவென்றால், இத்தகைய உதாரண புருஷர்களான தலைவர்கள் சமூதாயத்திற்கு மிகுந்த நன்மை விளைக்கும் அதேநேரம் தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் மிகவும் போராடுகிறார்கள். எப்பொழுது பார்த்தாலும், 'விதிகளை சரியாகக் கடைப்பிடித்து வாழ்பவர்"கள் குடும்பம் போராட்டமான வாழ்க்கையை எதிர்கொள்கிறது. 'விதிகளை சரியாகக் கடைப்பிடித்து வாழ்பவர்" தானேசுவட வருத்தம் நிறைந்த வாழ்க்கையையே நடத்துகிறார். சீதா தேவி இராமபிரானால் கைவிடப்பட்ட நிலையில் துன்ப வாழ்வை அனுபவித்ததை நாம் எல்லோரும் அறிவோம். அவளுடைய துன்பங்களை ஒருபோதும் குறைத்துக் கூறவில்லை. ஆம், அவர் அவளிடத்தில் நியாயமற்ற முறையில் இருந்தார். அதில் சந்தேகத்துக்கு இடமில்லை. அவர் தன்னுடைய பிள்ளைகளின் மீதும் நியாயமாக இருக்க முடியாததால் பிள்ளைகள் அவர்களின் இளம் வயது வாழ்க்கையில் தந்தை அன்பு இல்லாமல் இருந்தார்கள். ஆனால் இராமபிரானும் அதே அளவுக்குத் துன்பத்தை அனுபவித்தார் என்பது நம் எத்தனை பேருக்குத் தெரியும்? அவர் தன்னுடைய பூதவுடல் வாழ்க்கையை ஜலசமாதி என்பதிலேயே நீரில் மூழ்கி துறந்தார். வாழ்க்கையின் கடைசி தருணத்தில், இராமபிரான் சரயுநதிக்குள் செல்லும்போது "சீதா, சீதா, சீதா" என்று தன் மனைவியின் பெயரையே சொல்லிக்கொண்டு சென்றதாக புராணம் கூறுகிறது. அவரால் தன்னுடைய குடும்பத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்க முடியவில்லை; அவரும்கூட தானும் மகிழ்ச்சியாக இருக்கவில்லை. விதிகள் சமுதாயத்திற்கு ஒழுங்குமுறையைக் கொண்டு வருகின்றன; ஆனால் குடும்பத்துக்குள் அன்பைவிட விதிகள் மேலானவை என்று கருதியதால்தான் வழக்கமாக குடும்பத்தில் துன்பத்திற்கு வழியாக அது அமைகிறது.

வரலாற்றிலிருந்தோ புராணத்திலிருந்தோ உதாரண புருஷர்களாக 'விதிகளை சரியாகக் கடைப்பிடித்து வாழ்பவர்"களாக இருந்து உள்ள வேறு யாரையாவது நாம்

அறிவோமா? வேறு யாரேனும் உயர்ந்தநிலைத் தலைவர்கள், தாங்கள் வழிநடத்திய மக்களைக் கவர்ந்து, ஆனால் தனிப்பட்ட வாழ்க்கையில் அவர்களும், அதைப்போல அவரது குடும்பத்தினரும் முழுமையும் துன்பத்தை அனுபவித்தவர்கள் வேறு யாரும் இருக்கிறார்களா? மகாத்மா காந்தியடிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவர் நம் நாட்டை அமைதிவழிப் போராட்டத்தின் மூலம் சுதந்திரம் பெறுவதற்காக ஒன்றிணைத்தார். அவர் இந்தியாவிற்கு இல்லை உலகத்திற்கே வன்முறை ஒரு தீர்வல்ல என்பதைக் கற்பித்தார். இன்று நாம் அவரை தேசபிதா என்று போற்றிக் கொண்டாடுகிறோம். ஆனால் அவர் ஒரு தந்தை என்ற வகையில் மட்டுமல்லாமல், கஸ்தூரிபாவின் கணவர் என்ற வகையிலும் கூட சவாலான போராட்டங்களை எதிர்கொண்டார்.

எப்போதும் இந்தியர்களில் சிறந்தவர்களில் ஒருவராகத் திகழும் கௌதம புத்தரைப் பற்றி நாம் சிந்திப்போம். வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்வதற்கு நூற்றுக்கணக்கான மில்லியன் மக்களுக்குப் பயன்தரும் தத்துவங்கள் நிறைந்த வழிமுறையை அவர் விட்டுச் சென்றார். அவருடைய கனிவு, பொறுமை, அறிவு ஆகியவை போற்றி வழிபடத்தக்கவை. அவருடைய இடைநிலை வழிமுறை ஒழுக்கத்தை நிலைநாட்டுவதில் சிறப்பு மிக்கது. ஆனால் அவரும் கூட தந்தையாக, மகனாக, கணவராகப் போராடினார். ஞானத்தைத் தேடிச் சென்ற அவர் மனைவி யசோதாவையும், மகன் ராகுலையும் அவர்களை விட்டு விட்டு வெளியேறினார். உண்மையில் அவருடைய மகனுக்கு அவர் சூட்டிய பெயரே மனித உறவுகள் பற்றி அவர்கொண்டிருந்த கொள்கைகளின் விரிவாகவே உள்ளது. ராகுல் என்பதை மொழிபெயர்த்தால் சங்கிலி அல்லது விலங்குப்பூட்டு என்பதைக் குறிக்கிறது. அவர் தன் மகன் தன்னுடைய சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்தபோது, மகன் என்ற உறவை உதறித் தள்ளியபிறகே மற்ற சந்நியாசியைப் போல வரிசைப்படியே சேர்த்துக் கொண்டார்.

இத்தகைய மிகப்பெரிய ஆன்றோர்களைப் பற்றி ஆழமாகவும் அகலமாகவும் சிந்தித்துப் பாருங்கள். நாம் மிகச்சிறந்த வாழ்க்கையை வாழ் வதற்காக தங்கள் வாழ்க்கையை அவர்கள் அர்ப்பணித்த செயலுக்காக நாம் அவர்களை நேசிப்பதற்கு நமக்கு எல்லாவகையிலும் காரணம் இருக்கிறது. நாமும் அவர்கள் குடும்பத்தில் இருந்திருந்தால், நாமும் குறை சொல்வதற்குக் காரணம் இருந்திருக்கும்.

இப்போது எனக்குச் சொல்லுங்கள். இராமபிரானைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ஒன்றில் நான் தெளிவாக இருக்கிறேன். அதை நான் எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் சொல்கிறேன். ஜெய் ஸ்ரீ ராம். புகழ் இராமபிரானுக்கு.

---

**2014 ஆம் ஆண்டு ஹிந்துஸ்தான் டைம்ஸ் இதழில் முதலில் வெளிவந்தது.**

# மதநம்பிக்கையில் மகிழ்ச்சியும் பெருந்தன்மையும்

நான் ஒரு சிவ பக்தன். கடவுளர் வருவதற்கேற்ப நான் அந்த அளவுக்குப் பக்தியில் திளைக்கிறேன். எனவே, என்னுடைய வீட்டின் பூஜை அறையில் சிவனின் உருவத்தை நான் மத்தியில் வைத்திருப்பதில் வியப்பில்லை. ஆனாலும், அருகருகில் இராமபிரான், பகவான் கிருஷ்ணர், பகவான் கணேசர், பகவான் கார்த்திக், துர்கா தேவி, காளி தேவி, பார்வதி தேவி, சரஸ்வதி தேவி, இலட்சுமி தேவி போன்ற மற்ற இந்து கடவுளர்களின் உருவங்களையும் இன்னும் அதிகமான பிற கடவுள் உருவங்களும் இருக்கின்றன (இந்துக்களாகிய நாங்கள் பல கடவுள்களைப் பெற்றுள்ளோம்). அதே அளவு சம முக்கியத்துவத்துடன், காபா, அன்னை மேரி, ஏசுநாதர், கௌதம புத்தர், குருநானக், தீர்க்கதரிசி ஜராதுஸ்ட்ரா, டேவிடின் நட்சத்திரம் போன்ற படங்களும் நீங்கள் பார்க்கலாம். நான் வணங்கி எல்லோரையும் பணிகிறேன்.

என்னுடைய நண்பர்கள் நான் என்னுடைய பந்தயத்தை வேலியிட்டு வைத்திருக்கிறேன் என்றும் 'உண்மையான மதம்' எந்த ஒன்று என்ற கவலை இல்லாமல் 'கடவுளால்' நான் ஆசிர்வதிக்கப்படுவதை உறுதி செய்வதாகவும் கிண்டலான வேடிக்கையுடன் கூறுகிறார்கள்! ஆனால் நான் என்னுடைய நாட்டின் பண்பாட்டுக்கு மட்டும் உண்மை உள்ளவனாக இருக்கிறேன்.

என்னுடைய இளமைக்காலங்களில் நான் நாத்திகனாக இருந்தேன்; பல ஆண்டுகள் அப்படியே இருந்தேன். 90 ஆம் ஆண்டுகளின் ஆரம்ப காலத்தில் தொடர்ந்து கொண்டிருந்த மதக்கலவரங்கள் என்னை மதத்தைவிட்டும் விலக்கி வைத்திருந்தது. ஆழ்ந்த சமயப்பற்றுள்ள என்னுடைய தந்தை மததீவிரவாதத்தை மதச்சார்பின்மை தீவிரவாதத்தால் தடுத்துவிட முடியாது, ஏனெனில் எந்தவிதமான தீவிரவாதமும் பயனளிக்காது என்று விளக்கிக் கூறி முயற்சி செய்தார். மதசகிப்புத் தன்மை மதச்சார்பின்மை சகிப்புத் தன்மையோடு

வருவது ஒரு கொடியவன் மற்றவனை நீக்குவதுபோல் ஆகும் என்று நான் மறுப்பு கூறி சமாளித்தேன். அந்த சமயத்தில் என்னுடைய தந்தை என்னுள்ளே உட்புகுத்திய வார்த்தைகளை நான் புரிந்து கொள்ளவில்லை. இப்போது புரிந்து கொள்கிறேன்.

மத தீவிரவாதத்துக்கான விடை மதப்பெருந்தன்மையில் இருக்கிறது என்பதே அதற்கான விடை. இது ஒருவரை அடுத்த வெளிப்படையான கேள்விக்கு இட்டுச் செல்கிறது: பெருந்தன்மை என்பது என்ன? நவீன இந்திய பொது விவாதம் பெருந்தன்மை என்பதன் வரையறையை திரித்து மாற்றிவிட்டது. பெருந்தன்மையாக இருப்பது அடிக்கடி இடதுசாரி என்று தவறாக எண்ணப்படுகிறது. ஆனால் அநேக இடதுசாரிகள் தாங்கள் எதிர்க்கும் வலது சாரிகளைப்போலவே பெருந்தன்மை இல்லாமல் இருக்கிறார்கள்.

பெருந்தன்மை என்பதற்கான சிறந்த வரையறை புகழ்பெற்றதான, ஆனால் தவறாக, வால்டர் கூறிய அறிவிப்பில் இருக்கிறது; இது உண்மையில் ஈவ்லின் ஹால் எழுதியது: 'நீங்கள் சொல்வதை நான் மறுக்கிறேன். ஆனால் நீங்கள் அதைச் சொல்லும் உரிமையை நான் கடைசிவரை தடுப்பேன்"

இது மதப்பெருந்தன்மைக்கு எப்படிப் பொருந்திவரும்? மிகவும் எளிது. நான் எனது உண்மையான மதத்தில் இருக்கிறேன். நீங்கள் உங்கள் உண்மையான மதத்தில் இருக்கிறீர்கள். உங்கள் உண்மையை நீங்கள் பின்பற்றும் உரிமையை நான் மதிக்கிறேன். நீங்கள் என்னுடைய உண்மையை நான் பின்பற்றுவதை மதிக்க வேண்டும்.

சமுதாயம் அதன் உள்ளார்ந்த நிலையில் குருட்டுப் பிடிவாதத்தில் இருந்தால், உயர்ந்தவர்களால் (சிலசமயங்களில் அரசியல் அமைப்பு மூலம் வலியுறுத்தியும்) பெருந்தன்மை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். உண்மையில், பல சமுதாயங்களில் இந்த கொள்கையை நாம் கவனித்திருக்கிறோம். அதுபோல இந்தியாவில் இல்லை. நாம் நம்முடைய உள்ளார்ந்த நிலையில், மதச்சார்பும் பெருந்தன்மையும் முக்கியமானதாகக் கொண்டிருக்கிறோம். உண்மையில் நாம் ஈவ்லின் ஹால் கூறியதற்கு மேலாகவும் செல்கிறோம் என்று கூற முடியும். நாம் உள்ளுக்குள் 'மறுக்கும்' மதங்களை 'சகிப்புத்தன்மை' கொள்ளுமாறு போதிப்பதில்லை; நம்முடைய மதத்திலிருந்து வேறுபட்டிருக்கும் மதங்களை நாம் ஆழ்ந்து மதிப்பதுடன் அவற்றைத் தழுவுகிறோம். இந்த

தத்துவத்தை ரிக் வேதம் அழகாக எடுத்துரைக்கிறது: ஏகம் சத் விப்ர பகுதா வதன்டி - உண்மை ஒன்றுதான், ஆனால் அறிவாளிகள் அதனை பலவாகப் பேசுகிறார்கள் (அல்லது அறிகிறார்கள்). ராஜஸ்தானின் இஸ்லாமிய மங்கானியர்கள் இராமாயணம் அடிப்படையிலான பக்திப் பாடல்களை இஸ்லாமிய உணர்வு இப்படிச் செய்வதால் குறைவுபடாத நிலையில் பாடுகிறார்கள். மும்பையில் உள்ள மலை மாதா கோயில் கிருஸ்துவர்களோடு இந்துக்கள், இஸ்லாமியர்கள், மற்ற மதத்தவர்களையும் அவர்கள் சொந்தவழியில் வழிபடுவதற்கும் பிரார்த்திப்பதற்கும் சுதந்திரம் வழங்கியுள்ளது. அஜ்மீர் ஷரிஃப் என்பதை எண்ணிப்பாருங்கள், ஒரு இஸ்லாமிய சூஃபி பெரியவரின் அடக்கஸ்தலம் ஆண்டுக்கு ஆண்டு இந்தியாவின் எல்லா மதத்தவர்களாலும் சூழப்பட்டு வருகிறது. தீபாவளி வழங்கும் மகிழ்ச்சிப் பெருக்கை எண்ணிப்பாருங்கள், ஒளித்திருவிழாவாக கிருஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், இந்துக்கள் ஆகிய அனைவராலும் உண்மையுடன் கொண்டாடப்படுகிறது.

இந்த உணர்வு மிகச்சிறப்பானது மற்றும் இந்தியாவில் போற்றி வளர்க்கப்பட வேண்டியது: தன்னுடைய சொந்த மதத்தில் அசைக்க முடியாத உறுதியுடன் இருந்து கொண்டு மற்றவற்றை மதிப்பது மட்டுமல்லாமல் அவற்றைக் கொண்டாடும் இந்த செயல்பாடு. மத தீவிரவாதத்தை மதப்பெருந்தன்மையால் மட்டுமே வெற்றிகொள்ள முடியும். அழகிய கோபுரங்களாலோ, மதச்சார்பின்மை பற்றி நம் உயர்நிலை மனிதர்கள் பேசும் பேச்சாலோ அல்லது எழுதும் எழுத்தாலோ அல்ல.

இன்று நாம் பல சமுதாயப் பிரச்சனைகளைச் சந்தித்து வருகிறோம்; அவற்றில் பல சமூகத்தில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள சரிவின் விளைவாக ஏற்பட்டவை. மதப்பெருந்தன்மை கொண்டவர்கள் குறிப்பாக எந்த அரசியல்சார்பும் இல்லாதவர்கள் நம்மை எதிர்கொள்ளும் பெரும்பாலான பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்று நான் நம்புகிறேன். மக்கள் தங்களுடைய சமூக போராட்ட குணத்தை மாற்றிக் கொள்வது தங்கள் மதம் அப்படி மாற்றிக்கொள்வதை வற்புறுத்துகிறது என்று உணர்ந்தால் மிகவும் எளிதில் மாற்றிக்கொள்வார்கள்.

பெண்கள் சக்திவாய்ந்த பதவிகளில் இருக்கக்கூடாதா? உண்மையாகவா? சக்தி தேவியின் மிகப்பிரமாண்டமான

கதைகளைக் கவனித்து உங்கள் மனத்தை மாற்றிக் கொள்ளுங்கள். பெண்கள் மதச்சடங்குகளை நிறைவேற்றக் கூடாதா அல்லது ஆன்மிக நிகழ்வுகளில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாதா? ப்ரிஹதாரண்யக் உபநிஷதத்தில் மகரிஷி யக்ஞுவாக்கியருக்கும் மகரிஷிகா மைத்ரேயிக்கும் இடையில் நடந்த வாக்குவாதங்களைப் படித்துப்பார்த்து நீங்கள் எப்படி தவறான எண்ணத்தில் உள்ளீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். பெண்கள் வேலை பார்க்கக்கூடாதா? பிறகு முஹம்மது நபிகளின் மனைவி கதீஜா அல் குப்ரா வணிகம் செய்த பெண்மணி என்பதை எப்படி ஒருவர் விளக்கமுடியும். திருமணத்திற்கு முன்பு நபிகள் அவருக்காக வணிகப்பணி மேற்கொண்டார். பிறப்பு அடிப்படையிலான சாதி முறை விதித்து அமைக்கப்பட்டது. அதனை சவாலுக்கு ஏற்கக்கூடாது அல்லவா? மகரிஷி சத்யாகம் மற்றும் மகரிஷி வால்மீகியின் கதைகளைப் படியுங்கள், அவற்றிலிருந்து கற்றுக்கொண்டு இன்றைய நாளில் நிலவுகின்ற சாதி முறையை எதிர்த்து நில்லுங்கள். மத அறிவுரைகளையோ பழமையான பழக்கங்களையோ நம் அறிவுக்கு பொருந்தவில்லை என்பதற்காக அவற்றை நீங்கள் கேள்விகேட்க முடியுமா? உண்மையில் இல்லை. பகவத் கீதையின் 18 வது அத்தியாயத்தை ஆழ்ந்து உணர்ந்து படித்து பகவான் கிருஷ்ணர் அறிவுறுத்துகிறபடி நீங்கள் உங்கள் மனத்தை ஆட்படுத்தி முடிவுகளை எடுங்கள். உங்களின் மூத்தவர்கள் சொல்வது தவறாக இருப்பினும்கூட, அவர்களுக்கு மதிப்பளியுங்கள். நம்முடைய வேதங்கள் மாறுபட்ட சிலவற்றைக் கூறுகின்றன. தைத்திரிய உபநிஷதம் தெளிவாக கூறுகிறது: 'மதிப்பளிக்க வேண்டியவர்களுக்கு மதிப்பளியுங்கள்."

இந்தியாவின் சமூகப் பிரச்சனைகள் பலவற்றை மதப்பெருந்தன்மை எளிதாக்கிவிட முடியும். அத்தகைய நாம் நாட்டில் அதிக எண்ணிக்கையில் இருப்பதால், அது நமக்கு எளிதானதாகும். துரதிர்ஷ்டவசமாக, நாம் பொது விவாதத்தை மதச்சார்பின்மை மற்றும் மதவாத தீவிரவாதிகள் ஆகிய இருவருக்குத் தாரைவார்த்து விட்டோம். நாம் உயர்ந்தெழ வேண்டும். நாம் உரத்த குரல் கொடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட மதங்களின் பெருந்தன்மை விளக்கத்தை நாம் வெளிக்கொண்டுவர வேண்டும். இது நமது நாட்டுப்பற்றுக்கான கடமை!

**2013** ஆம் ஆண்டில் தி ஆசியன் ஏஜ் மற்றும் டெக்கான் க்ரானிகல் இதழ்களில் முதலில் வெளிவந்தது.

# பல்வேறு நம்பிக்கைகளின் கலந்துரையாடல்

உலக மதங்களின் பாராளுமன்றம் அண்மையில் என்னை ஒரு நிகழ்ச்சியில் உரையாற்றுவதற்காக அழைப்பு விடுத்தது. நான் பேசுவதற்காக கொடுக்கப்பட்ட பொருள்: 'பல்வேறு நம்பிக்கைகள் பற்றிய கலந்துரையாடலில் இளைஞர்களின் பங்கு' நான் எனக்குள்ளே எண்ணிப் பார்த்தேன்; நான் எதைப்பற்றிப் பேசவேண்டுமோ அதைப்பற்றி இளைஞரிடம் ஏன் கேட்கக்கூடாது? ஒருவேளை, ஒப்பிட்டுப்பார்த்தால் நாற்பது வயதுள்ள எனக்குத் தெரிந்திருப்பதைவிட அவர்களுடைய பங்களிப்பு என்ன என்பது அவர்களுக்கு அதிகமாகத் தெரிந்திருக்க வேண்டும்.

ஆகவே நான் சில மாணவர்களைச் சந்தித்தேன். அது ஒரு ஆர்வம் மிக்க கலந்துரையாடல் என்பதை நான் ஒத்துக்கொள்ள வேண்டும். சவாலாக இல்லாமல் சில இளைஞர்கள் 'பல்வேறு நம்பிக்கைகள் பற்றிய கலந்துரையாடல் ஒரு நல்ல யோசனை. நாங்கள் எங்கள் போக்கில் வாழ்க்கையை நடத்தும்போது வயதானவர்களாகிய நீங்கள் மிக நல்ல ஒரு பணியைச் செய்து வருகிறீர்கள்' என்று குறிப்பிட்டார். இன்னொரு இளைஞர் எதைப்பற்றியும் கவலைப் படாமல் அமைதியான பதிலை வைத்து இருந்தார். அவர் கூறினார்: 'ஒவ்வொருவரும் மற்றவரை இந்துக்கள் அல்லது இஸ்லாமியர்கள் அல்லது கிருஸ்தவர்கள் அல்லது சீக்கியர்கள்... போன்று பார்க்காமல் அவர்களை நண்பர்கள் என்று பார்ப்பது ஒரு தந்திரம்.'

சிந்தனைமிக்கவர்களான உங்களில் சிலர் இத்தகைய பதில்கள் சாதாரணமானவை என்று கருதக்கூடும் என்பதை நான் புரிந்து கொள்கிறேன். ஆனால் பலரும் மதம் என்பதைப்பற்றி மிகச்சாதாரண அணுகுமுறையைக் கொண்டுள்ளார்கள் என்பதே உண்மை (அவர்களுடைய மற்ற பொருள்களைப்பற்றிய அணுகுமுறை மிகுந்த சிந்தனை மிக்கதாக இருக்கலாம்). பெரும்பாலானவர்கள் தங்கள் சொந்த மதத்தின் வேதநூல்களைக்கூட உண்மையில் படிப்பதில்லை (மற்ற நம்பிக்கைகளை விட்டு விடுங்கள்). தங்கள் மத வாழ்க்கையை வரையறை செய்யும் சில சடங்குளை அவர்கள் அறிந்து மட்டும்

வைத்திருக்கிறார்கள். இந்த உண்மை நிலையைச் சொல்லிவிட்டால், இந்த எளிமையான யோசனைகள் போதிய பயன் கொடுக்கும்.

ஒரு இளைஞனிடமிருந்து இந்த பார்வை நோக்கு வந்தபோதிலும், அது என்னை சிந்திக்கத் தூண்டியது. கணவனோ மனைவியோ ஒருவர் மற்றவரின் மதநம்பிக்கையை மாற்றிக்கொண்டு பின்பற்றாமல், கலப்பு நம்பிக்கைத் திருமணங்களை நாம் ஊக்குவிக்க வேண்டும் என்று சொன்னார். இந்த வழியாக, பலர் தங்களுடைய மத நம்பிக்கையோடு மற்றவர்களின் நம்பிக்கைகளையும் கண்டுகொள்கிறார்கள். ஒருவேளை சில ஒற்றுமைகளைப் பார்ப்பதோடு அதைப்போலவே சில மாறுபாடுகளையும் பார்க்கிறார்கள் என்று அவர் உணர்ந்தார். பல்வேறுபட்ட மதச்சார்பு முறைகளில் முற்றிலும் ஒரேமாதிரியான முறைகளைப் பெற்றிருப்பது இயலாது என்பதால் வேறுபாடுகள் இருப்பது சரிதான். ஆனால் அந்த திருமண இணையர்கள், ஒன்றிணைந்த பாங்கில் இத்தகைய வேறுபாடுகளுடன் வாழக் கற்றுக் கொள்வார்கள். ஒரே உண்மைத்துவம் பின்பற்றுபவர்கள் உள்ளிட்ட ஒரேமாதிரியான மதநம்பிக்கையில் கூட, பல்வேறுபட்ட பிரிவுகளும் கருத்துருநிலைகளும் இருப்பதாக அவர் சொன்னார். இது சிந்தித்துக் கொண்டே இருக்கத் தூண்டியது... அந்த இளைஞனின் சிந்திக்கும் முறையில் ஆழ்ந்த தத்துவார்த்தம் இருக்கலாம்.

திருமணம் என்ற கருத்தைத் தள்ளிவைப்போம் என்பது என்னுடைய யோசனை, முக்கியமாக அது அன்பை அடிப்படையாகக் கொண்டது, மதச்சார்பு ஒற்றுமைகள் அல்லது வேற்றுமைகளை அல்ல. ஆனால் முக்கியமான கருத்து இதுதான் : மதங்கள் 'மாறுபட்டு' இருக்கின்றன. அது வருத்தப்படுவதற்கான ஒரு காரணமல்ல.

ஒருவேளை பல வேறுபட்ட நம்பிக்கைகள் பற்றிய பேச்சுகளில்தான் இங்கே பிரச்சனை அடங்கியிருக்கிறது. வேறுபாடுகளில் ஆரோக்கியமற்ற தன்மை உள்ளது. அடிக்கடி 'நாம் எல்லோரும் ஒன்றே' என்பதை நிரூபிப்பதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சி விரக்தி தருகிறது என்பதை ஒருவர் காண்கிறார்.

மனித உடலை உதாரணமாகப் பயன்படுத்தி என்னுடைய கருத்தை உரைக்க முயற்சிக்கிறேன். வளர்ந்து கொண்டிருக்கும்

நம்முடைய உடல்கூறு ஆதாரம் ஒரேமாதிரியானது. எந்த வகையில்? நன்று, தண்ணீரை ஒரு முக்கியமான மூலக்கூறாகக் கொண்டு, நாம் எல்லோரும் ஒரே இரசாயனங்களிலிருந்து ஒரே அளவுடன் கொண்டு உருவாக்கப்பட்ட கரிம அடிப்படை உயிர் உருவங்கள்தான். ஆகவே, அடிப்படை ஆதாரம் ஒன்றே என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். நாம் இறக்கும்போதும் உடல்சிதைந்து அழிந்து போனபிறகு நாம் உருவாக்கப்பட்ட இரசாயணங்களுக்குத் திரும்புகிறது. ஆகவே இந்த வழியில் ஒவ்வொரு தனிமனித உடம்புக்கும் 'தோன்றும் ஆதாரமும்' 'முடிவில் அடையும் நிலையும் ஒன்றாக இருக்கிறது. ஆனால் நம்முடைய உடல் வடிவங்கள் இன்று ஒரேமாதிரி என்பதை இது குறிப்பிடுகிறதா? சிலர் உயரமாகவும் சிலர் குட்டையாகவும் இருக்கிறார்கள். சிலர் குண்டாகவும் சிலர் ஒல்லியாகவும் இருக்கிறார்கள். சிலர் அழகாக இருக்கிறார்கள், சிலர் கறுப்பாக இருக்கிறார்கள். நாம் ஒன்றிலிருந்து உருவானோம், ஒன்றிலேயே முடிவடைவோம், அதுவும் ஒற்றுமையோடு. ஆனால் இன்று மாறுபட்டு இருக்கிறோம். நாம் போடம்கின் போன்ற ஒரேமாதிரித் தன்மையை வலியுறுத்த முடியாது.

இதுவேதான் ஆன்மாவையும் ஆவியையும் பற்றியது. அவற்றின் தொடக்க ஆதாரங்கள் ஒன்றாய் இருக்கலாம். முடிவும் கூட ஒரேமாதிரியாக இருக்கலாம். ஏனென்றால் ஆரம்பமும் அதேபோல முடிவும் ஆகிய இரண்டும் இறைவனிடத்தில் உள்ளது. ஆனால் நாம் இன்று இருப்பதுபோலவே உயிரிலும் வேறுபட்டு இருக்கிறோம். மதமும் ஆன்மிகமும் ஆன்மாவின் பயணத்திற்கு உதவி செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. இன்று நாம் வேறுபட்டிருப்பதால், நம்முடைய பயணங்களும்கூட வேறுபட்டிருக்கும். சில ஆன்மாக்கள் இந்துத்துவ வழியில் ஆர்வமும், சில இஸ்லாம், சில கிருஸ்துவம், சில புத்தயிசம், சில சீக்கியிசம் அல்லது மற்ற நம்பிக்கை என்று நம்பிக்கை வழியைத் தேடக்கூடும். சில ஆன்மாக்கள் கடவுள் நம்பிக்கை இல்லாத வழியிலும்கூட ஈர்க்கப்படலாம். அது சரி. நம்முடைய ஆன்மாவுடன் ஒத்துள்ள வழியில் நாம் நடக்க வேண்டும்.

நம்முடைய பாதைகள் வேறுபட்டிருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எல்லோரும் ஒரே பாதையில் நடக்க முடியாது. ஒரே மதத்தைப் பின்பற்ற முடியாது. 'பிரபஞ்ச மதிப்பீடுகள்' என்பதிலும்கூட ஒரேமாதிரி பின்பற்ற முடியாது. அதன்விளைவாக, மற்றவர்களின் பாதையை மதிப்பிடுவதை

விட்டும் அல்லது இல்லாதிருக்கும் இடத்தில் ஒரே மாதிரித்தன்மையை வற்புறுத்துவதிலிருந்தும் விலகியிருக்க வேண்டும். வேறுபாடுகளுக்கு மதிப்பளிக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டியது தேவையாகும். இது ஒரு போட்டியல்ல. நம் மற்ற மதங்களைப் 'பொறுத்துக் கொள்வது' மட்டும் போதாது, ஆனால் அவைகளை மதிப்பதற்கும் கற்றுக் கொள்ள வேண்டும். நான் உங்கள் பாதையை மதிக்கிறேன். நீங்கள் என்னுடையதை மதிக்கிறீர்கள் (இது முக்கியமானதாக இருந்தாலும் : மதிப்பது என்பது இருவருக்கும் பொதுவானது, ஒருவழிப்பாதையல்ல).

எல்லா மதங்களிடையேயும் சில தனிப்படுத்திக் காட்டிகிற ஒற்றுமை இல்லை என்றால், அதன்பிறகு பல்வேறுபட்ட நம்பிக்கைகள் பற்றிய கலந்துரையாடலில் என்ன பொருள் இருக்கிறது? நம்முடைய ஒரே தனித்தன்மையாய் இருக்கின்ற முக்கிய வேரான மனிதத் தன்மை என்பதை ஒருவர் திருப்தி செய்ய வேண்டும் என்று நான் நினைக்கிறேன்: அறிவார்ந்த நிலைக்கு ஆர்வம். மற்ற உயிர்கள் மற்றும் வாழ்க்கை முறைகள் பற்றியும் கற்றுக்கொள்ள முயல்வதுபோல, கடவுளைஅடைய உள்ள வேறுபட்ட வழிகளையும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அறிவின் தேக்கம் ஒரு வீணான ஒன்றாகும். அது நம் ஆன்மாக்கள் மேற்கொள்கின்றன இந்த மிகப்பெரிய பயணத்தில் ஒரு பங்கு வகிக்கிறது. இந்த வாழ்க்கையில் அல்லது தொடரவிருக்கிற ஒன்றில் இருக்கிறது.

---

**2015 ஆம் ஆண்டு செப்டம்பர் ஹிந்துஸ்தான் டைம்ஸ் இதழில் முதலில் வெளிவந்தது.**

# நடைமுறை புராணங்கள்

புராணங்கள் தோன்றியவை. பிறகு அவை மறைகின்றன. இந்த பிரபஞ்சத்தில் எல்லாவற்றிற்கும் இந்த வழிதான், கடவுளால் கூட இதனைத்தடுக்க முடியாது என்பதைக் காணமுடியும். ஸ்கேன்டினேவியாவிலிருந்து தோர் நாடு கடத்தப்பட்டார், ரா வின் சூரியன் எகிப்தில் வைக்கப்பட்டு ஜீயஸ் ஒலிம்பஸ் மலையில் புதைக்கப்பட்டுள்ளார். ஆனால் இராமபிரான் பற்றிய புராணம் இந்தியாவில் வலிமையான இடத்தைப் பெற்றுள்ளது. பகவான் கிருஷ்ணர் தொடர்ந்து மகிழ்ச்சியாக மயக்குகிறார். மிகப்பிரமாண்ட மகாதேவர் சிவபெருமான் நம்முடைய உள்ளங்களில் நடமிடுவதை நிறுத்தவில்லை. இந்த அவசரகதியான காலத்திலும் இந்திய இல்லங்களில் உள்ளவர்கள் அகண்ட இராமாயணம் படிப்பதால் காலத்தை அமைதியாக கழிக்கிறார்கள். இந்தியா முழுவதிலும் உள்ள மக்கள் குழப்பமான மகாபாரதப் பாத்திரங்களைப் பற்றி அக்குவேராகப் பிரித்து ஆராய்ச்சி செய்வதிலும் ஒருபோதும் களைப்படைவதில்லை. இது எதனால்? இந்தியாவில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தாண்டிய, நம்முடைய அன்றாட வாழ்க்கையை தொடர்ந்து வழிநடத்துகிற, உயிர்த்துடிப்போடு உள்ளுள் மிகுந்திருக்கிற பழைய நினைவுகளால் முடிவே இல்லாமல் நிலைத்திருக்கும்போது, மிகப் பழமையான நாகரிகங்களின் உயிரற்ற உடலாய் அவர்களுடைய புராணப்பரம்பரை ஏன் இப்படி விடப்பட்டு இருக்கின்றன?

நம்முடைய புராணங்கள் ஒப்பீட்டில் உயர்வாகத் தோன்றுகின்றன என்பதை ஒரு சாதாரண பகுப்பாய்வே முன்வைக்க முடியும். ஆனால் நான் துடுக்கான கர்வத்தை விட்டுக் காத்துக்கொள்வேன். சந்தேகமேயில்லாமல் அவை மகிழ்ச்சியூட்டக்கூடியவை. ஆனால் ஒலிம்பஸிலிருந்து வந்த ஜீயஸ் மற்றும் அவருடைய பலமுள்ள சகாக்கள் பற்றிய புராணங்கள் அதைப்போலவே அர்த்தத்தில் பிராமாண்டமாகவும் ஆழ்ந்தும் இருக்கின்றன. நோர்ஸ் என்னும் (மேற்கு ஜெர்மானிய) புராணத்தில் சுத்தியல் வீசுகின்ற தோர் ஒரு ஊக்கமூட்டும் உருவமாக இருந்தது (சிலர் வியாழக்கிழமையைக் குறிக்கும் 'தர்ஸ்டே' என்பதற்கு தோர்ஸ்டே என்பது அடிப்படை என்று

நம்புகிறார்கள்). இந்த சக்திவாய்ந்த கடவுள்கள் ஏன் ஒன்றுமில்லாமல் மறைந்தார்கள்? நடைமுறை நோக்கங்கள் அனைத்திலும் அவர்கள் ஏன் இறந்தார்கள்?

அவர்கள் தங்கள் மக்களின் வாழ்க்கையில் தொடர்பில்லாமல் போனதுதான் காரணம் என்று நான் நம்புகிறேன். ஏன்? ஏனென்றால் இந்த கடவுள்கள் தங்கள் பக்தர்களுக்கு ஏற்ப தங்களை நவீனப்படுத்திக் கொள்ளவில்லை. ஒலிம்பியன் கடவுள்களின் புராணங்கள் மிகப்பழங்காலத்திற்கு பொருத்தமாயிருந்தன. ஆனால் பொதுவான காலத்தில் முதல் ஆயிரம் ஆண்டில் அராபிய, ஹீப்ரு, அசிரிய போன்ற பல மதங்கள் வளர்ந்த காலத்தில் ஜீயஸ் மற்றும் அவரது குடும்பம் பற்றிய கதைகள் மாறாது அப்படியே இருந்தன, ஆனால் கிரேக்கர்கள் நவீனப்படுத்திவிட்டனர். அவர்களுடைய பழைய கடவுள்கள் சுதந்திர உணர்வும் பொறுமையும் இல்லாமல் தரம் குறைந்தும் சீர்கெட்டும் இருக்கத்தொடங்கினர். முன்னேறும் கிரேக்கர்களால் அவர்களுடைய ஒலிம்பியன் கடவுள்களை விரும்பவும் மதிக்கவும் முடியவில்லை; அதன் விளைவாய் அது அவர்களைக் 'கொன்று விட்டது.'

இது ஏன் இந்தியாவில் நிகழவில்லை? நம்முடைய புராணங்களை நவீனப்படுத்தவும் அந்த அந்தப் பகுதிக்கு ஏற்ப அமைக்கவுமான நம்முடைய மிகுந்த அறிவுத்திறன்தான் காரணமென்று நான் நினைக்கிறேன். என்னுடைய இந்த கருத்தை நம்முடைய மிகவும் பிரபலமான புராணங்களில் ஒன்றான இராமாயணத்தைக் கொண்டு தெளிவாக விளக்குகிறேன். 1980 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த ஒரு தொலைக்காட்சித்தொடர் இராமபிரானின் கதையை நம்முடைய காலத்திற்கு ஏற்ப நவீனப்படுத்தி இருந்தார்கள். இது பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த மகான் துளசிதாசர் எழுதிய இராமசரித்திரமானஸ் என்பதைப் பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டு இருந்தது. ஆனால் துளசிதாசரே கூட மூலநூலான வால்மீகி இராமாயணத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்து இராமபிரானின் கதையை காலத்திற்கு ஏற்ப மாற்றி நவீனப்படுத்தியுள்ளார். தென்னிந்தியாவில் உருவான கம்பராமாயணம் பன்னிரண்டாம் நூற்றாண்டுத் தமிழர்களுடைய உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கேற்றவாறு அமைந்தது. ஆசியநாடுகள் முழுவதிலும் நூற்றுக்கணக்கான இராமாயண வடிவங்கள் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. அவற்றில் உள்ளார்ந்த கருத்துகள் ஒன்றாகவே இருக்கின்றன,

ஆனால் உருவத்தில் நவீனப்படுத்துதலும் பகுதிக்கு ஏற்ப அமைத்தலும் நிகழ்ந்திருக்கிறது. பழமையில் உள்ள நல்லவற்றை ஏற்றுக் கொண்டும் ஆனால் புதிய யுகத்தின் சுவாரசியங்களை இணைத்துக் கொண்டும் நம்முடைய கடவுளர்கள் பற்றிய கதைகள் தொடர்ந்து தொடர்புடைய நிலையாக்கப்பட்டு நம்முடைய புராணங்கள் காலத்திற்கு ஏற்றவகையிலும், எப்போதும் உயிர்ப்புடன் இருக்குமாறும் உருவாக்கப்படுகின்றன. இது இந்து பண்பாக மட்டும் இல்லை. இந்தியாவில் பின்பற்றப்படும் எல்லா மதங்களாலும் மேற்கொள்ளப் படுகின்றன. இஸ்லாம் மற்றும் கிருஸ்தவமும் கூட அந்தந்தப் பகுதிக்கேற்றவகையில் ஜொராஸ்ட்ரியனிஸம் மற்றும் யூதாயிசம் போல அமைக்கப்பட்டுள்ளன. இந்திய தேவாலயங்களுக்குள் சென்று அன்னைமேரி இந்தியப் பெண்ணைப் போல சேலை அணிந்திருப்பதை காண்பது பொதுவான காட்சியாகும். மிகப்பெரிய சூஃபி மகான்கள் இஸ்லாமிய தத்துவங்களைப் போதிப்பதற்கு அந்தந்தப்பகுதி இந்திய புராணங்களையும் பரப்புரைகளையும் பயன்படுத்துகிறார்கள்.

தொகுத்துப்பார்த்தால், பெரும்பாலான மற்ற நாடுகளைப் போல் இல்லாமல், மதம் மற்றும் மதப்பெருந்தன்மை இந்தியாவின் வரலாற்றில் சண்டைநோக்கில் இருக்கவில்லை என்பதுதான் நம்முடைய புராணங்கள் நிலைத்து வாழக்காரணம். அதன்விளைவாக, பெரும்பான்மையாக பல்வேறு பட்ட மதங்கள் ஒன்றிணைந்து இருக்க கற்றுக்கொண்டு, திறந்த மனத்துடன் இருக்கின்றன: நம்முடைய தத்துவங்களை பொருத்தமுடையனவாக வைத்துக்கொண்டு நவீனப் படுத்தவும் அந்தந்தப் பகுதிக்கு ஏற்ப ஒத்து நிற்கவும் நாம் மகிழ்ச்சி அடைகிறோம்; அதனால் உயிர்ப்போடு இருக்கிறோம்.

உள்ளுணர்வுக்கு மாறாக, மதத்தை வளர்ப்பதற்கு பெருந்தன்மையும், பெருந்தன்மையை வளர்ப்பதற்கு மதமும் பயன்பட வாய்ப்புள்ளது. நம்முடைய இந்தியா, இந்த அழகான நாடு எப்போதும் உள்ளுணர்வுக்கு மாறாக இருந்து வந்துள்ளது!

---

**2011 ஆம் ஆண்டு தி டைம்ஸ் ஆஃப் இந்தியா இதழில் முதலில் வெளிவந்தது.**

# அடக்கமுடியாத சக்தி

என்னுடைய புத்தகம் தி இம்மார்டல்ஸ் ஆஃப் மெலுஹா என்பதில் ஒரு புதுமையான கருத்துருவாக்கத்தினால் சதி தேவி என்னுடைய கற்பனையில் நுழைய முடிவெடுத்தாள். அவளை தானே சிந்திக்கும் வலிமையுள்ள பெண்ணாகப் பார்த்தேன். அவளுடைய கணவரான சிவபெருமான், அவளை விரும்பி தனக்குச் சமமாக மதிக்கிறார். இன்று நினைவில் நிற்கும் புகழ்பெற்ற புராணங்களோடு ஒப்பிடும்போது சில அம்சங்களின் கூறுகள் மாறுபடுகின்றனவா? இருக்கலாம். ஆனால் நம்முடைய புராணக் கதைகளை குழப்பமான வகைகளில் அடிக்கடி மாறுபடும் செய்திகளுடன் இருப்பதாகக் கற்பனை செய்யும் வழக்கம் இந்துத்துவத்தில் உள்ளதா? மிக அழுத்தமாக ஆம் என்று கூறுகிறேன். அவர்களின் ஆத்மாவிற்குள் எதிரொலித்து அவர்களுக்கு அமைதி தருவதாக உள்ள புராண விருப்பத்துடன் அவர்கள் பணிவுடன் இருக்கிறார்கள்.

சிறிதளவு பின்னோக்கிச் சென்று இன்று இந்தியாவில் பெண்கள் நடத்தப்படும் வாழ்க்கையைப் பார்ப்போம். பெண்களின் நிலையில் மேல்மட்டத்தில் வெளிப்படையாகத் தெரியும் முன்னேற்றங்களுக்கு மாறாக, பல வழிகளில், நம்முடைய சமுதாயம் பின்னோக்கிச் செல்கிறது. புதிய தொழில்நுட்பங்கள் குற்றங்களை அழுக்கில்லாமல், கண்ணுக்கு 'கொடுமையில்லாமல்" தெரிவதுபோல் செய்யும் வழியை செய்துள்ளன. பெண் சிசுக்கொலை இதற்கு ஒரு கொடுமையான உதாரணமாகும்.

இந்தியாவில் பெண்கள் இன்னும் உரிமைகளுக்காகப் போராடுவது ஏன்? அதிகமாகியிருக்கிற கல்வியும் செல்வமும் வெளிப்படையான மாற்றத்தைக் கொண்டு வரவில்லை. உதாரணமாக பஞ்சாப், ஹரியானா, குஜராத் ஆகிய மாநிலங்களில் பெண் சிசுக்கொலை அதிக அளவில் நடைபெறுகிறது. நம்முடைய பழங்காலத்தையும் புராணங்களையும் காண்பதில் ஆணாதிக்கப்பார்வை இருப்பதுதான் இத்தகைய செயல்களுக்கு முக்கியமான காரணமாகும். நம்முடைய கடவுள்களேகூட பெண்கள்

துன்பத்திற்குக் காரணமானவர்கள் என்று நமக்கு வெளிப்படுத்துகிறார்கள்' என்ற காரணத்தால் பலர் இந்தக் குற்றங்களை தம் மனத்தில் நியாயப்படுத்துகிறார்கள்.

இருப்பினும், நம்முடைய வளமான பாரம்பரியம், வலிமையான பெண் மற்றும் தாய்மை சார்ந்த உணர்வுகள் உள்ளிட்ட மாறுபட்ட பார்வைக்கு உறுதியான அடிப்படையை வழங்குகின்றன.

உதாரணமாக, மிகவும் புகழ்பெற்ற துளசிதாசரின் இராமச்சரித்திரமானஸ் (இராமபிரானின் அடிப்படைக் கதையை பதினாறாம் நூற்றாண்டில் நவீனமயமாக்கியது) சீதா தேவியை மிகவும் அடக்கமாயுள்ள கட்டளைகளுக்கு அடிபணிகிற பெண்ணாகக் காட்டுகிறபோது, வால்மீகி முனிவர் எழுதிய மூல இராமாயணத்தில் தேவி சீதை மிகவும் துணிச்சல் மிக்கவராகவும் தன் மனத்தின் போக்கில் முடிவெடுக்ககூடியவராகவும் வர்ணிக்கப்பட்டுள்ளார். அத்புத் இராமாயணத்தின் (இராமாயணத்தின் நூற்றுக்கணக்கான வடிவங்களில் ஒன்று) சீதை வீராவேசமான போர்க்குணமிக்க பெண் தெய்வமாக இருக்கிறாள். மனுதேவர் இந்து ஆணாதிக்க கொள்கையை வலியுறுத்தியவராக இருந்த போதும் "எங்கு பெண்கள் மதிப்பளிக்கப் படுகிறார்களோ அங்கே கடவுள் மகிழ்ச்சியடைகிறார்" என்று ஆதரவான கருத்தைக் கூறியுள்ளார். இத்தகைய மாற்று எண்ணங்களை பெண்கள் தாழ்வானவர்கள் என்று நினைக்கின்றவர்களுக்கு பெருந்தன்மை மிக்க இந்துக்கள் வலியுறுத்திக் கூறவேண்டும். இருபால் ஊழியர் பணியாற்றும் இடங்களில் பெண்கள் பணியாற்றக்கூடாது என்ற தேவ்பந்தி பத்வா என்னும் கட்டளை இஸ்லாமியப் பெண்களுக்கு அநீதி இழைப்பதாக உள்ளது. மிகவும் ஆர்வமிக்க உழைப்பில் சிறந்து விளங்கிய கதீஜா என்ற பெண்மணி பற்றி முஸ்லீம் அல்லாதர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். அவர் பழங்கால அரேபிய நாட்டில் மிகவும் வெற்றிகரமான வணிகத்தை நடத்தி மிகப்பெரிய செல்வத்தை அறச்செயல்களுக்கு வழங்கியவர். அவருக்கு முகவராக விளங்கிய முகமது பின் அப்துல்லா என்பவரைப் பின்னர் திருமணம் செய்து கொண்டார். அவர் கதீஜாவைவிட பதினைந்து வயது இளையவர். அவருடைய கணவர் மிகவும் மதிப்பளித்து மனைவியை மிகவும் நேசித்தார். நாம் இன்று அவரை முகமது நபிகள் என்று அறிந்திருக்கிறோம். கதீஜா அவர்களைப் பற்றிய உதாரணத்தை பெருந்தன்மை மிக்க இஸ்லாமியர்கள் பெண்கள் ஒடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று

நினைக்கின்ற தங்கள் சக மதவாதிகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

வரலாற்று அடிப்படையிலும் மத அடிப்படையிலும் இன்று பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை முடித்து வைப்பதற்கு நம்முடைய பழங்காலக் கருத்துருவாக்கங்களைப் பயனுள்ள சக்திமிக்கவகையில் பயன்படுத்த வேண்டும். இதனை அறிந்திருக்கின்ற நாம் இதைப்பற்றி வெளிப்படையாகப் பேசும் தார்மீக கடமையைப் பெற்றுள்ளோம். மக்களை மையமாக வைத்துக் கூறப்பட்டுள்ள நல்ல நம்பிக்கைகளை எடுத்துரைத்தும் தாக்கும் நிலையில் இருப்பவற்றை விடுத்தும் செயல்படுவதே மனித இனத்தில் நல்ல மாற்றத்தை உருவாக்குவதற்கான சிறந்த வழியாகும். நாம் யார் என்கின்ற உணர்வில் மாற்றுநிலை நம்பிக்கைகளை மதிப்போடு வெளிப்படுத்திக் காட்டி செயல்பட்டால், இயற்கையான மாற்றத்தை நாம் உள்ளே வரச்செய்ய முடியும். வாழ்க்கையின் மென்மையான சிறப்பு அமைந்துள்ள இயற்கையான, அழிவில்லாத புரட்சி இதுவாகும்.

---

**2011 ஆம் ஆண்டு ஸ்பீக்கிங் ட்ரீ இதழில் முதலில் வெளிவந்தது.**

# கடவுளின் நோக்கம்

தாய்மார்களே சான்றோர்களே! காலை வணக்கம். இது ஒரு ஆச்சரியமான முறையில் வந்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் சிவபெருமானைப்பற்றி ஒருசார்பற்று இல்லாமலும் கொள்கை நோக்கோடும் இருந்து உரையாற்றுவது எனக்கு மிகவும் கடினமாகத் தோன்றுகின்றது. சிலர் குறிப்பிடுவதுபோலவே நான் சிவபெருமானின் ஆழ்ந்த பக்தர். ஆகையால் கல்லி பூரி (இந்தியா டுடே தனிப்பட்ட கூட்டங்களின் முதன்மை அமைப்பு அதிகாரியும் இயக்குநரும்) சிவபெருமான் வாழ்கிறாரா என்ற கேள்வியை என்னிடத்தில் கேட்டவுடன் ஆம் அவர் வாழ்கிறார் என்ற என்னுடைய பதில் உடனடியானதாகவும் தெளிவானதாகவும் இருந்தது. சிவபெருமான் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் என்னுடைய உள்ளத்திலும் ஒவ்வொரு சிவபக்தரின் உள்ளத்திலும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஆனால் இது ஒரு உணர்ச்சிகரமான அதேநேரம் பக்தி மிகுந்த வாதம். இது அறிவு சார்ந்தது அல்ல. இந்த தனிக்கூட்டம் வெளிப்படையாக அறிவுஜீவிகள் நிறைந்த கூட்டம். ஆகையால், நான் ஒரு மாற்றமான அறிவுபூர்வ வாதம் நிகழ்த்துவதற்கு ஏற்றவகையில் என்னுடைய மூளையின் அந்த செயல்பாட்டுச் செல்களைக் கசக்கிப்பிழிந்து முயற்சித்தேன்.

சிவபெருமானின் இருப்பைப்பற்றிய என் நம்பிக்கையைப்பற்றி முதன்முதலில் நான் கூறியது பக்தி யோகத்தின் வழியான அன்பும் அர்ப்பணிப்பும் பற்றித்தான். ஞான யோகத்தின் அறிவு வழியில் முயற்சிக்கிறேன். சிவபெருமான் வாழ்கிறாரா என்பதை வாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பாக நான் மதத்தின் நோக்கத்தைப் பற்றியே முதலில் கலந்துரையாடிப் பேசுகிறேன். அதன் பங்கு என்ன? ஏறக்குறைய எல்லா கலாச்சாரங்களிலும் இது சில வடிவத்திலோ அல்லது வேறு ஒரு வடிவத்திலோ இருக்கிறது. மிகவும் முக்கியமானதாக, இது ஏன் தொடர்ந்து நிலைத்திருக்கிறது? நாத்திகர்கள் மதம் என்பது மேல்குடிமக்கள் மக்கள்கூட்டத்தை கட்டுக்குள் வைத்திருப்பதற்காகப் பயன்படுத்தும் ஆயுதம் என்கிறார்கள். மார்க்ஸிஸ்டுகள் புகழ்பெற்ற வாக்கியமான, 'மதம் மக்களின்

போதை' என்பதைக் கூறுகிறார்கள். நேர்மையாகப் பார்த்தால், அந்த வாதம் கிண்டலானதும் மிகச் சாதாரணமானதுமாகும். ஏனென்றால் மார்க்ஸிஸம் எப்போதும் ஒரு மதம் போலவே நடந்து கொள்கிறது. இதன் ஆதரவாளர்கள் அடிக்கடி தங்கள் கருத்துக்களை உருவாக்குவதில் அறிவுசார் முழுமையைக் காட்டிலும் கொள்கைப் பிடிப்பை ஆதரிக்கிறார்கள். நம்பிக்கையாளர்களின் மதக்குழு தனக்கென கொள்கை வைத்துள்ளது. மதம் ஒரு ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட ஒன்று என்று அவர்கள் உங்களிடம் சொல்கிறார்கள். ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன (நான் இதனைச் சொல்ல வேண்டும்) இந்த கொள்கை அவை பின்னுக்குத் தள்ளலாம். உதாரணமாக ஆஸ்டின் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்தப்பட்ட ஒழுக்க நடைமுறை ஆய்வுகள். ஆனால் இந்த வாதத்திலும் கூட பிரச்சனைகள் இருக்கின்றன. உதாரணமாக, ஒழுக்க உணர்வு மிக்க வரைமுறை கொண்ட மிகப்பெரிய மதமான இஸ்லாம் பாகிஸ்தான் என்ற பாதுகாப்பற்ற ஒரு நாட்டினால் தீமையான குற்றங்களைச் செய்வதற்கு திரித்துக் காட்டப்படுகிறது. ஒரு சிலரால் வெறுப்பையும் வன்முறையையும் பரப்புவதற்கு இந்த வகையில் பயன்படுத்தப்படும் மதங்களில் இஸ்லாம் மட்டும் ஒன்றல்ல. இது ஒவ்வொரு மதத்திலும் நிகழ்கிறது. இந்த காலத்தில் இல்லை என்றாலும் கடந்த பல காலங்களில் இந்துமதமானாலும், கிருஸ்தவ மதமானாலும், புத்தமதமானாலும் யூதமதமானாலும் அல்லது வேறு எந்த மதமானாலும் அதில் இது நிகழ்ந்துள்ளது. எல்லா மதங்களுமே இவ்வாறு தவறாகப்பயன்படுத்தப்பட்டு வெறுப்பையும் பிரிவினையையும் வரலாற்றில் ஏதோ ஒரு சமயத்தில் வளர்த்தன என்பதற்கான நடைமுறை ஆதாரங்கள் உள்ளன.

ஆகவே அது நம்மை எங்கே விட்டுச் செல்கிறது? மதத்தின் நோக்கம் என்ன? நான் முன்வைக்க முடிந்தால், பழங்கால இந்தியர்கள் மதத்தை எப்படி அணுகினார்கள் என்பதைப் பற்றிப் பார்க்கலாம். நச்சிகேதஸ் என்ற தத்துவார்த்த எண்ணங்கொண்ட இளஞ்சிறுவனுக்கும் இறப்பின் கடவுளான எமராஜனுக்கும் இடையில் நடைபெற்ற வாக்குவாதம் அடிப்படையில் அமைந்தது கதா உபநிஷதம். ஆர்வமூட்டும் வகையில் எமராஜன் தர்மத்தின் கடவுளுமாவார். உண்மையில் பல பழங்கால மதங்களில் இறப்பும் தர்மமும் இணைந்தே இருந்தன. மீண்டும் கதா உபநிஷதத்திற்கு வந்தால், நச்சிகேதஸûக்கும் எமதர்ம ராஜனுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் ஆழ்ந்த

நிலையிலும் பொருள்பொதிந்தும் இருக்கிறது. அதன் முழுப்பொருளை உணர்ந்து கொள்வதற்கு நம்முடைய முழு வாழ்நாளையும் கூட செலவிட முடியும். இந்த அரங்கத்தில் எனக்கு அந்த முழுவாழ்நாள் இல்லை என்பதை வருத்தத்துடன் உணர்கிறேன். நான் அதன் ஒரு பகுதியுடன் நிறுத்திக் கொள்கிறேன். இந்த உரையாடல் முடிவுக்கு வரும் நிலையில் எமதர்ம ராஜனிடம் அதிகமான ஆழ்ந்த அறிவைப்பெற்ற நச்சிகேதஸ் தன்னுடைய உணர்வுகளிலிருந்தும் 'இறப்பிலிருந்தும்' விடுதலை பெறுகிறான். அவன் கடவுளை உணர்ந்தான். ஆகவே இதுவே கடவுளை உணரும் எல்லோருக்கும் ஏற்புடையது. ஏனென்றால் அது தன்னை உணர்த்துகிறது.

அந்த சிந்தனையை ஒருசிறிதுநேரம் ஆய்ந்து பாருங்கள். கடவுள் என்பது தன்னை உணர்த்துகிறது. பழங்காலத்தில் அதுதான் மதத்தின் நோக்கமாக இருந்தது. இது ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உள்மனத்தை உயர்வடையச்செய்து மனத்தின் உள்ளார்ந்த இறைநிலையோடு தொடர்பு படுத்துவதாகும். இந்த தத்துவார்த்த உலகப்பார்வை இந்தியாவினுடையதா அல்லது இந்துக்களுக்கு உரியதா? உண்மையில் அப்படியில்லை. பழங்கால உலகம் முழுமைக்கும் இது இருந்தது. பாதாள உலகத்தின் கடவுளான ஓசிரிஸ் மற்றும் உண்மை மற்றும் நீதியின் பெண் கடவுளான மஹாட்டுக்கும் ஏற்பட்ட கருவுறுதல் பற்றிய எகிப்திய புராணக்கதை சிலர்மட்டும் அறிந்த நிலையில் இருந்தது. வாழ்க்கைக் காலத்தில் ஒருவர் போதுமான சக்திகளை அடைந்த பிறகு ஒரு பொருள்பொதிந்த நிலையில் இறப்பைத் தழுவிக் கொள்ள வேண்டும் என்பதை பழங்கால எகிப்தியர்கள் நம்பினார்கள். அது சாதிக்கப்பட்டுவிட்டால் பிறகு அவன் கடவுள் மத்தியில் அழியாநிலையில் வாழ்கிறான் என்று அழைக்கப்படுகிறார். பழங்கால மத்தியத்தரைக்கடல் பகுதியில் பள்ளிகள் நிறைந்திருந்தன. அவற்றுள் ஒன்று அறிவில்மிக்கவராக இருந்த கணிதமேதை மற்றும் தத்துவஞானி பிதாகோரஸ் என்பவரால் ஊக்கத்துடன் நடத்தப்பட்டது. இந்த பிதாகோரஸ் பிதாகரஸ் தத்துவத்தைக் கண்டுபிடித்தவரல்ல. (அந்த தத்துவம் முன்னரே ரிஷி போத்தயானன்ஜி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது). இது அவருடைய விநோதங்கள் பற்றிய பள்ளி. அவர்கள் மைக்ரோஸோம்கள், மீஸோஸோம்கள் மற்றும் மேக்ரோஸோம்கள் ஆகியவற்றை நம்பக்கூடியவர்கள். மைக்ரோஸோம்கள் மனித உயிரைக் குறித்தது.

மேக்ரோஸோம்கள் இந்த அண்டம் முழுமையும் குறித்தது. மீஸோஸோம்கள் சமுதாயத்தைக் குறித்தன. இதன் நோக்கம் மைக்ரோஸோம்களின் மனச்சாட்சியை உயர்த்தி அவற்றை மேக்ரோஸோம்களுடன் இணைத்து வைப்பதாகும். எளிய சொற்களில், சொல்வதானால், சமுதாயத்தின் நோக்கம் மனித ஆத்மாவை அதன் இறைத் தன்மையுடன் ஒன்றிணைப்பதாகும். இது பழக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. சரிதானா?

ஒற்றுமை என்ற அந்த அம்சத்தின் அடித்தளத்தில் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றாக இருக்கின்றன. பிளாட்டோ சுருக்கமாக உங்களையே அறிந்து கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தினார். ஸ்ரீ அரவிந்தர் உபநிஷதுகளின் மிகப்பெரிய பாடம் ஆத்மன்விதி என்பது. உங்களை நீங்கள் உண்மையாக அறிந்து சுதந்திரமாக வாழுங்கள். மதத்தின் உண்மையான நோக்கம் இது என்று நாம் ஒத்துக்கொண்டால்பிறகு கடவுள் என்பதன் நோக்கம் என்ன? டைலன்தாமஸ் அவர்களிடம் மன்னிப்புக் கோரிக்கொண்டு சொல்கிறேன். கடவுள் எட்டாத உயரத்தில் உட்கார்ந்துகொண்டு நாம் அடையக்கூட முடியாத அளவில் இருக்கிறாரா? அல்லது கடவுள் நமக்கு முன்மாதிரியாக இருந்துகொண்டு நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்திக் கொண்டு நம்முடனேயே வாழ்கிறாரா? வியப்படைந்த மற்றொரு டைலன் எத்தனைமுறை ஒரு மனிதன் கழுத்தைத் திருப்பித்திருப்பிப் பார்த்து எதையும் பார்க்கவில்லை என்று நடிக்க முடியும் என்று கேட்கிறார். நண்பனே விடை காற்றில் மிதந்து கொண்டிருக்கிறது. கடவுள் ஒரு முன்மாதிரி, அவர் நம்மிடையே நடமாடுகிறார். சிலசமயம் இயேசு கிருஸ்துவாகவும் கிருஸ்துவ மும்மூர்த்திகளாகவும், வேறு சில நேரங்களில் கௌதம புத்தராகவும், மற்ற நேரங்களில் பகவான் கிருஷ்ணர், இராமபிரான், துர்காதேவி ஆம் என்னுடைய சிவபெருமானாகவும் இருக்கிறார். அவருடைய கர்மா மிகவும் உன்னதமானது. அவர் வாழ்ந்து கொண்டே இருக்கிறார். அவர் என்னுடைய உள்ளத்திலும் ஒவ்வொரு சிவபக்தரின் உள்ளத்திலும் வாழ்கிறார். நன்றி.

---

**2013** ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெற்ற இந்தியா டுடே தனிப்பட்ட சிறப்புப் கூட்டத்தில் ஆற்றிய உரை.

# புராணங்களை மறுசீரமைத்தல்

கே: நான் உங்களிடம் சீக்ரெட் ஆஃப் நாகாஸ் என்பது பற்றியும், கணேஷ் மற்றும் கார்த்திக் பற்றியும் பேச ஆசைப்படுகிறேன். நீங்கள் அவர்களை தொடர்ந்து அழகாக மாற்றுவகைத் திறனோடு காட்டியுள்ளீர்கள். உங்களை அப்படிச் செய்யத் தூண்டியது எது? ஏனென்றால் நாம் இப்போது நவீன இந்தியாவில் மாற்றுத் திறனோடு உள்ள மக்கள் சில தனித்தன்மையான சிறப்புகளைக் கொண்டிருப்பதைப் பார்க்கத் தொடங்கியுள்ளதாலா? ஆனால் கணேஷ் மற்றும் கார்த்திக் என்போரை மிகப்பெரிய வீரர்களாகவும் அதே சமயத்தில் அறிவுமிக்கநிலையிலும் காட்டியுள்ளீர்கள், இதற்குப் பின்னணியில் உள்ள எண்ண ஓட்டம் என்ன?

ப: முதலில், மருந்து உட்கொள்வது சில சமயங்களில் உடலை கடுமையான வழிகளில் பாதிக்கும் என்ற பிரச்சனை பற்றி... நான் சயின்டிஃபிக் அமெரிகன் ஜர்னலில் வெகுகாலத்திற்குமுன் படித்த சிலவற்றிலிருந்து இந்த கருத்து வருகிறது என்று நினைக்கிறேன். 50 மற்றும் 60 களில் தாலமைட் என்ற மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அது மார்னிங் சிக்னெஸ் என்ற நோய்க்கு மிகச்சிறந்த வியக்கத்தக்க மருந்தாகக் கருதப்பட்டது. உங்கள் அனைவருக்கும் தெரிந்ததுபோல மார்னிங் சிக்னெஸ் என்பது பெண்களுக்குப் பிரசவ காலத்தில் ஏற்படும் ஒரு நோய். உண்மையில் அர்பணிப்பு உணர்வுள்ள கணவர்கள் இங்கே இருந்தால், இந்த மார்னிங் சிக்னெஸ் என்பதன் தாக்கம் என்பதை தங்கள் எண்ணத்தைப் பின்னோக்கிச் செலுத்தித் தெரிந்து கொள்வார்கள். ஆகவே, தாலமைட் விரைவிலேயே மிகவும் பிரபலமான மருந்தாக ஆகிவிட்டது. இந்த மருந்தை உட்கொண்ட சில தாய்மார்களுக்குப் பிறந்த பிள்ளைகள் சில தீவிரமான மற்றும் கடுமையான உடல் உபாதைகளுடன் இருந்தார்கள் என்பது பின்னர் சில ஆண்டுகளுக்குப்பிறகு கண்டுபிடிக்கப்பட்டது. உதாரணமாக பலர் குறைபாடுள்ள கைகால்களுடன் இருந்தார்கள். மற்றவர்கள் இதயசெயல்பாடு குறைந்தவர்களாக இருந்தார்கள்; சிலர் கண்பார்வையிலும் கேட்கும் திறனிலும் குறைபாடுள்ளவர்களாக இருந்தனர். தாலமைட் விரைவிலேயே

தடை செய்யப்பட்டது. ஆகவே அதிக சக்தி கொண்ட மருந்து சிலருக்கு நன்மை செய்யும் மாற்றுத் திறனுடன் உருவாக்கி சிலருக்குத் தீங்கும்கூட செய்யும். இந்தக் கருத்துதான் என் உள்ளத்தில் இருந்துஎன்னுடைய நூல்களில் இத்தகைய கருத்தை வலியுறுத்தப் பயன்பட்டது. பகவான் கணேஷ் மற்றும் பகவான் கார்த்திக்கைப் பொருத்தவரையில் நம்முடைய பாரம்பரிய புராணங்களிலும் அவர்கள் வீரமிக்கவர்களாக இருந்தனர்.

கே: இந்த புத்தகத்தை எழுதும்போது நீங்கள் அதிக அதிகமான ஆராய்ச்சிகள் செய்ததாக ஒத்துக் கொண்டுள்ளீர்கள். ஆகவே உங்கள் ஆராய்ச்சியின்போது, நீங்கள் இராமன், இராமாயணம், அயோத்யா போன்றவை பற்றி அதிக சமயங்களில் கற்றிருப்பீர்கள். ஆகவே அயோத்யா மற்றும் இராமாயணம் போன்றவை இருந்ததாக நீங்கள் நினைக்கிறீர்களா? அல்லது ஒரு நாட்டுப்புற கதையாக இருந்து மீண்டும் மீண்டும் நவீனப்படுத்தப்பட்டு அதிக விற்பனை புத்தகங்கள்போல் ஆக்கப்படவை என்று நினைக்கிறீர்களா? உங்கள் நூல்கள் இருபத்தைந்து, ஐம்பது மில்லியன் என்ற கணக்கில் விற்று பல நூறு ஆண்டுகள் சென்றபின் இப்படித்தான் சிவபெருமான் இருந்தார் என்று மக்கள் நினைப்பார்கள். ஆகவே அடிப்படையில் இது உண்மையா அல்லது புராணமா?

ப: இதற்கு பதில் கூறுவதற்கு சிறந்த வழி புராணக்கதை என்பது என்ன வரலாறு என்பது என்ன என்பதைப்பற்றி புரிந்து கொள்வதுதான். புராணத்தை விரும்புகிற கலாச்சாரம் மற்றும் வரலாற்றை மையமாகக் கொண்ட கலாச்சாரம் என்பவை இருந்தன. சராசரியாகப் பார்த்தால் புராணத்தை விரும்புகிற கலாச்சாரம் தாராளமாக இருந்தது. நாம் புராணத்தை வரலாற்றிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பது எப்படி? வரலாற்று ஆசிரியர்கள் தாங்கள் முன்வைப்பதெல்லாம் 'உண்மைத்தகவல்க'ளின் அடிப்படையிலானவை என்று கூறுகிறார்கள். நீங்கள் அவர்கள் சொல்வதை ஒத்துக் கொண்டால் அவர்கள் கண்டனம் செய்யலாம் அல்லது கிண்டல் செய்யலாம் அல்லது வருந்தத்தக்க வகையில் உங்களை ஒதுக்கியும் விடலாம். வராலாற்றில் வரலாற்று ஆசிரியர்களில் அல்ல, தாங்கள் சொல்வது மட்டுமே உண்மை என்று சொல்லும் பலர் இருந்துள்ளார்கள். நீங்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்றால் உங்களைக் கொல்வதற்கும் தயாராக இருப்பார்கள். ஆனால் புராணத்தை விரும்புகின்றவர்கள் உள்ளுணர்வோடு

பல்வேறுபட்ட கருத்துக்களை மதிப்பார்கள். ஒரே உண்மை என்பது மட்டுமல்லாமல் பார்க்கின்றவரின் பார்வைக்கு ஏற்ப பல உண்மைகள் இருக்கும் என்பதை அவர்கள் நம்புகிறார்கள். இதற்கு பார்வையாளர் மனவேறுபாடு என்று ஒரு சொற்றொடர் உள்ளது. அறிவியலில் கூட பார்வையாளர் மனவேறுபாடு என்பதை ஒத்துக்கொண்டுள்ளனர். உதாரணத்திற்கு தத்துவார்த்த இயற்பியலைக் கூறலாம். கணிதத்தில் மட்டும் முழுமையான ஒரேயொரு உண்மைதான் இருக்க முடியும். கணக்கில் இரண்டோடு இரண்டைக் கூட்டினால் நான்குதான். இதில் மாற்றுக்கருத்து அல்லது மாற்று உண்மை என்பது இயலாது. பல பழங்காலத்தவர்கள் கடவுள் எந்த அண்டத்தை உருவாக்குவதற்கு கணிதமொழியைப் பயன்படுத்தினார் என்று நம்பினார்கள். ஆனால் மற்ற ஒவ்வொரு துறையிலும் இயலக்கூடிய உண்மைக்கு எத்தனையோ பல கருத்துக்கள் கூறுவார்கள். நியட்ஷ்சே தொகுத்துக் கூறுவதுபோல, உங்கள் உண்மை என்று இருக்கிறது; என்னுடைய உண்மை என்று இருக்கிறது; பிரபஞ்ச உண்மை என்ன என்பதை ஒருவரும் அறியவில்லை. புராணத்தை விரும்புகின்றவர்கள் இதனை உடனேயே ஒத்துக்கொள்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் ஒரே கதையைப் பற்றிய பல்வேறு கருத்துக்களை தெரிந்துகொண்டு அதை அவர்கள் ஒத்துக்கொண்டு விரும்புகிறார்கள். ஆகவே இவற்றையெல்லாம் சொன்னபிறகு, இராமாயணத்தைப் பற்றிய என்னுடைய அணுகுமுறை என்ன? நம்முடைய கடவுளர்கள் இருந்தார்கள் என்பதை நான் நம்புகிறேன். அவர்கள் நம்முடைய முன்னோர்கள் என்பதை நம்புகிறேன். அவர்களின் இரத்தம் நம் நாடி நரம்புகளில் ஓடுகிறது என்று நம்புகிறேன். ஆகவே, வெளிப்படையாக நான் இராமபிரான் இருந்தார் என்பதை நம்புகிறேன். இராமாயணமோ அல்லது அதற்கு ஒத்த சில நிகழ்வுகளோ நடந்தன என்று நான் நம்புகிறேன். என்னால் இதனை நிரூபிக்க முடியுமா? முடியாது. நான் இதனை உங்கள் மீது திணிக்க முயற்சி செய்துகொண்டு இருக்கிறேனா? இல்லை. நீங்கள் இதனை நம்ப விரும்பவில்லை என்றால், நம்பவேண்டாம். ஆனால் இராமபிரான் இருந்தார் என்பதை நான் நம்புகிறேன். அவர் நம்மிடம் காலங்கள் கடந்தும் தன்னுடைய கதையின் மூலம் நம்மிடம் பேசுகிறார் என்பதை நான் நம்புகிறேன்.

கே: எந்த நிலையில் புராணம் என்பது நம்பிக்கையாக மாறுகிறது?

ப: நீங்கள் கேள்வி கேட்பதை நிறுத்தும்போது. நம்பிக்கையுடன்

இருப்பதும் தவறில்லை. உங்கள் அறிவு கடைசி விளிம்பை எட்டும்போது நம்பிக்கை தொடங்குகிறது. அறிவு நீங்கள் வளர்ச்சி பெற உதவுகிறது. நம்பிக்கை நீங்கள் அறியாத விஷயங்கள் பற்றி உணர்ந்துகொள்ள வைக்கிறது. அல்லது அதில் சிறிதளவு அமைதியைக் காணச் செய்கிறது. ஆனால் நம்முடைய பழங்கால வேதங்களில் கேள்வி கேட்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லப்பட்டுள்ளது. பகவத் கீதையில் 'நான் உனக்கு மிகவும் ஆழமான அறிவைக் கொடுத்திருக்கிறேன். இப்போது அதனைப் பயன்படுத்தி எது சரியென்று நினைக்கிறாயோ அதனைச் செய்' என்று பகவான் கிருஷ்ணர் அர்ஜுனருக்குக் கூறுகிறார். அதுதான் பகவான் கிருஷ்ணர் நமக்கு வழங்கும் செய்தி. ஏனென்றால் நீங்கள்தான் உங்கள் கர்மாவோடு வாழவேண்டும். மற்றவர் யாருமல்ல. உங்கள் கர்மா உங்கள் சுயதர்மத்தோடு பொருந்தியிருக்கிறதா இல்லையா என்று நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். கடவுள் நமக்கு மிகச்சிறந்த அறிவை வழங்கி ஆசிர்வதித்துள்ளார். நீங்கள் அதனைப் பயன்படுத்த வேண்டும். நீங்கள் கேள்வி கேட்கவேண்டும். நீங்கள் சிந்திக்க வேண்டும். அதற்குப்பிறகு உங்கள் சொந்த கருத்தோடு முன்னேறுங்கள்.

கே: புதுயுகப் புராணங்களை வெளிப்படுத்தி உரையாற்றுவதில் நீங்கள் அற்புதமான வழியைக் கொண்டுள்ளீர்கள். முதன்முதலில் நீங்கள் எழுதத் தொடங்கியபோது எத்தகைய சிந்தனை முறையைக்கைக் கொண்டீர்கள்? அலெக்ஸ் ரூதர்ஃபோர்டு வரலாற்றில் சில சுவையூட்டும் செய்திகளைச் சேர்த்து அதனை சிறப்பானதாக ஆக்கியதுபோல நீங்களும் அப்படி ஏதாவது செய்து இருக்கிறீர்கள். ஒரு இந்து இளைஞன் கூறியதுபோல, நாங்கள் நூல்களுக்குள் கவரப்பட்டுச் சென்று படித்து இன்னும் வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். மில்லியன் கணக்கான பிறர் இதனைச் செய்துள்ளனர். ஆகையால் நீங்கள் தொடங்கியபோது, உங்கள் மனத்தில் என்ன கருத்து இருந்தது? புரிந்து கொள்வதற்கு கடினமாக இருக்கிறதென்று மில்லியன் கணக்கான இந்துக்களாலும் மற்றவர்களாலும் கருதப்படும் புராணக்கருத்துக்களை சொல்வதற்கு ஏதேனும் மாறுபட்ட கோணத்தைக் கொண்டுவர விரும்பினீர்களா?

ப: தொடக்கமாக, நான் ஒரு விளக்கத்தைக் கூறவேண்டும்: என்னுடைய நிகழ்ச்சிகளில், என்னுடைய வாசகர்களுக்கிடையில், என்னுடைய நூல்களைப் படிப்பவர்களில் இந்துக்களோடு மட்டுமல்லாமல் பிறரும்

இருக்கிறார்களள என்பதை நீங்கள் காணலாம்,.என்னுடைய வாசகர்களுக்குள் முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தினர்கள், ஜைனர்கள், யூதர்கள், இறைமறுப்பாளர்கள் மற்றும் வேறு பலரும் இருக்கிறார்கள். எனக்கு இதுதான் பெரும்பாலான இந்தியர்கள் பெருந்தன்மையாளர்கள் என குறிப்பைத் தருகிறது. எல்லாவித நம்பிக்கையாளர்களிடமிருந்தும் எனக்கு மின்னஞ்சல்களும், ட்வீட்டர்களும் வருகின்றன. என்னுடைய வீட்டின் பூஜை அறையில், மத்தியில் சிவபெருமானின் சிலையும், மற்ற இந்துக் கடவுள்களின் சிலைகளையும் வைத்திருக்கிறேன். அதைப்போலவே மற்ற நம்பிக்கையாளர்களின் சின்னங்களையும் குறியீடுகளையும் வைத்துள்ளேன். நான் அவற்றை ஒவ்வொரு நாள் காலையிலும் வணங்குகிறேன். என்னுடைய எழுத்துக்களைப் பொருத்தவரையில், வெளிப்படையாகச் சொல்வதென்றால், என்னுடைய முதல் நூலான தி இம்மார்டல்ஸ் ஆஃப் மெலுஹா எழுதத் தொடங்குவதற்குமுன் நான் சந்தைபற்றி எந்த ஆராய்ச்சியும் செய்யவில்லை. நான் அப்படியே எழுதத்தொடங்கி தொடர்ந்து விட்டேன். எனக்கு நேரடியாக என்ன தோன்றியதோ அதையே எழுதினேன். இந்த நூல் விற்பனையாகுமா, விமர்சகர்கள் இதைப்பற்றி என்ன விமர்சனம் செய்வார்கள் என்றெல்லாம் நான் நினைத்துப் பார்த்துக்கொண்டு இருக்கவில்லை. எல்லா சாத்தியக்கூறுகளாலும் நான் நினைத்த ஒன்று என்னுடைய குடும்ப உறுப்பினர்களான இழுத்துவைக்கப்பட்ட வாசகர்கள் இருக்கிறார்கள் என்பதுதான். இராமச்சந்தி மூர்த்தியைப் பற்றிய என் முதல் நாலான ஸியான் ஆஃப் இக்ஷ்வாகு எழுதியபோதும் கூட, இந்தமாதிரி உணர்வோடு தான் எழுதினேன். நான் நூல் எழுதுகின்ற நிலையில் வாசகர்களைப் பற்றி சிந்திக்காமல், நூல் விற்பனை என்று வரும்போது மட்டுமே அவர்களைப்பற்றி நினைக்கிறேன். என்னுடைய அடுத்தநூல் வெற்றியடையவில்லை என்றால்கூட, நான் மீண்டும் வங்கித் தொழிலுக்குப் போய்விடுவது என்பதில் தெளிவாய் இருக்கிறேன். ஆனால் எனக்கு சரியென்று தோன்றுவதை எழுதுவேன். அதில் நான் மிகவும் தெளிவாக இருக்கிறேன்.

கே: நீங்கள் இரண்டு இந்தியப் பெருங்கடவுள்களான சிவபெருமானைப் பற்றியும், இராமபிரானைப் பற்றியும் சித்திரித்துள்ளீர்கள். என்னைப்போன்ற சிலர் இராமபிரான் ஒரு கொள்கைமிக்கவராகப் பார்த்து வளர்ந்துள்ளோம். அவரை நாங்கள் பலவழிகளில் சிலைவடிவாக்கிப் பார்க்கிறோம்.

நம்முடைய கடவுள்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை அதிகம் உள்ளன. ஆனால் காலனி ஆட்சியின்போது இது சரியாகப் போற்றப்படவில்லை. இது நம்முடைய கலாச்சாரத்தைப் பெரிதும் எதிர்மறையாகப் பாதித்து விட்டது. வருந்தத் தக்க வகையில், சுதந்திரம் அடைந்து அறுபது ஆண்டுகள் ஆனபின்னரும் நாம் பாடம் கற்றுக் கொள்ளவில்லை என்பதைப்பற்றி அச்சம் கொள்கிறேன். இந்த புராணக் கதைகளை புதிய தலைமுறைக்கு சரியாக விளக்காத காரணத்தால் அவற்றை நாம் இழந்து கொண்டிருக்கிறோம் என்று நீங்கள் நீனைக்கிறீர்களா?

ப: என்னுடைய யோசனை நாம் சிறிது பொறுமையாக இருக்க வேண்டும் என்பதுதான். ஒரு நாடு மிகவும் வேகமான நிலையில் மாறாது. உங்கள் சொந்த தனிப்பட்ட வாழ்க்கை என்ற எண்ணத்தில் அல்லாமல் ஒருநாட்டு முன்னேற்றம் என்ற அளவில் காலத்தை எதிர்நோக்கும் உணர்வை நீங்கள் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் விரும்பினால் இந்த கருத்தை ஒரு சிந்தனை ஆய்வின்மூலம் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் குறைந்த காலமே வாழக்கூடிய வீட்டில் உள்ள ஈயைப்போல கற்பனை செய்து கொள்ளுங்கள். நீங்கள் இந்தியாவின் மழைக்காலத்தில் பிறந்து இருக்கின்றீர்கள. அந்த காலத்தில் இந்தியாவில் இடைவிடாத மழையைத்தவிர வேறு எதுவும் இருக்காது என்பதை நீங்கள் 'அறிவீர்கள்.' குறிப்பாக நீங்கள் மும்பையிலோ சிரபுஞ்சியிலோ வாழ்ந்தீர்கள் என்றால் கேட்கவேண்டாம். ஆனால், எழுபத்தைந்து எண்பது ஆண்டுகள் வாழக்கூடிய மனிதர்களாகிய நமக்கு அந்த ஈயின் வாழ்க்கை சரிதான் என்ற குறுகிய கால அளவில் உள்ள அதன் நிலை சரிதான். ஆனால் அந்த சிறிய போக்கில்தான். கால அளவு அதிகம் என்றால் மிகவும் 'முழுதான' எண்ணம் அதிகமாக இருக்கும். இந்த வகையில் ஒரு தேசத்தின் வாழ்க்கையை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய யோசனை. ஒரு மனித வாழ்க்கைக்கு அறுபது முதல் எழுபது வரையிலான வாழ்க்கைக் காலம் அதிகமானதாகத் தோன்றலாம். ஆனால் ஒரு தேசம் என்கிறபொழுது அது 10,000 ஆண்டுகள் என்பது கூட அது அதிகமானதல்ல. ஒரு நாட்டில் மாற்றம் ஏற்பட காலம் எடுத்துக் கொள்ளும். நாம் சரியான திசையில் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை பார்க்கவேண்டும். பெரிய அளவில் பார்த்தால் நாம் சரியான பாதையில் இருக்கிறோம் என்பதை நான் கூறுகிறேன். ஒரு வேளை அதில் பிரச்சனைகள் இருக்கலாம், அவற்றில் பெரும்பாலானவைபற்றி நான்

வெளிப்படையாகப் பேசி உள்ளேன். இந்தியர்களாகிய நாம் சில கெட்ட நூற்றாண்டுகளையும் பெற்றிருந்தோம். இது மாதிரி நடக்கிறது. ஆனால் நாம் மீண்டும் எழுந்து விடுகிறோம். நாம் விழித்துக் கொள்கிறோம். குறிப்பாக 1991க்குப் பிறகு, நம்முடைய வரலாற்று அடிப்படையான, வாதம் அடிப்படையானவற்றில் மீண்டு வந்துள்ளோம். நான் ஒரு பெருமிதமிக்க இந்தியன். நான் முன்னேறிச் செல்கிறேன். நம்முடைய நாடு பெருமிதம் கொள்வதற்கான அதிக அதிகமானவற்றை வழங்குகிறது. நாம் பொறுமையுடன் காத்திருப்போம்.

---

**2015** ஆம் ஆண்டு டெல்லி டைம் லைட் ஃபெஸ்டிவல் வழங்கியது

# ஆண்நிலை/பெண்நிலை வழி மற்றும் பிற கேள்விகள்

கே: அமீஷ் அதிகாரபூர்வ கேள்விகளும் பதிலும் எவ்வளவு சுருக்கமாக இருக்க முடியுமோ அவ்வளவுக்கு சுருக்கமாக இருக்க விரும்புவதாகக் கூறினார். அவர் நீங்கள் (பார்வையாளர்கள்) அதிக எண்ணிக்கையில் கேள்விகள் கேட்க வேண்டும் என்று விரும்புவதாகவும் கூறினார். அவர் இந்த அமர்வு மிகவும் கலந்துரையாடலாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்று நான் நினைக்கிறேன். கலந்துரையாடலின் அடிப்படைத் தலைப்பு இராமபிரான் சிவபெருமானைவிட இளைஞர்களுக்கு எளிதில் அடையக்கூடியவராக இருக்கிறாரா என்பதுதான். மர்யாடாவுக்கும் தாண்டவக்கும் இடையில் போராட்டம். இராமன் இளம் வாசகர்களுக்கு சிவனைவிட அதிகமாக ஏற்றுக்கொள்ளும் முன்மாதிரியாக இருக்கிறாரா? இங்கே நான் மதிப்பீட்டு முடிவை செய்த போதிலும் அதையேதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். அமீஷ் மதிப்பீட்டு முடிவுகளுக்கு வலிமையான எதிர்ப்பாளர். ஆனால் முதன்முதலாக மர்யாடா வின் அம்சத்தை நீங்கள் அறிவீர்கள். உங்கள் இராமன் பெரும்பாலான விஷயங்களில் வால்மீகியின் இராமன்தான். இருப்பினும் சில நீதிகள் மற்றும் மரியாதை அம்சங்களில் முன்னே செல்கிறார். அவர் அதையெல்லாம் கட்டிக்காக்கிறார். ஆனால் அவரும் ஒரு மனிதர்தான். உங்கள் கருத்துப்படி மர்யாடா என்றால் என்ன? அதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

ப: நல்ல கேள்வி. இதோ பாருங்கள். என்னுடைய நூல்களில் உள்ள தத்துவம் சமுதாயம் இரண்டு சமநிலைப் புள்ளிகளுக்கிடையில் நின்று ஊசலாடிக் கொண்டிருக்கும் இரண்டு வழிகள் உள்ளன என்பது. ஒன்று சுதந்திரம், பொறுமை, தனிப்பட்டதன்மை என்பவற்றைப் பற்றிய மாதிரி, மற்றொன்று ஒழுக்கம், உண்மை (அல்லது உண்மை பற்றிய கருத்துருவாக்கம் என்பதைப் பற்றியது) நீதி, மரியாதை என்பவற்றைப் பற்றிய மாதிரி. இரண்டு வழிகளிலும் பலங்களும் உண்டு பலவீனங்களும் உண்டு. நீங்கள் இரண்டையும்

ஒன்றையொன்று மதிப்பிடும் போதுதான் பிரச்சனை தொடங்குகிறது. இராமபிரானின் வழியான மர்யாடா வழி சூர்யவன்ஷி (அல்லது ஆண்தன்மை சார்ந்தது) என்ற மதிப்பு, உண்மை, நீதி என்பதான வழி. பகவான் கிருஷ்ணரின் வழி சந்த்ரவன்ஷி (அல்லது பெண்தன்மை சார்ந்தது) என்ற சுதந்திரம், பொறுமை, தனித்தன்மை என்பதான வழி. சிவபெருமான் இந்த இரண்டு வழிகளிலும் நடுநிலையானவர். ஒரு வழியை ஆண்தன்மை சார்ந்தது அல்லது பெண்தன்மை சார்ந்தது என்று நான் குறிப்பிடும்போது, அது ஆணையோ பெண்ணையோ எந்தவிதத்திலும் குறிப்பிடாது என்பதை நான் தெளிவாக்கவேண்டும். இது ஒரு வாழ்க்கைமுறையைப் பற்றியது. பல ஆண்கள் (பெண்களாக இல்லாமலே) பெண்தன்மை சார்ந்த வழியைப் பின்பற்றுகிறார்கள். பல பெண்கள் (ஆண்களாக இல்லாமலே) ஆண்தன்மை சார்ந்த வழியைப் பின்பற்றுகிறார்கள். இதுபோன்ற பாரம்பரிய அம்சங்கள்தான் நான் என் நூல்களில் விவரிப்பவை. எந்த வழியும் உயர்ந்தது என்றோ தாழ்ந்தது என்றோ நான் முன்மொழிவதில்லை. அவை வேறுபட்ட பாதைகள். அவ்வளவுதான். ஒருவர் அதனை மதிப்பிடக்கூடாது.

கே: அவர் இதனைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார். அவர் அதனை மிகவும் கடினமானதாக ஆக்குகிறார்.

ப: இல்லை. நான் அப்படிச் செய்யவில்லை. (சிரிக்கிறார்) நல்லது. இந்த வழியைப் பற்றிப் பிறகு பார்க்கலாம். எந்த ஒரு மனிதன் அல்லது சமுதாயம் அல்லது நாடு எப்போதும் முழுமையாக சூர்யவன்ஷி (ஆண்தன்மையுடன்) அல்லது சந்த்ரவன்ஷி (பெண்தன்மையுடன்) இருக்காது. அந்த இரண்டின் நிழலும் இருக்கும். ஆனால் வழக்கமாக ஒன்று மட்டும் மிகைத்திருக்கும். சீனா, சூர்யவன்ஷிக்கு நெருக்கமான வழியைப் பின்பற்றுவதாக நான் நம்புகிறேன். இப்போது, 2008 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் விளையாட்டுகளை ஏற்று நடத்தியது என்பதை நீங்கள் அறிவீர்கள். சரிதானா? பெய்ஜிங் ஒலிம்பிக்ஸ் இந்திய காமன் வெல்த் போட்டிகளைப் போன்றதல்ல என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். சீனாவின் விளையாட்டு அரங்கங்கள் போட்டிகள் தொடங்கும் ஆண்டுக்கு ஆறுமாதம் முன்பாகவே உண்மையில் தயார்நிலையில் இருந்ததாக நான் கேள்விப் பட்டேன். இந்தியாவில், அந்த விளையாட்டுப் போட்டிகள் தொடங்கிய பிறகும்கூட விளையாட்டு அரங்கத்திற்கு வண்ணமடித்துக் கொண்டிருந்தார்கள் என்று நான் நம்புகிறேன். சீனா, உள்கட்டமைப்புகளை தயார்நிலையில்

வைத்திருந்தது என்பது பெரிதல்ல. போட்டிகளில் பங்கேற்க வரும் நாடுகளைக் கவர வேண்டும் என்று முடிவெடுத்தனர். ஆகவே விளையாட்டு மைதானப் பகுதிகளில் பணியாற்றிய தன்னார்வப் பணியாளர்களுக்கு எப்படிப்பேசுவது, எப்படி உடையணிவது போன்ற சில வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கினர். ஆனால் அது கூட சீன அரசாங்கத்திற்குத் திருப்தி தரவில்லை. அவர்கள் பெய்ஜிங் நகர மக்களுக்கும் கூட சில வழிகாட்டு நெறிகளை வழங்கினர். நான் ஏமாற்றிக் கொண்டு சொல்லவில்லை. வெளிநாட்டவரை எப்படி வாழ்த்தவேண்டும், தகவல் தொடர்பில் உள்ள நுணுக்கங்கள், மற்றும் இவை போன்றவையும் கற்பிக்கப்பட்டன. அவர்கள் உடைகளிலும் ஒரு வரையறையை வகுத்திருந்தார்கள். மறுபடியும் இதை நான் கிண்டலுக்காகச் சொல்லவில்லை. பெண்களுக்கும் ஆண்களுக்கும் பல்வேறுபட்ட உடைத்தகுதிமுறை தெரிவிக்கப்பட்டிருந்தது என்று நான் கேள்விப்பட்டேன். ஆண்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக கருப்பு காலணியோடு வெள்ளை காலுறை அணியக்கூடாது என்று சொல்லப்பட்டிருந்தார்கள். இது ஏன் என்பது கடவுளுக்குத்தான் தெரியும். ஆகவே இத்தகைய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டவுடன் பெய்ஜிங் குடிமக்கள் என்ன செய்தார்கள் என்று நினைக்கிறீர்கள்? இவை முறையாக அனுசரிக்கப்பட்டதாகவும் சிறப்பாக அமைந்ததாகவும் நான் கேள்விப் பட்டேன். இப்போது இந்த எண்ண ஓட்டத்தை ஆராய்ந்து பாருங்கள். இந்திய அரசாங்கம் இத்தகைய வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கி இருந்தால் என்ன நடந்திருக்கும்?

கே: இந்தியாவில்... (சிரிக்கத் தொடங்குகிறார்)

(பார்வையாளர்களும்கூட சேர்ந்து சிரிக்கிறார்கள்)

ப: ஒருவேளை பின்வருவனவற்றை நீங்கள் கேட்டிருக்கலாம்: தும்னே போலா சஃபெட் மோஸே காலே ஜுட்டி கே சாத் நஹி பெஹ்னோ? மெய்ன் ஏக் சால் தக் யஹி பெஹனூங்கா! (கருப்பு காலணியுடன் வெள்ளை காலுறை அணியக்கூடாது என்றா என்னிடம் கூறுகிறீர்கள்? ஒரு ஆண்டு முழுவதும் நான் அதையேதான் அணிவேன்!) ஒருவேளை இந்திய எதிர்வினை இப்படித்தான் இருந்திருக்கும். இந்த நிலையிலாவது நாம் சந்த்ரவன்ஷி நாடாக இருப்பதுதான் காரணம். நாம் புரட்சி எண்ணம் கொண்ட மக்கள். நாம் சுதந்திரத்தை விரும்புகின்ற

மக்கள். ஆனால் ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் அமைதியான ஆக்கபூர்வமான மக்களும்தான். அது நம்முடைய பலம். நாம் இன்று எப்படி இருக்கிறோமோ அதற்கு உண்மையானவர்களாக இருக்க வேண்டும். நாம் சீனர்களைப்போல் இருப்பதற்கு முயற்சி செய்யக்கூடாது.

கே: ஆகவே... தாண்டவ்?

ப: இதைச் சொன்னதால், நாம் இன்று நாம் செய்வதுபோல, புரட்சித்தன்மையின் உச்சகட்டத்தை எடுத்துக் கொண்டு சட்டங்களை மதிக்காமல் இருக்க வேண்டும் என்று நான் முன்மொழியவில்லை. நாம் இருக்கின்ற நிலைக்கு உண்மையானவர்களாக இருக்க வேண்டும். ஆனால் சட்டங்களை மதிப்பதற்கு இராமபிரானிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். இது ஒரு நல்ல சமுதாயத்திற்கு இட்டுச் செல்லும். நீதி என்பது சட்டங்களை அமைதியாகப் பின்பற்றுவது சிலநேரங்களிலாவது மட்டுமானாலும் என்பதை இராமபிரானிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். கட்டுப்பாடு இல்லாமலும் அல்லது சட்டங்களை மதிக்காமையினாலும் உள்ள கட்டுக்கடங்காத சுதந்திரத்தினால் உண்டாகும் கலகங்களை நான் ஆதரிப்பதில்லை. சமநிலை இருக்க வேண்டும். இந்திய வாழ்க்கைமுறையின் அறிவுடைமை என்பது எப்போதும் அந்த சமநிலையை முயற்சித்து உடைப்பதுதான். எந்தவகையான தீவிரவாதமும் விட்டுவிட வேண்டியதுதான்.

கே: ஸ்சியான் ஆஃப் இக்ஷ்வாகு வெளிவந்தபோது... இக்ஷவாகு என்ற சொல்லே அடிக்கடி நீங்கள் கேள்விப்படாத பெயராக இருந்தது. இராமன் இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்ந்தவர் என்பதைச் சிலர் தெரிந்திருந்தார்கள். ஆனால் ஏறக்குறைய இந்த சொல் மீட்டுருவாக்கம் பெற்றதாக இருந்தது. இராமாயணம் மற்றும் மகாபாரதத்தின் வெறும் வெளிவடிவத்தை மட்டுமே அறிந்த நூல்களோடு அதிக பரிட்சயம் இல்லாதவர்களுக்கு (அவர்கள் ஒத்துக் கொண்டாலும் இல்லாவிட்டாலும், இப்படிப்பட்ட சிலர் இருக்கிறார்கள்) இக்ஷ்வாகு அதிகப் பரிட்சயம் இல்லாத பெயர்தான். ஆகவே உங்கள் நூலுக்கு இதனைத் தலைப்பாக்குவதற்கு எது தூண்டியது?

ப: கடந்த ஒரு நூற்றாண்டுவரை, பகவான் இக்ஷவாகு என்ற பெயர் மிகவும் அறிந்த பெயராக இருந்தது. வருந்தத்தக்க வகையில், நம்முறை கல்விமுறை பல இந்தியர்களை அவர்களின்

வேரிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வெட்டி விட்டது. இங்கிருக்கும் ஒவ்வொருவரும் 1980 களில் வெளிவந்த இராமாயண தொலைக் காட்சித் தொடரை அறிந்திருப்பீர்களென நான் நம்புகிறேன். இதில் இராமபிரானின் அரச பரம்பரை ரகுகுலம் அதாவது ரகுவின் வம்சம் என்று அந்த சொல் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. பகவான் ரகுவும் கூட இராமபிரானின் முன்னோராக இருக்கலாம். ஆனால் அந்த வம்சத்தைத் தோற்றுவித்தவர் பகவான் இக்ஷ்வாகு தான். நான் அந்தப் பெயரை விரும்புகிறேன். அதைச்சுற்றி ஒரு கவர்ச்சி வளையம் இருப்பதாக நான் நினைக்கிறேன். அதோடுகூட அதற்கு ஒரு இனிமையான பொருள் உண்டு. இக்ஷ்வாகு என்றால் இனிமையாகப் பேசுபவர் என்று குறிக்கிறது. ஆகவே இது தலைப்பாக ஏற்பதற்கு சிறந்து என்று நினைத்தேன்.

அதே வேளையில், இராமாயணம் என்பது எதைக்குறிக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? ராம் (உங்களுக்கு நன்றாகத் தெரிந்த பேர்) அவருடைய பெயர். அயனா என்ற சொல் எதனைக் குறிக்கிறது?

கே: எனக்குத் தெரியாது.

ப: இதற்குப் பயணம் என்ற பொருள் கூறப்பட முடியும். இராமாயணா என்பது 'இராமனின் பயணங்கள்' என்ற பொருளைத் தரும். இது இராமாயணா என்ற சொல்லுக்கான மொழிபெயர்ப்பு. பயணம் செய்வது என்பது ஒரு கல்வி அனுபவம். இது பழங்காலத்தவரிடம் அதிகமாகவே இருந்தது. ஆகவே, இராமாயணம் அந்த வகையில் நாம் மதிக்க தொடங்கிய, சரியாகச் சொல்வதானால் அன்பு செலுத்தத் தொடங்கிய கடவுள் நிலைக்குக் வந்ததே ஆகும். இது அவர் எப்படி கற்றுக் கொண்டு வளர்ச்சி பெற்று எப்படி நாம் அறிந்துள்ள கடவுள் நிலைக்கு உயர்ந்தார் என்பதைப் பற்றியதாகும்.

கே: என்னுடைய அடுத்த கேள்வி - உங்கள் அழியக்கூடிய நிலையிலிருந்து ஒரு கடவுள் நிலைக்கு வருவது உண்மையில் ஆகக்கூடியதா?

ப: ஆனால் அது உண்மையில் இந்திய அம்சம். நாம் வழிபடுகின்ற கடவுள்களுக்கும் நமக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், அவர்கள் தங்களுக்குள் இருந்த கடவுளைக் கண்டு கொண்டார்கள், நாம் இன்னும் அந்த தேடலிலேயே இருக்கிறோம் என்பதுதான்.

கே: நன்று. இது நல்ல பதில் என்று நான் நினைக்கிறேன். நாம் முன்பே கடவுள் என்று அறிந்த சிலரிடம் உறுதிப்பட்ட கடவுளாக ஏற்க வைப்பது எது? சிவன். அவர் நம்முடைய மும்மூர்த்தியின் பகுதி. அவர் அழிப்பவர், ஒரு புரட்சியாளர், சாம்பலைப் பூசுகின்றவர், போதைப்பொருள் புகைப்பவர், முழுவதும் அழுக்குநிலை நபர். இருந்தும் இளைஞர்கள் ஏன் அவரை நாடிச் செல்கின்றனர்?

ப: உண்மையில், நீங்களே ஏன் இளைஞர்கள் அவரிடம் செல்கிறார்கள் என்பதை விளக்கிவிட்டீர்கள்.

கே: நல்லது. என் கேள்வி ஒரு நகைச்சுவை உணர்வு கொண்டது. நான் வஞ்சப்புகழ்ச்சிபோல் முயற்சிக்கிறேன்.

ப: நன்று. என்னுடைய இளம் வாசகர்களில் ஒருவர் கடவுள்களிலே அவர் அழகான உடையில் தோன்றும் கடவுள் என்று வர்ணித்தார். வேறு எந்த கடவுள்களிடமும் எனக்கு அவமரியாதை கிடையாது.

கே: இல்லை. அப்படி இல்லை. அவர் ஒரு முழுமையானவர். ஆகவே அத்தகைய ஒருவர் எப்படி முதல் நிலை கடவுளாக வரமுடியும்? சிவனின் கடவுள் தன்மை. நீங்கள் அதிகம் படிக்கக்கூடியவர் என்பதால் பின்னோக்கிய தகவல்களைத் தரமுடியுமா? உங்களுடைய ஆராய்ச்சி இங்கிருக்கும் மற்றவர்களைவிட முன்னோக்கியதாகும். இதனை நான் சற்று உறுதியாகச் சொல்லமுடியும். அவருடைய கடவுள் தன்மையின் வேராக இருப்பது எது? ஆரிய பலகடவுள்தொகுப்பு நிலைச் சமுதாயத்தில் சிவன் எப்படி கடவுள் ஆனார்? ஆவணப்பட்ட இந்து பலகடவுள் தொகுப்பில் சிவன் எப்படி இடம் பிடித்தார்? ஏனென்றால் தெளிவாக அவர் ஆரியக் கடவுள் இல்லை.

ப: உண்மையில், ஆரியர் என்று ஒரு இனம் இருந்ததா என்பதைப்பற்றி கடுமையான விவாதங்கள் இருந்தன. ரிக் வேதத்தில், 'ஆரியர்' என்ற சொல் ஒரே ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுவும் கூட இனம் என்ற அடிப்படையில் அல்ல. என்னுடைய அறிவுக்கு எட்டியவரை, 3,500 ஆண்டுகளுக்குமுன் (ஆரியர்கள் இந்தியாவில் படையெடுத்ததாகச் சொல்லப்படும் காலம்) எந்த படையெடுப்பும் இருந்ததற்கான தொல்லியல் ஆய்வு ஆதாரங்கள் இல்லை. நவீன மரபணு தத்துவம் ஒரு புதிய இனம் இந்தியாவுக்கு 3500 ஆண்டுகளுக்குமுன் வந்தது எனச்சொல்வதில் பல குளறுபடிகள்

உள்ளன. 'ஆரியர்' என்பது மரியாதையைக் குறிக்கும் ஒரு சொல் என்பது மட்டுமே. ஆகவே ஆரிய கடவுள்கள் அல்லது திராவிடக் கடவுள்கள் இருந்ததாக நான் நினைக்கவில்லை. அவர்கள் எல்லாம் குறியீட்டுக் கடவுள்கள்தான். அதோடுகூட, சைவ வழிமுறை மற்றும் வைஷ்ணவ வழிமுறை என்பது மீண்டும் இரு வாழ்க்கைமுறைகளை குறிப்பிடுகிறது. இந்த இரண்டு அணுகுமுறைகளையும் எளிமையான வகையில் நான் விளக்குவதென்றால் அது இப்படி இருக்கும்: வைஷ்ணவ வழி என்பது இந்த மாயாவி (கற்பனையான) உலகத்தில் செயல்பட்டு ஒரு நோக்கத்தையும் ஒழுங்கையும் அதனுள்ளே தன்னடக்கம் என்ற ஒன்றோடு இணைத்துக் காண்பதாகும். சைவ வழி என்பது இந்த மாய உலகத்தின் ரசங்களை (இன்பங்கள் மற்றும் மகிழ்ச்சி) வெறுக்காமலும் அதிகமாக விரும்பாமலும் இருந்து வாழ்வதைப் பற்றியது. அவற்றை நீங்கள் அனுபவிக்க முடியும், ஆனால் முடிவில் அவற்றைவிட்டுத் துறவுநிலையைக் காண வேண்டும். இந்த விளக்கங்கள் மிகவும் ஆழமான இரண்டு தத்துவங்களைப் பற்றிய சாதாரண விளக்கங்கள் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஒருவேளை, நாங்கள் ஆழ்ந்து சென்றால், அவை மிகவும் சிக்கலானவை என்பதை உணர்வீர்கள். ஆனால் இரண்டுமே மதிப்புமிக்க சரியான பாதைகள்தான். உங்களை உண்மையில் கவரும் ஒன்றைப் பின்பற்றுங்கள். அதில் சரியோ தவறோ என்று எதுவும் இல்லை.

கே: எந்தச் சூழ்நிலையிலும் நீங்கள் சிவனை எப்படி வைத்துப் பார்க்கிறீர்கள்? அவரைப்பற்றி எழுதும்போதும், உங்கள் டிரையாலஜி என்பதிலும், நேர்காணல்கள் காணும்போதும், ஒரு காலபூர்வ சந்தர்ப்பத்தைச் சொல்லும்போதும் நீங்கள் அறிவீர்கள். அந்த இடத்திலும் காலத்திலும் அவரை நீங்கள் எப்படி வைத்துப் பார்க்கிறீர்கள்?

ப: ஏறக்குறைய கி.மு 1900 அளவில் அவரைப்பற்றிய இருப்பை சரஸ்வதி ஆற்றின் மறைவோடு இணைத்துப் பார்க்கப்படுகிறது. அறிவியல் ஆய்வுகள் அந்த நதியின் மறைவு கி. மு. 2000 த்துக்கும் 1800 க்கும் இடையில் நிகழ்ந்திருக்கலாம் என்று குறிப்பிடுகின்றன. சுமாராக 4,000 ஆண்டுகளுக்கு முன்பாக, என்னுடைய கதை சரஸ்வதி ஆற்றின் மறைவு காலத்தோடு மிக நெருக்கமான இணைப்பைக் கொண்டது.

கே: கேள்வி தெளிவாக மனத்தில் இருக்கிறது. சிவனைப்பற்றி நீங்கள் எழுதும்போது, அவரை மனிதராக்குகிறீர்கள். முதலில்

உள்நிலையில் அவரை மனிதராக்கிவிட்டு, பிறகு எங்கள் நன்மைக்காக விவரிக்கிறீர்கள். உங்கள் கதைகள் எளிதாக அடையும் வண்ணம் எழுதப்படுவதால் சிவனின் மனித நிலையை என்னால் சிரமமில்லாமல் அடையாளம் காண முடிகிறது. நேர்மையாக சொல்வதென்றாலும், இதை நான் சொல்லும்போது, அவர் மற்ற கடவுளர்களைவிட அதிகமான மனிதநிலைகளைக் கொண்டுள்ளார். அவரை நாம் உறுதியாக இந்த உலகத்தில் வைத்துள்ளோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ப: நம்முடைய வேதங்களின்படி, மும்மூர்த்திகளில், புனித இந்து மும்மூர்த்திகளில் அவர் மட்டும்தான் உண்மையில் பூலோகத்தில் வாழ்கிறார். அவர் கைலாச மலையில் வாழ்கிறார்.

கே: ஆகையால், எங்களை அவர்பால் இழுக்கின்ற அவரைப்பற்றிய அம்சம் என்று நீங்கள் நினைப்பது என்ன?

ப: அவருடைய முரண்பாடுகள்தான் அவரைநோக்கி நம்மை இழுக்கிறது. குறிப்பாக என்னைப் போன்றவர்களை… நான் இயற்கையாகவே ஒரு புரட்சிகரமான நபர், கொஞ்சம் மேன்மக்கள் நிர்வாகத்தை எதிர்ப்பவன். என் இளம்வயதில் ஒரு பத்து பன்னிரண்டு ஆண்டுகள் இறைமறுப்பாளனாகவும் இருந்தேன். ஆகவே என்னைப்போன்ற ஒருவருக்கு நம்பிக்கைக்கு வருவதற்கு அப்படி மீண்டும் கொண்டுவர மிகவும் ஏற்ற கடவுள் சிவபெருமான்தான். ஏனென்றால் அவரேகூட ஒரு புரட்சி கரமான கடவுள்தான். அவர் புரட்சியாளர்களின் கடவுள். அவர் மிக ஆற்றலுடன் நடனமாடுகிறார். அவர் இசையின் கடவுள். அவர் தன் மனைவியை அன்புடன் நேசிக்கிறார். அவர் ஆதியோகியாகவும்கூட இருக்கிறார். ஆம், அவர் மிகவும் குளிர்ச்சியானவர். மறுபடியும் சொல்கிறேன், மற்ற கடவுள்கள் மீது அவமரியாதை கிடையாது.

கே: அவருடைய அன்பான மனைவியைப் பற்றிய விஷயத்தை நீங்கள் கொண்டு வந்ததால், நாம் சிவ மும்மூர்த்தி தத்துவத்தில் பெண்களைப் பற்றியும் அதைப்போல ஸ்சியோன் ஆஃப் இக்ஷ்வாகு புத்தகம் ஒன்றைப்பற்றியும் நாம் பேசுவோம். நீங்கள் மிகவும் வலிமை வாய்ந்த பெண் பாத்திரங்களை நோக்கி இழுக்கப்படுகின்ற போக்கு உங்களிடம் இருக்கிறது. அந்த பாத்திரங்களுக்கு அவர்கள் மூலமான புராணங்களில் சொல்லப்பட்டதைவிட அதிகமான அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கூறுகிறீர்கள். சதி சீதாவை நீங்கள் அறிவீர்கள். இந்த வீரமிக்க இளவரசியின்பால் நீங்கள் அதிகமான ஈர்ப்பு

காட்டுவதற்கான ஆர்வநிலை என்ன?

ப: முதலாவதாக, நான் என்னுடைய தனிப்பட்ட அனுபவத்தை அனுமானிக்கிறேன். என்னுடைய குடும்பம் பெண்கள் அதிகம் நிறைந்த குடும்பம்: என் தாய், என் சகோதரி, என் மைத்துணிகள், என் மனைவி என்று எல்லோருமே தவறு எதையும் பொறுத்துக் கொள்ளாதவர்கள். அதைத்தான் என்னுடைய நிலையான முன்மாதிரியாக வைத்துக் கொண்டேன். நாங்கள் மூன்று சகோதரர்கள் ஒரு சகோதரி, மிகவும் மூத்தவர். நாங்கள் வளர்ந்து வந்தபோது, என்னுடைய பெற்றோர் பையன்கள் பெண்ணுக்கிடையே வேறுபாட்டைக் காணவில்லை. எங்கள் எல்லோருக்கும் ஒரே வகையான சட்ட விதிகள்தான் பின்பற்றப்பட்டன. இரண்டாவதாக நாம் நம் புராணங்களைப் பற்றிப் பார்ப்போம். நகரத்தின் இந்தியர்கள் அறிந்திருப்பதான இந்த நவீகாலத்தில் புராணங்களின் பல வார்த்தைகள் 1980 களிலிருந்து வெளிவந்த தொலைக் காட்சித் தொடர்களை அடிப்படையாகக் கொண்டவை. நம்முடைய புராணக் கதைகளில் தரப்பட்ட கருத்து உருவாக்கங்கள் பின் இடைக்காலங்களில் ஏற்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டவை. ஆம், நம்முடைய புராணங்களின் இடைக்கால கருத்து உருவாக்கங்கள் தந்தைவழி அடிப்படையானவை. அதிகமான வன்முறையை எதிர்கொண்ட எந்த சமுதாயமும் தந்தைவழியானதாக இருக்கும். இது ஒரு இயற்கையான சமுதாய நடைமுறையாகும். இடைக்கால சமயங்களில் இந்தியா கொடுமையான வன்முறையால் துன்புற்றது. ஆனால் முந்தைய காலத்தில் உள்ள நம்முடைய வேதவாக்கியங்களையோ புராணங்களையோ படித்தால் அவற்றில் எளிமையானவர்களில் மிகவும் வலிமையானவர்களாகப் பெண்கள் இருந்தனர். அவற்றின் கருத்துருவாக்கங்கள் தந்தைவழிப்பட்டதாக இல்லை. உதாரணமாக, பழைய காலங்களில் சமுதாயத்தில் மிகவும் உயர்ந்த அந்தஸ்து ரிஷிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இது அரசர்களை விடவும் அதிகமான நிலையில் இருந்தது. நீங்கள் அவர்களை இறைத்தூதர்களோடும், ஆப்ரஹாமின் நம்பிக்கையில்வந்த கடவுளின் மனிதர்களோடும் ஒப்பிட்டுப் (அவர்கள் போன்ற ஆனால் அவர்களே அல்ல) பார்க்க முடியும். அவர்கள் இறைவனோடு தொடர்புகொண்டு கடவுளின் மொழியை மக்களுக்குப் புரியும் வகையில் எடுத்துக் கூறினார்கள். ரிக் வேதத்திலுள்ள பல சுலோகங்கள் ரிஷிகா என்ற பெண் ரிஷிகளால் இப்போது எழுதப்பட்டுள்ளன. அத்புத் இராமாயணம் என்று அழைக்கப்படும் இராமாயண வடிவத்தை மகரிஷி வால்மீகி

எழுதியதாகச் சிறப்பிக்கபடுகிறது. சீதாதேவி மூத்த இராவணனைக் கொன்று அவள் தன்னுடைய உண்மை வடிவமான மாகாளி ஆகிறாள்.

ஆகவே வலிமை வாய்ந்த பெண் பாத்திரங்களைக் கொண்ட நம்முடைய பழமையான வழிக்கு உண்மையானவையாக என்னுடைய கதைகள் உள்ளன என்று நான் கூறுகிறேன்.

கே: கொடுமையானதாகவோ குற்றமானதாகவோ நான் குறிப்பிடவில்லை. ஆனால் இராமாயணத்தைப் பார்க்கும்போது சிலநேரங்களில் நான் மிகவும் எளிமையாக உணர்கிறேன். இதற்கு முன்பு அது எத்தனை சிக்கலானது என்பதைப் பார்த்தோம். இராவணனைத் தாழ்த்தியும் இராமனை வணங்கும் நிலைக்கு ஏற்படுத்தியது நாமா அல்லது நமக்கு முந்தி இருந்தவர்களா என்று நீங்கள் நினைத்துப் பார்க்கவில்லையா? நேர்மையாகப் பார்த்தால், எனக்கு இது இரண்டு அரசர்களுக்கிடையில் போர் போல சிலநேரத்தில் தோன்றுகிறது. இதுபற்றி நீங்கள் கருத்து சொல்ல விரும்புகிறீர்களா?

ப: இந்த கேள்வியைக் கேட்டதால் நீங்கள் கடுமையாக இருக்கவில்லை. உத்தரப்பிரதேசத்தில் இராவணனுக்கென்று ஒரு கோயில் இருப்பது உங்களுக்குத் தெரியுமா? இராவணனை வணங்குகின்றவர்களும் இராமனுக்கும் மதிப்புகொடுக்கிறார்கள். இராஜஸ்தான் - மத்திய பிரதேச எல்லையில் உள்ள மன்சாவூர் என்ற இடத்தில் மக்கள் இராவணனையும் அவர் மனைவி மண்டோதரியையும் வழிபடுகிறார்கள். ஒரு மிகப்புகழ் வாய்ந்த கதை உள்ளது. அதில் இராவணன் இறக்கும் தருவாயில் கிடந்த போது தன் தம்பி லட்சுமணனை அனுப்பி மிகப்பெரிய அறிவாளியான இராவணனிடமுள்ள நல்ல குணங்களைக் கற்றுவருமாறு இராமன் அனுப்புகிறார். போரில் சந்தித்திருந்தாலும் தன் எதிரியிடம் உள்ள நல்ல குணங்களுக்காக இராமர் மதிக்கிறார். இராவணனனை கொடுமைக் காரனாக சித்திரிப்பது ஒப்பிட்டுப்பார்த்தால் நவீனகாலத்தின் செயல். இந்திய பாரம்பரிய அம்சத்தில் தூய்மையான நன்மை என்றும் இல்லை தூய்மையான கொடுமை என்றும் இல்லை. அப்படி ஒருபோதும் இருக்காது. சமஸ்கிருதத்தில் 'ஈவில்' (evil) என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான மொழிபெயர்ப்புச் சொல் இல்லை. நான் தீமை என்ற அம்சத்தை விளக்குவதற்காக சிவா ட்ரையாலஜி

என்பதை எழுதினேன். ஆனால் இதனை நான் சமஸ்கிருதத்தில் எழுதியிருந்தால் எந்த விளக்கமும் தேவைப்பட்டிருக்காது. ஏனென்றால் தீமை என்ற அம்சம் இருந்திருக்காது. முழுமையான தீமை என்று எதுவுமில்லை. ஒவ்வொன்றும் ஒரு காரணத்திற்காகவே உள்ளது. பழங்கால இராமாயண நூல்களில் இராவணனை சித்திரிக்கும் முறையில் சிறிது வேறுபாடு உள்ளது. அவருடைய நல்ல குணங்கள் கூட போற்றிக் கூறப்பட்டுள்ளன. இது சோனி கி லங்கா, (பொன்கொழிக்கும் இலங்கை) சரிதானா? ஏன்? ஏனென்றால், அவருடைய மக்களுக்குச் சிறந்த அரசனாக அவர் இருந்தார். அவரிடம் குறைகளும் இருந்தன, குறிப்பாக அவருடைய தற்பெருமை. ஆகவே இராவணனிடமிருந்தும் கூட நாம் சிலவற்றைக் கற்றுக் கொள்ள முடியும். எழுத்தில் நாம் பார்க்கின்ற இந்த எளிமையான அணுகுமுறை முற்றிலும் நவீனமானது. இது நம்முடைய பழமையான வழியல்ல. வாழ்க்கை ஒருபோதும் எளிமையானதல்ல. உண்மையான வாழ்க்கை சிக்கல் நிறைந்தது. நம்முடைய பழங்காலக் கதைகள் இந்த உண்மையை பிரதிபலிக்கின்றன.

கே: ஆனால் ஏன் இராமர் உயர்வுபெறுகிறார்?

ப: ஆனால் இந்திய வழியில் நாம் எல்லோருமே உயர்த்தப்படுகிறோம். நாம் அனைவரும் இறைசக்தி பெற்றுள்ளோம். உண்மையான பயனம் என்பது நாம் எப்படி உயர்வடைவது என்பதை நம்முடைய கடவுளர்களிடமிருந்து கற்றுக் கொள்வதற்கே. நம்முள் இருக்கும் கடவுளை நாம் எப்படி கண்டு பிடிப்பது? இது உண்மையிலேயே மிகவும் சக்தி வாய்ந்த அம்சம். இது வெளியிலே உள்ள கடவுள் உங்களை 'மதிப்பிடுவது' பற்றியதல்ல. இது கடவுளை ஒரு முன்மாதிரியாக நோக்கிக்கொண்டு நாம் கடவுளாக மாறுவதற்குக் கற்றுக் கொள்வது. அதுதான் உண்மையான பயணம். ஆகவே, பிறகு இந்த கேள்வியைக் கேட்பது நாம் உண்மையில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கும்போது கால்பந்தைப் பற்றிப் பேசுவதைப் போன்றதாகும். இராமரை உயர்வுபடுத்துவதோடு ஏன் நிறுத்த வேண்டும்? ஏன் இராமரிடமிருந்து கற்றுக் கொண்டு உங்களுக்குள் இருக்கும் இறைத்தன்மையை ஏன் கண்டுபிடித்து உயரக்கூடாது?

கே: நான் சிவா ட்ரையாலஜி மற்றும் இராமச் சந்திரா தொடர்களில் முதல் நூலையும் படித்துள்ளேன். ஆகவே நாம்

இராமரை உயர்வுசெய்து அவரை மர்யாடா புருஷோத்தமன் என்று அழைக்கிறோம். ஆனால் உங்கள் நூலில் இதனை மிக அறிவார்ந்த முறையில் காட்டியுள்ளீர்கள். அதை விவரிப்பதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. சந்த்ரவர்ஷினி மற்றும் சூர்யவர்ஷினி வாழ்க்கை முறைகளை ஒன்றுபடுத்திக் கொண்டுவருபவர் சிவன் மட்டுமே. அவர் இரண்டையும் வாழ்க்கை முறையாக இணைத்து மிகவும் சிறப்பாக சமன் செய்துள்ளார். ஆகவே ஏன் சிவனை மர்யாடா புருஷோத்தமன் என்று அழைத்து இராமனுக்கு வேறு ஒரு பெயர் கொடுக்கக் கூடாது?

ப: மர்யாடா புருஷோத்தமன் என்பதை நீங்கள் உயர்ந்த பட்டமாகவோ குறைவான பட்டமாகவோ யூகித்துக் கொள்கிறீர்கள். இது அதிலிருந்து கற்றுக் கொள்வதற்கு மட்டுமே உள்ளது. மர்யாடா மற்றும் புருஷோத்தமன் என்ற சொற்கள் சட்டங்களின் வாழ்வைக் குறிக்கிறது. அதைத்தான் இது அர்த்தப்படுத்த வேண்டும். அதைப்போலவே மற்ற வழிமுறைகளும் உள்ளன. மகாதேவராகிய சிவபெருமான் அவருடைய நோக்கம் எந்த வாழ்க்கை வழிமுறையையும் பரிந்துரைப்பதல்ல; அவர் அதற்கும் மேலாக இருப்பவர். மகாதேவருடைய நோக்கம் இணைப்பில் கலந்திருக்கும் தீமைகளை அகற்றுவதுதான். அதனால்தான் சிவபெருமான் எவர்மீதும் சார்புநிலையில் இருப்பதில்லை. அதனால்தான் அவர் எல்லோருக்கும் உரியவராகிறார். எப்போதும் சொல்லப்படுவதுபோல எல்லோருடைய நன்மைக்காகவும் சிவபெருமானும் பகவான் விஷ்ணுவும் பங்குபோட்டுக்கொண்டு பணி செய்கிறார்கள். சிவபெருமானும் பகவான் விஷ்ணுவும் ஒருவருக்கொருர் மதிப்பு கொண்டிருப்பதாக நம்முடைய எல்லா வேதங்களிலும் தேவையான அளவுக்குக் கதைகள் உள்ளன. இதைச் சொல்வதன்மூலம், மர்யாடா உள்ளதைக் காணமுடியும். நவீன இந்தியாவில், சட்டத்தை மீறுவதில் நாம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறோம். சட்டத்தை மதிக்க வேண்டும் என்பதை இராமபிரானிடமிருந்து கற்றுக்கொள்ள முடியலாம். நாம் சில சட்டங்களையாவது கடைபிடிக்கத் தொடங்கினால், நம்முடைய சமுதாயம் கொஞ்சம் சிறப்பு மிக்கதாகவும் கொஞ்சம் குழப்பத்தில் குறைவானதாகவும் மாறும்.

கே: நான் உங்களுடைய நூல்களையெல்லாம் தொடர்ந்து படிக்கிறேன். இராமனுடைய சகோதரியின் கதை எங்கிருந்து வந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

ப: நான் இதுவரைப் படித்த எந்த இராமாயண நூலிலும் இராமபிரானின் சகோதரி பற்றிக் கூறப்படவில்லை. ஆனால் மகாபாரதத்தில் இராமபிரானின் சகோதரி பற்றிய குறிப்பு உள்ளது. அதுபோலவே சில பகுதிகளில் மறுசீரமைத்துச் சொல்லப்பட்ட சில இராமாயணங்களில் இருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகவே இது ஒரு கருத்துருவாக்கம். என்னுடைய இராமாயண நூல் பல்வேறுபட்ட இராமாயணங்களிலிருந்தும், மகாபாரதத்தின் பிந்திய கதைகளிலிருந்தும், புராணக் கதைகளிலிருந்தும் கருத்துருவாக்கமாக என்னுடைய கற்பனையைக் கலந்து உருவாக்கப்பட்டது.

கே: தாங்கள் இறைமறுப்பாளர்கள் என்றும் மதத்தைப் பற்றிப் பேசவிரும்பவில்லை என்றும் சொல்லக்கூடிய இளைஞர்களிடம் மதம் என்ற அம்சத்தைப் புகுத்திய உங்களுக்கு நன்றி. உண்மையில் இளைஞர்கள் வருவதும் சிவனைப்பற்றியும் இராமரைப் பற்றியும் கலந்துரையாடுவதும் ஆகிய இந்த புதிய கொள்கை இருக்கிறது. புதிதாக வருபவர்களைப் பொருத்தவரையில் அதற்காக உங்களுக்கு நன்றி. என்னுடைய கேள்வி இதுதான்: நான் ஒரு வங்காளி என்பதால் என்னுடைய வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் மேக்நாத் பாத் கபி நூலை எழுதிய மைக்கேல் மதுசூதன் தத் என்பவர்மேல் ஆர்வம் கொண்டுள்ளனர். அதில் மேகநாதனை கதைத்லைவனாகப் பேசுவதுடன் இராவணனை அவரது நல்ல குணங்கள் குறித்தும் கூறுகிறார். நான் அத்தகைய பின்னணியோடு வளர்க்கப்பட்டேன். நான் இராமனை எதிர்க்கும்நிலையில் வளரவில்லை என்றபோதும், ஆனால் இராமன் இராவணன் இருவரும் இரண்டு மாறுபட்ட வழிகளைக் காட்டினார்கள் என்பது பற்றிய எண்ணத்தை என்னுள் எப்போதும் ஊட்டிக் கொண்டிருந்தது. ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவரைப்பற்றி பாராட்டிக் கொண்டார்கள். இந்த பார்வை பற்றிய தங்கள் கருத்து என்ன?

ப: முதலில் நான் சொல்ல விரும்புவது, இறை மறுப்பில் தவறில்லை. பழங்கால இந்தியாவில், நாம் பலவிதமான தத்துவங்களான தர்ஷனா பெற்றிருந்தோம். இத்தகைய பள்ளிகளில் சில இறைமறுப்பு வழிக்குத் தங்களை அர்ப்பணித்திருந்தன. உதாரணமாக சார்வாக்கர்கள் இறைமறுப்பாளர்களாய் இருந்தனர். மததீவிரவாதம்கொண்டு தீய கர்மாக்களை செய்பவர்களைக் காட்டிலும் நல்ல கர்மாக்களை

செய்யக்கூடிய நல்ல இறை மறுப்பாளர்களாயிருப்பது சிறந்தது. ஆகவே இறைமறுப்புக் கொள்கையை மதிப்பீடு செய்யாதீர்கள். பாரம்பரிய இந்திய வழியில், ஒடுக்குகின்ற இறைமறுப்பாளர்கள் என்ற கேள்விக்கே இடமில்லை. மேகநாதன் மற்றும் இராவணன் கதை என்ற பார்வையில் இராமபிரானுக்கும் இராவணனுக்கும் இடையில் உள்ள தொடர்பைக்குறித்த அணுகுமுறை பற்றிய தங்கள் கேள்விக்கு இப்போது வருகிறேன். உத்தரப்பிரதேசத்தில் நான் வசிக்கும் பகுதியில் ஒரு புகழ்பெற்ற புராணக்கதை உள்ளது. அதைப்பற்றி நான் முன்பே பேசியிருக்கிறேன். இராவணன் மரணத்தருவாயில் விழுந்து கிடக்கும்போது, இராமபிரான் பகவான் லட்சுமணரை அனுப்பி அவரைச் சந்தித்து இராவணனிடமிருந்து கற்றுக்கொண்டு வருமாறு அனுப்பினார். ஏனென்றால் அவர் மிகப்பெரிய அறிவாளி. அவருடைய கலைகள், நிர்வாகம், வேதங்கள், தத்துவங்கள் பற்றிய அறிவு மற்றவரை விஞ்சக்கூடியது. பகவான் லட்சுமணர் புண்பட்டு விழுந்து கிடக்கும் நிலையில் இராவணனை அணுகினார். ஆனால் அவர் இராவணனின் தலைப்பகுதியில் நின்றார். எனவே இராவணன் அவரோடு பேச மறுத்து விட்டார். எனவே பகவான் லட்சுமணர் சகோதரரிடம் திரும்பிவந்து குறைகூறினார். பிறகு இராமபிரான் அவரை அணுகினார். ஆனால் அவர் காலடியில் நின்றார். அவர் இராமனுக்கு மரியாதை காட்டினார். கற்றறிந்த இராவணனனிடமிருந்து அறிவுத் திறனைக் கற்றார். இது நான் முன்பே கூறியுள்ள கருத்துக்கு அழைத்துச் செல்கிறது. கலப்படமில்லாத, மூளைநிலை சரியில்லாத, தீய அரக்கன் என்று சொல்லப்படுவதெல்லாம் சமீபத்திய கொள்கை உருவாக்கம்தான். நம்முடைய பழங்கால இந்தியர்களாகிய நம்முடைய முன்னோர்கள் இராவணனைப் பற்றியோ வேறு எந்த விஷயம் பற்றியோ அணுகிய முறை இதுவல்ல.

கே: மர்யாடா புருஷோத்தமன் மற்றும் சிவபெருமானின் தாண்டவ் என்ற இரண்டு வகையான குறியீடுகள் பற்றி கலந்துரையாடிக் கொண்டு இருந்தீர்கள். ஆனால் இராமாயணத்தில் இராமனுக்கும் சிவனுக்கும் இடையில் மிகவும் வலுவான தொடர்புகள் இருக்கின்றன. முதலாவதாக, இருவருமே ஏகபத்தினி கொள்கையுடையவர்கள். அவர்கள் பலதார மணத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள். பிறகு ஒருவேளை இராமபிரான் சீதையை அடைவதற்கு எடுத்தது சிவதனுசு. ஆகவே அவர்கள் ஒருவரோடொருவர் நெருக்கம் கொண்டவர்கள் என்று நான் நினைக்கிறேன்.

ப: நம்மில் பலர் இருப்பதைப் போலவே, இராமபிரான் ஒரு சிவபக்தர். அதைப்போலவே இராவணனும் சிவபக்தர். சிவபெருமான் இராமபிரானைப் பெரிதும் மதித்தும் இருக்கிறார். நாம் அகத்திய முனிவரின் கதையை அறிவோம். சரிதானா? மற்றுமொரு கதையும் உள்ளது. அதில் சிவபெருமான் பார்வதி தேவியிடம் அவரால் விஷ்ணுசகஸ்ரநாமத்தை (பகவான் விஷ்ணுவின் 1000 பெயர்கள்) முழுவதும் சொல்ல இயலவில்லை என்றால் ஒருமுறை இராமநாமத்தை உச்சரித்து விட்டாலே போதும். ஏனென்றால் இது அதே சக்தியைப் பெற்றுள்ளது என்று கூறினார். சிவபெருமானும் இராமபிரானும் ஒருவரை ஒருவர் மதித்து வணங்கினார்கள். நீங்கள் சொல்வது சரிதான்.

கே: இளம்வயதில் இராவணன் மிகவும் சிறந்த சிவபக்தர். அவர் சிவபெருமானின் மிகச்சிறந்த பக்தர்களில் ஒருவர். இறுதிநாட்களில், இராவணன் நீதிக்குப் புறம்பான சில செயல்களைச் செய்து விடுகிறார். ஆகவே, எந்த நிலையில் அவர் நல்லவராக இருந்து தீயநிலைக்கு மாறினார்? நாம் இத்தகைய கருத்தை நாம் எதிர்பாராமல் ஏற்றுக் கொண்டால், நாம் எப்படி நிறுத்துவது?

ப: இந்திய உலகாயதப் பார்வையில் நீங்கள் நல்லவர் அல்லது கெட்டவர் என்ற அம்சமே இல்லை. இது கர்மாவின் செயல்பாடும் அதன் பின்விளைவுகளும்தான். நீங்கள் உங்கள் கர்மாவுக்கு ஏற்ப 'நல்லது' அல்லது 'கெட்டது' என்பதை சந்திக்கிறீர்கள். இது மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் கடவுளர்களுக்கும் நடக்கிறது. நீங்கள் தர்மத்திற்குப் பொருந்தாத எதையாவது செய்தால் கர்மா உங்களுக்கு மீண்டும் வந்துவிடுகிறது. நாம் செய்ய வேண்டியது கற்றுக்கொள்ள வேண்டியது என்பதுதான். இராவணனிடமிருந்து உயர்நிலையிலும் தன்முனைப்பின் அழிவுகள், தன்முனைப்பு உங்களை எப்படி அழித்து விடுகிறது என்பதைக் கற்றுக் கொள்ள முடியும். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அத்தகு தன்முனைப்பு உங்களுக்கு நன்மை பயக்கும் என்று நான் நினைக்கிறேன். உதாரணமாக, நீங்கள் கீழ்நிலை வர்க்கத்தினரானால், நீங்கள் உயர்குடியினரால் நடத்தப்படும் ஒரு முறையை எதிர்க்கிறீர்கள் என்றால் அதில் கஷ்டம் ஏற்படுமென்றால் இச்செயல்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த தன்முனைப்பு உதவியாக இருக்கும். ஆனால் வாழ்க்கையில் ஒரு நிலையில் தன்முனைப்பு தீமை விளைப்பதாகவும் உங்களைத் தடுக்கக் கூடியதாகவும் அமையும். உங்களுக்குள் அதற்கேற்ற சமநிலையை கண்டு

கொள்ள வேண்டும்.

கே: சிவா ட்ரையாலஜியில் அறிவியல் பற்றி எழுதியது, சோமபாணம் பருகுவது பற்றி எழுதியது, போருக்குத் திட்டமிடுதல் பற்றி எழுதியது மற்றும் இவை போன்றவற்றிற்கு நீங்கள் எத்தகைய ஆராய்ச்சியை மேற்கொள்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இவற்றுக்கெல்லாம் ஆதாரமான விஷயங்களை எங்கிருந்து பெறுகிறீர்கள்?

ப: வெறுமனே நிறையப் படிக்கிறேன். ஒருமாதத்திற்கு நான்கு ஐந்து நூல்கள் படிக்கிறேன். பலப்பல ஆண்டுகளாகவே இதே முறையில் படித்து வருகிறேன். என்னுடைய குடும்பத்தில் ஒவ்வொருவரும் நிறையப் படிக்கிறார்கள். நாங்கள் நிறைய விவாதங்கள் கூட மேற்கொள்கிறோம். உண்மையான பாரம்பரியச் சிந்தனையில் நாங்கள் ஒரு எடுத்துக்காட்டான இந்தியக் குடும்பம், கலந்துரையாடக்கூடாதது, கேள்வி கேட்கக்கூடாதது என்று எதுவுமே இல்லை. ஆகவே என்னுடைய கற்றல் பெரும்பாலும் படிப்பதிலும் எங்கள் குடும்பத்தினரோடு கலந்துரையாடுவதிலும் அமைகிறது.

கே: நான் கேட்பது என்னவென்றால், உங்கள் நூல்களில் உள்ள அறிவியல் பகுதிகள் உண்மையிலே உள்ளவையா அல்லது அனுமானங்களா? பழங்கால இந்தியா அத்தகைய அறிவியல் நிலைகளைப் பெற்றிருந்ததா?

ப: பாருங்கள், என்னுடைய நூல்களில் சிலவிஷயங்கள் தோற்றுவிக்கப்பட்டவை. அந்த காலத்தில் அணு ஆயுதம் இருந்தது என்பதற்கு ஆதாரம் இல்லை. அண்மையில் நடைபெற்ற உலக அறிவியல் மாநாட்டில் செவ்வாய் கிரகத்திற்கு நாம் சென்றதாக கட்டுரைகள் முன்வைக்கப்பட்டன. அதற்கும் கூட ஆதாரம் இல்லை. ஆனால் பிரச்சனை என்னவென்றால் நம்முடைய கல்வி முறையில் நாம் மிகவும் குறைவாக நம்முடைய பழமையான புகழ்ச்சிறப்பை அறியும் நிலை உள்ளது. குறிப்பாக நம்முடைய அறிவியல் சாதனைகள். அதே மாநாட்டில் நான் முன்வைத்த உயர்சிறப்பு வாய்ந்த கட்டுரையில் கூட இதைப்பற்றி முன்பே குறிப்பிட்டுள்ளேன். ரிஷி பௌதயானஜி என்ற இந்தியர் பிதாகரஸ் கண்டுபிடிப்பதற்கு முன்பாகவே பிதகரஸ் தத்துவத்தைக் கண்டுபிடித்துள்ளார் என்பதை வலியுறுத்தியுள்ளேன். இந்த தகவல் உண்மையானது. இது பிதாகரஸ் அந்த தத்துவத்தைக் கண்டுபிடிபதற்கு 200

ஆண்டுகளுக்கு முற்பட்ட சுல்ப சூத்ரா என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. இது ஐரோப்பியர்கள் கூட ஒத்துக் கொண்ட ஒன்றாகும். பழங்கால இந்தியாவில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது சுஷ்ருத் சம்ஹிதா (போஹர் சுவடிகளில் உள்ள ஆதாரங்கள்படி) நூலில் உள்ளது. மிக முந்திய கால பதிவு என்றவகையில் பல நூற்றாண்டுகளுக்குமுன் ரினோப்ளாஸ்டி என்ற மூக்கு அறுவை பிளாஸ்டிக் சர்ஜரி ஒரு மராத்திய படை வீரனுக்கு இந்தியாவில் செய்யப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை செய்தவர் ஒரு நாவிதர் ஜென்டில்மேன் என்ற இதழில் இரண்டு ஆங்கிலேயர்களால் இந்த அறுவை சிகிச்சை பதிவு செய்யப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை நிபுநராக மாறிய அந்த நாவிதர் சுஷ்ருத் சம்ஹிதா நூலில் கூறப்பட்டிருந்த அதே முறைகளைப் பின்பற்றி ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே செய்துள்ளார். அந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது. நவீன ரினோப்ளாஸ்டி இப்போதும் அந்த முறைகளில் சில மாற்றங்களோடு செய்யப்படுகிறது. இப்போது, இந்தியாவில் இன்று செவ்வாய் கிரகப் பயணம் என்றது போன்றவை இந்தியாவில் இருக்கும் நிலையில் நம்முடைய கடந்த கால அறிவியல் பற்றிய ஆர்வம் ஏன்? சரியான அறிவு என்பது இல்லை என்பதுதான் காரணம். அனுமான தத்துவங்கள் அறியாமைக்கு இட்டுச் சென்றுவிடும். நம்முடைய பள்ளிகளில் நம்முடைய கடந்த கால அறிவியல் சிறப்பைப் பற்றி எதுவும் சொல்லிக் கொடுப்பதில்லை. நம்முடைய மருத்துவக் கல்வி ஜெர்மானிய மருத்துவத்தோடு தொடங்குகிறது. இந்திய மருத்துவம் பற்றியதாக அமைவதில்லை. நம்முடைய கணிதக்கல்வி மேற்கத்திய கணித முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்துகிறது. நாம் வரலாற்றில் இடம்பெற்ற சிறப்பானவர்களில் சிறந்து பல சாதனைச் செயல்கள் புரிந்த இந்திய கணிதமேதைகள்பற்றி எதுவும் கற்றுக் கொள்வதில்லை. நம்முடை சொந்த சாதனைகள் பற்றி நாமே கற்றுக்கொள்ள வேண்டும். நாம் அவற்றிலிருந்து ஊக்கம் பெற வேண்டும். நாம் இன்று சாதனைக் கலாச்சாரத்தை உருவாக்க வேண்டும். அது நம்மை நம் முன்னோர்களின் சிறப்புகளுக்குத் தகுதி உள்ளவர்களாக ஆக்கும்.

---

**2016** ஆம் ஆண்டு பிப்ரவரியில் நடைபெற்ற கொல்கத்தா டாடா ஸ்டீல் இலக்கியச் சந்திப்பில் வழங்கியது.

# சிவபெருமானின் முந்நிலை முடிவுக்குவந்தது எப்படி மற்றும் பிறகேள்விகள்

கே: ஒரு பிரபலம் பெற்ற புதினம் எப்போதும் இலக்கியத்தரம் மிக்கதாக இருக்குமா, அல்லது இலக்கியத்தரம் மிக்க நாவலின் தகுதி பிரபலமாவதா?

ப: எல்லா பிரபலம் பெற்ற நாவல்களும் இலக்கியத் தரமிக்கவை என்பதல்ல என்பது வெளிப்படை. ஆனால், காலப்போக்கில் ஒரு நாவல் இலக்கியத் தரம் மிக்கதாவது மிகவும் கடினம். பிரபலம் என்பதற்கான வரையறையான அதிக வாசகர் படிப்பது என்பது இல்லையென்றால் அதுவும் கடினம். ஒரு நாவலின் உண்மையான மதிப்பு அது அடைகின்ற உடனடி பிரபலத்தினாலோ அல்லது உடனடி விமர்சனப் பாராட்டு கிடைப்பதினாலோ அல்ல. அது காலத்தினால் கிடைப்பது. உங்கள் நாவல் நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் நிலைத்திருந்தால், அது ஒரு இலக்கியத்தரம் மிக்க நாவல். அப்படி இல்லை என்றால் இல்லை. இந்த கருத்து இலக்கியத்தரம் என்பதற்கான இந்தி சொல் 'கால் ஜயி' என்பதால் விவரிக்கப்படுகிறது. அது காலத்தை வென்றது என்று பொருள்படும். ஒரு இலக்கியத்தரம் மிக்க நாவலை காலத்தாலும் கூட அழிக்க முடியாது.

கே: ஒரு எழுத்தாளரின் தகுதியை நீங்கள் எப்படி எடையிடுவீர்கள்?

ப: இதுதான் வாசகர்களுக்குக் கிடைக்கும் அருமையான வாய்ப்பு. ஒரு எழுத்தாளர் தனக்குத்தானே உண்மையானவராகவும், நம்பிக்கையாள ராகவும் இருக்க வேண்டும். எழுதும்போது, அவர் விமர்சகர்கள். வெளியீட்டாளர்கள், அல்லது வாசகர்கள் பற்றிக் கவலைப் படக்கூடாது. அவர் தனக்குத்தானே உண்மையாக இருந்து நேர்மையோடு எழுத வேண்டும்.

கே: இந்தியாவில் நம்முடைய பழைய வரலாறு எந்தவகையில் கருதப்பட வேண்டும் என்பது பற்றிய தங்கள் கருத்து என்ன?

ப: இதை நான் முன்பே பலமுறை கூறியுள்ளேன். இன்னும் எத்தனை முறையானாலும் கூறுவேன். நம்முடைய கல்விமுறை பெரும்பாலான இந்தியர்களை நம்முடைய பழமையான கடந்த காலத்தைப் பற்றி மிகச்சிறிதளவான அறிவில் விட்டுவைத்திருக்கிறது. நான் சில பேரரசர்களின் கதைகளைப்பற்றிப் பேசவில்லை, ஆனால் நம்முடைய பழமையான அறிவியல், கலைகள், தத்துவங்கள் ஆகியவை பற்றியும் சொல்கிறேன். இவை நமக்கு சாதாரணமாக கற்பிக்கப்படவில்லை. இத்தகையதான நம்முடைய பழமை பற்றிய அறியாமை தன்மையான சூழ்நிலையில், இந்த சிந்தனைகளை இரண்டு வகையான தீவிர உணர்வாளர்களின் குழுக்கள் கட்டுப்படுத்துகின்றன. ஒரு வகையினர் செவ்வாய்கிரகம் சென்றதான ஆதாரமில்லாத இந்தியக்கதைகளை நம்புகிறார்கள். பழங்கால இந்தியர்கள் எதுவே ஒருபோதும் சாதிக்கவில்லை என்று மறுக்கின்றவர்களின் குழுக்களாக இருக்கின்றனர். அவர்கள் பழமையான இந்தியாவைப் பற்றித் தவறாக விமர்சித்து குறிப்பிடத்தக்க மதிப்புள்ள சாதனை எதனையும் நிகழ்த்தவில்லை என்று நம்புகிறார்கள். மீண்டும் சொல்கிறேன் அது உண்மையல்ல. நாம் அறிவியல், கணிதவியல், மருத்துவ, கட்டிடவடிவமைப்பு. வேளாண்மை போன்றவற்றிலும் மற்றவற்றிலும் மிகப்பெரிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளோம். பழமையான இலக்கியம், இசை, கலைகள் ஆகியனவும் கூட எந்தவித சார்புநிலையின்றி கற்கப்பட வேண்டும். ஒருநாடு இத்தகைய உயர்ந்த பாரம்பரியத்தை வைத்துக் கொண்டு அதைப்பற்றி அறியாமையில் இருப்பது மிகவும் அரிதானதாகத்தான் இருக்கும். நம்முடைய கல்வி முறையில் தீவிரமான மாற்றம் தேவை.

கே: 'நாவல் என்பது ஒரு முத்திரை, ஒரு விவாதமல்ல' தாமஸ் ஹார்டியின் இந்த சிந்தனையை சிவனின் பாத்திரப்படைப்பை ஒத்துக்கொள்ளும் நம்முடைய நிலையில் வழிகாட்டுதலாக ஏற்க முடியுமா? சிவனிடம் ஒருவகையான இந்திய மனப்பான்மை, இந்திய வாழ்க்கைமுறை ஆகியவற்றின் மாறுபட்ட அம்சங்கள் பிரதிபலிக்கின்றன. இதைப்பற்றிய தங்கள் கருத்து என்ன?

ப: பல்வேறுபட்ட பார்வைகளும் அவற்றை மதிப்பதும் பாரம்பரிய இந்திய முறையாக இருந்தது. பழங்கால இந்தியாவில் சார்வாகர்கள் இறைமறுப்பாளர்களாக இருந்தனர். நவீன கருத்தின்படியும் கூட சம்க்யர்களும் மிமான்சர்களும்

வேதங்களை நம்பினார்கள், ஆனால் கடவுளை நம்பவில்லை. இப்படி வேற்றுமைகளோடு இருந்தபோதிலும் அவர்கள் தாக்கப்படவில்லை. வன்முறை இருக்கவில்லை. இருந்தபோதும் விவாதங்கள் நிகழ்ந்தன. முரண்பாடுகளோடு அவர்கள் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். ஆகவே, ஒரு புதினம் என்பது கருத்துப் பார்வையை வெளியிடுவது. நீங்கள் அதைப்பற்றி எண்ணிப் பார்க்க முடியும். நீங்கள் ஒத்துக்கொண்டீர்கள் என்றால் சரிதான், இல்லையென்றால் உங்கள் சொந்த கருத்தைக் கூறுங்கள்.

கே: சிவா ட்ரையாலஜியில் முக்கியமான பங்கு வகித்த சிவன் அல்லது மகாதேவர் எண்ணிக்கையற்ற மற்றும் அளவில்லாத (நேர்மறை/எதிர்மறை) இயல்நிலைகளைப் பிரதிபலிக்கின்ற ஒரு பழமையான பாத்திரத்தை பிரதிநிதித்துவப் படுத்துகிறார். எடுத்த எடுப்பு தொடக்க நிலையில் தோன்றுகின்ற சிவனின் பாத்திரச் சிறப்புகள் கடைசிவரைத் தொடர்கிறதா? நாவலின் கடைசிப் பகுதியில் சிவன் ஏன் 'பசுபதி அஸ்திரத்தைப் பயன்படுத்த முடிவெடுக்கிறார்? சிறப்பும் அழகும் மிக்கதான அந்த பாத்திரத்தின் தன்மை ட்ரையாலஜி முழுவதும் காக்கப்பட்டு கடைசி நேரத்தில் எடுத்த இந்த முடிவின்மூலம் சிதைக்கப்பட்டுவிட்டதைப்போலத் தோன்றுகிறது. இதனை நீங்கள் எப்படி விளக்குவீர்கள்?

ப: பல வாசகர்களால் என்னிடம் கேட்கப்பட்டுள்ள கேள்வி இது. சிவா ட்ரையாலஜி அடிப்படையில் குறிப்பாக இதற்குப் பதில் சொல்வதற்கு முன்பாக, நான் உங்களை பாரம்பரிய இந்தியக் கதை சொல்லும் முறை பற்றிப் பின்னோக்கிச் சிந்திக்க வேண்டுகிறேன். பழங்காலக் கதைகள் ஒரு முடிவையோ தீர்ப்பையோ கொண்டு வெகு அரிதாகத்தான் முடிவுபெறும். நவீன பாலிவுட் படங்களில் மகிழ்ச்சியான முடிவாக இருந்தாலும் அல்லது சில சமயங்களில் துன்பமான முடிவாக இருந்தாலும் கூட வழக்கமாக ஒரு முடிவைச் சொல்வார்கள். இந்த வகையான கதை சொல்லும் பாங்கு இடைக்காலத்தில் எழுந்த பக்தி இயக்கத்தின் மூலம் வந்ததென்று சிலர் சொல்கிறார்கள். இந்த வகையான கதை சொல்லும் முறையில் ஒரு முடிவைக் குறிப்பிடுகின்ற வகையில் முடியும். பிறகு நீங்கள் இதனை மூட்டைக் கட்டி உங்கள் மனத்தின் மூலையில் வைத்து விடலாம். எப்பொழுதாவது பிறகு பழமையாக நினைத்துப் பார்க்கலாம். இந்திய கதை சொல்லும் முறை வழக்கமாக வேறுபட்டிருப்பதாகும். முடிவு ஒரு முடிவான நிலையை

உணர்த்துவதாக வடிவமைக்கப்பட்டிருக்காது. அது நீங்கள் ஒரு முடிவுக்கு வராமல் குழம்பிக் கொண்டிருக்குமாறு திட்டமிடப்பட்டிருக்கும். தொடக்கத்தில் இருந்ததைவிட இறுதியில் அதிக அளவிலான கேள்விகளை நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளுமாறு செய்துவிடும். இத்தகைய சிந்தனை நம்முடைய இரண்டு மிகப்பெரிய புராணங்களான இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் காட்டப்படுகிறது. ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட நாம் போராடிக் கொண்டிருக்குமாறு அமைந்த கேள்விகளை அவை விட்டுச் சென்றுள்ளன. இராமபிரான் சீதாதேவியை இருவருக்கும் வாழ்க்கை முழுவதுமான துன்பத்தையும் துயரத்தையும் கொடுக்கும் வண்ணம் கைவிட்டு இருந்தார்? பாண்டவர்கள் அனைவரும் சிறிது காலமேயானபோதும் தற்காலிகமாக நரகத்தில் இருந்தபோது, மகாபாரதத்தின் கடைசியில் கௌரவர்கள் சொர்க்கத்தில் என்ன செய்து கொண்டு இருந்தார்கள். யுதிர்ஷ்டரைத்தவிர மற்ற எல்லோரும் என்றபோதும் இத்தகைய தனிப்பட்ட நிலை ஏன்? தர்ம யுத்தம் நடத்தியதில் என்ன அர்த்தம் உள்ளது? இப்போது இவைகள் எல்லா முடிவுகளும் உங்களிடம் பல மிகச்சிறந்த கேள்விகளை விட்டுச் செல்கிறது.

பழங்கால இந்தியாவில் கதைசொல்வது என்பது தத்துவங்களை எடுத்துச் சொல்வதற்குப் பயன்பட்டது. அது உங்களை முடிவில் அழகாக, நல்ல மகிழ்ச்சியில், கிளர்ச்சியூட்டும் நிலையில் வைப்பதற்கானதல்ல. தத்துவங்களுக்குள் உள்சென்று ஆய்வதற்கான சிறந்த வழி, கடைசியில் அதுபற்றிய நிறையக் கேள்விகளைக் கேட்பதுதான். எல்லோரைப் போலவே நாமும் இராமாயணத்தைப் பற்றியும் மகாபாரதத்தைப் பற்றியும் நிறைய கேள்விகள் வைத்திருக்கிறோம். அதன் பிறகு இந்தக் கேள்விகளுக்கு பதில் பெறுவதற்காக நாம் புதிய தத்துவங்களைத் தேடி அதற்கென்று உள்ள நூல்களைப் படித்துக்கற்கிறோம். இப்போது உங்களுடைய பதில் என்னுடைய பதிலிலிருந்து வேறுபடலாம். ஏன் உங்களுடைய கேள்விகளே கூட என்னுடைய கேள்வியிலிருந்து வேறுபடலாம். அது சரிதான் ஏனென்றால் என்னிலிருந்து வேறுபட்டவர். இந்த நம்முடைய தற்கால வாழ்க்கையில் நீங்கள் சில பாடங்களைக் கற்க வேண்டியிருக்கலாம். நான் வேறுசிலவற்றைக் கற்கவேண்டியிருக்கலாம்.

நீங்கள் இந்த எண்ணத்துடன் இதனை அணுகினால், சிவா

ட்ரையாலஜியின் முடிவில் என்னமாதிரியான கேள்விகள் எழக்கூடும்? நீங்கள் என்னை சில கேள்விகள் கேட்பதற்கு அனுமதித்தால்... நீதிக்கான காரணத்தை கோபம் தீர்த்து வைக்குமா? முடியுமென்றால், ஏன் முடியும்? முடியாதென்றால் ஏன் முடியாது? இந்த கருத்தினைக் கொஞ்சம் நீங்கள் வெளிப்படுத்த விரும்பினால், பிளாட்டோவின் நூல்களையும், ரிஷி வேதவியாசர் எழுதிய மகாபாரதத்தையும், சைவ புராணங்களில் கூறப்பட்டுள்ள சிவபெருமானின் ருத்ரதாண்டவம் பற்றிய கதைகளையும் படியுங்கள். இன்னுமொரு அடிப்படைக் கேள்வி கூட உள்ளது. நீதி என்றால் என்ன? மனிதனை மையப்படுத்திய நீதி என்றும் தாயுள்ளத்தோடு கூடிய நீதி என்றும் உள்ளது. நீதியின் மனிதத்தன்மை அம்சம் அடிக்கடி தீங்கு விளைப்பதாக உள்ளது. ஆனால் தாயுள்ளத்தோடு கூடிய நீதி சமநிலையைப் பெற்றிருக்கும். அடுத்ததாக ஒரு கேள்வி: நல்ல தலைவரை உருவாக்குவது எது? ஒரு தலைவரை சிறந்தவரா இல்லையா என்பதை நீங்கள் எப்படி மதிப்பிடுவீர்கள்? அவருடைய சமீபத்திய செயல்பாடுகளின் விளைவுகளைக் கொண்டா அல்லது சில ஆண்டுகளோ அல்லது சில பத்து ஆண்டுகளோ உள்ள கால அளவின் செயல்பாடுகளை வைத்தா? சதி என்ற பெண்ணை நினைத்துப் பாருங்கள். சிவா ட்ரையாலஜியின் முடிவில் அவள் மிகவும் ஒழுக்கத்தில் சரியானவள் என்று ஒவ்வொருவரும் ஒத்துக் கொள்வார்கள். ஆனால் அவளுடைய ஒழுக்க உறுதியில் அவள் தன்னுடைய நம்பிக்கைக்குரியவர்களையே கொடூரமாகக் கொன்றாள். அதை சிறந்த தலைமை என்று அழைப்பீர்களா? இல்லை என்றால் ஏன் இல்லை? ஆம் என்றால் ஏன் அழைப்பீர்கள்? நான் உங்களுக்கு பதிலைத் தரப்போவதில்லை. அதைப்பற்றி மேலும் சிந்திக்க இதனை வழங்குகிறேன். சிவபெருமானைப்பற்றிச் சிந்தியுங்கள். அவர் செய்ததை ஏன் செய்தார்? அவருடைய நடவடிக்கைகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது என்ன? இவைகள் எல்லாம் கேள்விகள் பற்றியவையே. ஒவ்வொன்றைப் பற்றியும் தொடர்ந்து மதிப்பிட்டுக் கொண்டு முடிவைத் தெரிவித்துக் கொண்டே இருப்பது நவீன அணுகுமுறை போன்றது. பழங்காலத்தில் மக்கள் மதிப்பிடுவதை விட கற்றுக் கொள்வதில்தான் ஆர்வமாக இருந்தார்கள். பிறகு கற்றுக் கொண்டதைத் தங்கள் வாழ்க்கையில் கடைபிடித்தார்கள்.

நான் ஒன்றை ஒத்துக்கொள்கிறேன். நான் அந்த முடிவைப்பற்றி கலக்கம் அடைகிறேன். எழுதிக் கொண்டிருந்த வேளையில், என்னுடைய மனத்தில் ஒரு முடிவை வைத்திருந்தேன். என்

நூலின் வாசகர்களுக்கு அது ஒரு முடிவுக்கு வரும் எண்ணதைக் கொடுத்திருக்கும். ஆனால் எப்படியோ நானே அது முடிவாக இருக்கக்கூடாது என்று தெளிவாக இருந்தேன். நான் கடைசியாக எழுதியதுபோலத்தான் அது இருக்க வேண்டும். எதிர்காலத்தில் சிலவேளையில் அந்த மற்றதொரு முடிவை வெளியிடுவேன். ஆனால் இதைப் புரிந்து கொள்ளுங்கள். பழங்கால இந்திய கதை சொல்லும் முறையின் நோக்கமே உங்களை முடிவில் ஆழ்ந்த சிந்தனைக்கு உட்படுத்தி தேடலில் விட்டு கேள்விகள் கேட்டு பதில் தேடிக் கண்டு பிடித்து உங்கள் வாழ்க்கைக்கான தத்துவங்களைக் கற்பதற்கான வழியைத்தருவதே ஆகும்.

கே: சிவா ட்ரையாலஜி மனித நாகரிகத்தின் தொடக்க காலம் என்பதை உணர்த்தும் காலத்தை உள்ளடக்கி எழுதப்பட்டது. வரலாற்றுக்கு முந்திய காலமான மெலுஹாவின் நாடு, மக்கள், சமுதாயம், நாகரீகம், கலாச்சாரம் ஆகியவை உங்கள் நூலில் விவரித்துள்ளவை நவீன கால தரத்தைப் பிரதிபலிக்கின்றன. ஆனால் அத்தகைய மனித முன்னேற்றம் நாகரிகத்தின் தொடக்க காலத்தில் இயலக்கூடியதா? இது உங்கள் கற்பனையில் எழுந்த கவர்ச்சி நிறைந்த உருவாக்கம் அல்லவா?

ப: என்னுடை நூல்களின் சில பகுதிகளில் சொல்லப்பட்டிருப்பவை சரிபார்க்கத்தக்க வரலாற்றுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. என்னுடைய எழுத்துக்களில் வரும் மற்ற சிலவற்றிற்கு நான் இதுமாதிரி சொல்ல முடியாது. ஆகவே அவற்றின் உண்மை நிலைபற்றி என்னால் சொல்ல முடியாது, சிவபெருமான் மட்டுமே உண்மையை அறிவார். ஆனால் நான் சொல்ல விரும்புவதெல்லாம் என்னவென்றால், நாகரிகத்தின் உச்ச நிலையில் இருக்கும் நாம் கொடுமையாகக் கற்பனை செய்யக்கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறோம். பல்வேறு பட்ட நாகரிகங்கள் உயர்வையும் தாழ்வையும் கண்டுள்ளன என்பதற்கு போதுமான ஆதாரங்கள் உள்ளன. நாமும் நம்முடைய முன்னோர்களிடமிருந்து பாடமும் கற்றுக் கொள்ள வேண்டும். சில தளங்களில் அவர்கள் கூட பல பெரிய சாதனைகளை நிகழ்த்தி உள்ளனர். நம்மைவிட மிகவும் முன்னேற்றம் கண்ட அறிவுதுறைகள் உள்ளன. நம்மிடம் கொஞ்சம் ஆய்ந்தறியும் திறன் இருக்கிறதென்றால், அவர்களிடமிருந்து நாமும் இன்னும் கற்றுக் கொள்ளலாம்.

கே: எவர் ஒருவரும் தன்னை கடவுள் அல்லது மகாதேவர் நிலைக்கு உயர்த்திக் கொள்ள முடியும்... இந்தவகையில் வம்சாவளி அல்லது குடும்பப் பாரம்பரியம் கிரியா ஊக்கிபோல பயன்படுகிறதா?

ப: இது இறக்கும்வரையிலும் இருந்து வரக்கூடிய விவாதம் இயற்கையா அல்லது வளர்ப்பு முறையா? வம்சாவளி இதில் பங்கே வகிக்கவில்லை என்று நான் சொல்லவரவில்லை. ஆனால் அது சிறிய அளவான பங்கு வகிக்கிறது என்று நான் நம்புகிறேன். நீங்கள் சாதிக்கின்றவற்றில், மற்றவர்கள் துன்பங்களைச் சந்தித்து பெரும்பகுதி உங்கள் சொந்த வாய்ப்புகளாலும் சூழ்நிலைகளாலும் உங்கள்முன் அமையும் வாழ்க்கையில் எப்படி நடந்துகொள்கிறீர்கள் என்பதையும் வைத்துத் தீர்மானிக்கப்படுகிறது. ஆனாலும் சிலர் மிகுதியான வாய்ப்புபெற்றும் குறைவாகவே சாதிக்கிறார்கள, உலகம் அவர்களின் வாழ்க்கையை சரிவர அமைக்காதபோதிலும் சாதிக்கிறார்கள். நான் இதை எப்படிப் பார்க்கிறேனென்றால், உங்களுக்கு நடக்கின்ற பெரும்பாலானவை உங்கள் கைகளிலேயே இருக்கிறது.

கே: 'நோக்கம் மட்டுமே அடைய வேண்டிய இலக்கு அல்ல, ஆனால் அதற்கான பயணமும் தான். இந்த சாதாரண உண்மையைப் புரிந்து கொள்கிறவர்கள் மட்டுமே உண்மையான மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும்.' நம்முடைய தற்கால சமுதாயத்தில் எல்லா மூலை முடுக்குகளிலும் பரவியுள்ள நுகர்வுக் கலாச்சாரம் ஆட்கொண்டு விட்ட இந்த நேரத்தில், பகவத் கீதையின் நிலைத்திருக்கும் இந்த வாக்கியங்கள் எப்படி அதிக ஆழமான முக்கியத்துவம் கொடுத்து நிரூபனமாக்க முடியும்?

ப: இது நாம் கற்றுக்கொள்ளத் தேவையான ஒன்று. நாம் இந்த பூமியை நம்முடைய அளவுக்குமீறிய நுகர்வுக் கலாச்சாரத்தால் அழித்துக் கொண்டிருக்கிறோம். நாம் நம்முடைய இயற்கைத்தாயை மிகுதியும் ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறோம். இத்தகைய நுகர்வுநிலை ஏதாவது சிறிது மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்வதாக இருந்தால் கூட பரவாயில்லை. ஆனால் அதிகப்படியான நுகர்வுக் கலாச்சாரம் மகிழ்ச்சிக்குக் கொண்டு செல்லவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. மிகவும் அதிகமாக நுகர்வுநிலை கொண்டுள்ள அமெரிக்கா அல்லது ஐரோப்பா போன்ற சமுதாயங்களில், மிக அதிகமான

தனிமையும் மகிழ்ச்சி இன்மையும் இருப்பது உண்மையில் இதயத்தை நோகச் செய்கிறது. ஆகவே இந்த உலகத்தை எந்தவித மகிழ்ச்சியையும் அதனிடமிருந்து பெறாமலேயே நாம் உலகத்தை ஒதுக்கி வைக்கிறோம். நாம் இப்படிச் செய்வதைப் பார்ப்பது உண்மையிலேயே வருத்தமடையத் தக்கதாக உள்ளது. நாம் சமநிலையைப் பெறவேண்டியது தேவையானதாகும். மகிழ்ச்சி என்பது நம் உள்ளிருந்து வருகிறது. அது வெளி வாழ்க்கையிலிருந்தோ அல்லது நாம் சேர்க்கும் பொருள்களாலோ வருவதில்லை.

---

**டைனிக் ஜனம்பூமி, 2016**

# சமூகப் பிரச்சனைகள்

# எல்ஜிபிடி உரிமைகள் மற்றும் 377 விதி

ஒரு தனிமனித மட்டத்திலோ அல்லது ஒரு சமூக மட்டத்திலோ ஒருவர் தயாராக இருக்கும்போது மாற்றம் நிகழ்கிறது. இத்தகைய தயார்நிலைக்கு கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் மூலம் ஒருவர் வருகிறார். அரசியல் உலகில் இருக்கும் அரசியல்வாதிகளில் சிலர் எல்ஜிபிடி உரிமைகள் பற்றிய பிரச்சனைகளில் இலகுவான நிலையைக் கொண்டிருப்பது நமக்கு மனம்நோகத்தக்கவகையில் இருப்பதை உணரமுடிகிறது. இந்திய குற்றவியல் சட்டத்தின் 377 வது பிரிவு எல்ஜிபிடி களின் (பெண் ஒருபாலினச் சேர்க்கையாளர்கள் (Lesbians), ஆண் ஒருபாலினச் சேர்க்கையாளர்கள் (Gays), இருபாலின சேர்க்கையாளர்கள் (Bisexuals), திருநங்கைகள் (Tansgender)) பாலின நடவடிக்கைகளை குற்றமாகக் கருதுவது பற்றி விவாதம் மேற்கொண்டது சரியான நேரம் என்று நான் நம்புகிறேன். இது ஒரு அதிர்ச்சி உண்டாக்கக்கூடிய நீக்கம் செய்யப்படவேண்டிய விதியாகும். பண்பாடு மற்றும் மத அடிப்படையில் இட ஒதுக்கீடு பெறக்கூடிய சிலர் இருக்கிறார்கள். நன்று, நாம் அவற்றை ஆராய்ந்து பேசுவோம்.

நான் இந்து வேத வாக்கியங்களில் இருக்கும் தெளிவை ஒப்பிடும்போது, கிருஸ்தவ மற்றும் இஸ்லாமிய வேத வாக்கியங்களில் ஆழ்ந்த பயிற்சி இல்லாதவன். ஆனால் அராபியர், ஹீப்ரூக்கள், அசிரியர்கள், பெனீஷியர்கள் அடங்கிய குழுவினரின் நம்பிக்கைகள் குறிப்பாக அருவருத்து வெறுக்கத்தக்கதாகவும் கொடிய குற்றமாகவும் கருதப்படுகிற ஒருபாலினச் சேர்க்கையை குறிப்பாகத் தடை செய்கின்றன. ஆனால் ஒரேமாதிரியான கருத்தோ அல்லது அணுகுமுறையோ இல்லை. இஸ்லாமிய சவுதி அரேபியா கொலைதண்டனை உள்ளிட்ட கடுமையான தண்டனையை ஓரினச் சேர்க்கை மேற்கொள்பவர்களுக்கு வழங்குகிறது. ஆனால் குவைத்தில் பெண் ஓரினச் சேர்க்கையாளர்களைக் குற்றம் புரிந்தவர்களாகக் கருதுவதில்லை (இருந்தபோதிலும் ஓரினச்சேர்க்கை இன்னும் ஒரு குற்றம்தான்). கற்பழிப்பு மற்றும் பலாத்காரத்தால் ஏற்பட்ட கருவைக்கூட கலைப்பதற்கு தடைவிதிக்கும் கிருஸ்துவ அயர்லாந்து ஓரினச்சேர்க்கையைக்

குற்றமாக்கவில்லை. எல்ஜிபிடி பிரச்சனையில் இலகுவான கருத்துருவாக்கம் இயலக்கூடியது தான் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். அவற்றைக் கண்டு அவை பற்றிப் பேசுவதை இந்திய கிருஸ்தவ மற்றும் இஸ்லாமிய பெருந்தன்மையாளர்களிடமே விட்டு விடுகிறேன். நான் இந்துமத கொள்கையின்படி இந்த பிரச்சனையை அணுகுகிறேன்.

இந்துமத புராணங்களில் உள்ள பல கதைகள் எல்ஜிபிடி களைப் பற்றி எதிர்மறை வழியில்லாமல் குறிப்பிடுகின்றன. பீஷ்மருக்கே வெல்லமுடியாதவளாக நிரூபித்த ஷிகண்டி மகாபாரதத்திலிருந்து புகழ்பெற்ற உதாரணமாக இருக்கிறது. ஆணாக இருந்து பின்னர் பெண்ணாக தன்னுடைய விருப்பத்தை சுதந்திரமாகப் பயன்படுத்தி மாறியவன் மன்னன் பாங்கஸ்வான். மிகப்பெரிய சந்திரவன்ஷி குலத்தைத் தோற்றுவித்த இல்லா ஒரு பெண்ணாகப்பிறந்தவள். ஒரு கட்டத்தில், அவள் ஆணாக மாறி லா என்ற பெயரிடப்பட்டார். அவர் அதிக குழந்தைகளைப் பெற்றார். பெண் ஒருபாலினச் சேர்க்கை பற்றி வாத்சாயனரின் காமசூத்திரத்தில் குறிப்பு இடம்பெற்றுள்ளது. பழங்கால இந்தியாவில் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தன்னுடைய பாலின சேர்க்கைக்காக தண்டிக்கப்பட்டதாக ஏதேனும் கதையோ அல்லது உரையோ இடம்பெற்றதாக எனக்குத் தெரியவில்லை. ஒத்துக்கொள்ளும் வகையில், புராண செய்திகளில் அதற்கு ஒப்புதல் இருப்பதாக ஒருவரால் உணரமுடியாதபோது, ஆனால் கடுமையான எதிர்ப்பால் தனிமைப்படுத்தப்பட்டோ அல்லது கடுமையான குற்றமாகக் கருதப்பட்டோ இருந்ததாக அந்த காலத்தில் இல்லை.

சந்தேகமில்லை, சிலர் இப்படியும் வாதிடலாம் : இந்து சமுதாய சட்டங்கள் என்ன சொல்கின்றன? மனு ஸ்ம்ருதி என்ன சொல்கிறது? முதலில், கடவுள் அடிப்படையால் உருவான ஸ்ருதிகள் (வேதங்கள் போன்றவை) போலல்லாமல் ஸ்ம்ருதிகள் (அல்லது சட்ட நூல்கள்) மனிதனால் உருவாக்கப்பட்டு இம்மை சார்ந்தவையாகப் பார்க்கப் படுகின்றன. சமூகத்தை நெறிப்படுத்துவதற்காக அதிகமான அளவில் ஸ்ம்ருதிகள் ஒழுங்கான காலமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன. மாறுதல்இல்லாத மனு ஸ்ம்ருதி எல்லா ஸ்ம்ருதிகளைவிட ஆங்கிலேயர்களால் முழுமையான அதிக அளவில் விளம்பரம் பெற்று இது ஒன்றுதான் ஸ்ம்ருதி என்பதுபோல ஆகிவிட்டது. ஸ்ம்ருதிகள் அவை எழுதப்பட்ட காலகட்டத்தின் ஒருங்கிணைந்த நிலையை பிரதிபலித்தன. சில ஸ்ம்ருதிகள்

இலகுவானவையாகவும் சில மாற்றத்தை ஏற்காதனவாகவும் இருக்கின்றன. எந்த கால கட்டத்திலும் நாம் நம்முடைய சொந்த ஸ்ம்ருதியை எழுத முடியும்; உண்மையில் நாம் அப்படி ஒன்றை தற்போது எழுதியுள்ளோம். அந்த ஒன்று தற்போதுள்ள இந்திய அரசியலமைப்புச் சட்டம்தான்.

அதைச்சொல்லிவிட்டு, மாறாத மனு ஸ்ம்ருதி கூட ஒருபாலினச்சேர்க்கை பற்றி என்ன சொல்கிறது என்பதைப்பற்றி ஆராய்வோம். இது ஒப்பிட்டுப்பார்த்தால் ஒரு சிறுதவறான நடத்தை என்பதாகத்தான் பட்டியலிடப்பட்டு அதற்கான ஒரே தண்டனை என்பது அணிந்திருக்கும் ஆடையோடு தலைமுழுகும் சடங்கு மட்டுமே. ஆர்வமிக்க நிலையில், ஒருவன் தன்மனைவிக்குத் துரோகம் செய்தால், அது ஒரு கடுமையான குற்றமாகக் கருதப்பட்டு அதற்கானது கொலை தண்டனையாக உள்ளது. ஆகவே மாறாத மனு ஸ்ம்ருதி கூட ஒருபாலினச் சேர்க்கையை பெருத்த வெறுப்பு உண்டாக்கக் கூடியதாகப் பார்க்கவில்லை. பண்பாட்டுத்தன்மையில், பழங்கால இந்தியா ஒட்டுமொத்த சமுதாய நிலையில் வராத பாலினச் செயல்பாடுகளைக் குறித்து பெருந்தன்மையான போக்கைக் கொண்டிருந்தது. ஒருவேளை இந்த பால்உணர்வு மட்டுமே துன்புறுத்தும் குற்றமாக குழப்பத்தை உண்டாக்கும் வகையில் இல்லை என்பது காரணம். இது உணர்வை ஆசையைத் தூண்டக்கூடிய ஒன்றும் அல்ல. இந்த விந்தையான வாழ்க்கைச் சுழற்சியில் இது மற்றுமொரு அழகியல் அம்சம் மட்டுமே.

பாலுணர்வைப் பற்றிய பாரம்பரிய இந்திய தன்மைகளை 377 வது பிரிவு பிரதிபலிக்கவில்லை. இடைக்கால கிருஸ்துவ கருத்தாக்கங்களால் வலிந்து கவரப்பட்ட ஆங்கிலேய காலனிய மனநிலையின் உண்மையான பிரதிபலிப்பே இதுவாகும். இது கொஞ்சம் கொஞ்சமாக பல நூற்றாண்டுகளில் காலனிப்படுத்தப்பட்ட மக்களிடம் கசிந்துவந்து விட்டது.

இப்படிச் சொல்லியிருப்பதால், இந்த பண்பாடுசார்ந்த விவாதம், இப்படி இருக்க வேண்டும் என்பதால், சமூகத்தில் ஒரு தொடர்முறையாக இருக்கிறது. மாறாக சட்டங்கள் மதம்சார்ந்த அல்லது பண்பாடு சார்ந்த கட்டுப்பாடுகளால் எல்லைக்குள் உட்படுத்த முடியாதவை, அப்படி இருக்கக் கூடாதவை. பலமதங்களைக் கொண்ட சமூகம் ஒரு திறமையான நிலையான ஆட்சியை உருவாக்குவதற்கு இது வழியல்ல.

சுதந்திரம் மற்றும் தனிப்பட்டவர் உரிமைகளை மதிப்பது

என்ற அடித்தளத்தின்மேல் ஒரு பெருந்தன்மை மிக்க சமூகம் அமைக்கப்படுகிறது: சட்டத்தின் முன் யாருக்கும் பாகுபாடு கூடாது, எல்லோரும் அவரவர் விரும்புகிற வகையில் வாழ்க்கையை மற்றவர்கள் மீது தங்கள் விருப்பத்தைத் திணிக்காத வகையில் நடத்துவதற்கான உரிமையை பயன்படுத்தலாம். என்றாலும், சுதந்திரத்திற்குப்பிறகு அமைந்த இந்திய இலகுத்தன்மை ஒரு தனிப்பட்ட தன்மையில் உருவானதாகும். தனிப்பட்டவர்களின் உரிமைகளைவிட குழுவின் உரிமைகளை அதிகமாக மதிப்பதாக இது உள்ளது. ஆகவே, பல சட்டப்பிரிவுகளை நம்முடைய சட்ட நூல்களில் இணைத்துவைத்துள்ளோம். இந்த நூலில் பிறதோரிடத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல, பிரிவுபடாத இந்துக் குடும்பங்கள் என்ற சரத்தின்படி இந்துக்கள் அல்லாதவர்களுக்கு இல்லாத வரிச்சலுகைகள் இந்துக்கள் பெற்றிருக்கிறார்கள். இஸ்லாமியப் பெண்கள் தங்களோடு ஒத்த இந்திய சகோதரிகளுக்கு இல்லாத அநீதிகளை (பலதாரமணம் மற்றும் மூன்றுமுறை தலாக் சொல்லுதல் போன்றவை) அனுபவிக்கிறார்கள். கல்வி உரிமைச்சட்டம், 93 வது சட்டதிருத்தம் என்பதோடு இணைந்து இஸ்லாமியர் மற்றும் கிருஸ்தவர்கள் நடத்தும் கல்வி நிறுவனங்களுக்குப் பொருந்தாதவை என்று சில சட்டப்பிரிவுகளைப் பெற்றுள்ளது. இது போன்ற பலப்பல உதாரணங்கள் உள்ளன. மிகவும் நவீனமான இந்தியப் பெருந்தன்மையாளர்கள்இத்தகைய பரிவுசார்ந்த சட்டங்களை புதுமையாகக் கருதுவதில்லை. காரணம், அவர்கள் தங்களுக்குள் நியாயமான இலகுத்தன்மை மற்றும் தனிப்பட்டவர்களின் உரிமைகளைப் பற்றிய உணர்வைத் தங்களுக்குள் ஊட்டிக்கொள்ளவில்லை என்று நான் துணிந்து சொல்கிறேன். குழு அல்லது சமுதாய அடிப்படையில் சட்டத்தின்படி எந்த பாகுபாடும் இல்லாமல் தனிப்பட்டவர் உரிமைகளை சுற்றியநிலையில் மட்டுமே ஒரு நவீன அரசுஇருக்க முடியும். எனவே, உண்மையான பெருந்தன்மை கொள்கையைப் பயன்படுத்தி, பலபாலின இணைகள் ஒருவரை ஒருவர் நேசிப்பதற்கு சுதந்திரம் இருந்தால், எல்ஜிபிடி இணைகளும் அதைப்போன்ற உரிமைக்கு உரியவர்களே.

நாம் உண்மையான இந்தியராக இருப்போம். நாம் உண்மையான பெருந்தன்மை கடைபிடிப்போம்.

---

**2016 ஆம் ஆண்டு ஜனவரி ஹிந்துஸ்தான் டைம்ஸ் இதழில் முதலில் வெளிவந்தது.**

# மதமாற்றங்கள் பற்றி

அண்மைக் காலங்களில், மதமாற்றங்கள் என்ற பிரச்சனை முக்கிய இடத்தைப் பிடித்து உணர்வுகள் மேலோங்கி நிற்கின்றன. கிருஸ்துவர்கள் ஆத்மாக்களை மதமாற்றத்தின் மூலம் அடைய முடியும் என்பதற்காக உழைப்பதன்மூலம் நடந்திருக்குமென்றால் தங்கள் மக்கள்தொகை வெறும் 2.3% ஆக மட்டுமே இருக்க முடியாது என்று வாதிடுகின்றார்கள். இஸ்லாமியர்கள் தாங்கள் திட்டமிட்ட மதமாற்ற முயற்சி எதையும் மேற்கொள்வதில்லை என்றும் 1951 ஆம் ஆண்டில் 10% ஆக இருந்த மக்கள்தொகை 14% ஆக உயர்ந்ததற்குக் காரணம் வறுமை நிலையும் பிறப்பு விகிதம் உயர்ந்ததும் காரணமாக இருக்கலாம் என்று கூறுகிறார்கள். இந்துக்கள் 1951 ஆம் ஆண்டில் 84% ஆக இருந்து தற்போது 80% ஆகக் குறைந்திருப்பதற்கு அவர்களின் மதமாற்றம் பற்றி நினைக்காத கலாச்சாரம் அவர்களுக்கு சாதகமாக இல்லாமல் போய்விட்டது. எனவே அவர்கள் கர் வாபஸி (சொல்படி வீட்டுக்கு வருதல் என்று இருந்தாலும் இங்கே மதத்திற்குத் திரும்புதல் எனப்படுகிறது) திட்டங்களைக் கையாள அவர்களுக்கு எல்லா உரிமையும் உண்டு.

உணர்ச்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஒரு பகுத்தாய்வுப் பார்வையைப் பயன்படுத்த ஒருவேளை இது சரியான நேரமாகும்.

நேர்மையான நோக்கில் பார்த்தால், மதமாற்றங்களால் பொருளாதாரப் பயன் இருந்தாலும் ஆன்மிகப்படி பார்த்தால் இதன் விளைவு பெரும்பான்மை எதிர்மறை யாகவே உள்ளது. ஏன்? ஏனென்றால் நீங்கள் உங்களுக்குள் உண்மையைத் தேடும் முயற்சியில் இறங்கும்போது, உள்பார்வைமூலம் மட்டுமே ஆன்மிக வளர்ச்சி ஏற்படுதல் கூடுமேயன்றி 'மற்ற மதங்கள்' பொய்யானவை என்று நிரூபிக்க முயலும் முயற்சியால் அல்ல. ஆனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பின்பற்றிய ஆன்மிக உணர்வை வெளிக்கொண்டு வரக்கூடிய இந்த தலைப்பு மிகவும் சிக்கலான ஒன்றாகும். இது ஒரு சிறிய பத்திரிக்கைக் கட்டுரையில் விளக்கிவிட முடிந்த ஒன்றல்ல.

எனவே மதமாற்றத்தின் ஆன்மிக அம்சத்தை ஒதுக்கிவைத்து விட்டு பொருளாதாரப் பயன்கள் பற்றி சிந்திப்போம். சந்தேகத்திற்கு இடமில்லாமல் இந்தவகைப் பார்வையில், நேர்மறை மற்றும் எதிர்மறை என்ற இரண்டுமே இருக்க முடியும்.

நம்பிக்கை அடிப்படைக் கொண்ட குழுக்களின் வெளிப்படையான கல்வி மற்றும் மருத்துவப்பணி முயற்சிகளோடு, வேறு நேர்மறை நன்மைகள் என்ன இருக்க முடியும்? எந்த குழுவையும் போட்டிக்கு உட்படுத்தினால் அதில் அவர்கள் தங்களுடைய சொந்த மக்களை பிற குழுக்களிடம் இழக்க நேர்ந்தால் என்ன நேரும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? வெளிப்படையாக, சீர்திருத்தங்கள்! தங்கள் சொந்த பின்பற்று பவர்களையும், மற்றவர்களையும் கூட மிகுதியும் கவர்ந்திழுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் அவர்களால் மேற்கொள்ளப்படும். மூன்று மதக்குழுக்களிலும் தற்போது காணப்படுவதான இந்துக்களிடையே உள்ள சாதியமுறை, கிருஸ்துவர்களிடையே உள்ள குழந்தைப் பாலியல் குற்றச்சாட்டு, இஸ்லாமியர்களிடையே காணப்படும் அதீத வன்முறை ஆகிய மிகப்பெரிய சமூகப் பிரச்சனைகளின் மூலம் இதனை நாம் ஆராய்வோம். இந்த சமூகப் பிரச்சனைகளால் பாதிக்கப்படுபவர்கள் முக்கியமாக அவர்களின் உறுப்பினர்களே. இந்துத்துவத்தில் உள்ள கொடுமையான உடனடியான அபாயமாக உள்ள சாதியமுறை என்ற மிகப்பெரிய குற்றமான பழமையான வேதிய சிந்தனையினால் அழுத்தப்பட்டவர்களும் கூட இந்துக்களே. கத்தோலிக்கப் பாதிரியார்களால் கற்பழிக்கப்பட்ட பத்தாயிரக் கணக்கான மேற்கத்திய குழந்தைகளும் (சில அறிக்கைகள் கூறுவதுபோல, நூறு ஆயிரக் கணக்கிலும் இருக்கலாம்) கிருஸ்தவர்களே. தீவிரவாத இஸ்லாமியக்குழுவினர் மற்றும் ஜிஹாதிகளால் நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களில் அரபு உலகத்தில் மிகுந்த அளவில் துன்புற்றவர்களும் இறந்தவர்களும் இஸ்லாமியர்களே என்று ஆய்வுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துள்ளன.

பிடிப்பான பிறப்பு அடிப்படை சாதிய முறை 2000 ஆண்டுகளுக்கு குறைவான காலத்திற்குள்தான் தோன்றியது என்று பாரம்பரிய மரபணு பற்றிய ஆராய்ச்சி எடுத்துக்காட்டுகிறது. அதிலிருந்து விடுபடுவது மிகவும் கடினமானது என்று தோன்றுகிறது. ஆனால் கடந்த தனிச்சிறப்புமிக்க 75 ஆண்டுகளில் இந்துக்கள் இந்த

சூழ்நிலையில் இன்னும் நிறையச் செய்யவேண்டும் என்பதை நான் ஒத்துக்கொண்ட போதிலும், அவர்கள் மிகப்பெரிய முன்னேற்றங்களைச் செய்துள்ளார்கள். இதற்கான காரணம் என்ன? பல காரணங்கள் இருக்க முடியும். ஆனால் தற்போதைய சீர்திருத்தங்களில் உள்ள அம்சங்களில் முக்கியமான ஒன்று, விளிம்பு நிலையில் உள்ள இந்துக்கள் மாற்று நம்பிக்கைகள் பக்கம் போய்விடக்கூடும் என்ற அச்சம்தான் என்பதை மறுக்க முடியாது. ஆகவே போட்டிநிலை நேர்மறை விளைவுகளை வலியுறுத்தியது.

பலபத்தாண்டுகளாக ரோமன் கத்தோலிக்க தேவாலயங்கள் இந்த பாலியல் குற்றச்சாட்டு நோயை சாதாரணமாக மறுத்தன. ஆனால் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள தேவாலய நிர்வாகங்களின் பதிவேடுகளின்படி அவர்களைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கைக் குறையத் தொடங்கியது (குறிப்பாக இறைமறுப்பு மற்றும் அமைப்பில்சாராதவர்களிடம் ஆனால் மற்ற நம்பிக்கையாளர்களிடமும் சேர்ந்தனர்). அவர்கள் இந்த பிரச்சனை பற்றி விவாதிக்க வற்புறுத்தப் பட்டார்கள். எவருக்கும் குறைவில்லாதவரான போப் ஃப்ரான்சிஸ் கிருஸ்தவ பாதிரியார்களுக்குள் இளவயதினரைநோக்கிய பாலியல் கவர்ச்சி கொண்டவர்கள் பலர் உள்ளதாக ஒத்துக்கொண்டார். ஒரு பிரச்சனையைத் தீர்ப்பது என்பதன் முதல்படி அப்படி ஒரு பிரச்சனை உள்ளது என்பதை ஏற்றுக் கொள்வதுதான். இந்த தீவிரமான பிரச்சனையைத் தீர்ப்பதற்கு தேவாலயங்கள் முன்வந்து உழைப்பார்கள் என்று நான் உறுதியாக இருக்கிறேன்.

அரபு உலகத்தின் பெரும்பாலான பகுதிகளில், இஸ்லாமிய மதத்தைவிட்டு மதமாற்றம் செய்துகொள்வது சட்டப்படித் தடுக்கப்பட்டுள்ளதுடன் மரண தண்டனை வழங்குவதற்கும் உரியது. ஆகவே மற்ற நம்பிக்கைகள் அங்கே போட்டியைக் காட்ட முடியாது. ஆனால் இந்தியாவிலும் இந்தோனேஷியாவிலும் இருக்கின்ற பெருந்தன்மைமிக்க இஸ்லாமியர்களைப்போல அரபியர்களும் தங்கள் அறிவையும் மனத்தையும் வெளிப்படையாக வைத்துக் கொண்டு மற்ற நம்பிக்கைகளின் போட்டிக்கும் இடமளித்தால், அவர்கள் கொடூரமான வன்முறை பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவரமுடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

பிறகு பொருளாதார நிலையில் பார்த்தால், மதமாற்றங்கள் சில

பயன்களைக் கொடுக்க முடியும் என்று தோன்றுகிறது. ஆனால் இத்தகைய முயற்சிகள் தமக்கேயுரிய தொடர்ந்த பிரச்சனைகளை கொடுக்க முடியும். மாற்றும் முயற்சிகள் மனக்கசப்பு, அமைதியின்மை, சமூகக் குழப்பம், சில சமயங்களில் ஏன் வன்முறைக்குக் கூட இட்டுச் செல்ல முடியும். மத்திய காலங்களில், உதாரணமாக ஐரோப்பியர்கள், அரபியர்கள், மங்கோலியர்கள், துருக்கியர்கள் தங்கள் நம்பிக்கை என்ற பெயரில் மில்லியன் கணக்கானவர்களைக் கொன்றனர். இதை நாம் எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?

எந்த ஒரு தொழில்நிலையைப் போலவே (சொல்லப்போனால் இப்போது மதமாற்றமும் ஒரு தொழில் போல இருக்கிறது) விதிமுறைகள் இருக்க வேண்டும். முதலாவதாக, மதமாற்றங்கள் சட்ட அளவீடுகளின்படி கவனித்து ஆராயப்படவேண்டும். இந்தியாவில் எல்லா அமைப்புகளும் கணக்கு வழக்குகளை சமர்ப்பிக்க வேண்டும். இரண்டாவதாக, சமத்துவம் இருக்க வேண்டும். அதாவது, எந்தவொரு மதக்குழுவும் அரசு அல்லது ஊடகம் அல்லது மேன்மக்களின் சொற்கள் என எந்த எதிர்ப்பும் இல்லாமல் சட்டபூர்வமாக மதமாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் அல்லது ஒருவருமே அதற்கு அனுமதிக்கப்படக் கூடாது. மூன்றாவது, இந்தியாவில் துன்பம்தரும் வகையிலான நிதிகளும் நடவடிக்கைகளும் சட்டப்படித் தடுக்கப்பட வேண்டும். உதாரணமாக, அமைதியை விரும்பும் எவரும் சவுதி அரபியர்கள் அவர்களின் கொள்கையை பரப்ப விரும்பமாட்டான்; சவுதியின் நிதிகளும் ஊக்குவிப்பும் மதவன்முறையைத் தூண்டுவதாக புலனாய்வு அறிக்கைகள் கூறுகின்றன. அதில் அதிகமானவை தூய்மையான சவுதிகளால் "தூய்மையற்ற முஸ்லீம்கள்" என்று கருதப்படுவர்களை நோக்கியே செலுத்தப்படுகிறது. எங்கும் இருக்கின்ற பலதரப்பட்ட கொள்கைகளை மிகவும் ஒன்றிணைத்து வாழ்கின்ற இந்திய முஸ்லீம்கள் அவர்களுடைய உள்நாட்டு உணர்வுடன் கூடிய கொள்கைகளை உலகம் முழுவதும் சொல்வதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன். இந்தியாவில் அமெரிக்க எவாஞ்சலிச குழுக்களும் கூட தடைசெய்யப்பட வேண்டும். அவர்களுடைய கிருஸ்தவப் பரப்புரைகள் நாம் நன்கு அறிந்த அமைதி பரப்புரைகளான இந்திய கிருஸ்தவர்களுடையதைப் போல இல்லாமல், வெறுப்பு நிறைந்தும் இனவாத நிலையிலும் இருக்கிறது. அமெரிக்க எவெஞ்சலிசக் குழுவினரின் துன்பம் தரத்தக்க நம்பிக்கைகளைப் பற்றி அறிவதற்கு www.joshuaproject என்ற

இணைய தளத்தைப் பார்க்கவும். உதாரணமாக, 10\40 விண்டோ நாடுகள் (10 டிகிரி வடக்கு 40 டிகிரி வடக்கு இவற்றுக்கு இடையில் உள்ள நாடுகள் - இதில் இந்தியாவும் உண்டு) "சாத்தானின் வலிமையான பிடியில்" உள்ளவை என்று அழைக்கப்படுகின்றன. இந்தியாவைப் பற்றிய இந்த விவரிப்பை இந்திய கிருஸ்துவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள் என்று என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. இறுதியாக, வெளிப்படையாக எந்தவித வன்முறையும் வன்முறைக்கான அழைப்புகளும் கண்டிப்பாகத் தடை செய்யப்பட வேண்டும்.

இந்த கட்டுப்பாடுகளை நாம் விதித்துவிட்டபிறகு, எல்லா நம்பிக்கைகளும் மாற்றங்களை வெளிப்படையாக அழைப்பதற்கு நாம் ஊக்கம் தரவேண்டும். அதிலிருந்து பொருளாதார வகையிலாவது நாம் பயனடையலாம்.

இதைச்சொல்லியபிறகு, நம்முடைய நேரத்தையும் வாழ்க்கையும் மற்ற மதங்கள் தவறானவை என்று நிருபிப்பதில் வீணாக்குவதை விட நம்முடைய சொந்த நம்பிக்கையைக் கொண்டாடி, சீர்திருத்தங்களையும் கூட விரும்பி உள்ளுக்குள் ஏதேனும் ஊழல்கள் இருந்தால் விலக்கி வைத்து உழைத்து முயலுதல் ஆன்மீக வகையில் அறிவுறுத்த வேண்டியது என்று நான் இப்பொழுதும் உணர்கிறேன். ஏனென்றால் இது மட்டுமே ஆன்மிக வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும்.

---

**2015 ஆம் ஆண்டு தி டைம்ஸ் ஆஃப் இந்தியா இதழில் முதலில் வெளிவந்தது.**

# இந்தியாவில் மதவாத வன்முறை

அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஒரு உயர்படிப்பு திட்டத்திற்காகச் சென்று காலநீட்டிப்பில் இருந்தபின் இப்போதுதான் திரும்பி இருந்தேன். பெரும்பாலும் அமெரிக்கர்கள் மிகவும் நட்புமணம் கொண்டவர்களாகவும் சமூக உணர்வு கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை நான் முதலிலேயே கூற வேண்டும். நான் சந்தித்தவர்களும் அரசியல் அடிப்படையில் சரியானவர்களாக இருந்தார்கள். ஆகவே, "வெள்ளைக்காரர்களால் சுமை" என்று நீங்கள் கூறலாம், ஆனால் இந்துக்களும் இஸ்லாமியர்களும் ஒருவருக்கொருவர் அழித்துக் கொள்வதைத் தடுப்பது போன்ற சில நேர்மறை விளைவுகளை ஏற்படுத்துவதில் இந்தியாவில் ஐரோப்பிய காலனி ஆதிக்கம் காரணமாக இருந்திருக்க முடியும் என்று நீங்கள் கருதவில்லையா? என்று சம்பந்தப்பட்ட அமெரிக்கர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வியால் நான் ஆச்சரியமடைந்தேன். என்னுடைய எதிர்ப்பை ஒரு கோபப்பார்வையில் நான் காட்டியவுடன் அவர், 'ஆனால் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு மத அடிப்படையிலான மிகுந்த அளவிலான அழிவுகள் இருக்கவில்லையா?' என்று கேட்டார்.

அது என்னை சிந்திக்கத் தூண்டியது. இந்தியா, சிரியாவைப் போலவோ, ஈராக்கைப் போலவோ இருக்கிறது என்ற எண்ணத்திற்கு அவர் எப்படி வந்தார். அதனை நெருங்கி ஆராய்ந்தால், யாரும் அவரைக் குற்றம் சொல்ல முடியாது. மனத்தால் கவலைப்படாத மேற்கத்திய பத்திரிகையாளர்களால் எழுதப்பட்டமேற்கத்திய பத்திரிகைச் செய்திகளை அவர் படிக்கிறார், கவலைப்படாதவர் என்று ஏன் குறிப்பிட்டேன் என்றால், அவர்களில் பெரும்பாலோர் எந்த இந்திய மொழியையும் கற்றுக்கொள்ளவில்லை, இந்தியாவிலுள்ள ஆங்கிலத்தனமான மேட்டுக்குடியினரைத் தவிர வேறுவெளியில் யாருடனும் வாழவில்லை. அவர்கள்

அடிக்கடி இந்தியாவை பற்றிக்கொள்ளும் சாதிப்போராட்டக்களம் என்ற நிலையிலேயே வர்ணித்தார்கள். இந்த மேற்கத்திய பத்திரிகையாளர்கள் மதச்சார்பற்ற தீவிர எண்ணங்கொண்டவர்களைப் போலவே மதத்தீவிரவாத எண்ணங்கொண்டவர்களின் குரலையும் சரியான விகிதத்தில் இல்லாமல் பிரதிபலித்த நம்முடைய உயர்மட்ட ஆங்கில ஊடகங்களிலிருந்து தங்கள் எண்ணத்தை உருவாக்கிக் கொண்டார்கள். மதச்சார்பற்ற முதலாமவர்கள் இந்தக் குழுவில் உள்நாட்டுக்காரர்களாக இருந்த காராணத்தாலும், மதச்சார்புடைய பின்னவர்கள் நம்முடைய ஆங்கில ஊடகத்தின் மாறுபட்ட கருத்தை விரும்பியவர்களாக இருந்த காரணத்தாலும் இந்த எண்ணம் உருவானது. மதச்சார்பின்மையில் தீவிரமான பல பத்திரிகையாளர்கள் இந்தியாவின் "அதிக அளவிலான" மதம் தொடர்பான வன்முறைகளைப்பற்றி மிகக்கடுமையான படைப்புகள் எழுதினார்கள். "இனப்படுகொலை," "அளவற்ற படுகொலை," "கலகப்படுகொலை" என்ற சொற்கள் மிக சுதந்திரமாக விளையாட்டுக்களம்போலப் பயன்படுத்தப்பட்டன. அதற்கு மாறாக மதம்சார்ந்த தீவிரமானவர்கள் வரலாற்று நிலையிலோ அல்லது சாதிய நிலையிலோ புண்படுத்தி (தாங்கள் குறிவைக்கிற மதத்தைப் பொருத்து) தொடர்ந்து தண்டனைவழங்கக் கேட்டார்கள். இத்தகைய பயம்கொண்டவர்கள் ஏதாவது குறிக்கோள் கொண்டுள்ளார்களா?

வர்த்தக உலகம் ஒரு அதிகாரநிலை தண்டனை உத்தரவை வைத்திருக்கிறது: நாங்கள் கடவுளை நம்புகிறோம், மற்ற எதற்கும் எனக்கு விவரத்தைக் காட்டுங்கள்.

ஆகவே, நான் சில ஆய்வுகள் செய்தேன். இந்தியாவில் நடந்த மதவாத வன்முறைகளின் எண்ணிக்கை என்ன? நினைவில் கொள்ளுங்கள், பல்வேறுபட்ட மதக்குழுகளுக்கிடையில் உள்ள வருமான சமமின்மை பற்றி தகவலோ வறுமைக்கு இட்டுச் செல்கின்ற மதவாத பாகுபாடு பற்றிய தகவலோ அல்ல. இது கடந்த ஐம்பது ஆண்டுகளில் நடைபெற்ற மதவாத வன்முறை பற்றிய தகவல்.

ஆம், சாதிக்கலவரங்கள் நம்மிடை நடைபெற்றுள்ளது. அவை மனித அவலங்கள் என்பதில் அய்யமில்லை. இத்தகைய அவலங்களைத் தடுப்பதற்கும் அப்படி நடந்துவிட்டால் விரைவான நீதி கிடைப்பதற்கும் நம்முடைய நிர்வாகமுறை மாற்றிச் சீர்செய்யப்பட வேண்டும். 1960 ஆம் ஆண்டுகளில் தொடங்கி இந்தியாவில் பிரிவுகள் சார்ந்த வன்முறை ஏறக்குறைய அறுபது நிகழ்வுகள் (ஐந்துக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்ட நிகழ்வுகள்) ஏற்பட்டு மொத்தத்தில் 13,000* க்கு மேற்பட்ட மக்களின் உயிரிழப்புக்கு இட்டுச்சென்றுள்ளது. அவை கொடூரமான அவலங்கள் என்று நான் மீண்டும் சொல்கிறேன். மதம் தொடர்பான கொலைகளால் பாதிக்கப்பட்டவர்களின் துயரத்தை நான் எந்த விதத்திலும் குறைத்துச் சொல்லவில்லை. ஆனால் மிகுதியான கொலைகள் எவற்றிலாவது மக்கள் மில்லியன் கணக்கிலோ இலட்சக் கணக்கிலோ கொல்லப்பட்டிருக்கிறார்களா? இல்லை. ஜெர்மனியில் ஹிட்லர் செய்த படுகொலைகள் (1940 ஆம் ஆண்டுகளில் ஆறு மில்லியன் உயிரிழப்பு), கிழக்கு இந்தியாவில் சுதந்திரத்திற்கு முன் சர்ச்சில் தெரிந்தே ஈடுபட்ட படுகொலைகள் (ஒன்றரை மில்லியனிலிருந்து நான்கு மில்லியன்வரை 1940 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உயிரிழப்பு), இந்திய - பாகிஸ்தான் பிரிவினையில் கலவரத்தில் நிகழ்ந்த கொலைகள் (ஒரு மில்லியன் உயிரிழப்புகள்), இன்று நம்மால் வங்காளதேசம் என்று அறியப்பட்டிருக்கின்ற கிழக்கு பாகிஸ்தானில் பாகிஸ்தான் நாடு நிகழ்த்திய கொடுமைகளால் நிகழ்ந்த கொலைகள் (1970 ஆம் ஆண்டுகளில் ஒன்றிலிருந்து மூன்று மில்லியன் வரையிலான உயிரிழப்புகள்) ஆகியன அவலப்படுகொலைகள். இப்போது சிரியாவில் நிகழ்ந்து கொண்டிருக்கும் படுகொலைகள் இதற்கு பொருத்தமான எடுத்துக்காட்டாக இருக்கிறது (160,000 என்பதிலிருந்து 400,000 படுகொலைகள் எண்ணிக்கையில் இன்னும் மேலும்). ஏன், கொலம்பஸ் புகழ்வாய்ந்த அமெரிக்கப் பயணம் வந்தபோது அமெரிக்காவின் மக்கள்தொகை ஏறக்குறைய பத்து மில்லியன். அங்கு நடந்த இனப்படுகொலை முடிவுக்கு வந்தபோது, அது ஒருமில்லியனுக்குக் குறைவாக ஆகிவிட்டது.

மீண்டும் ஒருமுறை, இந்தியாவில் நடைபெற்ற

சாதிக்கலவரங்களில் ஏற்பட்ட உயிரிழப்புகளின் துன்பத்தைக் குறைத்துக் கூறாமல், நாம் பயன்படுத்தும் சொற்களில் கவனமாக இருப்பது தேவைப்படுகிறது. இது இதற்கு தொடர்பில்லாத செய்தி என்பதை ஒத்துக்கொண்டு, அமெரிக்க நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பின் தகவல்படி 2010 ஆம் ஆண்டில் மட்டும் அங்கு துப்பாக்கிச் சூடு தொடர்பான இறப்புகள் 30,000 க்குமேல் நிகழ்ந்துள்ளன. அந்த ஒரு ஆண்டில் மட்டும் துப்பாக்கிச் சூடு தொடர்பாய் நடைபெற்ற இறப்புகள் மட்டும் இந்தியாவில் கடந்த ஐம்பது ஆண்டுகளில் நடைபெற்ற எல்லா மதம் தொடர்பான வன்முறைகளில் ஏற்பட்ட ஒட்டுமொத்த உயிரிழப்புகளை விட இரண்டு மடங்கிற்கும் அதிகமானதாகும்.

இப்போது, இந்தியாவில் எல்லாம் சரியாக இருக்கிறது என்று சொல்லவில்லை. நான் என்னுடைய நாட்டைப்பற்றிப் பெருமிதம் கொள்கிறேன், அந்தப் பெருமை நம்முடைய பிரச்சனைகளைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடக்கூடாது. இப்பொழுதே இந்தியாவில் கண்மூடித்தனமான கொலைகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் இது சாதிக்கலவரங்களினால் என்று ஏற்படுபவை அல்ல. ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் 5,00,000 பெண் சிசுக்கள் கருவிலேயே சட்டவிரோதமாக அழிக்கப்படுகின்றன. அதாவது 5,00,000 பெண்கள் கருவறையிலேயே கொல்லப்படுகிறார்கள். இது சாதிக்கலவரத்தால் ஒரு ஆண்டில் ஏற்படும் இறப்பை விட 185,000% அதிகம். இன்னும் அதிகமான பெண் குழந்தைகள் முறையான ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் இறக்கிறார்கள். வளர்ந்த பிறகும்கூட, இந்தியப் பெண்கள் துன்புறுத்தலுக்கும் வன்முறைக்கும் ஆளாகிறார்கள். இவர்களை அடக்குமுறையில் வைத்திருப்பது அரசாங்கம் மட்டுமல்ல நம்முடைய சமுதாயம் முழுமையும்தான். நாம் இந்தியர்களின் உயிரைக் காப்பாற்ற விரும்பினால், படுகொலைகளையும் அநீதியையும் தடுக்க விரும்பினால் இங்கேதான் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். எல்லா மதம் அல்லது மொழி அல்லது சாதி, சமூகப் பிரிவுகளிலும் உள்ள இந்தியாவில் மிகவும் ஒடுக்கப்பட்ட குழுவான பெண்களிடம்தான் இது தேவை.

மதத்தைப் பற்றிய அச்சத்தை உண்டாக்குகிற இயல்பு

"மதச்சார்பற்ற" மற்றும் "மதம்சார்ந்த" தீவிரவாதிகளுக்குப் பொருந்துவதாகத் தெரிகிறது. மதம்சார்ந்த குழப்பம் என்பது ஒரு பிரச்சனை என்று நான் ஒத்துக் கொள்கின்றேன். உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் அனைவரையும் கவ்விப்பிடித்திருக்கின்ற பிரச்சனை என்பதை நான் கூடுதலாகச் சொல்கிறேன். மதவாத வன்முறைச் சேற்றில் இந்தியா மூழ்கிவிடப் போகிறது என்று நான் நிச்சயமாக நினைக்கவில்லை. முழுமையான இணக்கத்தோடு வாழ்வதற்கு பல சமுதாயங்கள் வாழமுடியாமல் போகலாம் என்றாலும், பெரும்பாலும், மிகப்பெரிய வன்முறைக்கு இடமளிக்காமல் நாம் ஒன்றாக இருப்பதற்கு கற்றுக் கொண்டுள்ளோம்.

இந்தியாவில் உள்ள மதம்சார்ந்த மக்களைப் பற்றி விளக்குவதற்கு எல்லா பயம்நிறைந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும் மிகப்பெரும்பான்மை இந்தியர்கள் என்னையும் உங்களையும் போல மதத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவர்களாகவும், மிகவும் பெருந்தன்மை மிக்கவர்களாகவும், நம்முடைய நம்பிக்கைக்காக இறப்பதற்கோ அல்லது கொல்வதற்கோ விருப்பமில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். எண்ணிக்கைகள் இதற்கு தெளிவான அத்தாட்சியாக உள்ளன. வருந்தத்தக்க வகையில், நாம் பெண் குழந்தைகள் மற்றும் பெண்களைப் பற்றி வரும்போது நாம் அவர்களிடம் வன்முறையாளர்களாக இருக்கிறோம். இந்தியாவின் கொள்கையை நாம் உண்மையிலேயே விரும்புகிறோம் என்றால், நம்முடைய விடுதலையை உறுதி செய்வதற்காக மதத்தைத் தாக்குவதைவிட நாம் பெண்களிடத்து காட்டும் ஒடுக்குமுறை பிரச்சனையில் கவனம் செலுத்த வேண்டும்.

சில சமயங்களில் தகவல்களைக்கொண்டு பேச வேண்டும். அலங்கார வார்த்தைகளை வெளிப்படையாக இருப்பவற்றைப் பெரிதாக ஆக்கிவிடுவதற்கு அனுமதிப்பதிலிருந்து நாம் தடுத்துக் கொள்ள வேண்டும். இத்தகைய வார்த்தைகளின் பின்னால் மறைமுகத் திட்டம் என்ன என்று நீங்கள் ஒருபோதும் அறியமாட்டீர்கள்.

---

*–ஆதாரம்: அவுட் லுக் இதழ்

**2014** ஆம் ஆண்டு ஹிந்துஸ்தான் டைம்ஸ் இதழில் முதலில் வெளிவந்தது.

# நட்பிணக்கமாக விவாதித்தல்

2014 ஆம் ஆண்டில் ஒரு ஏழு வாரகாலம் அமெரிக்க நாட்டில் இருந்தபோது, அவர்களின் பொதுவிவாதங்களில் காணப்பட்ட வெறுப்புநிலை கண்டு வியந்துபோனேன். 'இடது' மற்றும் 'வலது' என்று சொல்லப்பட்ட விமர்சகர்கள் பெரும்பாலான பிரச்சனைகளில் முன்னரே முடிவெடுக்கப்பட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். அவர்களுடைய வேலை: அவர்களின் கொள்கை 'முற்றிலும் உண்மையானது' என்றும் மற்றவர்களுடையது 'முற்றிலும் கொடுமையானது' என்றும் திருப்தியடைந்து, தங்கள் குழுவினருக்கு ஆதரவு திரட்டிப்பாதுகாத்தல் (ஆம், நான் இத்தகைய சொற்களைக் கேட்டேன்). அவர்கள் பொதுவான காரணங்களைக் காண முயலவில்லை. அண்மைக் காலங்களில், இந்த விவாதமுறை, இந்திய ஊடகங்களைப் பாதித்துள்ளது. முந்தைய காலங்களில் இத்தகைய பொதுமக்கள் வெறுப்புநிலை இருந்ததில்லை. ஏனென்றால் கல்வி மற்றும் தகவல் பரிமாற்றத் தளங்களில் இடதுசாரிகள் மேலோங்கி இருந்தனர். தனிப்பட்ட ஆளுகைநிலை பெரும்பாலான நேரங்களில் போட்டியோடு வெறுப்புநிலையையும் காலத்தால் மூழ்கடித்துவிடும்! வலதுசாரிகளின் வளர்ச்சி விவாதங்களுக்கு வலுவூட்டியுள்ளது; அது நல்ல செய்தி. இந்த கலத்தல்நிலை அல்லது எண்ணக்கருத்துகளை ஒன்றுகலக்கச்செய்தல் மிகவும் தேவையான மாற்றுக்கருத்துகளுக்கு இட்டுச் செல்லும். இருந்தபோதிலும், முரண்பாடுமிக்க அமெரிக்க அணுகுமுறையை முன்னுக்குக் கொண்டுவருவது பொதுவான அடிப்படை உருவாவதைத் தடம்புரளச் செய்துவிடும்.

பல பழங்காலப் பண்பாடுகளிலிருந்து (நம்முடைய சொந்த பண்பாடுகளையும் உள்ளடக்கியது) உருவாக்கப்பட்ட விவாதத்தை மீண்டும் ஏற்றுக்கொள்வதற்கான கொள்கைகளை நான் முன்மொழிகிறேன். அவற்றின் ஆதாரமான அடிப்படை எவருமே முழுமையான உண்மையை அறிந்துகொள்ள முடியாது என்பதாக இருந்தது. நவீன அறிவியல் சிலர் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய இந்த கொள்கைக்கு ஒரு இலகுவான தொடரைக் கொடுத்துள்ளது; அது கவனிப்பாளர் மாறுபாடு, அது

உங்கள் மதிப்பீடுகள் மற்றும் எதிர் பார்ப்புகள் 'உண்மைகள்' பற்றிய உங்கள் கருத்துகளை தாக்கம் கொள்ள வெளிப்படையாகத் தெரிவிக்கிறது. கொள்கைநிலை இயற்பியலாளர்களையும் கூட அவர்களுடைய முடிவுகளுக்குள் இது காரணியாக்குகிறது. இதை ஏற்றுக்கொள்வதால் பணிவையும் அடக்கத்தையும் சிறிதுசிறிதாக ஊட்ட முடியும். அதன்மூலம் வேறுபட்ட கருத்தையும் கவனிக்கும் சாத்தியத்தை ஏற்படுத்த முடியும். அரசியல் நிகழ்வுகளைக்கூட நாம் இத்தகைய 'பிரிசம்' (முப்பரிமாண பார்வைக்கருவி) அமைப்பதுபோன்ற செயல்பாட்டின் பார்வையில் அணுகினால், அது ஆர்வமூட்டக்கூடிய உள்பார்வைகளுக்கு இட்டுச் செல்கிறது. உதாரணமாக, பத்திரிகையாளர்களின் கருத்துகளைக் கொண்டு தீர்மானித்து, மேற்கத்திய ஊடகம் (தி நியூயார்க் டைம்ஸ், தி எகானாமிஸ்ட் போன்ற மற்றவை) அடிக்கடி தன்னை நியாயமான நன்மைகளின் சக்தியாகப் பார்த்து தீர்ப்பளிப்பதையும் 'பிரபஞ்ச மதிப்பீடுகளை' உலகம் முழுமைக்கும் அமல்படுத்தச் செய்வதையும் நான் எதிர்த்து உள்ளேன். இருப்பினும், ஈராக், லிபியா, மற்றும் சிரியாவில் உள்ள துரதிஷ்டமான அராபியர்கள் இவற்றை மாறுபட்டு நோக்குகிறார்கள். ஒரு மில்லியன் அராபியர்களுக்குமேல் இறப்பதற்குக் காரணமாயமைந்த, இந்த துரதிஷ்டமான நாடுகளின்மேல் படையெடுப்பதையோ குண்டு வீசித்தாக்குவதையோ கண்டு பெரும்பாலான மேற்கத்திய ஊடகங்கள் மகிழ்ச்சியூட்ட நிலைக்கு இட்டுச் செல்லப்படுகின்றன. ஆம், ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட அராபியர்கள் என்பதை நான் அடிக்கோடிடுகிறேன். மேற்கத்திய ஊடகம் பற்றி ஒரு அராபிய நண்பர், இது 'மிகப்பெரிய அறிவீனமோ அல்லது முற்றிலுமான கொடுமையோ' என்று குறிப்பிட்டார். என்றாலும், மேற்கத்திய ஊடகம் தன்னுடைய சொந்த சமுதாயத்திற்காவது ஏதாவது சில நன்மையும் கூட புரிந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒருவேளை கவனிப்போர் மாறுபாடு என்பதன் யதார்த்தத்தை நீங்கள் ஒத்துக்கொண்டால், நுட்பமான உண்மை, அது எதுவானாலும், மிகவும் ஒதுக்கப்பட்ட மத்திய பகுதிகளிலும் எங்கோ இருக்கிறது என்பதை நீங்கள் உணரலாம். மேலும், மேற்கத்திய நாடுகள் அல்லாத இடங்களில் மேற்கத்திய ஊடகத்தின் 'புலனாய்வு திறமைகள்' பற்றி எச்சரிக்கையாக இருப்பது ஒருவேளை புத்திசாலித்தனமாகும்.

இரண்டாவது ஆலோசனையும்கூட பழங்கால உலகப்

பார்வையின் அடிப்படையிலானதுதான். 'பிரபஞ்ச மொழி' என்றும் கூட அழைக்கப்படுவதான கணிதம் என்ற ஒன்றைத்தவிர மற்ற எல்லா களங்களிலும் முற்றிலுமான உண்மை என்பது விலகியே இருந்தது. விவாதங்களை இன்னும் கொஞ்சம் அதிகமான 'உண்மையுள்ளதாக' ஆக்குவதற்கு, உங்கள் முன்மொழிவுகளை ஆதரிப்பதற்கு எண்களைப் பயன்படுத்துங்கள். வேறுவகையில் சொல்வதானால் தகவல்களைப் பயன்படுத்துங்கள். அண்மைக் காலங்களில், சில கொடூரமான நிகழ்வுகள் மற்றும் கட்டுப்பாடில்லாத பேச்சுக்கள் அடிப்படையில் பெருகிவரும் சகிப்புன்தன்மை இல்லாமை குறித்த கடுமையான விவாதம் ஏற்படுத்தும் வலிகளை இந்தியா காண்கிறது. வன்முறையால் அல்லது இயற்கை முறை அல்லாத வேறு எந்த வடிவால் இழந்த ஒவ்வொரு தனிமனித உயிரும் கொடூரமான துன்பகரமானது; ஆனால் இந்தியாவில் மற்ற வடிவிலான இயற்கை மரணங்களை ஒப்பிடும்போது, மதம்தொடர்பான வன்முறை அதிகம் அல்லது கடந்த ஐம்பது ஆண்டுகளில் எப்போதாவது அதிகமாக இருந்ததாக தகவல் பிரிதிபலிக்கிறதா? இல்லை. கடந்த ஐம்பது ஆண்டுகளில் எல்லா மத வன்முறைகளாலும் கொல்லப்பட்ட மனிதர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கையைவிட ஒவ்வொரு இரண்டு வாரத்திலும் அதிக எண்ணிக்கையிலான பெண்கள் கருவிலேயே அழிக்கப்படுகிறார்கள். இதை எண்ணிப்பாருங்கள் : இரு இரண்டு வாரங்களுக்கு மட்டும் பெண் சிசுக்கொலையை நிறுத்த முடிந்தால், ஐம்பது ஆண்டுகளில் நடந்த ஒரேயொரு மதக்கலவரம் அல்லது வன்முறை நிகழ்விலிருந்து காப்பாற்றக்கூடிய இந்திய உயிர்களைவிட அதிகமாக நாம் தடுத்துக் காப்பாற்ற முடியும். மேலும் சில தகவல்கள்... ஒவ்வொரு 45 நட்களிலும் அதிக அளவிலான இந்தியக் குழந்தைகள் வயிற்றுப்போக்கு நோயால் இறக்கின்றனர். அதிகமான இந்தியர்கள் ஒவ்வொரு மாதமும் சாலை விபத்தினால் கொல்லப்படுகிறார்கள். இவை கடந்த ஐம்பது ஆண்டுகளில் எல்லாவிதமான மதவன்முறைகளால் கொல்லப்பட்ட ஒட்டுமொத்தமானவர்களையும் விட அதிகமானதாகும். அதற்குமேலும், மிக உச்ச நிலையிலிருந்து மதம்தொடர்பான வன்முறைகள் குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்துள்ளன என்பதையும் கூட எண்ணிக்கைகள் வெளிப்படுத்துகின்றன (சுதந்திரத்திற்குப் பின்னுள்ள மத வன்முறைகளின் உச்ச காலம் 1960 ஆம் ஆண்டுமுதல் 1990 ஆம் ஆண்டு ஆரம்பகாலம் வரை நீண்டிருந்தது). எங்கு நம்முடைய முயற்சிகள், நம்முடைய பேச்சின் அளவும் கூட ஒழுங்குபடுத்தபட வேண்டிய நிலையில் உள்ளன என்பதை நாம் அறிகிறோம். தகவல் சரியான

காட்சியை வழங்குகிறது.

இறுதியாக, நாம் கடுமையான பிரச்சனைகளை அமைதியான மனத்துடன் அணுகுகிறோம் என்பதை முன்வைக்கிறேன். தீர்ப்புகளை சொல்வதற்கு முன்னும் ஊடகங்கள் செயல்பாட்டை வெளிப்படுத்தும் முன்னும் புலன் விசாரணைகள் முடிவடைவதற்கு நாம் காத்திருக்க வேண்டும். 2015 ஆம் ஆண்டின் ஆரம்பகால 'தேவாலய தாக்குதல் சம்பவங்கள்' என்பதைப் பொருத்தவரையில், அவற்றில் பெரும்பாலானவைகளில் நிகழ்வு ஒருபோதும் மதம் தொடர்பான கோணத்தில் இல்லை என்பது பின்னர் வெளிவந்தது. சில வெளிப்படையான கொள்ளை சம்பவங்கள். அதில் ஒன்றும் கூட இந்து அல்லாத ஒரு காதல் கொண்டவரின் காதல் தோல்வியின் துன்ப உணர்வால் நிகழ்ந்தது என்று அறியப்பட்டது. அதோடுகூட, டெல்லியில் நான்கு தேவாலயங்கள் நாசப்படுத்தப்பட்ட காலத்தில், 200 கோயில்கள், முப்பது குருத்வாராக்கள், பதினைந்து மசூதிகளும்கூட நாசப்படுத்தப்பட்டுள்ளன. மதம்தொடர்பான வேதனைகளால் இவை நடந்தன என்பதைவிட பொதுவான சட்டம் ஒழுங்கு இல்லாத நிலைமையினாலேயே நடந்துள்ளன என்பதை இது உணர்த்துகிறது. மேற்கு வங்காளத்தில் நடைபெற்ற கிருஸ்துவ கன்னிகாஸ்திரி கற்பழிப்பும் கூட (ஊடகங்களில் சில, இதற்கு இந்து வலதுசாரி பிரிவினர் காரணம் என்று உடனடியாக வெளியிட்டன) சட்டத்திற்குப் புறம்பாக நுழைந்த வங்காளதேச முஸ்லீம்கள் உண்மையில் ஈடுபட்ட நிகழ்வு. மற்றவர்கள் இதனை யாரேனும் சிலர் சிலுவைப்போர் - ஜிகாத் என்ற கண்ணோட்டத்தில் காண்பதற்கு முன்பாக, இதன் புலன் விசாரணகள் பணத்தகராறு தொடர்பான ஒன்று என்று பழிசுமத்திய தன்மையுள்ளது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்தியாவில் மதவாத அடிப்படைவாதிகளோ மதம்தொடர்பான வன்முறைகளோ இல்லை என்று நான் முன்னெடுத்துச் சொல்லவில்லை. ஆனால் அதிர்ஷ்டவசமாக, நம்முடைய மக்கள்தொகை அளவோடு ஒப்பிடும்போது இது குறைந்த எண்ணிக்கையிலானது என்பதை தகவல்கள் வெளிப்படுத்துகின்றன. இந்தியாவை மதச்சார்புடைய நாடு என்று அழைக்க முடியாது. ஆனால் வெறுப்புநிலைகளைக் கொண்டுள்ளது என்று அழைக்க முடியும். அல்லது சுகாதாரத்தைப் பற்றியோ சாலை விதிகளைப் பற்றியோ கூட கவலைப்படுவதில்லை.

மக்கள் மத்தியில் விவாதிக்கின்ற இந்தியர்கள், கவனிப்போர்

மாறுபாட்டையும், கவனிக்கின்ற திறமையைப் பேணி வளர்ப்பதையும், தகவல்களை முக்கியமாகப் பயன்படுத்துவதையும், அமைதியாக இருப்பதையும் ஒத்துக்கொள்ள முடியும். சிறப்புமிக்க, சிறிய கருத்துவேறுபாடுகள் கொண்ட, ஆக்கபூர்வமான ஒருங்கிணைந்த எண்ணத்தை மேம்படுத்தும் முயற்சிக்கு பதிலாக எதிர்ப்பு மனப்பான்மை கொண்ட இணைகளுக்குக் கொண்டு சேர்த்துவிட்ட அமெரிக்க நிலைப்பாட்டை நாம் நேரடியாக ஒதுக்கிவிடலாம்.

---

முதலில் தி டைம்ஸ் ஆஃப் இந்தியா நவம்பர், 2015 இதழில் வெளிவந்தது.

# சாதியமுறைக்குத் தடை

ரோஹித் வெமுலாவின் கொடூரமான இறப்பு மீண்டும் ஒருமுறை சாதியப் பாகுபாடு என்னும் துன்பம்தரும் உண்மையை இந்திய சமுதாயத்தில் முன்னிலைக்குக் கொண்டுவந்து விட்டது. அரசியல்வாதிகளால் உருவாக்கப்பட்ட தொடர்ந்த செயல்பாடுகளை தாக்குப்பிடிக்க முடியாமல், அட்டவணை இனத்தவர்கள் (SC) தாங்கள் ஒரு குழுவாக இந்தியாவில் நிலவும் கொடுமையான தவறான எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்பதை சாட்சியங்கள்தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

அறிந்தவரையில், மேற்கத்திய கல்வியாளர்கள் அல்லது அரசு சாரா தன்னார்வ நிறுவனங்கள் உருவாக்குகிற 'அநீதி இலக்கியம்' என்பதைப்பற்றி மேற்கத்திய நிலை சாரா இந்தியர்களில் பலர் கோபம் கொண்டுள்ளனர். மிகவும் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையினர்களுள் நாகரிகமடைந்த உலகில் ஆப்பிரிக்க அமெரிக்கர்களும் ஐரோப்பிய ரோமர்களும் பரிதாபமாக உள்ளனர் என்பது பல்வேறுபட்ட விரிவான ஆய்வுகள் மூலம் தெரிகிறது. என்றாலும், மேற்கத்திய கல்வியாளர்கள் அல்லது ஊடகம் அல்லது அரசுசாரா தன்னார்வ நிறுவனங்களின் போலி நடிப்பு என்பது இந்தியர்கள் தங்கள் தோல்விகளில் நேருக்குநேர் எதிர்த்து நிற்காமைக்கு மன்னிப்பாக இருக்க முடியாது.

தற்போதுள்ள பிறப்பு அடிப்படையிலான சாதிய முறையும் அதன்தொடர்பான சமுதாய பாகுபாட்டுத் தன்மையும் இந்தியாவின் மீதும் முழுமையும் சாதகமாயுள்ள நம்முடைய பழமையான பண்பாட்டுக் கொள்கைகளின் மீதும் படிந்த கறையாக இருக்கிறது. தற்போதுள்ள சாதியமுறை நம்முடைய பழமையான மறை நூல்களால் புனிதமாகக் கருதப்படுவதாக சொல்லக்கூடிவர்கள் சிலர் இருக்கிறார்கள். அது உண்மையல்ல.

டாக்டர் அம்பேத்கர் அறிவுபூர்வமான தன்னுடைய 'ஹு வெர் தி சூத்ராஸ்?' (சூத்திரர்கள் யார்?) என்ற நூலில், இந்திய

வேதங்களிலும் வேதவாக்கியங்களிலிருந்தும் இந்தியாவில் சக்திவாய்ந்த சூத்திர ஆட்சியாளர்களும் இருந்துள்ளார்கள் என்பதை நிரூபிக்க எடுத்துக் காட்டியுள்ளார். பாகுபாட்டையும் பிறப்பு அடிப்படை சாதிய முறைகளையும் நியாயப்படுத்தி ஒடுக்கப்பட்ட நிலையைக் கூறும் வார்த்தைகள் வெகுகாலத்திற்குப் பின்னர் அவற்றில் இடைச்செறுகல் செய்யப்பட்டவை என்றும் கூறியுள்ளார். பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணர் தான் நான்கு வர்ணங்களை குணம் (உயர்நிலைகள்) மற்றும் கர்மா அடிப்படையில் உருவாக்கியுள்ளதாகத் தெளிவாகக் கூறியுள்ளார்; பிறப்பு குறிப்பிடப்படவில்லை. நம்முடைய பழங்கால இந்தியாவில் ரிஷிகள் அல்லது முனிவர்கள் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்பட்டனர். நம்முடைய மிகப்பெரிய இரண்டு இதிகாசங்களான இராமாயணம் மற்றும் மகாபாரதம் பிறப்பால் பிராமணரல்லாத ரிஷிகளால் இயற்றப்பட்டவை. வால்மீகி முனிவர் ஒரு சூத்திரரின் மகன். கிருஷ்ண துவைபயன முனிவர் (வேத வியாசர் என்றும் அழைக்கப்படுவர்) ஒரு மீனவப் பெண்ணுக்குப் பிறந்தவர். புகழ்பெற்ற ஜபாலி உபநிஷதம் எழுதியவராகக் கருதப்படும் சத்யகாம் ஜபலாஜி மணமாகாத ஒரு சூத்திரப் பெண்ணுக்குப் பிறந்தவர். அவரது தந்தையின் பெயர் அறியப்படவில்லை. வால்மீகி இராமாயணத்தின்படி ஜபலாஜி அயோத்யா ஆட்சிநிலையில் இராமபிரான் காலத்தில் அரசவை முனிவராக தற்காலிகமாகப் பணியாற்றியவராகத் தெரிகிறது. அவர்கள் அனைவருமே தங்கள் கர்மா என்ற செயல்பாட்டின் மூலம் பிராமணத்துவம் பெற்றவர்கள்.

மத பிடிப்புத்தன்மை மற்றும் பாகுபாடு ஸ்ம்ருதி காலத்தில் (இயேசு கிருஸ்து பிறந்ததற்குப்பின்பிருந்து 1200 ஆம் ஆண்டு நீட்டிப்பு வரை) உருவானதாக மேக்கில் பல்கலைக் கழகத்தின் மதங்கள் ஒப்புநோக்குத்துறை பேராசிரியர் அர்விந்த் சர்மா கூறுகிறார். மேலும் அது பக்தி இயக்கம் நடத்திய பல மேல்வகுப்பு சாராத முனிவர்களால் இடைக்காலத்தில் சவாலாகக் கருதப்பட்டது. சூத்திர மன்னர்களால் ஆளப்பட்ட சக்தி வாய்ந்த ஆட்சிநிலை சமஸ்தானங்கள் உருவாகின. உதாரணமாக ககாடியர்கள். பின்னர், பிறப்பு அடிப்படையிலான சாதிய முறை மீண்டும் ஆங்கில காலனி ஆட்சிக்காலத்தில் இறுக்கப்பிடிப்புநிலை பெற்றது. அதிலிருந்து அது நிலைத்து வருகிறது.

மரபு அணு ஆராய்ச்சி மூலம் கிடைக்கும் அறிவியல்

ஆதாரங்கள் வேதங்களில் பிறப்பு அடிப்படை சாதியமுறை இல்லை என்பதை நிலைநிறுத்துகின்றன. 'சாதிய தனித்தன்மை' என்பதன் தொடர்ச்சியாக கலப்புமணம் தடைசெய்யப்பட்டதானது இந்த பிறப்பு அடிப்படை சாதிய முறைக்கு அடிப்படைக் குறியீடாக இருக்கிறது. அமெரிக்கன் ஜர்னல் ஆஃப் ஹ்யூமன் ஜெனடிக்ஸ், இயற்கை மற்றும் தேசிய அறிவியல் கல்விக்கழக இதழ் போன்றவற்றில் வெளியிடப்பட்ட பல்வேறு கட்டுரைகள், வேறுபட்ட மரபு குழுக்களுக்கிடையில் கலப்பு உருவாக்கம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் மிகவும் சாதாரணமாக இருந்ததையும் சுமார் கிருஸ்து பிறப்பு ஆண்டுமுதல் 400 ஆண்டுவரை இருந்து வந்துள்ளதையும் நிரூபிக்கின்றன. (மறைமுகமாக, முதல்முறையாக சாதியப் பாகுபாடு வெளிவந்து வரலாற்றில் பதிவுபெற்றதாக அரவிந்த் சர்மா முன்வைத்த காலத்தோடு இது பொருந்துகிறது). இதன்வழி அறியக்கூடியது வெளிப்படையாகத் தெரிகிறது. ஜாதி (பிறப்புசமூகம்) மற்றும் வர்ணம் (குணம் மற்றும் கர்மா அடிப்படையாலான தனிப்பட்டதன்மை மற்றும் இயற்கை) உருமாறி ஏற்பட்ட கலப்பான இப்போது இருக்கும் பிறப்பு அடிப்படையிலான சாதிய முறை சுமாராக 1600 முதல் 2000 வரையிலான இடைப்பட்ட காலத்திற்கு முன் தோன்றியுள்ளது. அதற்கு முன் அது இருக்கவில்லை. கேஸ்ட் (caste) சொல்லே ஒரு போர்த்துகீசிய உருவாக்கம் என்பதைக் குறித்துக் கொள்ளுங்கள். வம்சம் அல்லது இனம் என்ற பொருள்கொண்ட 'கேஸ்டா' (casta) என்ற போர்த்துகீசிய அல்லது ஸ்பானிஷ் சொல்லிலிருந்து உருவானது.

இந்திய சமுதாயத்தில் பிறப்பு அடிப்படை சாதிய முறை ஏற்படுத்தக்கூடிய பெரும் நாச விளைகளை உணர்ந்து நம் இந்தியக் குடியரசின் தோற்றத் தந்தைகளானவர்கள் நன்றிகூறும் வகையில் விழிப்புணர்வோடு இருந்தனர். இந்திய அரசியல் சாசனம் துணிச்சல்கரமான கொள்கைகளைக் கொண்டுள்ளது. ஆனால், இன்று வெளிப்படையாகத் தெரிவதுபோல், ஒதுக்கீடு போன்ற அரசின் கொள்கைகள் மாற்றத்தைக் கொண்டபோதிலும், அது போதுமான அளவுக்கு நல்லதாக இல்லை. தலித் அறிஞரான சந்திரபன் பிரசாத்தின் பணிகள், 1991 ஆம் ஆண்டுக்குப்பின்னுள்ள பொருளாதார சீரமைப்புத் திட்டங்கள் பாதியளவுக்கு இந்தப் பிரச்சனையை தீர்த்துள்ளது என்பதைக் காட்டுகின்றன. 2006-07 ஆம் ஆண்டிற்கான அகில இந்திய எம்.எஸ்.எம்.ஈ கணக்கெடுப்பின்படி சுமாராக நாட்டிலுள்ள மொத்த தொழில்

நிறுவனங்களில் 14 சதவிகிதம் நிறுவனங்கள் அட்டவணை இனத்தவர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோர்களுக்குச் சொந்தமானவை எனத்தெரிகிறது. அவர்கள் ஏறக்குறைய எட்டு மில்லியன் பேருக்கு வேலைகளை வழங்குகின்றனர். இப்போது இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக உள்ளது.

உயர்சாதி ஏழைகளையும் கிராமப்புர நிலமற்ற ஏழைகளையும் ஒதுக்கீட்டுக் கொள்கைகள் ஒதுக்கி வைத்து விட்டன என்று உரிமை கோரிச் சொல்பவர்கள் பலர் உள்ளனர். இதிலும் சிறிதளவு உண்மை இருக்கிறது. ஆனால் போதிய கல்வி வசதிகளும் வேலைகளும் இல்லாத நிலையே இதற்கு பெரும்பான்மைக் காரணம். இது இருக்கின்ற மிகக்குறைவான வாய்ப்புகளைப் பகிர்ந்தளிக்கும் நிலைக்கு இட்டுச் செல்கிறது. 1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட சீரமைப்புகள் இந்த குறைபாட்டைப் போக்கியது என்பதில் அய்யமில்லை. ஆனால் அவை போதுமான அந்த அளவை எட்டவில்லை. தலித்துகளுக்கு மட்டுமல்லாமல், கிராமப்புர மற்றும் நகர்ப்புர உயர் வகுப்பு ஏழைகளுக்கும் சீரமைப்புக் கொள்கைகள் உதவியாக இருக்க வேண்டும் என்று பலர் வாதிடுகிறார்கள்.

ஆகவே, சந்திர பன் பிரசாத் திரும்பத்திரும்பக் குறிப்பிட்டுக் காட்டுவதுபோல, மற்ற அரசு கொள்கைகளோடு ஒப்பிடும்போது, பொருளாதார சீரமைப்புகள் மற்றும் நகரமயமாதல் சாதியப் பாகுப்பாட்டையும் பொதுவாக வறுமையையும் மட்டுப்படுத்துவதில் மிகுந்த அளவுக்கு முன்னெடுத்துச் செல்லும். இருப்பினும், பொருளாதார சீரமைப்புகளின் தாக்கத்தைக் கருதாமல், சாதியப் பாகுபாடு எல்லா இந்தியர்களாலும் முனைப்புடன் எதிர்த்துப் போராட வேண்டியதாகும். இது நம் நாட்டின் ஆன்மாவிற்காகச் செய்யப்பட வேண்டும்.

பிறப்பு அடிப்படையிலான சாதிய முறையை வேரோடு களையவேண்டியது சமுதாய அளவில் நாம் எல்லோரும் இணைந்து நடத்த வேண்டிய போராகும். இந்த போராட்டத்தின்மூலம் நாம் நம்முடைய பழமைவாய்ந்த பண்பாட்டுக்கு மதிப்பளிப்போம். மிகவும் முக்கியமானதாக, வெளிப்படையாகத்தெரியும் தவறான ஒன்றை நாம் முடிவுக்குக் கொண்டு வருவோம்.

---

தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, பிப்ரவரி 2016 இதழில் முதலில் வெளிவந்தது.

# ஊழல்குற்ற நடைமுறைகள்

நகர்ப்புர இந்தியா நம்முடைய நாட்டில் அரசியல் மற்றும் அரசாங்கத்தின் ஊழல் தன்மையுள்ள போக்கை தொடர்ந்து ஆராய்வதான வலிநிறைந்த நிலையில் உள்ளது. அண்ணா ஹசாரேயின் ஊழலுக்கு எதிரான இயக்கம் நம்முடைய நகரங்களை ஆர்வமிக்க ஒரு புனிதப்பணியாகவே ஆற்றலோடு இதில் ஏற்படுத்தியுள்ளது. அண்ணா குழுவில் உள்ள சில பொறாமை கொண்டவர்கள் நம்முடைய தேசத்தின் பண்பாடே ஊழல்மிக்கது என்று நம்மிடம் சொல்கிறார்கள். நம்முடைய 'சமுதாயத்தைச்' சேர்ந்த ஒருவரிடமே, கேவலம் மதுபாட்டில்களுக்காக நம்முடை மதிப்புமிக்க வாக்குகளை விற்கவில்லையா? தகுதிபார்க்காமல் வேண்டியவர்களுக்கு சலுகைசெய்வதை முறையென்று பின்பற்றவில்லையா? அதில் விதிவிலக்கு இல்லையல்லவா? ஏன். நாம் கடவுளிடம் கூட ஆசிகள் பெறுவதற்கு இலஞ்சம் கொடுப்பதுபோல் முயல்கிறோமே! வெளிப்படையாய்த் தெரிவதுபோல இந்த சொற்கள் தெளிவாக உள்ளன: மிகப்பெரிய புரட்சி ஏற்பட்டாலொழிய மாற்றம் ஏற்படுவது கடினம் என்கின்ற சிறிதளவு நம்பிக்கைக்கொண்டிருக்கிற உள்ளார்ந்த ஊழல் கொண்ட மக்கள் நாம்.

ஆனால், ஒரு சிறிது நேரம் பொறுத்திருங்கள். நம் நாடு உண்மையிலேயே ஊழல்மலிந்த நாடா? இந்தியக் குடிமக்களின் இயல்பில் நியாமற்ற தன்மை உள்ளே இயற்கையில் உள்ளதா?

இந்தியா, பழமையான நாகரிகத்தைக் கொண்டிருந்தாலும் பரவலாக இளமையான நாடாகவே அங்கீகரிக்கப்படுகிறது. நம்முடைய நாகரீக வாழ்வின் பெரும்பாலான பகுதியில், நிச்சயமாக கடந்த ஆயிரம் ஆண்டுகளில் அவ்வாறு இருந்த நிலையில், சில குறிப்பிட்ட காலவாரியான நகரமய மிளிர்நிலையோடு நாம் விவசாயம்சார்ந்த ஒருங்கிணைப்பில் இருந்தோம். இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிந்தைய உண்மைநிலையும்கூட முக்கியமாக கிராமப்புரத்தைச் சார்ந்தே வந்திருக்கிறது. அதற்கு மாறாக, மேற்கத்திய உலகம் நமக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே நகரமயமாக்கி விட்டது.

விவசாயம் சார்ந்த மக்களின் நியாயமான ஒழுங்குமுறை நகரத்து நடைமுறையிலிருந்து வேறுபடுகிறது. முன்னது சமுதாயத்தின் முக்கியமான சட்டங்களாக உள்ள நெருக்கமான உறவு, விசுவாச நம்பிக்கை, மதிப்பு அடிப்படை விதிகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. கூட்டு மதிப்பு மற்றும் குடும்பம், சாதி, இனம் போன்றவற்றை முக்கியமாகக் கொண்டுள்ளதான பிதாரி என்பதை உள்ளடக்கிய உங்கள் பரம்பரையின் கௌரவம் ஆகியவற்றில் நீதி இருக்கிறது. நீங்கள் உங்களுக்குச் சொந்தமானவற்றில் நிற்கிறீர்கள். உங்கள் மக்களுக்காக வெளிப்படையான நிறுவனங்களின் நலனுக்காக ஒத்துப்போகிறீர்கள்.

உங்கள் உறவினர்களுக்காக நீதிமன்றத்தில் பொய்சாட்சி சொல்வீர்கள்; ஆனால் ஊர்ப்பஞ்சாயத்தில் அதைவிட்டு விலகி இருப்பீர்கள். அங்கு ஒருவர் மற்றவரை நன்கு அறிவார்கள். அங்கு பொய் சொல்வதும் பயனற்றது. கீழ்மட்ட நீதி மன்றங்களில் தவறான தன்மை நிலவுகிறது. நாம் நியாயத்திற்கு எதிரானவர்கள் என்பதால் அல்ல, நீதி மன்றங்களில் பொய் சொல்பவர்கள் தாங்கள் தவறு எதையும் செய்கிறோம் என்பதை உணர்வதில்லை. முற்றிலும் மாறாக, அவர்கள் உண்மையில் தங்கள் பரம்பரைக்கு விசுவாசம் கொள்வதான உயர்ந்த நியாயத்தில் சரியான பிடிப்பு கொண்டுள்ளனர். நகரங்களில் கூட, தங்கள் சொந்தக்காரர்கள் மற்றும் கூட்டாளிகளின் நலனுக்காக காவல்துறையினரையும் நீதித்துறையினரையும் ஏமாற்றி, அழுத்தம் கொடுத்து, தங்கள் வழிக்குக்கொண்டுவருவதற்காக இலஞ்சம் கொடுப்பது போன்றவற்றைத் தங்களால் முடிந்த அளவுக்குச் செய்யும் பலர் உள்ளனர். இப்படிச் செய்வது சரியானதுதான் என்று தங்களைச் சமாதானப்படுத்திக் கொள்கின்றனர். உண்மையில் சொல்லப்போனால், இது ஒரு மாற்றுவழி நடத்தையாக இருக்கிறது.

தங்கள் 'சொந்தகாரர்கள்' நிறுவனங்களில் வேலை பெறுவதற்கு பலர் உதவி செய்துள்ளார்கள். அவர்களின் சொந்தக்காரர்கள் மிகவும் தகுதி இல்லாதவர்களாவும், அதனால் நிறுவனத்திற்கு ஏற்ற தகுதியற்ற வர்களாகவும் இருந்தபோதிலும் இப்படிச் செய்துள்ளார்கள். குறைந்த வருவாய் உள்ள பணியாளர்கள் தாங்கள் நல்ல மகன், சகோதரன் அல்லது தந்தை என்ற நிலையைச் செய்வதற்காக இலஞ்சம் வாங்குகிறார்கள். விசுவாசம் பற்றிய பழமையான நீதிகள் ஒரு வெளிப்படை

சமுதாயத்தினால் உருவாக்கப்பட்ட உங்களுக்கே சொந்தமான சட்டங்களை விட உயர்வானவை.

விவசாய அடிப்படை சமுதாயங்களில் உள்ள நீதி காப்பாற்றப்பட வேண்டியவை. குற்றம் புரிபவர்களை சிறைக்கு அனுப்புவது நகரத்துப் பழக்கம். பரம்பரையான நீதி சமாதானப்படுத்துவதிலும், இழப்பீடு வழங்குவதிலும் மத்தியஸ்தம் செய்வதிலும் குறிக்கோள் கொண்டுள்ளது. எல்லை மீறிய சூழ்நிலைகளில் மட்டும்தான் வழக்கமாக தண்டித்தல் என்ற நிலைக்கு வருகிறது.

இக்காலத்தில் நம்முடைய அரசியல்வாதிகளைக் குற்றம் சொல்வதும் தண்டனையாகப் பதவிநீக்கம் செய்வதும் பிரபலமாகி விட்டது. இருந்தபோதிலும் நகரமயமாக்குவதற்கும் நவீனமயமாக்குவதற்கும் முன்பாகவே ஜனநாயகமாக்கப்பட்ட நாடு உலகில் இந்தியாதான் முதலாவதானது என்பதை மனத்தில் இருத்துங்கள். உண்மையில், நாம் இப்போதும் அடிப்படையில் ஒரு கிராமிய நிலை நாடுதான். நம்முடைய நகரங்களில் வசிக்கும் பல 'குடிமக்கள்' கூட பழங்கால சமூகத்தின் இதயத்துடிப்பையும் பண்பாட்டுச் சட்டங்களையும் பெற்று உள்ளனர்.

அறியப்பட்ட நம்முடைய அரசியல்வாதிகள் இத்தகைய சூழலில் உருவாகி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். ஒரு வெளிப்படையான 'குடிமக்கள்' இணைப்பால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால் "அவர்களுக்கு வேண்டியவர்கள்" அவர்களால் கவனித்துக்கொள்ள உரிமையோடு எதிர்பார்க்கப்படும் "அவர்களுக்கு வேண்டியவர்களால்" தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். அவருடைய கிராமத்தைச் சேர்ந்த பத்தாயிரம் அளவிலான மக்கள் பிறந்த நாள் விழாவுக்காக மும்பையின் உள்ள அவரது வீட்டின் முன்னுள்ள அழகாக்கப்பட்ட பரந்த வெளியில் கூட்டம் கூட்டிய அரசியல்வாதி ஒருவரை எனக்குத் தெரியும். அந்த மக்கள் போதுமான அளவுக்கு உணவும் பிறவசதிகளும் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். இந்த அரசியல்வாதி இப்படி இதற்கு வேண்டிய நிதியை எப்படி உருவாக்குவார்? மக்கள் கூட்டம் இப்படிச் செய்வது சரிதான் என்று எண்ணிக்கொண்டிருப்பதால் ஆதரவளித்துக்காத்தல் என்பது நடப்பில் உள்ளது. அறிவார்ந்த உயர்நிலையினர் ஒருபக்கம் குடியாட்சியை விரும்புவதும், ஆனால் மறுபக்கம், ஓட்டளித்து

ஆட்சிக்குக் கொண்டு வந்த மக்களின் எதிர்பார்ப்புகளை அப்படியே நிறைவேற்ற அரசியல்வாதிகளை எதிர்பார்ப்பதுமாக இருப்பது இல்லாததை நினைக்கும் கற்பனையாக உள்ளது. மாற்றாக தங்களை சமூக குருமார்களாக தாங்களே அமர்த்திக்கொள்பவர்கள் அரசியல்வாதிகள் வழிகாட்டு நெறிகளைத் தங்களிடமிருந்து பெறவேண்டும் என்று விரும்புகிறார்கள். சந்தேகத்திற்கிடமின்றி, சில அரசியல்வாதிகள் தங்கள் ஒரேசிந்தனைப்படி சுயலாபங்களையும் அதிகமான அதிகாரங்களையும் பெற்றுக் கொள்கிறார்கள்; எல்லா மனித சமூகங்களிலும் இப்படி நடக்கிறது; மனித இயற்கைக்கு இதனை விட்டுவிட வேண்டும். ஆனால் இதைப்போல் செய்யாத அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். வெற்றி பெறுவதற்கும், அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கும், ஆதரவாளர்களுக்கு வெகுமதி அளிப்பதற்கும் நெருக்கமாக இருக்கும் குழுவினருக்கு உதவிகள் செய்வதற்கும் பணத்தையே முதன்மையாக ஆக்குகிறார்கள். இத்தகைய சூழ்நிலை அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் உண்மையான மற்றும் யதார்த்த வழிகளில் முறையான நிதி திரட்டமுடியும் என்பதை இல்லாததாக்கி ஆரம்பமாகி விடுகிறது.

அதற்கு மாறாக, ஒரு நகர்ப்புர சமுதாயம் கொள்கை அடிப்படையில் தெளிவான சட்டங்களையும் பொதுவான நிறுவனங்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. உறவுமுறை கடப்பாட்டு கடமைகளை அளவுக்கு மீறி உருவாக்கும் வழிமுறையோடு கூடிய ஒரு மாறுபட்ட பண்பாட்டு விசுவாசத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. இது ஒரு உயர்நிலை வழி என்ற காரணத்தால் அல்ல. சமுதாயத்தில் பழமையான இன ஒற்றுமைகள் நகர்ப்புர வாழ்க்கையின் அறியாதநிலையில் இருளடைந்து போகின்றபொழுது, இது ஒரு மாற்றான வழி என்பது மட்டுமே. தன்னலத்தை அதிகப்படுத்துவதே எந்த ஒரு மனித அமைப்பின் பின்னால் உள்ள நோக்கமாக இருக்கிறது. மக்கள் தங்களை தங்கள் சுயநலத்திற்காக அதிக திறமையுடன் சேவை செய்வதாக உணரத்தொடங்கும்போது புதிய சமூக அமைப்புகள் உருவாகி, முன்னுள்ளவற்றை வெளியேற்றி விடுகின்றன.

இந்த தேவை முதலில் சிறிய அளவிலான குடியேற்றக் குழுக்களில் வெளிப்படுகிறது. விரும்பியோ விரும்பாமலோ, அவர்கள் தங்கள் வழிவழியான பண்பாட்டு விதி

முறைகளிலிருந்து விலகிப்போவதைத் தாங்கள் உணர்கிறார்கள். மாநில நடைமுறை கொண்ட நிர்வாக அமைப்புகளை காலவளர்ச்சிப்போக்கில், பாராட்டுவதாகவும் மதிப்புமிக்க நிலையிலும் கூட காண்கிறார்கள். நாம் குடியாட்சியாகப் பரிணாம முறையில் அந்த நிலையில்தான் இருக்கிறோம். பழமையான உறவுமுறைப் பண்பாட்டில் ஒரு பாதத்தை உறுதியாகப் பதியவைத்து இருக்கிறோம்; அதைப்பற்றி நாம் பெருமிதம் கொண்டவர்களாக இருக்கிறோம் என்பதில் அய்யமில்லை. இருந்தாலும், மறுபாதம் நவீன உலகத்தை நோக்கி இருக்கிறது. கடுமையான மறுவரையறை செய்யும் காலத்தில் நாம் வாழ்கிறோம். நேர்மையும் கூட மறுவரையறைக்கு உட்படுத்தப்படுகிறது. மரபுவழியில் நாம் ஊழல்கொண்டவர்களாக இருந்தோமா? இல்லை. நாம் சாதாரண முறையில் மாறுகின்ற காலச்சூழலில் நம்முடைய கொள்கைநிலைகளை மறு அமைப்புச் செய்கிறோம். மகாத்மாவின் இந்த மண்ணில் பண்பாட்டுக்கு உண்மையாளர்களாக இருந்து மென்மையாகவும் அஹிம்சை வழியிலும் நிகழ்த்தப்பட வேண்டும்.

ஆகவே இந்த புத்தாண்டில், நான் மறுபடியும் கூறுகிறேன்: என்னுடைய மண்ணில் பல குறைபாடுகள் உள்ளன. நாம் இன்னும் பல தூரம் செல்ல வேண்டும். ஆனால் இன்னும் நான் இந்தியன் என்பதில் மிகுந்த பெருமிதம் அடைகிறேன்.

---

**2011 ஆம் ஆண்டில் தி ஆசியன் ஏஜ்/டெக்கான் க்ரானிகல் இதழ்களில் முதலில் வெளிவந்தது.**

# பிரதிநித்துவ அரசு மற்றும் மக்களின் விருப்பம்

என்னுடைய பத்திரிகை கட்டுரைகளிலும் நேர்முக பேட்டிகளிலும் அரசியலைப் பற்றி பேசுவதையோ எழுதுவதையோ தவிர்த்து விடவேண்டும் என்ற தங்கமான விதியைப் பின்பற்ற முயற்சிக்கிறேன். இதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று ஒரு பொருளைப் பற்றி எழுதுவற்கு முன்பாகவே அந்த தலைப்பைப் பற்றிப் பிரதிபலிப்பேன். ஆகவே, வழக்கமாக ஒரு அரசியல் நிகழ்வைப் பற்றி ஒரு கருத்துக்கு வரும்போது அது தலைப்புச் செய்தியாகவே இருக்காது. 2014 ஆம் ஆண்டில், இந்த கட்டுரை ஒரு செய்திப்பத்திரிகை வெளியிட்டபோது நாட்டின் அரசியல் அரங்கில், நான் முன்னமே நினைத்திருந்த ஒரு பிரச்சனை எழுந்திருந்தது. எனவே, இந்த பொருளைப் பற்றி என்னுடைய கருத்துப் பார்வைகளை முன்வைக்க முடிவு செய்தேன்.

சில நிறுவன அறிவுஜீவிகள் பின்வருமாறு கருத்து தெரிவித்தார்கள்: அப்போது நடந்த பொதுத்தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி 38.5% வாக்குகளைப் பெற்றிருந்து (பா.ஜ.க 31%), இருப்பினும் அவர்களின் வெற்றி முழுமையானதாக இல்லாமல் முறையானதாகவும் இல்லாமல் இருந்தது. இந்தியர்களில் 61.5% மக்கள் தேசிய ஜனநாக கூட்டணியை (69% மக்கள் பா.ஜ.க வையும்) நிராகரித்துள்ளனர். ஆகவே, இது உண்மையான பிரதிநிதித்துவ அரசு இல்லை என்று சொல்லப்பட்டது. இது சரியான விமர்சனம்தானா? இதை பெரிய அளவிலான கொள்கை நிலையில் நான் ஆராய்ந்தேன்.

நாம் சிறிது பின்னோக்கிச் செல்வோம். ஒரு அரசாங்கம் ஏன் இருக்கிறது? இது ஒரு சிறிய அளவில் நாட்டின் பல்வேறுபட்ட கலாச்சாரங்கள், மக்கள் மற்றும் அவர்களின் கருத்துக்கள் ஆகியவற்றை முக்கியமாக பிரதிபலிக்கும் ஒரு சிறு அமைப்பா? அல்லது

நிர்வகிப்பதற்காக உள்ள ஒன்றா?

கிரேக்க தத்துவ ஞானி பிளாட்டோ அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் பொறுப்பு எடுத்துகொண்டு ஒரு சமுதாயத்தை நிர்வகிப்பது என்று தெளிவாக நம்பினார். உண்மையில், அவர் ஜனநாயகத்தைக் கண்டித்தார். ஒரு நல்ல அரசாங்க முறை என்பது, அவரைப் பொறுத்தவரையில், கடவுளின் பெயரால் ஆன்மிகவாதிகள் ஆளுகின்ற தெய்விக ஆட்சி என்பதாகும். அது நடைமுறையில் இயலக்கூடியதாக எடுத்துரைக்க வில்லை. பிளாட்டோவின் இரண்டாவது விருப்பம் தத்துவஞானிகளான மன்னர்கள் அல்லது வெள்ளி நிலை மனிதர்கள் என்று அவர் அழைத்தவர்கள் ஆகிய மேன்மக்களாட்சி. ஆன்மிக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் நாட்டு மக்களை வழநடத்திச் செல்வதற்கு, அவர்கள் ஆளும் மக்களை நடத்திச் செல்லும் வகையில் முறையான பயிற்சி பெற்றவர்களாகவும் நோக்கப்பட்டனர்.

பழங்கால இந்தியர்களும் ஒரு அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் நாட்டை நிர்வகிப்பதுதான் என்றும் பல்வேறு கருத்துகொண்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது அல்ல என்றும் கருதினர். ஆனால் அவர்கள் சர்வாதிகாரிகள் முழுமையான சக்தியுடன் தங்கள் பலத்தைப் பிரயோகிக்க அனுமதிக்கக் கூடாது என்று நம்பினார்கள்; அதுதான் ஆட்சி செய்பவர்களைக் கட்டுப்படுத்திடும் சில முறைகளைக் கையாளும் ராஜகுரு (அரச ஆலோசகர்கள்) மற்றும் ராஜ்ய சபை (அரச ஆலோசனைக் குழுக்கள்) என்று பழங்கால இந்தியாவில் இருந்தது. என்றாலும், 'மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்க வேண்டும்' என்பதற்காக என்னும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இத்தகைய கட்டுப்பாடுகள் அவர்களை நிலைப்படுத்தவில்லை. அவர்கள் ராஜ தர்மம் அல்லது அரச கடமைகள் ஆகியவற்றைப் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக அமர்த்தப்பட்டனர்.

பழங்கால உலகத்தில் 'பல்வேறு வகையான குடியாட்சிகள்' அரசர்களோடு மற்ற சிலரின் கருத்துக்களை சேர்ப்பதற்கும் வழி வகுப்பனவாக

இருந்தன. அதாவது, இந்தியாவின் புகழ்பெற்ற வஜ்ஜி சங்கம்* அல்லது பழங்கால ஏதென்ஸின் அரசாங்கங்கள். ஆனால் இத்தகைய வற்றில் கூட, 'பிரதிநிதித்துவம்' என்று சொல்லப்படுவதும் கூட பொதுமக்களுக்கானதாக இல்லாமல் மேன்மக்களுக்கானதாக மட்டுமே இருந்தது. பழங்கால ஏதென்ஸில், உதாராணமாக, அடிமைகளும் பெண்களும் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை.

குடியாட்சியின் உச்ச நிலை மத்திய காலத்தில்தான் இருந்தது. இன்றைய குடியாட்சிகளில் உலகளாவிய முதியோர் துன்பம் என்பது உலகெங்கும் இருக்கிறது. இப்படி இருகின்றன நிலையிலும், வாக்களிப்பு முறை அரசாங்கத்திற்கு பல்வேறு கருத்துப் பார்வைகளுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதைவிட, நிர்வாகம் என்பதற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறது. நிர்வகித்தல் என்பதையே முக்கியம் என்று நினைப்பதால், நாட்டில் சட்டசபையிலோ தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளிலோ விகிதாச்சாரம் சரியில்லாத நிலையில் அமைவதுபோலத்தான் வாக்களிப்பு முறைகள் வடிவமைக்கப் பட்டுவிடுகின்றன. ஏன்? ஏனென்றால் நிலைப்புத்தன்மை என்பது நிர்வாகத்தின் முந்தைய தேவையாகும். யாராவது ஒருவர் எல்லோருடைய தனிப்பட்ட கருத்துக்கும் பிரதிநிதித்துவம் வழங்கும் அரசாங்கத்தை அமைப்பதற்கு முயன்றால், அவர் முடிவில்லாத தடுமாற்றத்திற்கும் இறுதியாக குழப்பத்திற்கும் திட்டமிடுவதாகத்தான் அமையும்.

அமெரிக்க நாட்டில் அமெரிக்க ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை பெற்ற குழு உள்ளது. அதில் பெரும்பான்மையான வாக்களிக்கும் மக்கள் அதிகமான உயர்வளிக்கப்பட்டு அமெரிக்க ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை பெற்ற ஒரு பெரிய குழுவை உருவாக்குகிறார்கள் (அமெரிக்க ஜனாதிபதி மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படாமல், நுட்ப அடிப்படையில் வாக்குரிமை பெற்ற ஒரு குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்); இந்த குழுவை மக்கள்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். வாக்குகள் பெற்ற எண்ணிக்கையால் சிறுபான்மையாக இருந்தபோதும், நான்கு தடவைகளில், ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

இந்த ஜனாதிபதிகளில் சிலர் மிகவும் தகுதியுள்ளவர்களாகவும், சிலர் குறிப்படத் தக்கவகையிலும் இருந்துள்ளார்கள்.

அண்மையில் நிர்வாக வல்லுநர்கள் கண்டது போல விகிதாச்சார வாக்களிப்பில், பொதுவாக இதற்குக் கீழே இருந்தால் அந்தக் கட்சிக்கு சட்டமன்றத்தில் இடமிருக்காது என்ற வரம்புநிலை உண்டு. உதாரணமாக, ஜெர்மனியில், வரம்புநிலை வழக்கமாக 5% இருக்கும் (சில இடங்களுக்கு நேரடி தேர்தல் முறையும் கூட உள்ளது; விகிதாச்சார முறையில் சில திருத்தங்களை நீதிமன்ற ஆணை ஏற்படுத்தியது. ஆனால் எளிமைகருதி இப்போது அதனை விட்டு விடுகிறேன்.) இந்தியாவில் வரம்புநிலையோடு கூடிய விகிதாச்சார வாக்களிப்பு முறையைப் பின்பற்றியிருந்தால், எல்லா பிராந்திய கட்சிகளும் சுயேச்சைகள் உள்பட 2014 ஆம் ஆண்டு தேர்தலில் ஒரு இடத்தைக்கூட பெற்றிருக்கமாட்டார்கள். ஏனென்றால் தேசிய வாக்கு எண்ணிக்கை 5% சதவிகிதத்திற்குக் குறைவாகவே இருந்தது. லோக் சபாவில் பா.ஜ.க மற்றும் காங்கிரஸ் மட்டுமே இடம்பெற்றிருக்கும். விகிதாச்சார அடிப்படையில் வரம்புநிலை பெற்ற முறைப்படி தேர்தல் முடிவுகள் நன்றாக இல்லையென்றாலும் சுமாராகவே பா.ஜ.க அல்லது தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அமைந்திருக்கும். இருந்தபோதும், பிராந்திய கட்சிகள் முற்றிலும் நீக்கப்பட்டு அந்த இடங்கள் காங்கிரஸுக்குக் கிடைத்திருக்கும்.

கருத்தைத் தொகுத்துச் சொன்னால், ஒவ்வொரு தேர்தல் முறையும் (அமெரிக்க வாக்களிப்பு குழு. விகிதாச்சார பிரதிநிதித்துவம் அல்லது வாக்குச்சீட்டு அல்லது இயந்திரம் மூலம் நம்முடைய முறை) நிலைத்தன்மைக்கும் நிர்வாத்திற்கும் ஊக்கமளித்து அதேவேளையில் மக்கள் கருத்துக்கும் ஓரளவுக்கு மதிப்பளித்து செயல்படுவதற்காகவே வெளிப்படையாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. 2014 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வாக்கு எண்ணிக்கை சதவிகிதத்தில் குறைவாக இருக்கும் நிலையில் பார்லிமென்ட் இடங்களில் அதிகப்படியாக எண்ணிக்கை உருவாகியிருக்கிறது என்று குறைகூறுபவர்கள்

எல்லோருக்கும் சொல்கிறேன். ஆம், அப்படித்தான் இந்த முறை வடிவமைக்கப் பட்டிருக்கிறது. இப்படியேதான் உலகத்தில் உள்ள அனைத்துத் தேர்தல் முறைகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஏனென்றால் எந்த தேர்தல் முறையின் நோக்கமும் நாட்டில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனின் நோக்கையும் கொண்டு ஒரு சிறிய அமைப்பை உருவாக்குவது என்பது அல்ல. தேர்தலின் முக்கிய நோக்கம் நிர்வகிக்கத்தக்க ஒரு நல்ல அரசாங்கத்தை உருவாக்குவதுதான்.

அந்த வழியில் என்னுடைய பார்வையை எந்த அரசியல் அமைப்பிற்கும் ஆதரவானதாகவோ எதிரானதாகவோ எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒரு மிகப்பெரிய தேர்தலின் முடிவுகளை சில குறுகிய நோக்கத்துடன் கருதி நம்முடைய தேர்தல் முறையையே கேள்விக்குறியாக்கும் சிலரது மனத்தின் குறைகளைப் போக்குவதற்கு என்று கூறப்பட்டவைதான். நான் தேர்தல் முறையைத்தான் காப்பாற்ற முயல்கிறேன் எந்த அரசியல் கட்சியையும் அல்ல. 2014 ஆம் ஆண்டு தேர்தல்முடிவுகளில் அதிருப்தியுற்று தொடர்ந்து அதனை எதிர்மறையாக விமர்சிப்பவர்களுக்கு நான் சொல்வது இதுதான். முதிர்ச்சி பெற்று இருங்கள், மக்களின் முடிவை மதியுங்கள். இந்த தேர்தல் முடிவுகளை நீங்கள் விரும்பவில்லை என்றால், அடுத்த தேர்தலில் மிக கடினமாக உழைத்துப் பிரச்சாரம் செய்யுங்கள். அதுதான் குடியரசின் முக்கிய அம்சம்.

## கூடுதல் குறிப்புகள்

2014 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற தேர்தல் முடிவுகளின் நேர்மைத்தன்மை பற்றி கடுமையாக வாக்குவாதம் செய்த அனைவருக்கும் இங்கிலாந்தில் அண்மையில் வெளியான முடிவு கொஞ்சம் இடைவெளி விட்டு சிந்திக்க வாய்ப்பளிக்கும் என்று நான் நினைக்கிறேன். குடியாட்சி என்பது மக்களுக்கு அவர்களது உணர்ச்சிகளின் அடிப்படையிலும் விருப்ப அடிப்படையில் இரண்டுவிதமானவற்றில் முடிவுகள் எடுப்பதற்கு விட்டுவிட வேண்டி தலைவர்கள் வற்புறுத்துவதற்கான ஒரு தவறுக்கான மன்னிப்பு அல்ல. குடியாட்சி என்பது பொதுமக்கள் தங்கள் குரலைக்கொடுப்பதில் தடை செய்யாமலும் அவர்களுக்கு அரசாங்கத்தில் உரிமை உள்ளது என்பதை உணர்த்தும்

வகையிலும் அமையும் முறைதான். ஆனால் முடிவுகளை அரசாங்கம்தான் எடுக்கவேண்டும், அதனை ஒட்டுமொத்த அடிப்படையில் மதிப்பீடு செய்து அடுத்த தேர்தலில் பிரதிபலிக்க வேண்டும். மிகவும் சிக்கலான முடிவுகள் எடுப்பதை கருத்துக்கணிப்பு முறையில் எடுக்க மக்களிடம் விட்டுவிடக்கூடாது. கிளமென்ட் அட்லி கூறியதுபோல, கருத்துக் கணிப்பு என்பது சர்வாதிகாரிகளுக்கும் மக்களின் அறியாமையைப் பயன்படுத்தும் தலைவர்களுக்கும் உள்ள ஆயுதம். 2014 ஆம் ஆண்டின் தேர்தலில் அமைந்த இந்திய அரசாங்கத்தின் சட்டபூர்வத் தன்மையை கேள்வி கேட்டவர்கள், அதிக எண்ணிக்கை வாக்காளர்களின் வாக்கைப் பெறாத அரசு என்று சொன்னவர்கள் இப்போது இங்கிலாந்தில் அதிக வாக்குகள் பெற்று உள்ளபோதும் பெர்கிட் முடிவை கேள்வி கேட்கிறார்கள். தெளிவாக, பல குடியாட்சிகளைத் தோற்றுவித்த முன்னோர்கள் பெரும்பாலான தேர்தல் முறைகளை நிர்வாகத் திறன்மிக்க அரசாங்கத்தைத் உருவாக்குவதற்காக எல்லாவகை சமநிலைகளோடு வடிவமைத் துள்ளார்கள். தற்காலத்தில் உள்ள நம்முடைய அரசியல் நிபுணர்களைவிட மிகுந்த அறிவுக்கூர்மையுடன் இருந்துள்ளார்கள். இந்தியாவில் உள்ள எந்த அரசியல் அமைப்பையும் ஆதரிக்கவோ எதிர்க்கவோ இல்லை என்பதை மீண்டும் கூறுகிறேன். அரசாங்கத்தில் மக்களின் குரலுக்கு இடம் கொடுத்து ஆனால் நிலைத்த தன்மையையும் நிர்வாகத்தையும் சமநிலைப்படுத்தும் முறையின் அறிவுத்திறனை நான் மகிழ்ந்து பாராட்டுகிறேன். நம்முடைய குடியரசுத் தலைவர் கூறியது போல குடியாட்சிக்கும் மக்கள் கூட்டத்தின் வலிமைகாட்டி நடக்கும் ஆட்சிக்கும் வேறுபாடு இருக்கிறது.

---

* வஜ்ஜி சங்கம் (வஜ்ஜி ஒருங்கமைப்பு) என்பது பல ஜனபடா, கிராமா (கிராமங்கள்) கோஸ்தா (குழுக்கள்) ஆகியவற்றை உள்ளடக்கி இருந்தது. வஜ்ஜி கன பரிஷத் என்னும் "வஜ்ஜி மக்கள் குழு" ஒவ்வொரு கண்டா (மாவட்டம்) விலிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த பிரதிநிதிகள் கன முக்கியஸ்தர்கள் என்று அழைக்கப் பட்டார்கள். அந்த குழுவின் தலைவர் கனப்ரமுகா என்று பட்டமளிக்கப்பட்டு ஆனால் அவர் வம்சம் எதையுமோ, பரம்பரையையோ சார்ந்திருக்கவில்லை என்றாலும் அரசர் என்றே அழைக்கப்பட்டார். ஒருவேளை எல்லா மக்களுக்கும்

பிரிதிநிதித்துவம் வழங்காதபோதிலும், இது உலகத்தின் மிகப்பழமையான குடியரசுகளில் இது ஒன்றாகும்.

**2014 ஆம் ஆண்டு ஹிந்துஸ்தான் டைம்ஸ் இதழில் முதலில் வெளிவந்தது.**

# ஒருநேரத்தில் ஒன்று மட்டும் செய்க

வர்த்தக ஓட்டத்தில் அதிகமாக உழைக்கும் போட்டியாளராக நான் இருந்த நாட்களில் ஒரு நற்செய்தி வாசகத்தில் மிகுந்த விருப்பம் கொண்டிருந்தேன். அதை சிறிய அறையிலிருந்தபோதும், அற்புதமான மிகப்பெரிய இடத்திற்கு மாறியபோதும் நான் வேலைசெய்த இடத்திலெல்லாம் அதனை மிகவும் அழகாக வெளிப்படுத்தி வைத்திருந்தேன். அது : 'வாழ்க்கை மிகவும் சிறியது. செல்லவேண்டிய பாதை மிக நீளமானது. விரைந்து செல்...'

அந்த வாக்கியத்தை நான் விரும்பினேன். அது என்னுடைய வேலையை நோக்கியும் உண்மையில் வாழ்க்கையை நோக்கியும் சிறப்பாக்கி வைத்தது. என்னுடைய குழுவில் இருந்த ஒவ்வொருவரும் இந்த உணர்வைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினேன். இதனை என் மேலதிகாரிகளிடமும் எல்லா பண்புநிலையுடன் பகிர்ந்து வலியுறுத்த முயன்றேன். நான் திரும்பத் திரும்ப அடிக்கடி சொல்வது: இந்த ஒரு வாழ்க்கையில் நாம் சிறிதளவே காலத்தைப் பெற்றுள்ளோம். நம்முடைய வழியில் வரும் எல்லா சவால்களையும் சமாளிக்க வேண்டும். ஒவ்வொரு நாளையும் அர்த்தமுள்ளதாக்க அந்த நாளில் எவ்வளவு அதிகம் முடியுமோ அதனைச் செய்து விட வேண்டும். என்ன ஆச்சரியம். அந்த நாளைக் கவர்ந்து கொள்ளுங்கள். கழுதை உதைவேக உத்வேகம், சரிதானா? நீங்கள் இதனைப் படிக்கும் போதே, ஒரு அமெரிக்க தன்னம்பிக்கைப் பேச்சாளர் சொல்வதுபோல நீங்கள் காட்சிப் படுத்திப் பார்க்க முடியும்.

என் வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்த்தால், நான் எந்த அளவுக்கு முதிர்ச்சி அடையாமலும், கடின உழைப்பு இல்லாமலும் இருந்திருப்பதை நினைத்து வியப்படைகிறேன். வெளிப்படையாகச் சொல்கிறேன், என்னுடைய வாழ்க்கைக்கு மதிப்பையோ அல்லது நான் அதற்கு மதிப்பையோ கொடுக்காத பயனற்ற வேலைகளையும் முயற்சிகளையும் செய்து என்னுடைய வாழ்க்கையை நடத்தியிருக்கிறேன். எனக்கு சிறுவயதில் கற்றுக்கொடுத்த அறிவை, நான் ஒரு வர்த்தக செயல்வீரராக இருந்து நான் விட்டுவிட்டதை இப்போது மறுபடி இன்று கற்றுக்

கொண்டேன். நாமெல்லாம் இந்தியர்கள். நம்முடைய கலாச்சார கூறுபாடுகள் பல வாழ்க்கை இருப்பதை ஏற்றுக் கொள்கின்றன. நேரம் பற்றாக்குறை என்று உண்மையில் ஏதேனும் உள்ளதா? இந்த ஒரு வாழ்க்கையில் எல்லாவித அனுபவங்களையும் பெறமுடியாது என்று உணர்ந்தால் அவற்றை முக்கியத்தும் உள்ளவற்றை அறிந்து கொள்ளுங்கள். என்னுடைய வர்த்தக வேடத்தில் நான் வேலை செய்ததைவிட அதிகமாக இப்போது வேலை செய்கிறேன். நான் அப்போது தொடர்ந்து களைப்படைந்தது போல இப்போது அப்படி ஆவதில்லை; காரணம் நான் முக்கியமானவற்றை வரிசைப்படுத்திக் கொள்கிறேன். அந்த குறிப்பிட்ட சமயத்தில் எது மிக முக்கியம் என்று கருதுகிறேனோ அதை மட்டுமே செய்கிறேன். நான் செய்ய விரும்பாததைச் செய்வதில்லை, ஏனென்றால் இனிமேல் எதனையும் எனக்கு நான் நிரூபிக்க வேண்டும் என்ற அவசியமே இல்லை. உதாரணமாக, உறவினர்களின் வற்புறுத்தலுக்காக என்று உணர்வதால் பல விருந்துகளை ஏற்பாடு செய்து நடத்துவேன். இப்போது நான் விரும்பினால் மட்டுமே அத்தகைய சமூக நிகழ்வுகளில் பங்கேற்கிறேன். கடந்த காலங்களில், நான் உள்ளவேலைகளால் மூழ்கடிக்கப்படிருந்தாலும், தவிர்க்க முடியாதவை என்று எண்ணி அவற்றையும் கூடுதல் செயல்களாக ஏற்றுக் கொள்வேன். இப்போது, எனக்கு நேரமில்லை என்றால் அப்படியே மறுத்து விடுகிறேன்; காரணம் வாய்ப்பு மீண்டும் இந்த வாழ்க்கையிலோ அல்லது மற்றொரு வாழ்க்கையிலோ திரும்பவரும் என்று நான் அறிவேன்.

நாம் பல வாழ்க்கை பெற்றுள்ளோம் என்பதை ஒத்துக்கொள்வது நமக்கு அதிகமான தெளிவைக் கொடுக்கிறது; அழுத்தத்தை நீக்கி விடுகிறது, நாம் ஒன்றிலே கவனமும் அதைச்சுற்றியே செயல்பாடும் அமைந்து விடுகிறது. உண்மையிலே அவசியமாக எது தேவையோ அதில் நாம் மிகுந்த கவனம் செலுத்த முடியும். ஆகவே நான் எதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்? நூல்கள் எழுதுவது, நம்முடைய பண்பாட்டையும் தத்துவங்களையும் பிரபலப்படுத்துவது, குடும்பத்தோடு நேரத்தை இனிமையாகச் செலவிடுவது, நல்ல இசையைக் கேட்பது, நூல்கள் படிப்பது ஆகியவற்றில்தான். அதுமட்டும்தான். எனக்கு இவைபோக நேரமிருந்தால்தான் மற்ற விஷயங்கள் கவனத்தைப் பெறும். நினைவில் கொள்ளுங்கள், முக்கியமில்லாத திட்டச் செயல்பாடுகள் வந்தால், இதனை என் அடுத்த வாழ்க்கைப் பிறவிக்கு விட்டுவிடுகிறேன் என்று ஒருவர் சாதாரணமாகச் சொல்ல முடியும்.

---

**2015 ஆம் ஆண்டு இந்தியா டுடே இதழில் முதலில் வெளி வந்தது.**

# பொருள்நிலைக் காலம்

மத்திய காலத்தில் மங்கோலியர் அல்லது துருக்கிப் படையில் ஆக்ரோஷமான போர்வீரராக உங்களைக் கற்பனை செய்து கொண்டு, இதுவரை இல்லாத சிறப்புமிக்க ஒரு அஞ்சத்தக்க வகையிலான ஒரு படைகளில் ஒன்றில் பெருமிதமிக்க போர்வீரராகவும் கற்பனை செய்து கொள்ளுங்கள். உங்கள் வெற்றிமிக்கப் படை சீனா, அரேபியா, ஐரோப்பா, இந்தியா ஆகிய நாடுகளில் இறப்பையும் மிகுந்த அழிவையும் உண்டாக்கி இருக்கிறது. நீங்கள் உங்களை ஒரு சிறந்த வீரனுக்கு அடையாளமாகக் காணுகிறீர்கள். அறிவியலின் விந்தையினால், நீங்கள் இருபத்தோறாம் நூற்றாண்டுக்குள் நுழைவதாக இப்போது கற்பனை செய்வோம். சமூக அமைப்பைப் பொருத்தவரை நீங்கள் பார்ப்பதைப் பற்றி ஆச்சரியப்பட்டுப் போவீர்களா? நிச்சயமாக!

மிக சிறந்த வாழ்க்கைமுறை மாநிலத் தலைவர்களுக்கோ (போர்வீரர்கள் காலத்து மன்னருக்கு சமமானது) படைத்தளபதிகளுக்கோ கிடைக்கவில்லை. அதற்குப்பதிலாக, இது வெற்றிபெறுகின்ற வணிகர்களுக்கே கிடைக்கிறது. படையில் உள்ள ஜெனரல் ஒரு பன்னாட்டு கார்ப்பரேஷனில் உள்ள மத்தியநிலை பணியாளரைவிட குறைவாக சம்பாதிக்கிறார். மன்னர்களைப் பணிவுடன் நெருங்கிக் கேட்கும் நிலை உணர்ந்த தாழ்வு மனப்பான்மை கொண்ட வீரர்களைப் போலல்லாமல் வணிகர்கள் உண்மையில் அரசியல் தலைவர்களிடம் தங்கள் கோரிக்கைகளைத் துணிவுடன் கேட்கிறார்கள். இடைக்காலங்களில் மிகத்திறமையுள்ள வீரர்கள் இராணுவப் படையில் சேர விரும்பியதைப் போலன்றி இன்றைய நவீன இளைஞர்களில் பெரும்பாலோர் கம்பெனிகளில் வேலைக்கு சேர்வதற்கான பயிற்சியில் சேர்வதையோ வணிகம் தொடங்குவதையோ செய்கிறார்கள். இது காலத்தில் பயணம் கொள்ளும் படைவீரனுக்கு வியப்பளிக்கலாம், ஆனால் நமக்கு வியப்பளிக்கவில்லை. ஏன்?

நாம் இப்போது பொருள்நிலைக் காலத்தில் வசிக்கிறோம். அல்லது நம் வேதவாக்கியங்கள் சொல்வதுபோல வைஷ்யர்கள்

காலத்தில் வாழ்கிறோம். இது ஜாதியைக் குறிப்பிடவில்லை, ஆனால் ஜாதித் தொழிலைக் குறிப்பிடுகிறது. ஆகவே பிராமணர்கள் காலம் என்பது அறிவின் காலம்; சத்ரியர்களின் காலம் வீரத்திறமை மற்றும் இராணுவத்தின் காலம்; சூத்திரர்களின் காலம் என்பது தனிமனித நிலைக்காலம் என்பதாகும். முடிவற்ற காலச் சக்கரத்தில் இந்த காலங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. சத்ரியர்களின் காலத்தில் சண்டை செய்வதிலும் வலிமையிலும் சிறந்தவர்கள் சக்திமிக்கவர்களாகவும் மதிப்பு பெற்றவர்களாகவும் இருந்தனர். இதைப்போலவே வைஷ்யர்கள் காலத்தில் செல்வத்தையும் பணத்தையும் சேர்ப்பவர்கள் அப்படி மதிப்புடன் இருந்தார்கள். நீங்கள் எந்த மாதிரியான காலத்தில் வாழ்கிறீர்களோ அதற்கேற்ப முக்கியமாக சமூக மாற்றம் முன்னிலையில் இருக்கும் ஜாதித்தொழில் பொருத்து அமையும்.

இதனை நான் இராணுவ காலத்தைக் கொண்டும் (தற்போது நாம் அதிலிருந்து அண்மையில் வெளிவந்தது) பொருள்நிலைக் காலம் கொண்டும் (நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருப்பது) இந்த அமைப்பைப் பற்றி விளக்குவதற்கு முயற்சி செய்கிறேன்.

இராணுவ காலத்தில் முக்கியமானதாக மதிக்கப்பட்டது வலிமை முறை. மதங்கள் வலியமுறைகளால் பரப்பப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வந்தன. இன்றுவரை நிலைத்திருக்கும் மதங்கள் இடைக்காலத்தில் சலாடின் மற்றும் ரிச்சர்ட் போன்ற சிங்கமனம் என்று அழைக்கப்பட்ட திறமைமிக்க குறிப்பிடத்தக்க இராணுவ வீரர்களால் பாதுகாக்கப்பட்டன. மக்கள் தங்கள் நிலையை உயர்த்திக்கொள்ள மிகவும் உயர்வான வழி இராணுவ பலத்தினால்தான் என்று இருந்தது. மிகவும் அதிகமான நாகரீக சமூகங்களில் இராணுவமே மதிக்கப்பட்ட நிலையில் இருந்தது என்பதில் வியப்பொன்றும் இல்லை. இன்று அதிகமான வன்முறையைப் பயன்படுத்தும் நாடுகள் முன்னேற்றம் அடைவதில்லை என்பதைப் பார்க்கிறோம். உதாரணம் சோமாலியா. ஆனால் இராணுவநிலைக் காலத்தில், வலிமைமுறையைப் பின்பற்றியவர்கள் உலகில் முன்கூட்டிய முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். உதாரணமாக மங்கோலியர்கள் துருக்கியர்கள் ஆகியோர். இராணுவநிலைக் காலத்தில் பணமோ அறிவோ மிகச்சிறந்த வழியாக இல்லை. பணம் சம்பாதிக்கும் கலை அல்லது அறிவைப் பயன்படுத்துவது என்பதும் இருந்தது என்றாலும் இது மாற்றத்திற்கான வாய்ப்பாக

அமையவில்லை. பனக்காரர்களால் சூழப்பட்டிருப்பவனோ அல்லது அறிவாளிகளால் சூழப்பட்டிருப்பவனோ (அவர்களின் பயன்பாட்டை பெற்றுக்கொண்டபோதிலும்) வெற்றிபெற்ற வீரன் என்று இருப்பதில்லை. ஆனால் அச்சமற்ற வீரர்களால் தொடரப்பட்டு செல்பவனே அத்தகைய சிறப்பு பெறுகிறான்.

இப்போது நாம் பொருள்நிலைக் காலத்தில் அல்லது வைஷ்யர்கள் காலத்தில் வசிக்கிறோம். மிகவும் சக்திவாய்ந்த பரிமாற்றம் பணம் தான் வலிமைமுறை அல்ல. இத்தகைய காலத்தின் விதிகளை உணர்ந்து கொள்பவர்கள் வளமடைகிறார்கள்; மற்றவர்கள் வளமடையாமல் துன்புறுகிறார்கள்.

இராணுவ காலத்திலிருந்து இந்தியா பொருள்நிலைக் காலத்திற்கு மாறிவிட்டதா? நாம் குழப்பத்திலிருக்கும் நிலையில் உள்ளோம் என்று நான் நினைக்கிறேன். நாம் வலிமை முறைக் காலத்தை பின்னுக்கு விட்டு விட்டோம், கடந்த நூற்றாண்டின் மிகப்பெரிய தலைவர்களில் ஒருவரான மகாத்மா காந்தி அவர்களுக்கு நன்றி கூறவேண்டும். இந்தியர்களாகிய நாம் அகிம்சாவாதிகள் என்ற எண்ணத்தை நமக்குள்ளே உருவாக்கிக் கொண்டு விட்டோம். அது உண்மை அல்ல. வலிமையால் சாதித்த வரலாறு நமக்கு உண்டு. உதாரணம் கடுமையான பல்லவ-சோழ போர்கள். மகாத்மா காந்தியின் தாக்கம் (நம்முடைய பழைய தத்துவார்த்த பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக) பெரும்பாலான இந்தியர்களிடத்தில் போர்க்குணத்தின் தன்மையைக் குறைத்து, சத்ரியர் காலத்திலிருந்து இப்படியாக வெளியேற்றிவிட்டது.

ஆனால் நாம் முழுமையான மனத்துடன் வைஷ்யர் காலத்துக்குள் நுழைந்து விட்டோமா? முழுமையாக இல்லை. நாம் பணத்தோடு ஒரு சிக்கலான தொடர்பை வைத்திருக்கிறோம். பலர், குறிப்பாக நம்முடைய பழயதலைமுறையைச் சேர்ந்தவர்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள் பணம் எனப்படுவது ஊழலுக்கு இட்டுச் சென்றுவிடும் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய இளைஞர்கள் இதனால் குறைவான அளவுக்கே பாதிக்கப்பட்டாலும், நாம் பிராமணிய மற்றும் சத்ரிய கலந்தநிலைக் கொள்கையைக் கொண்டுள்ளோம். நம்முடைய வாழ்க்கை, நம்முடைய உறவுமுறைகள் ஆகியவற்றை எப்படி நடத்துகிறோம் என்பதில் வெளிப்படுகிறது. ஆரோக்கியமற்ற பணம் கையாளுதல் என்பதான செல்நிலை மக்கள் ஆடம்பரமாக

செலவழிப்பதிலும் கூட வெளிப்படுகிறது.

சிலவேளைகளில், பணம் சமூகத்தைப் பாழாக்கி துன்பம் தரமுடியுமா? கண்டிப்பாக. ஆனால் பிறகு எப்படி சத்ரியர் காலத்தில் உடல்வலிமையும், பிராமணர் காலத்தில் அறிவும், அல்லது சூத்திரர்கள் காலத்தில் தனிமனித தன்மையும் செய்வதுபோல அமைகிறது. பிரச்சனை பணத்தில் மட்டுமே இல்லை. ஆனால் அதன்பால் நாம் கொண்டுள்ள செயல்பாட்டில் உள்ளது.

இராணுவ நிலைக் காலத்தில், ஒரு இராணுவ விதிமுறையைப் பின்பற்றி (புஷிடோ விதிமுறை) போரிட்ட ஜப்பானின் சமுராய் போன்ற தர்மசிந்தனை உள்ள வீரர்கள் இருந்தனர். அவர்கள் நலிந்தவர்களுக்குப் பாதுகாப்பளிப்பது என்ற நிலை இணைந்த கொள்கை பெற்றிருப்பதில் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். ஆனால் வழக்கமாக வெகுளியானவர்கள் நலிந்தவர்கள் ஆகியோரையும் துன்புறுத்தக்கூடிய சில அதர்மநிலைப் போர்வீரர்களும் கூட இருந்தனர். அதுபோலவே இன்றைய நிலையில் தர்ம வழியில் பணம் சம்பாதிப்பவர்களும், அதர்ம வழியில் பணம் சம்பாதிப்பவர்களும் இருக்கிறார்கள்.

இந்தப் பொருள்நிலைக் காலத்தில் பொதுவான இந்தியர்கள் என்ன செய்ய வேண்டும்? முதலாவதாக, பணத்தின்மீதுள்ள நிலைகுறித்த நடிப்புத்தன்மையை விட்டுவிட்டு இந்த காலத்தின் விதிகளை ஏற்கவேண்டும். பணம் ஊழல்கொண்டது என்றும் முதலாளித்துவம் பாவமானது என்றும் உபதேசம் செய்பவர்கள், இராணுவநிலைக் காலத்தில் அஹிம்சையைப் பற்றி உபதேசிப்பவர்களைப் போன்று பொறுப்பற்றவர்கள். இரண்டாவதாக, இராணுவ நிலைக்காலத்தில் தங்களுடைய மிகச்சிறந்த போர்வீரர்களைப் போற்றிய சமுதாயத்தைப் போல நாமும் நம்மிடை உள்ள தர்ம வழி பொருள் சம்பாதிப்போரைப் பாராட்ட வேண்டும். மூன்றாவதாக, அறிவு, வலிமைமுறை, தனிமனிதத்தன்மை ஆகியவை நம் காலத்திலும் பொருத்தமானவைதான். ஆனால் அவற்றை மாற்றத்தைக் கொண்டு வருவதற்குப் பணத்தைப் போல மிகச்சிறப்பாக அவற்றைப் பயன்படுத்த முடியாது. சீனா முதன்மையாகப் பணத்தைக்கொண்டு மாற்றத்தை உருவாக்கிவரும் வேளையில், பாகிஸ்தான் தன்னுடைய உலகமதிப்பை வன்முறையால் உயர்த்திக்கொள்ள முயற்சி செய்கிறது. எந்த நாடு மிகவும் வெற்றிகரமானது? இது ஒரு மிகவும் முக்கியமான கேள்வியாக

இருக்க முடியுமா? இறுதியாக, அறிவு இன்று பயன்படுத்தப்பட்டாலும், அதன் அடித்தள முன்னேற்றம் பணத்தால் துணை செய்யப்படும்போது மட்டுமே அமைகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக, மிகப்பெரிய சிந்தனையாளர்களும் அறிவாளிகளும் கூட தக்க வகையில் வர்த்தகநிலையைப் பெறவில்லை என்றால் மிகுதியும் ஒதுக்கப்பட்டு விடுகிறார்கள்.

ஒரு ஆர்முள்ள பணம் சம்பாதிப்பவர் என்ன செய்ய வேண்டும்? தர்மத்தின் வழியில் நின்று சரியான வழியில் சட்டத்தை மீறாத வகையில் பணம் சம்பாதிக்க வேண்டும். அறிவார்ந்த வழியில் செலவிட வேண்டும். ஆசைகளையும் விரிவான தேவைகளையும் சிறந்த கட்டுக்குள் வைத்து, அறச்செயல்களுக்கு தாராளமாக வழங்கி ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்து வருதல் வேண்டும். இது நல்ல கர்மாவை உருவாக்கி பணத்தால் வாங்க முடியாத மகிழ்ச்சியை நல்கும்.

நாம் இப்போது பொருள்நிலைக் காலத்தில் வாழ்கிறோம். இதைத்தொடர்ந்து அறிவின் காலமோ, வீரத்தின் காலமோ, தனிமனிதத் தன்மைக் காலமோ தொடர்ந்து வரக்கூடும். அது தனிமனிதத் தன்மையின் காலமாக இருப்பதற்கு அதிகமான சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆனால் இன்று நம்முடைய இப்போதைய காலத்தை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இதுவரை வழங்கி வந்துள்ள டெங்க் ஜியாவோபாங்க் வார்த்தைகளை சிறிது மாற்றுவதற்கு மன்னிப்புக்கோரிக்கொண்டு நம்முடைய நாட்டின் வாக்கியத்தைக் கூறுகிறேன்: பணம் சம்பாதிப்பதே புகழ்மிக்கது!

---

**2013 ஆம் ஆண்டு ஹிந்துஸ்தான் டைம்ஸ் இதழில் முதலில் வெளிவந்தது.**

# அறநிலை மற்றும் உள்ளடக்கநிலை பற்றிய பழங்கால இந்திய அணுகுமுறை

அறநிலை மற்றும் உள்ளடக்கநிலை என்பது பற்றிப் பேசுவதற்காக நான் இங்கே அழைக்கப்பட்டிருக்கிறேன். நான் பேசத் தொடங்குவதற்கு முன்பாக, உள்ளடக்கநிலை என்பது ஏன் அவசியம் என்பதைப்பற்றி சிலரிடம் கேட்க விரும்புகிறேன். இந்த விஷயத்தைப் பற்றி இன்றைய வேறு அமர்வுகளிலும் பேசப்பட்டுள்ளது என்று நான் நம்புகிறேன். சரியா? ஆகவே நீங்கள் உள்ளடக்கநிலை என்பது ஏன் அவசியம் என்று நினைக்கிறீர்கள்?

பார்வையாளர்களிடமிருந்து வந்த பதில்:

சமுதாயத்தின் எல்லா பிரிவினரும் ஒன்றுபடுகிறார்கள்.

அது ஒரு அருமையான சிந்தனை. நான் அதில் ஒத்துப்போகிறேன்.

நிலைப்புத்தன்மை.

ஆம். நம்முடைய சமுதாயத்தில் உள்ளடக்கநிலை இருக்கிறது என்பது நம்முடைய சொந்தமான உயர்நிலையான தன்னல ஆர்வமாகும். ஏனென்றால் அது நிலைப்புத்தன்மையை உறுதி செய்கிறது. பணக்காரத்தன்மை பெறுவதற்கு பொருளாதாரத்தில் வேகமான வளர்ச்சி தேவை; ஆனால் பொதுவாக அத்தோடு கூடவே அவற்றில் சமமற்றதன்மை உருவாகிவிடுகிறது. தென்அமெரிக்க நாடுகள் பற்றிய உதாரணத்தை உங்களுக்கு வழங்குகிறேன். இன்று அதைபற்றிக் கற்பனை செய்வது கடினமானது. ஆனால் இன்று தென்கொரியா போன்ற கிழக்காசியநாடுகள் பார்க்கப்படுவதுபோல, அன்று தென் அமெரிக்க நாடுகள் பார்க்கப்பட்டன. தென்கொரியா இப்போது வளர்ச்சியடைந்த உலகில் இருக்கிறது; உண்மையில் அது விரைவில் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளைவிட பணக்கார நாடாக மாறிவிடும். ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்குமுன்,

அர்ஜென்டினா மற்றும் பிரேசில் இதைப்போலவே பார்க்கப்பட்டன. இன்று அர்ஜென்டினா எங்கே இருக்கிறது? இது ஒருவேளை அதன் நேர்மைப் பரிமாணத்தோடு, சமமின்மையால் விளையும் நடைமுறை பிரச்சனைகளில் ஒன்றாகும். சமமின்மை ஏற்கத்தக்க அளவுக்கு அதிகமானால் பிரிவினை மற்றும் வாக்குவாத அரசியலுக்கு இட்டுச் செல்கிறது. இதுதான் அர்ஜென்டினா போன்ற தென் அமெரிக்க நாடுகளில் நிகழ்ந்ததாகும். இது சமுதாயத்தையே கூட அழித்து முடித்து, இறுதியாக பொருளாதாரத்தில் சிறந்து நிற்பவர்களைக்கூட பாதித்துவிடும். சமுதாயத்தில் அதிகப்படியான சமமின்மை இல்லாமலிருப்பது, என்பதால் இது உயர்ந்தநிலை தன்னல ஆர்வம் உள்ளவர்களிடம்கூட இருக்கிறது.

இருப்பினும், எல்லா மனித சமுதாயத்திலும் சில சமமில்லாத தன்மைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதுதான் வாழ்க்கையின் உண்மைத் தன்மை. ஒருபோதும் எந்த சமுதாயமும் சமமாக இருக்கவில்லை. ஆனால் இந்த சமமில்லாத தன்மை அதிகமாகிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் வெற்றிக்கான நேர்மையான வாய்ப்பைப் பெற்றிருக்க வேண்டும். அதன்பிறகு தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் பொறுப்பு அவர்களைப் பொருத்தது.

இப்போது, சமமின்மையைச் சமாளிப்பதற்கான ஒரு சமீபமான சரியான உதாரணமான சொல்பிரயோகம், இதைவிட சிறந்த ஒன்று இல்லாததால், மேற்கத்திய முன்மாதிரி என்பதை கூறுகிறேன். இது எப்படி செயல்படுகிறது? எளிமையாகச் சொல்வதானால், பணக்காரார்களை தவறை உணரச் செய்தல் என்பதுதான். இந்த மாதிரியில் இது ஒரு பகுதி. உதாரணமாக, இந்த அறையில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியாவின் நல்லநிலையில் உள்ளவர்களில் இருப்பீர்கள். உங்கள் மேற்கத்திய மாதிரியானது உங்களை தவறை உணரவைப்பதில் உதவும்; நீங்கள் அறச்செயல்கள் செய்ய வேண்டும். ஏனென்றால் அது உங்கள் கடமை. வெற்றியடைவதற்கு நீங்கள் செய்ய வேண்டிய தவறை உணர்ந்து திருந்தும் செயலாகப் பெரும்பாலும் அமையும். இந்த மாதிரியின் இரண்டாவது பகுதி பணக்காரர்கள் தங்களை இடையாளர்களாக இருப்பதாகும். அது ஒரு அரசு சாராத் தன்னார்வத் தொண்டு நிறுவனமாகவோ வேறு சில நிறுவனமாகவோ இருக்கலாம். பெரும்பாலும் பன்னாட்டு தொண்டு நிறுவனமாகவும் வேறு நிறுவனமாகவும் இருக்கும்.

இந்த அறநிலையின் மூன்றாவது நிலை அறநிலை உதவியைப் பெறுபவர்கள் அடங்கியதாகும். இப்படி பெறுபவர்களுக்கான தத்துவார்த்த செய்தி இந்த அறநிலை உதவிகளைப் பெறுவது அவர்களின் கடமை என்பதாகும். அவர்களுக்கு யாரும் சகாயம் செய்யவில்லை.

உள்ளடக்கநிலைக்கான இந்த நவீன மாதிரி அதற்கான பயன்களைக் கொண்டுள்ளது. ஆனால் சில குறைபாடுகளும் உள்ளன. பல பயனாளிகள் அறநிலை பெறுவதில் மயக்கமுற்று இருக்கும் ஆப்ரிக்கா போன்ற இடங்களில் உள்ள சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமிருந்து அதிக அளவிலான ஆர்வமூட்டும் அறிக்கைகள் இருக்கின்றன. அவர்கள் அறநிலை உதவி வழக்கமாகப் பெறுகின்றனர். தங்களை ஆக்கபூர்வக் குடிமக்களாக ஆக்கும் தேவையையும் தங்களை வறுமைநிலைக்குமேல் உயர்த்திக்கொள்ளும் அவசியத்தையும் உணரவில்லை. அறநிலை உதவிகள் நிறுத்தப்பட்டால் அவர்கள் கோபமுற்று கலவரம் செய்கிறார்கள். சிலநேரங்களில் இது சமூகக் கலகங்களுக்கு இட்டுச் செல்கிறது. நன்கொடையாளர்களும்கூட ஒழுக்கநிலை சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அடிக்கடி, எப்பொழுதும் அல்லாமல், ஆனால் மிகவும் அடிக்கடி, அவர்கள் மக்கள் மத்தியில் தங்களை முழுமணம் இல்லாத அளவில் ஈடுபடுத்தி அறநிலை உதவிகள் செய்கிறார்கள். மக்கள் தொடர்பை உண்டுபண்ணுகிற மாதிரியான அறநிலை உதவிகளை அவர்கள் தேர்ந்தெடுத்து மக்கள் மத்தியில் போதுமான விளைவை ஏற்படுத்தும் அளவுக்குப் பார்த்துக் கொள்கிறார்கள். சேரிட்டி கரோ அவுர் ஃபோட்டோ நியூஸ்பேப்பர் மேயின் சாப்போ (அறநிலை உதவி செய்யுங்கள், பத்திரிகையில் படம்வரச் செய்யுங்கள்). இதன் ஒரு குறைபாடு என்னவென்றால், அறநிலை உதவிகள் பத்திரிக்கை விளம்பரம் நோக்கிச் செய்யப்படலாம், ஆனால் அவை உண்மையில் சமுதாயத்தில் தேவைப்படும் நிலைக்கல்ல என்றாகும்.

மூன்றாவது பரிமாணம் ஒருவேளை அரசு சாராத் தன்னார்வத் தொண்டு நிறுவன அமைப்புகள். பெரும்பாலான அதிக சமயங்களில் இந்த அரசு சாராத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உண்மையில் சமுதாயத்திற்கு உதவுவதில்லை. சுரங்கத் தொழிலை எடுத்துக் கொள்வோம். நான் கம்பெனியின் பெயரைக் குறிப்பிட மாட்டேன். ஆனால் இந்தியாவின் ஒரு மாநிலத்தில் ஒரு சுரங்கத் தொழில் கம்பெனி வேலையைத்

தொடர முடியாமல் உள்ளூர் எதிர்ப்பு இருந்தது. இந்த போராட்டத்தை நடத்திய ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் அமெரிக்க சார்புடைய ஒரு சுரங்கக் கம்பெனியின் பின்னணியில் அதன் உதவியைப் பெற்று போராட்டத்தை நடத்தியது என்பது பின்னர் வெளிவந்தது. இது அறநிலை என்ற போர்வையில் நடந்த ஒரு வணிகப்போட்டி. இது மேற்கத்திய மாதிரியான அறநிலைச் செயல்பாடு.

நான் மற்றொரு வகையான மாதிரியான அறநிலை பற்றி உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதனை நான் இந்திய மாதிரி அறநிலைச் செயல் என்று அழைக்கிறேன். அல்லது இன்னும் சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் பழங்கால இந்திய அறநிலைச் செயல்பாட்டு மாதிரி என்பதாகும். பழங்கால தத்துவக் கருத்துகளை பின்னோக்கிப் பார்க்கும் இந்திய அறநிலைக்கு இரண்டு முக்கியமான அணுகுமுறைகள் உள்ளன. ஒன்று இந்து, புத்த, ஜைன சீக்கிய அணுகுமுறைகளைக்காட்டும் அணுகுமுறை. மற்றொன்று இந்திய இஸ்லாமிய அணுகுமுறை.

இந்த இந்தியக்குறிப்பு அணுகுமுறையில், அறக்கொடை வழங்குபவருக்கு அதனைப் பெறுபவர் உண்மையில் அவருக்கு சாதகம் செய்கிறார். அது எப்படி? இது கர்மா என்ற தத்துவார்த்த அடிப்படையிலானது. சரிதானா? அது நாம் நம்முடைய சொந்த கர்மாவின் பலாபலன்களை எடுத்துச் செல்கிறோம். அது நாம் செய்த எல்லா நன்மை அல்லது தீமைகளுக்கான பலாபலன்களை இந்தப் பிறவியிலோ அல்லது அடுத்த பிறவியிலோ கொடுக்கும். உங்களுடைய கடந்த பிறவி கர்மா எப்படி என்பதை அறிய உங்களுடைய தற்போதைய வாழ்க்கையை ஆராயவேண்டும். ஏனென்றால் இது உங்களுடைய கடந்த பிறவி கர்மாவின் விளைவு ஆகும். நீங்கள் உங்கள் எதிர்கால வாழ்க்கையை அறிய விரும்பினால் இப்போதுள்ள கர்மாவின் தன்மையை ஆராயுங்கள். நீங்கள் உங்கள் எதிர்காலத்தை இப்போதிருந்தே உருவாக்குகிறீர்கள். ஆகவே உங்கள் அறக்கொடையைப் பெறுகின்றவர் உங்களுக்கு ஒரு மிகப்பெரிய நன்மையைச் செய்கிறார் என்பது நம்பிக்கை. ஏனென்றால் அவர் தன்னுடைய கர்மா கணக்கிலிருந்து உங்களுக்காக ஒரு கடன் வாங்கிக் கொள்கிறார். அந்த கடனை இந்த பிறவியிலேயோ அல்லது அடுத்த பிறவியிலேயோ திருப்பிச் செலுத்தவேண்டிய தேவையுள்ளது. அறக்கொடையைக் கொடுப்பவரும் தன்னுடைய

கர்மா கணக்கை சமன்படுத்துகிறார்; அவர் சில கடன்களைத் திருப்பிக் கொடுக்கிறார். ஆகவே இந்த இந்திய அணுகுமுறையில் அறக்கொடை வழங்குபவரே உண்மையில் தன்னுடைய அறச்செயலால் பயன் பெறுபவராகிறார்.

இந்திய இஸ்லாமிய அணுகுமுறை ஜக்காத் என்ற அம்சத்தைக் கொண்டது. இங்கே இருப்பவர்களில் இந்திய இஸ்லாமியர்கள் இருக்கின்றீர்களா? உங்களுக்கு ஜக்காத் என்ற அம்சம் பற்றித் தெரியும். சரிதானா? இதனைப் பற்றி என்னுடைய போரி இஸ்லாமிய நண்பர்கள் கூறினார்கள். அவர்களின் வருமானத்தில் ஒரு பகுதி அறக்கொடையாக வழங்கப்படுகிறது. இதனை நீங்கள் நேரடியாகவும் செய்யலாம். அல்லது ஒரு நிறுவனத்தின் மூலமும் செய்யலாம். இது நீங்கள் கடவுளுக்குச் செய்ய வேண்டிய கடமை. நீங்கள் அவர்களுக்கு எந்த சாதகமும் செய்யவில்லை.

இந்திய அணுகுமுறை ஆங்கிலேயர் வருவதற்கு நூற்றுக் கணக்கான ஆண்டுகள் முன்பாகவே கடைபிடிக்கப்பட்டு வந்தது. ஒப்பிட்டுப் பார்க்கும்போது மேற்கத்திய மாதிரியை விட இந்திய அணுகுமுறையின் பயன்கள் என்ன? அறக்கொடையைப் பெறுகின்றவரிடம் ஏற்படும் தாக்க உணர்வைக் கற்பனை செய்து பாருங்கள். என்னுடைய குடும்பத்தைப் பற்றிய தனிப்பட்ட ஒரு கதையை இதனோடு தொடர்பு படுத்த விரும்புகிறேன். நான் ஒரு சாதாரண குடும்பப் பின்னணியிலிருந்து வந்தேன். எங்கள் குடும்பம் ஒரு நடுத்தரவர்க்கக் குடும்பம். 1970 ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் நடுத்தர வர்க்கக் குடும்பம் என்பது இப்போதுள்ள நடுத்தர வர்க்கக் குடும்பத்திலிருந்து மாறுபட்டது. நான் வளர்ந்து கொண்டிருந்த 1970கள் மற்றும் 1980 களில், உங்கள் குழந்தைகளுக்கு உணவளித்து பள்ளிக்கு அனுப்ப முடிந்தால் நீங்கள் நடுத்தர வர்க்கம். ஒரு தலைமுறைக்கு முன்பாக என்னுடைய தாத்தா வருமானத்திற்கு வழிகள் குறைவாகவே பெற்றிருந்தார். மிகவும் சாதாரண குடும்பத்திலிருந்து வந்ததால் அவரே கல்வி கற்க முடியாத நிலையில் இருந்தார். உங்களில் எத்தனை பேர் பண்டித மதன்மோகன் மாளவியாவைப்பற்றிக் கேள்விப்பட்டுள்ளீர்கள்? அற்புதம், நீங்கள் அறிந்திருப்பதில் மகிழ்ச்சி.

அவர் பனாரஸ் ஹிந்து பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தவர். வருமானம் குறைந்த நிலையில் உள்ள அறிவாளிகளான குழந்தைகளின் கல்விக்காக ஒரு

அறக்கட்டளைத் திட்டத்தை ஏற்படுத்தி அதன்மூலம் பண உதவிகள் செய்தார். இந்த அறக்கட்டளையால் பயன்பெற்ற குழந்தைகளில் என்னுடைய தாத்தாவும் ஒருவர். அவர் மிகவும் ஏழ்மையான ஆனால் மிகவும் அறிவுத்திறமை மிக்கவராக இருந்தார். மதன் மோகன் மாளவியா அவர்களின் அபரிமிதமான தாராளகுணத்தால் அவர்தன் வாழ்க்கையில் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்தார். அவர் ஒரு ஆசிரியராகி, காசியில் ஒரு பண்டிதராகவும் உருவானார். அவருக்கு எட்டு குழந்தைகள்; அந்தக் காலத்தில் மிகப்பெரிய குடும்பம். ஆகவே இன்றைய நிலையில், என்னுடைய தாத்தா வழிவந்தவர்கள் எழுபதுபேர். எல்லோருக்கும் கிடைத்த வாழ்க்கை, எதிர்காலம் எல்லாமும் பண்டித மாளவியா அவர்களின் அறக்கொடையால் வடிவமைக்கப்பட்டவை. எங்கள் மூதாதையரான காசியிலிருந்து ஒரு பையன் பெற்ற அந்த அறக்கொடையால் எங்கள் குடும்பத்தின் ஈடுபாடு அந்த அறக்கொடை பற்றிய எப்படி இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அந்த அறக்கொடையைப் பெறுவது எங்கள் உரிமை என்று நினைத்தோமா? மிகவும் நிச்சயமாக இல்லை. இது அதற்கு முற்றிலும் மாறுபட்டது. பண்டித மாளவியா அவர்களின் பெருந்தன்மை எங்களுக்குள் ஏற்படுத்தியுள்ள உள்ளுணர்வுப் பொறுப்பு இந்த நாளில் எங்கள் விரிவான குடும்பத்தில் ஊட்டப்பட்டுள்ளது. நாங்கள் ஒரு கடனை, கர்மாவின் கடனைப் பெற்றுள்ளோம். அதே உணர்வை முன்னெடுத்துச் சென்று அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது. அப்படிச் செய்யவில்லை என்றால், கர்மாவின் சுமை எங்கள் ஆன்மாக்களை அழுத்திவிடும். மாளவியா அவர்கள் எங்கிருந்தாலும் எங்களின் இருப்பை அவர் தெரிந்திருக்கக்கூட முடியாது. அவர் மாற்றியமைத்தது என்னுடைய தாத்தாவின் வாழ்க்கையை மட்டுமல்ல; எண்ணிக்கையில் அடங்காத மற்றவர்களும் உள்ளனர். எங்களிடமிருந்து அவர் திரும்பப் பெற நினைத்திருக்கமாட்டார். அது எங்கள் குடும்பத்தில் எத்தகைய விளைவுகளை உருவாக்கிவிட்டது என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். எங்கள் குடும்ப ஆன்மாக்களில் இது கடனாக உள்ளது; இதனை நாங்கள் முன்னெடுத்துச் செல்வோம். நாங்கள் எப்படி முன்னெடுத்துச் செல்வது? அறக்கொடைகள் செய்வதன் மூலம்தான். அது எதைக்குறிக்கிறது என்றால், முதலில் அறச்செயல்கள் செய்வதற்கான வசதியைப்பெறுவதற்கு சம்பாதிக்க வேண்டும். அறக்கொடைகள் பெறும் ஒவ்வொருவரும் இந்த மனப்பான்மை பெற வேண்டும். அது அவர்களை வறுமையிலிருந்து வெளியேற்றுவதற்கான உந்துசக்தியை

எல்லா கோயில்களிலும் இது நடைமுறையில் இருந்தது. இன்று பிரசாதம் என்று அழைக்கப்படுவது உண்மையில் ஏழைகளுக்கு உணவளிப்பதுதான். வருகின்ற அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. இந்தியாவின் பழங்காலக் கோயில்கள் கல்வி போதிக்கும் இடங்களாகவும் இருந்தன. அதுவும் உள்ளூர் சார்ந்ததாக இருந்தது. உள்ளூர் திறமைகளில் பயிற்சியளிக்கப்பட்டு அதுவும் உள்ளூர் அளவில் பயன்படுத்தப்பட்டது. வருந்தத்தக்க வகையில், ஆங்கிலேயர் காலத்திலிருந்து (இந்த கொள்கை சுதந்திரத்திற்குப் பிறகும் தொடர்ந்தது) இந்தியாவில் அதிக அளவிலான கோயில்களை அரசாங்கம் அதன் நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டது. எதையாவது அரசாங்கம் எடுத்துக் கொண்டால் என்ன நிகழும் என்பது நாமெல்லோரும் அறிவோம். ஆகையால் இந்த முறையில் கோயில்கள் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, முடிவெடுக்கும் அதிகாரம் உடையவர்கள் தலைநகரங்களில் தொலைதூரத்தில் இருந்ததால், கோயில்களில் நிகழ்த்தப்பட்ட பெரும்பாலான செயல்பாடுகள் நின்று போய்விட்டன. கொடை கொடுப்பவரும் அதனைப் பெறுபவரும் உள்ளூரிலேயே இருப்பது மிகுந்த பயன் உடையது. அந்த பகுதியில் எது சாத்தியப்படும் என்பதை அவர்கள் உண்மையில் அறிவார்கள். 'காப்பாற்றும் தன்மை' என்றநிலையில் உள்ளூர் மக்கள் என்ன விரும்புகிறார்கள் அல்லது அவர்களுக்குத் தேவை என்பதைப்பற்றி சிறிதளவும் அறியாதவர்களைப் போன்று அவர்கள் வெளியாட்கள் அல்ல.

இதுதான் நம்முடைய சொந்த அறநிலை மாதிரியும் உள்ளடக்கநிலையும் ஆகும். இது நாம் தற்போது இறக்குமதி செய்திருக்கிற மேற்கத்திய மாதிரியோடு ஒப்பிடும்போது நம்முடைய சொந்த நாட்டில் உள்ள மாதிரி மிகச்சிறப்பாக செயலாற்றலாம். நாம் அறநிலை என்பதான அம்சத்தில் எண்ணிப்பார்க்க முடியும் என்றால், மகாபாரத அறிவுமிக்க விதுரர் பற்றிய சிந்தனையில் இறுதியாக கவனம் செலுத்த முடியும். அவர் பணத்தை வீணாக்குவதற்கு இரண்டு வழிகள் உள்ளன என்றார். ஒன்று பணத்தையோ அறக்கொடையையோ தகுதியில்லாதவருக்குக் கொடுப்பது. மற்றொன்று அதனை தகுதியுள்ளவர்களுக்குக் கொடுக்காமல் இருப்பது. விதுரரிடமிருந்து கற்றுக் கொள்வோம்; அறக்கொடை வழங்குவதையும் அது சரியான முறையில் பயன்படுத்துவதையும் உறுதி செய்வோம். இந்திய பாரம்பரிய வழியில் அறிவுச் செல்வம் இருக்கிறது; அதனை கண்டறிந்து தேர்ந்தெடுத்து இன்றைய வாழ்க்கையை சிறப்பாக நடத்துவோம்.

---

ஃப்ராங்க்ளின் டெம்பிள்டன் மாநாடு, 2016ஆம் ஆண்டு பிப்ரவரி.

# மதநம்பிக்கைப் பெருந்தன்மையாளர்களின் குரல்

கே: அமீஷ், நேற்றிலிருந்து நான் கேட்டவற்றில் உண்மையில் இது மிகவும் சிறந்த அமர்வுகளில் ஒன்று. இது உண்மையில் முழுவதும் அற்புதமானது. உங்களை நான் கேட்கும் கேள்வி என்னவென்றால், நீங்கள் ஸ்ரீ அரவிந்தரை விரும்புகின்றவரா? நீங்கள் ஸ்ரீ அரவிந்தரின் நூல்களைப் படித்துள்ளீர்களா?

ப: ஸ்ரீ அரவிந்தரின் சில நூல்களைப் படித்திருக்கிறேன். வருந்தத்தக்கது என்னவென்றால், நான் விரும்பிய அளவுக்கு ஆரோவில் நகரியத்தில் என்னால் அதிக நேரத்தைச் செலவிட இயலவில்லை. அதிர்ஷ்டவசமாக நான் இனிமேல் ஒரு வங்கிப் பணியாளர் இல்லை. ஆகவே எனக்கு நான் விரும்பும் வகையில் செலவிட நேரம் கிடைக்கும். நான் ஆரோவில்லில் நேரத்தைச் செலவிட விரும்புகிறேன். விரைவிலேயே சில நாளில் நான் பாண்டிச்சேரி (புதுச்சேரி) செல்வேன்.

கே: ஆம் நீங்கள் கூறியதெல்லாம் ஸ்ரீ அரவிந்தர் பற்றிய பிரதிபலிப்பாக இருந்தது. ஆகவே இது மிகவும் நல்லது.

ப: உங்களுக்கு நன்றி. மிக்க நன்றி.

கே: அமைப்புமுறை மதத்திற்கும் அமைப்புமுறைக் குற்றத்திற்கும் வேறுபாடு இல்லை. உண்மையா பொய்யா?

ப: நான் ஒத்துக் கொள்ளமாட்டேன். நான் ஒரு இந்து. என்னுடைய மதம் மிகவும் பரவலானது என்பதால் 'அமைப்புமுறை மதம்' என்ற வரையரைக்குள் வராது. ஆனால் அமைப்புமுறை மதம் அது அதன் பங்கைச் செய்கிறது. கருத்து என்னவென்றால், பல தத்துவங்கள் அதை வழிநடத்துகிற மக்களைப் பொருத்துள்ளது. அமைப்புமுறை மதங்கள் அதேசமயத்தில் பல நன்மைகள் புரிந்துள்ளன. இதற்கு நான் உங்களுக்கு பல உதாரணங்களை நிரூபணத்திற்குக் காட்ட முடியும். புத்தமதம் கௌதம புத்தரால் கற்பிக்கப்பட்டதுபோல மற்றும் உண்மையான சங்கம் காட்டியது போலவும் உள்ளது.

கிருஸ்தவ மதம் இயேசு கிருஸ்து நடைமுறைப் படுத்தியதுபோல் உள்ளது. ரோமப்பேரரசின் வெற்றியால் வரலாற்றில் வன்முறை இருந்த காலத்தில் அவர் அன்பு என்ற எளிய செய்தியைப் போதித்தார். நிலப்பண்ணைமுறை இருந்த காலத்தில் அவரவர் தனது மதத்தைத் தேர்ந்து கொள்ள முடியும் என்பதை முன்வைத்தார். அது ஆர்வமூட்டக்கூடியதும் புரட்சிகரமானதுமாகும். ஒருவேளை அமைப்பு முறை மதமும் நன்மைக்கான ஒரு சக்தியாக விளங்க முடியும். ஆனால் மற்ற எல்லாவற்றையும் போலவே சில தீய மனிதர்கள் மதத்தையும் கூட தவறாகப் பயன்படுத்த முடியும். நம்முடைய நாட்டிலும் கூட அது அங்கங்கே எல்லா இடங்களிலும் நடந்துள்ளது. நம்முன் உள்ள கடமை மதப் பெருந்தன்மையாளர்கள் உரத்துக் குரல் கொடுக்க வேண்டும். இதை நாம் செய்யவில்லை என்றால், என்னுடைய கருத்தில் இருவருமே தவறாக வழிநடத்தப்பட்டும் மதச்சார்புள்ள தீவிரவாதிகளும் மதச்சார்பற்ற தீவிரவாதிகளும் உண்மையை எடுத்துச் சொல்வதை நம்மிடமிருந்து பறித்துக் கொண்டு விடுவார்கள். அவர்களை நம்முடைய மதங்களை இழிவுபடுத்த அவர்களின் தீவிரவாதத்தால் அனுமதித்து விடுகிறோம்.

கே: நீங்கள் எழுதுவன கடவுள் பற்றி இருப்பதால் மக்களிடமிருந்து எதிர்ப்பைச் சந்தித்துள்ளீர்களா? மக்கள் உண்மையில் கடவுள்கள் பற்றியும் புராண நாயகர்கள் பற்றியும் மிகவும் உணர்ச்சி மிக்கவர்களாக இருக்கிறார்கள். யாராவது உங்களிடம் வந்து கடவுள்களைப் பற்றி இப்படி எழுதுவதற்கு என்ன துணிச்சல் என்று கூறியுள்ளார்களா?

ப: ஒருபோதும் இல்லை. நேர்மையாகச் சொல்லப் போனால், என்னைப்போன்ற எழுத்தாளர்களுக்கு இந்தியாவைவிட சிறந்த நாடு ஒன்றும் இல்லை. நான் ஒரு கிண்டலான எழுத்தாளனோ அரசியல்வாதிகளால் திருத்தப்படும் எழுத்தாளனோ அல்ல. நான் சொல்ல விரும்புவதை உண்மையாகச் சொல்கிறேன். நம்முடைய பழங்காலத்தைப் பாருங்கள். நம்முடைய புராணங்களை நவீனப்படுத்தியும் உள்ளூர் வகையில் அமைத்தும் பல நூற்றாண்டுகளாக செய்துவரும் உயர்ந்த கலாச்சாரத்தைப் பெற்றிருக்கிறோம். இராமாயணத்தில் பல்வேறு எழுத்து வடிவங்கள் உள்ளன. இப்போது வட இந்தியாவில் மிகவும் புகழ் பெற்றிருப்பது ராமச்சரித்தமானஸ். அது உண்மையில் வால்மீகி இராமாயணத்தின் பதினாறாம் நூற்றாண்டு நவீனப்படுத்திய வடிவம். உதாரணமாக, வால்மீகி இராமாயணத்தில் சீதாதேவி

மிகவும் வலிமைமிக்க பாத்திரம். அத்புத் இராமாயணம் என்று ஒரு வடிவமும் உள்ளது. அதில் சீதாதேவி மூத்த இராவணனைக் கொல்கிறார். அதில் இரண்டு இராவணன்கள் இருந்தார்கள் என்பதை நான் தெளிவுபடுத்த வேண்டும். முக்கியமான இராவணன் மூத்தவன். ஜார்கண்ட் மற்றும் சத்தீஸ்கரின் பழங்குடி பகுதிகளில் சீதாதேவி ஒரு போர்க்குணம் மிக்கவராக காட்டப்படுகிறார். தமிழ்நாட்டில் உள்ள கம்பராமாயணம் இராமபிரானை கடவுளாகவும் கதைத்தலைவராகவும் காட்டிய போதிலும் இராவணனையும் குணநலன்களில் உயர்ந்தவனாகப் போற்றுகிறது. நம்முடைய கவனத்தைப் புராணங்கள் பக்கம் திருப்புவோம். படைப்பு பற்றிய புராணக்கதை சிவபுராணம், விஷ்ணு புராணம், ப்ரமபுராணம் ஆகியவற்றில் வலியுறுத்திச் சொல்லப்பட்டிருந்தாலும் கருத்தளவில் வேறுபாடுகள் உள்ளன. ப்ரமபுராணம் 2000 முதல் 2500 ஆண்டுகள் பழமையானது என்று வரலாற்று ஆசிரியர்கள் நமக்குக் கூறுகிறார்கள். நான் 4500 முதல் 5000 ஆண்டுகள் பழமையானதாக இருக்கும் என்று நம்புகிறேன். ஆனால் இப்போதைக்கு வரலாற்று ஆசிரியர்களின் கருத்தை ஒத்துக்கொள்வோம். அது 2000 ஆண்டுகளாக இருக்கலாம். ஆனால் ப்ரமபுராணத்தில் கொனாரக் கோயிலைப்பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. கொனாரக் 800 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது என்பது நாமெல்லோரும் அறிந்தது. ஆகையால் இது எதைக் குறிக்கிறது? நாம் இப்போது படிக்கும் ப்ரமபுராணம் 800 ஆண்டுகளுக்குமுன் பதிப்பிக்கப்பட்டிருக்கலாம். நான் வலியுறுத்தமுயலும் கருத்து என்னவென்றால், புராணங்களை நவீப்படுத்துவதும் உள்ளூர்நிலைக்கு ஆக்குவதும் ஆகிய பாரம்பரியம் இந்தியாவில் தொடர்ந்து நடைபெற்று மதச்சார்பும் பெருந்தன்மையும் கைகோர்த்து இருந்துள்ளது என்பதுதான். கடந்த சில நூற்றாண்டுகளில் நாம் இந்த கலாச்சாரத்தின் தொடர்பை சாதாரணமாக இழந்து விட்டோம். இந்திய நிலையிலிருந்து குறைவாக நான் எதையும் செய்யவில்லை. கடவுள் நோக்கிய என்னுடைய சொந்தப் பயணத்தில் உண்மையில் நான் மிகுதியும் இந்திய உணர்வுடன் என்னுடைய பாதையை அமைக்கிறேன். அதனால்தான் எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை என்பதில் நான் ஆச்சரியம் அடையவில்லை. இறைவன் அருளால் இனிமேல் என்னுடைய நூல்களில் ரகசியம் எதுவும் இருக்காது. நான் எந்தவிதமான எதிர்ப்பையும் சந்திக்கவில்லை.

கே: நீங்கள் அறிவுபூர்வமான எழுத்தாளர், ஆனால் பல இந்திய

இல்லங்களில் சிறிது புயலைக் கிளப்பி விட்டு விட்டீர்கள் என்பதை உணர்கிறீர்களா? இளம் சிறுவர்கள் தங்கள் பெற்றோரிடம் வந்துசிவபெருமான் பார்வதிதேவி பற்றி வேறுவிதமான கதையைச் சொல்லி தாங்கள் நம்பும்படி இவர் கதை சொல்கிறார் என்று கூறுகிறார்களே. நீங்கள் இந்திய புராணங்களை திருத்தி எழுதத் திட்டமிட்டுள்ளீர்களா? சிவா ட்ரையாலஜி ஒரு தொடக்கம் மட்டுதான் இன்னும் பல வரவிருக்கின்றன என்பது சரியா? நீங்கள் புதிதாகச் செய்யத் திட்டமிட்டுள்ளவற்றைப் பற்றி விளக்க முடியுமா? நீங்கள் இந்திய புராணங்களை திருத்தி எழுதத் திட்டமிட்டுள்ளீர்கள் என்று தோன்றுகிறது.

ப: இல்லை, இந்திய புராணக்கதைகளை திருத்தி எழுதும் மிகப்பெரிய வேலையில் நான் ஈடுபட மாட்டேன். எனக்கு இயற்கையாக என்ன வருகிறதோ அதை மட்டுமே செய்து வருகிறேன். இந்த கதையால் நான் சிவபெருமானின் ஆசிகளைப் பெற்றுள்ளேன். சிவா ட்ரையாலஜியோடு தொடர்புடைய மற்ற பல கதைகளை எழுதும் நிலைக்கு நான் ஆசிர்வதிக்கப்பட்டுள்ளேன். இன்னும் இருபது அல்லது முப்பது ஆண்டுகளில் அவற்றையெல்லாம் நான் எழுதுவேன். இதைச்சொன்னபிறகு, இந்தியாவில் கேள்வி கேட்கும் உயர்ந்த பாரம்பரியம் உள்ளது என்பதை சொல்ல விரும்புகிறேன். நம்முடைய உள்ளார்ந்த தளத்தில், நம்முடை பெரும்பாலான வரலாறுகள் மூலம், நாம் சுதந்திரத்தை விரும்புகிற, பொறுமையான, புரட்சிமனம் கொண்ட, வெளிப்படையாகச் சொல்வதானால் தீமைகளை எதிர்க்கிற போர்க்குணமிக்கவர்களாக இருக்கிறோம் என்பதை அறிகிறோம். சில நூற்றாண்டுகளுக்குமுன் நாம் நம்முடைய கலாச்சாரத்தின் இந்த அம்சங்களை மறந்திருக்கலாம். ஆனால் இன்று அவற்றை மீட்டுக் கொண்டுவருகிறோம் என்பதை நான் நம்புகிறேன். பகவத் கீதையின் பதினெட்டாவது அத்தியாயத்தில் (பகுதி) பகவான் கிருஷ்ணர் மிகச்சிறந்த செய்தியை நமக்கு வழங்கியுள்ளார். கீதை உருவகமான செய்தியாகும். பகவான் கிருஷ்ணர் அர்ஜுனரிடம் மட்டும் பேசவில்லை; நம் எல்லோரோடும் பேசுகிறார். 'நான் உனக்கு மிக ஆழமான அறிவைக் கொடுத்திருக்கிறேன். இப்போது உன்னுடைய கடமை அதை ஆழமாகச் சிந்தித்து உனக்கு எது சரி என்று எண்ணுகிறாயோ அதனைச் செய்' என்று கூறுகிறார். முக்கியமாக நம்முடைய சொந்த மனத்தைப் பயன்படுத்த வேண்டும். ஏனென்றால் அது அந்த நோக்கத்திற்காகவே

கொடுக்கப் பட்டுள்ளது. நாம் கேள்வி கேட்க வேண்டும்; உண்மையில் அது நம்முடைய கடமை. எனவே இளைஞர்கள் கேள்வி கேட்கிறார்கள் என்றால், அது நல்லது. பொறுமையாகக் கேட்பது விரும்பத்தக்கது. பெற்றோர்களுடனோ மற்றவர்களுடனோ மனக்கசப்பை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் கேள்வி கேட்பதில் தவறில்லை. இது நம்முடைய கலாச்சாரம், நம்முடைய பழமையான வழி.

கே: உங்களுடைய நூல்களைக் காட்டிலும் அதிகமாக நான் உண்மையில் வியப்படைவது உங்களுடைய ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும் சக்திதான். நீங்கள் பல்வேறு மூலங்களிலிருந்து பெற்ற எடுத்துக்காட்டுகளை உங்களால் கூற முடிகிறது. ஏனென்றால் நாம் இப்போது மிகவும் வேகமான உலகத்தில் வாழ்ந்து, சற்றுமுன்பு அனுப்பிய விஷயத்தைக்கூட மறந்துவிடும் நிலையில் இருக்கிறோம். நீங்கள் இந்தநிலையில் எதையும் நினைவில் வைத்துக்கொள்ள முடியாது. எனவே நீங்கள் என்ன செய்கிறீர்கள்? நீங்கள் ஞாபக சக்தி மாத்திரைகள் எடுத்துக் கொள்கிறீர்களா? இதை அறிவதற்கு நான் மிகுந்த ஆர்வமாக இருக்கிறேன்.

ப: சரி, நான் அதிகமாகப் படிக்கிறேன். நிறைய பாதாம் சாப்பிடுகிறேன். இது ஞாபக சக்திக்கு நல்லது என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால், கண்டிப்பாக நான் நிறைய படிக்கிறேன். அத்தோடு நான் மிக மதப்பற்றுள்ள குடும்பப் பின்னணியில் வளர்ந்தேன். இதுதான் என் பிறப்பின் அதிர்ஷ்டம். என்னுடைய தாத்தா பண்டித பாபுலால் திருபாதி பனாரஸ் ஹிந்து பல்கலைக் கழகத்தில் ஒரு பேராசிரியர். என்னுடைய பெற்றோர் மிகவும் மதப்பற்றுள்ளவர்கள். மிக எளிமையாக, வீட்டிலேயே அதிக அளவில் நம்முடைய வேதங்களைக் கற்றோம். ஒரு மதம் மற்றதை விடச் சிறந்தது என்றோ அல்லது கேள்விகள் கேட்கக் கூடாது என்றோ நாங்கள் கற்பிக்கப்படவும் இல்லை. நீங்கள் கேள்வி கேட்டால் விஷயத்தை நன்றாகப் புரிந்து கொள்கிறீர்கள், பிறகு நன்றாகப் புரிந்து கொண்டால் அதனோடு ஒன்றிப்போய் உங்கள் மூளையில் பதிய வைக்கிறீர்கள். கேள்வி கேட்பதன் முக்கிய கருத்து புரிந்து கொள்வதுதான். உதாரணமாக, 'உபநிஷதம்' என்ற சொல்லின் பொருளே குருவின் காலடியில் அமர்ந்து பிறகு கேள்விகள் கேட்பதுதான். இயந்திரகதியில் மனப்பாடம் செய்து கற்பதன்மூலம் நீங்கள் விஷயத்தை ஒருபோதும் ஞாபகத்தில் வைத்திருக்க முடியாது. ஆனால் நீங்கள் புரிந்து கொண்டால் அது உங்கள் உள்மனத்தில்

ஊறிப்போய் ஒருபோதும் மறந்து போகாது.

கே: வாயுபுத்திரரின் உறுதிமொழியில், நீங்கள் விஷ்ணுவைப் பற்றியும் சிவனைப் பற்றியும், நன்மை தீமை பற்றியும் பேசினீர்கள். சற்று முன்கூட, சிவன் தம்மைச் சுற்றி இருக்கிறார் என்று கூறினீர்கள். நான் இப்போது சற்று ஆழமானதாக இருக்கும் கேள்வியைக் கேட்கிறேன். சிவன் நம்முள் வாழவில்லையா?

ப: அய்யா, அதுதான் உண்மையில் என்னுடைய பேச்சின் கருத்து. சிவபெருமான் நம்முள் வாழ்கிறார். அதுதான் அத்வைதத்தின் அம்சம். உண்மையில் உலகெங்கிலுமுள்ள எல்லா மதங்களிலும் இக்கருத்து உள்ளது. புனித பைபிளின் லூக்கா சுவிசேஷத்தில் 'கடவுளின் ராஜியத்தை உங்களுக்குள் அமைத்துக் கொள்ளுங்கள்' என்று மிகத்தெளிவாக நமக்கு சொல்லப்பட்டுள்ளது. உலகத்தின் எல்லா மதங்களிலும் இந்த அத்வைத கருத்தான ஏகத்துவம், ஒற்றுமை கடவுள் எல்லாவற்றிலும் இருக்கிறார் என்ற செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. மனிதர்களாகிய நம்மிடம் மட்டுமல்ல, மரங்கள், கடல், நட்சத்திரங்கள், ஆறுகள், எல்லா உயிரினங்கள் ஆகிய இயற்கையின் ஒவ்வொன்றிலும் கடவுள் இருக்கிறார்.

கே: நான் ஒரு சிவபக்தர். என் மகனை சிவா என்று அழைக்கிறோம். நான் உங்களிடம் கேட்க விரும்புவது என்னவென்றால், உங்களுக்கு பல மதங்களைப்பற்றித் தெரியும், ஆனால் சிவபெருமான் எல்லாவற்றிற்கும் மேலாக இருப்பதாகத் தோன்றுகிறது. உதாரணமாக, இராமரைப்பற்றி யாராவது அவதூறுப் புகை பரப்பினால் அல்லது வேறு ஏதேனும் செய்தால் கொய்யோ முறையோ என்று கூச்சல் கிளம்பி விடுகிறது. ஆனால் சிவபெருமான் இதிலிருந்தெல்லாம் விலகி இருக்கிறார். ஏனென்றால் அவர் எல்லாவற்றிலும் மேலாக இருக்கிறார். இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

ப: முதலில் ஆம் என்கிறேன். தன்னுடைய பாரம்பரிய வடிவங்களில் கூட சிவபெருமான் மிகவும் குளிர்ச்சியான கடவுள். அதில் சந்தேகமே இல்லை. வேறு எந்த ஒரு கடவுளையும் நான் அவமதிக்கவில்லை என்பதைச் சொல்கிறேன். என்னுடைய இளம்வாசகர்களில் ஒருவர் 'சிவபெருமான் கடவுள்களில் தனித்தவர்' என்று கூறி எழுதியிருந்தார். அவர் உண்மையில் புரட்சியாளர்களின் கடவுள். நான் கொஞ்சம் புரட்சி எண்ணம்

கொண்டவன் அதனால் மக்கள் என்னை விரும்புகிறார்கள். அவர் ஒரு கவர்ச்சியான கடவுள். ஏன்? அவர் மிகவும் மக்களுக்கானவர். அவர் தன்னுடைய பக்தர்களிடம் பேசுவதில்லை. அவர்தன் மனைவியை மதித்து அன்பு செலுத்துகிறார். அவர் கவர்ந்திழுக்கும் நடனம் ஆடுபவர், அறிவார்ந்த இசை வழங்குபவர், மூர்க்கமான வீரர், ஒரு சிறந்த அறிவாளி. அவர் வேதங்களின் மூலமானவர். ஆம் நாங்கள் குறிப்பிடுவது போல பாங்க் என்ற பானமும் அருந்துகிறார். அவரைப்பற்றி எழுதுவதற்கு விநோதமானவர். ஆனால் இன்னுமொரு விஷயத்தைச் சொல்கிறேன். அடிக்கடி, 'சிவபெருமான் மிக உயர்ந்த கடவுள் என்று நான் நினைக்கிறேனா?' என்ற கேள்வியைக் கேட்கிறேன். ரிக் வேதத்தில் உள்ள பின்வரும் இந்த வரிகளைப் பற்றி நான் எப்போதும் பின்னுக்கு தள்ளப்படுகிறேன். உண்மை ஒன்றுதான், ஆனால் அறிவாளிகள் அதனைப் பலவாறாகப் பேசுகிறார்கள். கடவுள் ஒருவர்தான் அவரைப் பலவழிகளினால் அணுக முடியும். கடவுள் நம்மைப் பல்வேறு வடிவங்களில் நெருங்கலாம். அவர் பகவான் விஷ்ணுவாக நம்மிடம் வரமுடியும், சக்தி மாதாவாக வரமுடியும், இயேசு கிருஸ்துவாக வர முடியும், அல்லாவாக வரமுடியும், கௌதமபுத்தர் மூலமாக வரமுடியும், மகாவீரர் மூலமாக வரமுடியும், குருநானக் மூலமாக வரமுடியும். நாம் பல்வேறுபட்ட மக்கள் என்பதால் அவர் பல்வேறு வடிவங்களில் வருகிறார். என்னுள்ளே இருக்கும் புரட்சிகர எண்ணம் சிவபெருமானுக்குப் பிடித்துள்ளது. மற்றவர் வேறுவகையான வடிவத்தில் கடவுளைப் போற்றலாம், ஏனென்றால் நாம் அனைவரும் பல்வேறுபட்டவர்கள். ஆனால் அவர்கள் அனைவரும் ஒரு மூலத்தின் பகுதிதான். எந்த கடவுளும் உயர்ந்தவரோ தாழ்ந்தவரோ அல்ல. கடவுளே உண்மைதான். அஜ்மீர் ஷரிஃபில் நான் கேள்விப்பட்ட மற்றொரு கதை ஒன்றை நான் சொல்கிறேன். ஜெய்ப்பூரில் இருக்கும்போது நேரம்கிடைக்கும்போது நானும் என் மனைவியும் நீண்டவழிப்பயணத்தில் அஜ்மீர் ஷரீஃபுக்குச் சென்று வருவோம். அப்படி ஒருமுறை சென்றபோது, ஒரு மௌலவியைச் சந்தித்தோம். அவர் ஷாம் மற்றும் ரூமியின் வாழ்விலிருந்து ஒரு கதையைக் கூறினார். ஷாம் ரூமியிடம் இப்படிக் கூறினார்: ஒரு நாள் அதிகாலை வேளையில் ஒரு மனிதர் இறந்து விட்டார். அவருடைய ஆவி உடலிலிருந்து பிரிந்து பறக்கத் தொடங்கி விட்டது. நகரத்தை விட்டு, பூமியை விட்டு பறந்து விரைவிலேயே சூரிய மண்டலத்தைத் தாண்டி விட்டது. அது இன்னும் பறந்து பால்வெளிப்பரப்பைக் கடந்து, அண்டத்தைத் தாண்டி

இருக்கின்ற பலவகை அண்டங்களைத் தாண்டி மூலமாக உள்ள ஒளியினை அடைந்து விட்டது. கடவுளைக் கண்டு, 'என்னுடைய இறைவனே, மிக நுண்ணிய, மிகச்சிறிய, முக்கியத்துவமே இல்லாத ஒரு பூமி என்று அழைக்கப்படுகின்ற கோளம் வெகுதூரத்தில் உள்ளது. அங்கே உள்ளவர்கள் எந்த மதத்தைப் பின்பற்றுகிறார்கள் என்பதைப்பற்றியோ, அவர்கள் எந்த வடிவக் கடவுளை வணங்குகிறார்கள் என்பது பற்றி நீ கவலைப்படுகிறாயா?' என்று அது கூறியது. 'அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை; உங்கள் மனம் எதில் ஒன்றுகிறதோ அது எந்தவழியானாலும் பின்பற்றுங்கள், அவை என்னை நோக்கி அழைத்து வந்து விடும்' என்று கடவுள் பதிலளித்தார். இந்தக் கதையைச் சொல்லி முடித்தபிறகு, மௌலவியின் கண்களில் கண்ணீர் நிறைந்தது. இதுதான் இந்திய ஆன்மீகத்தின் முக்கிய அம்சம்.

---

**2013 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியா டுடே தனிச்சிறப்பு அரங்கில் பேசியது.**

# வரலாறு

# ஆரியப் படையெடுப்புக் கொள்கை பற்றிய புராணக்கதை

ஒரு தென்னிந்திய அரசியல்வாதி தன்னுடைய வட இந்திய சகாஒருவரை ஆரியப் படையெடுப்பாளர் என்று குற்றம் சுமத்தினார். முதலில் இது ஒரு வகையான அரசியல் சூழ்ச்சி என்று அதனை ஒதுக்கிவிட நினைத்தேன். அரசியல்வாதிகள் அரசியல்வாதிகள் செய்வதைத்தானே செய்வார்கள். சிலர் துருக்கிப் படையெடுப்பாளர் என்றும் மங்கோலியப் படையெடுப்பாளர்கள் என்றும் வேறு சிலர் ஆங்கிலேயப் படையெடுப்பாளர்கள் என்றும் கூறி ஆரியப் படையெடுப்பாளர்கள் என்று அதைநோக்கிச் செல்வார்கள். இது ஒரு சுதந்திரமான நாடு; ஒருவர் கடந்தகால பல்வேறு படையெடுப்பாளர்கள் பற்றிக் குற்றம் சொல்ல முடியும். இதைக் கூறியதன் மூலம், இந்த இருபத்தோறாம் நூற்றாண்டில் வாழும் இந்தியர்களுக்கு எதுவும் ஆகப்போவதில்லை. இது வெளிப்படையானது.

எந்தவித சிறிதளவு அய்யமும் இல்லாமல் இந்த அரசியல்வாதியின் நம்பிக்கையின்மேல் இருந்த போதிலும் ஆரிய படையெடுப்புக் கொள்கை எனக்கு வியப்பளிக்கிறது. ஆரிய படையெடுப்புக் கொள்கை என்பது என்ன? இந்து சமவெளி அல்லது ஹரப்பா நாகரீகம் கருப்பு நிற திராவிடர்களால் (இந்த பெயர் பின்னர் சேர்க்கப்பட்டது; தொடக்கத்தில் அவர்கள் 'உள்நாட்டு மக்கள்' என்று அழைக்கப்பட்டனர்) இருந்தது. அவர்கள் மத்திய ஆசியாவிலிருந்தும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும் வந்த அழகான நிறங்கொண்ட ஆரியர்களால் 3500 ஆண்டுகளுக்குமுன் படையெடுக்கப்பட்டனர். ஆரியர்கள் என்று நமக்குச் சொல்லப்பட்ட இவர்கள் கண்மூடித்தனமாக உயிர்க்கொலை செய்து எஞ்சியிருந்த திராவிடர்களைத் தெற்கு நோக்கித் தள்ளிவிட்டனர். காலி செய்யப்பட்ட இடத்தில் இவர்கள் தங்கி மற்ற சம்ஸ்கிருத ஸ்லோகங்களுடன் வேதங்களையும் உருவாக்கினர். திராவிடர்களை அழுத்துவதற்காக அவர்கள் சாதிய முறையையும் கண்டு

பிடித்தனர். ஆரிய படையெடுப்பு கொள்கையினர் ஆங்கில காலனி ஆதிக்கத்தினரிடம் முறையிட்டனர். அவர்கள் தங்களை ஒத்த "விரும்பத்தக்க" வெள்ளைநிற படையெடுப்பாளர்கள் மேல் ஈர்ப்புக் கொண்டு பழைய கதை ஆரம்பமாவதை விரும்பினர்.

ஆரிய படையெடுப்புக் கொள்கை பெரும்பாலும் மொழியியலை அடிப்படையாகக் கொண்டது. அதாவது, மொழிகள் பற்றிய கல்வி. காலனியாதிக்க கால ஐரோப்பிய அறிஞர்கள் சம்ஸ்கிருதத்திற்கும் ஈரானிய மற்றும் ஐரோப்பிய மொழிகளுக்கும் ஒரு பொது ஆதாரம் அல்லது ஒன்றோடொன்று கலந்திடும் தன்மையும் கொண்ட நெருங்கிய ஒற்றுமை இருப்பதைக் கண்டனர். இந்த வியத்தகு கண்டுபிடிப்பை விளக்குவதற்கு பல கோட்பாடுகள் வெளியிடப்பட்டன. அவற்றுள் ஒன்று ஆரிய படையெடுப்புக் கொள்கை. அடுத்தது, தங்கள் தாய்நாடாகிய இந்தியாவை விட்டு வடமேற்கு திசையில் சென்ற மக்கள் தங்களுடன் தங்கள் மொழியையும் கொண்டு சென்றனர் என்று கூறப்படுவதான இந்தியாவுக்கு வெளியே என்ற கொள்கை. இதைப்போல இன்னும் பல கொள்கைகள் உள்ளன. துரதிஷ்டவசமாக, மொழிகளுக்குத் திரும்பிவரும் முகவரி இல்லாததால் ஒரு போதுமான எந்த விவாதத்தையும் எல்லா கொள்கைகளையும் வலியுறுத்தப் பயன்படுத்தலாம். மொழியியல் சிலரால் ஒரு அறிவியல் என்று கருதப்படுகிறது (மற்ற பலர் மறுக்கலாம்). ஆனால் இது மற்ற மிகவும் கடுமையான அறிவியல் ஒழுக்க நிலைகளில் மற்றவற்றோடு ஒப்பிடும்போது இதற்கேயுள்ள கட்டுப்பாடுகள் பெற்றுள்ளது. மொழியியல் அடிப்படையிலான கொள்கைகளில் கருத்துமாறுபாட்டுக்கு இடமுண்டு. துரதிஷ்டவசமாக, இந்த தளத்தில் விவாதம் கூட நம்முடைய வழக்கமான 'முதிர்ச்சி' வகையில் (கிண்டலான எச்சரிக்கை) நடத்தப்படுகிறது. மொழியடிப்படை வரலாற்று ஆசிரியர்கள், வெளிப்படையாகவும் அறிவார்ந்த நிலையிலும் விவாதிப்பதற்கு பதிலாக பெயர் அழைப்பில் ஈடுபடுகிறார்கள். குறைகூறி அவமதித்தல் மிகுதியாகவும் கட்டுப்பாடில்லாமலும் வீசப்படுகின்றன.

மொழியியல் அதன் தன்மைகாரணமாக இந்த தளத்தை மாறுபாடான 'அடிப்படையில்லா முடிவுகளுக்கு' இடமளிக்கலாம். ஆனால் துரதிஷ்ட வசமாக, ஆரிய படையெடுப்புக் கொள்கைப் பிரச்சனையை மதிப்பிடுவதற்கு நமக்கு உதவ இப்போது வேறுபல அறிவியல் முறைகளும் உள்ளன.

இட புதைபொருள் மற்றும் கலைப்பொருள்களின் எஞ்சிய பகுதிகள் ஆகியவற்றின் ஆராய்ச்சி மூலம் தொல்லியல்துறை வரலாற்றை ஆராய்கிறது. படையெடுப்பாளர்கள் அழிவுகளின் போது சிலவற்றை விட்டுப்போயிருப்பார்கள். ஆகவே எங்கே படையெடுப்பு நிகழ்ந்து இருந்தாலும் அங்கே தொல்பொருள் தடயம் இருக்க வேண்டும். துரதிஷ்டவசமாக, ஆரிய படையெடுப்புக் கொள்கை முன்வைப்பவர்களுக்கு ஒரு பயங்கரமான படையெடுப்பு 3,500 ஆண்டுகளுக்குமுன் நடந்தது என்பதற்கான நம்பத்தகுந்த தொல்பொருள் ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன. தீர்மானமில்லாத காலடிகளின் அடியில் காணப்பட்ட மணல் படிவுகளை பார்த்து ஆரிய படையெடுப்பு கொள்கை பற்றி பேசுவோர் தடம்மாறி ஒரு புதிய ஆரிய குடியேற்ற கொள்கை என்ற ஒன்றை முன்வைத்தார்கள். அதாவது ஆரியர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் அமைதியாக நடந்துவந்து இந்தியாவிற்குள் குடியேறினார்கள். பெரும்பாலான திராவிடர்கள் என்று சொல்லப்பட்ட மக்கள் இந்து சமவெளிப்பகுதியில் மக்கள் நெருக்கம் அதிகமாக இருந்ததால் தானாகவே விரும்பி தெற்கு நோக்கி நகர்ந்து விட்டார்கள். இது உண்மையாக இருக்குமென்றால், அந்த சமயத்தில் மிகப்பெரிய அளவிலான கிழக்கு ஐரோப்பியர்கள் மற்றும் மத்திய ஆசியர்கள் உள்வருதல் மிகவும் அதிகமாக இருக்க வேண்டும். சரிதானா? மரபுவழி மக்கள் தொகை ஆவணங்களில் இது காட்டப்பட்டிருக்குமல்லவா?

ஆரிய குடியேற்ற கொள்கை (இப்போது) முன்வைப்பவர்களுக்கு துரதிஷ்டவசமாக, மரபுவழி மக்கள் நிலை அறிவியல் இந்த கொள்கையை மறுக்கிறது. இந்திய மரபுவழிபற்றி நேச்சர் மற்றும் அமெரிகன் ஜர்னல் ஆஃப் ஹ்யூமன் ஜெனடிக்ஸ் போன்ற அறிவியல் இதழ்களில் கடந்த சில ஆண்டுகளில் வெளிவந்த பெரும்பாலான கட்டுரைகள் ஒரு விஷயத்தை ஒத்துக்கொள்கின்றன. அது இந்திய மரபுவழி எண்ணிக்கையில் 3,500 ஆண்டுகளுக்குமுன் குறிப்பிடத்தக்க அளவில் அதிகப்படியானது எதுவும் இல்லை என்பதுதான்.

ஆகவே நாம் தொகுத்துப் பார்க்கலாம். ஆரிய படையெடுப்புக் கொள்கை அல்லது ஆரிய குடியேற்றக் கொள்கை முன்வைப்பவர்கள் 3,500 ஆண்டுகளுக்குமுன் இந்தியாவிற்கு வந்த ஆரியர்கள் என்று சொல்லப்பட்ட ஒரு சிறிய தொகுதியான நாடோடி மக்கள் இருந்தார்கள் என்று நம்மை நம்பும்படி கேட்கிறார்கள். தொல்பொருளியல் அல்லது மரபணுவியல்

ஆவணங்களில் இருக்கும் சான்று எதுவும் மிகமிக குறைவாக உள்ளது. இத்தகைய மிகச்சிறிய குழு எத்தகைய ஒரு பெரிய வன்முறையிலும் ஈடுபடவில்லை. ஆனால் எப்படியோ இந்த புராண மகாமனிதர்கள் அமைதியாக மிகவும் அதிக எண்ணிக்கையிலான, முன்னேற்றமடைந்த, நகரத்து திராவிடர்களை சமாதானப்படுத்தி ஒருசேர தென்பகுதிக்குக் குடியேற செய்து விட்டார்கள். இப்படி சொல்லப்பட்ட திராவிடர்களை அவர்கள் விவாதித்து இல்லங்களை விட்டுச் செல்லுமாறு செய்துள்ளார்கள் என்று அனுமானிக்கலாம். இப்படிச் செய்கையில் இந்த நாடோடி'நாகரிகமில்லா ஆரியர்' இந்தியா முழுமையும் உள்ள மொழியியலையும் கலாச்சாரத்தையும் கூட மாற்றியுள்ளார்கள். அத்தோடுகூட, வெளிநாட்டு கலாச்சாரம் என்று கூறப்பட்ட இது ஒருங்கிணைத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்து இன்றுவரை நாடு முழுவதிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. நேர்மையாகப் பார்த்தால் இதில் எதுவும் பொருள் உண்டா? நாம் கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொள்ளுமாறு சொல்லப்படும் மற்றொரு ஏற்றுக்கொள்ள இயலாத மற்றொன்றைப்பற்றிப் பார்ப்போம். அப்போதைய மிகப்பெரிய நாகரிகத்தை நிர்மானித்த (ஹரப்பா மற்றும் சிந்துசமவெளி நாகரிகம் என்று இன்று அழைக்கப்படுவது) சிறப்பாக அழைக்கப்படும் திராவிடர்கள் எந்தவித இலக்கியத்தையும் விட்டுச் செல்லவில்லை. அதற்கு மாறாக, இந்த நாடோடி நாகரிகமற்ற 'ஆரியர்கள்' நிரந்தரத் தங்குமிடம் இல்லாத நிலையிலும் அந்த காலத்தில் தத்துவார்த்த, தொழில்நுட்ப நூல்களான இலக்கியப் பெரும் நூல்களை உருவாக்கியுள்ளார்கள். இத்தகைய மிகப்பெரிய மாறுபாடுகளை ஏற்றுக்கொள்வதற்கு விளக்கமான வரலாறு ஏற்படுத்தல் ஜிலேபியில் இருப்பதைவிட இன்னும் அதிக சிக்கலுக்கு இட்டுச் செல்லும்.

ஒக்கம் ரேசரின் கொள்கையை தொகுத்துப்பார்த்தால் கிடைக்கும் சாதாரண விளக்கம் ஒருவேளை உண்மையாக இருக்கும்: ஆரியர் என்று ஒரு இனம் இருக்க சாத்தியமில்லை. ஹரப்பாவிலும் சிந்து சமவெளியில் வாழ்ந்தவர்களும் வேதகலாச்சாரம் கொண்டவர்களும் ஒருவரே. இப்போது இந்தியாவில் வடக்கு தெற்கு எங்குமுள்ள மக்கள் அந்த கலாச்சாரத்திலிருந்து வந்தவர்கள் என்ற சாத்தியக்கூறு அதிகம்.

ஆரிய படையெடுப்பு கொள்கை பற்றி பல வரலாற்று ஆசிரியர்களுக்கிடையில் (இந்தியர்கள் மட்டுமல்ல உலகம் முழுவதும் உள்ளவர்கள்) உண்மையான நம்பத்தகுந்த சந்தேகங்கள் உள்ளன என்று இந்தியக் குழந்தைகள் கற்பிக்கப்பட வேண்டியது அவசியம். தொல்லியல் மற்றும் மரபியல் அடிப்படையிலான ஆரிய படையெடுப்பு கொள்கையை ஆதரிக்காத இந்த மாற்று கொள்கைகளும் கூட கற்பிக்கப்பட வேண்டும். பிறகு மாணவர்களும், அவர்களைப்போலவே எதிர்கால சந்ததியினரும் அவர்கள் அறிவைப் பயன்படுத்தி சிந்திக்கட்டும்.

ஒருவகையில் ஒரு ஐரோப்பிய நண்பர் ஒருமுறைக் குறிப்பிட்டதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆரிய படையெடுப்புக்கொள்கை ஐரோப்பியர்கள் உருவாக்கிய ஷேக்ஸ்பியர் நாடகத்தைப் போன்ற ஒரு மிகப்பெரிய கட்டுக்கதை. ஒருவேளை அந்தப்புத்தகத்தை மூடிவைக்க வேண்டிய நேரம் இது!

---

**2015** ஆம் ஆண்டு தி டைம்ஸ் ஆஃப் இந்தியா இதழில் முதன்முதலில் வெளிவந்தது.

# இளையோர், இந்தியர் மற்றும் துணிந்தநிலை அவமதிப்போர்

அன்று ஒருநாள் நான் உங்கள் சராசரி தலைவரைப் போல் இல்லாத ஒரு அரசியல்வாதியிடம் ஓடினேன். அவர் இளைஞர் அல்ல, ஆனால் நவீன, புருட்சிகரமான பார்வை கொண்டவர். அதற்குப் பின்தொடர்ந்ததைப் பார்த்து அதானால்தான் வியப்படைந்தேன். அவர்கள் 'அறிவார்ந்த' கருத்துகளைக்கூட கவனிக்க விரும்புவதில்லை. அதற்கும் மேலாக, நாம் ஒரு குடியாட்சி நாட்டில் இருப்பதாலும், நம்முடைய வாக்காளர்களில் பெரும்பாலானவர்கள் 'எதையும் கவனிக்காத' இளைஞர்களாக இருப்பதாலும், எந்தச் செயலையும் செய்வது கடினமாக இருக்கிறது. 'இன்றைய இளைஞர்கள் இந்திய கலாச்சாரத்தை மதிப்பதில்லை. அவர்கள் முதியவர்களை மதிப்பதுகூட இல்லை' என்ற அலுத்துப்போன பழைய பல்லவி என்று நான் நினைக்கின்ற ஒன்றோடு தொடர்ந்து வந்தது. இது என்னைச் சிந்திக்கத் தூண்டியது. இந்த அரசியல்வாதி சொல்வது சரியா? தங்களது பெற்றோர்களோடு ஒப்பிடும்போது இந்திய இளைஞன் ஓரளவுக்கு 'இந்தியத் தன்மையில் குறைந்திருக்கி'றானா?

காப்பீட்டுத் துறையில் நான் பணியாற்றியபோது அதிக அளவிலான இளைஞர்களிடம் கலந்துரையாடுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைக்க வில்லை. அவர்கள் காப்பீடு என்பதில் உண்மையில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை; உண்மையில் சொல்லப்போனால், வயதானவர்களே கூட காப்பீட்டில் ஆர்வம் காட்டுவதில்லை. ஒரு நூலாசிரியன் என்ற முறையில், என்னுடைய வாசகர்களில் பெரும்பாலோர் இளைஞர்களாக இருப்பதால், அவர்களிடம் கலந்துரையாடும் வாய்ப்புகள் கிடைத்தன. ஆகவே இன்றைய இளைஞன் துணிந்தநிலையில் அவமதிப்போனாகவும் புரட்சிசெய்பவனாகவும் இருக்கின்றான் என்று அந்த அரசியல்வாதி சொல்வதை ஒத்துக் கொள்கிறேனா? ஆம் அவர்கள் அப்படி இருக்கிறார்கள். நீங்கள் தகுதியானவர் என்றால் மட்டுமே உங்களை மதிக்கிறார்கள். அவர்கள் மதிக்கவில்லை என்றால் உங்களுடைய வயதையோ உங்கள் தகுதியையோ பொருட்படுத்தாமல் வெளிப்படையாக

மதிக்கவில்லை என்பதை காட்டுகிறார்கள். ஆனால் இது ஒரு பிரச்சனை என்று நான் நினைக்கவில்லை. உண்மையில், நம்முடைய இளைஞனின் இந்த துணிந்தநிலை அவமதிப்பு நம்முடைய ஒப்பிட்டுப்பார்க்கும் அனுகூலமாக இருக்கிறது. அத்தோடு, துணிந்து அவமதிப்புக் காட்டுவதன்மூலமும் புரட்சிகரமாக இருப்பதன் மூலமும் அவர்கள் நம்முடைய பழைய இந்திய கலாச்சாரத்தை மறுஆய்வு செய்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். எதனை எடுத்தாலும், அவர்கள் தங்கள் பெற்றோர்களைவிட 'அதிக அளவிலான இந்தியனாக' இருக்கிறார்கள்.

இந்தியக் கலாச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது என்பதை அறிந்து கொள்வதற்கு நாம் நம்முடைய பழமையான கடந்த காலத்தைத் திரும்பிப் பார்ப்போம்.

தங்கள் மூத்தோர்களின் சொற்களைக் கேட்காமலிருந்தால் எத்தகைய துரதிஷ்டம் ஏற்படும் என்பதை உதாரணங்கள் வழியாக மகாபாரதத்திலிருந்து ஒரு புகழ்பெற்ற நிகழ்வின் மூலம் (மற்றவற்றோடுகூட வாயுபுராணத்திலும் கூட இது வர்ணிக்கப்பட்டுள்ளது) அறிய முடியும். பேரரசன் யயாதி தான் செய்த ஒரு பாவத்திற்காக முதுமை அடைந்துவிட சபிக்கப்பட்டான். அவன் தன்னுடைய ஐந்து மகன்களிடமும் தங்கள் தந்தையாகிய தன்னுடைய இந்த முதுமையை யாராவது ஒருவர் ஏற்றுக்கொண்டு அவர்களின் வாலிபத்தைத் தருமாறு கேட்டான். மூத்த மகன் யாது 'இது உங்களுடைய சாபம், என்னுடையதல்ல' என்று கூறி மறுத்து விட்டான். இளைய மகன் புரு உடனேயே ஒத்துக்கொண்டு 'நல்ல மகன்' என்பதுடன் தான் மிகவேகமாக முதுமை அடைந்து கொண்டிருக்கும்போதே தந்தைக்கு தன்னுடைய வாலிபத்தை வழங்க யயாதி இளமையைப் பெற்று விட்டான். வாலிபமடைந்த பேரரசன் யயாதி என்ன செய்தான்? தன் சொல் கேளாத மகன்களைத் தண்டித்தான். தன்சொல்கேட்டுச் செயல்பட்ட மகனை ஆசிர்வதித்தான். யாது அவனுடைய வாரிசு மக்கள் அழிந்துபோகவும் மன்னர்களாக ஆக முடியாமலும் சபிக்கப்பட்டு விட்டான். இதனால்தான் யாதுவின் வாரிசுகள் ஒரு போரில் தங்களைத் தாங்களே படுகொலை செய்துகொண்டார்கள் என்று சாதாரண பார்வையாளர் நம்புகின்றனர். புருவின் வாரிசுகள் ஆகிய பாண்டவர்களும் கௌரவர்களும் மிகப்பெரிய அரசாட்சியை நிறுவி பழங்கால இந்தியாவின் அதிகமான பகுதிகளை ஆண்டனர். ஆகவே, இந்த கதையின் நீதி

வெளிப்படையாகத் தெரிகிறது: புருவைப்போல இருங்கள். மூத்தோர் சொல்லுக்கு மதிப்பு கொடுங்கள். எதிர்த்துநின்ற யாது போன்றவர்கள் தங்கள் பாவத்திற்காக அவர்களின் வாரிசுகளும் கூட துன்பம் அடையலாம். சரியான ஒட்டுமொத்த தண்டனை!

நான் அந்தக் கதையைப் பற்றி எந்த கேள்வியும் கேட்கவில்லை, ஆனால் அதன் சமகாலக் கருத்தூட்டம் பற்றியே கேட்கிறேன். இதன் செய்திக்குள் நாம் ஆழ்ந்து சென்று பார்ப்போம். யாதுவின் வாரிசுகள் உண்மையில் இந்த அவமானத்தில் துன்புற்றார்களா? முற்றிலும் வேறுபட்டுள்ளது. அவனுடைய வாரிசுகளில் ஒருவரான கர்த்த வீரிய அர்ஜவனன் (மகாபாரதத்தில் வரும் அர்ஜவனனிலிருந்து வேறுபட்டவர்) வேத உலகம் முழுமையும் ஆண்டார். யாதவர்களை அழித்த போர், 'நல்ல மகன்' புருவின் வாரிசுகளான பாண்டவர்களும் கௌரவர்களும் போரில் தங்களை அழித்துக்கொண்ட பிறகே நடந்துள்ளது என்பதை நம்முடைய புராணங்களில் ஒன்றான மகாபாரதத்திலிருந்து இப்போது நாம் அறியமுடிகிறது. ஆகவே இந்த கதையில் உள்ள அபத்தத்தை நாம் கவனித்துப்பார்த்தால், யாது மற்றும் புரு ஆகிய இருவருமே வெற்றிகளையும் அழிவுகளையும் சந்தித்துள்ளார்கள் என்பது புரியும். உண்மையில், யாதுதான் உண்மையில் ஆசிர்வதிக்கப்பட்டவர் என்று ஒருவர் வாதிட முடியும். ஏனென்றால், அவருடைய வாரிசுகளில் ஒருவர்தான் மிகப்பெரிய கடவுளான பகவான் கிருஷ்ணரே!

மக்கள் அதிர்ஷ்டத்தை அனுபவிப்பதோ துரதிஷ்டத்தில் துன்புறுவதோ அவரவர் கர்மாவை அடிப்படையாகக் கொண்டதே அல்லாமல் சக்திமிக்கவர்கள் முன் அவர்கள் பணிவதால் அல்ல. இந்த பாடம் எல்லா மதங்களின் பல்வேறு வேதங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் தலையை இறைவனுக்கு மட்டும்தான் தாழ்த்தி வணங்க வேண்டும். மற்ற ஒவ்வொருவரும் உங்கள் மதிப்பைப் பெறவேண்டும், அதைப்போலவே நீங்களும் மற்றவர்களின் மதிப்பைப் பெறவேண்டும். இதுதான் நவீன இந்திய இளைஞன் உண்மையில் நம்புவதாகும்.

ஆகவே நவீன இந்தியாவின் பாரம்பரிய மேற்குடி மக்களுக்கான பாடம் என்ன? எல்லா மதங்களின் மேல்ஜாதிகள் (இந்தியாவில் இந்துமதம், கிருஸ்துவ மதம், இஸ்லாமிய மதம் ஆகியவற்றில் இந்த முறை உள்ளது), மனிதர்கள்,

அரசியல்வாதிகள், அதிகார வர்க்கத்தினர், முதுநிலை ஊடகத்தினர், சட்ட வல்லுநர்கள், முதியோர்கள், பரம்பரை பணக்காரர்கள் ஆகிய இந்த பல குழுக்கள் நீண்ட பல காலமாக தாங்கள் நடத்தப்பட்டு வந்த அதிகப்படியான மற்றும் எளிதான அவமானங்களுக்குப் பழக்கப்பட்டுப் போயிருந்தன. இப்பொழுது சவாலாக்கப்படுகின்ற இந்த சூழ்நிலைக்கு அவர்கள் தங்களை தகவமைத்துக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அவர்கள் இதுவரை பழக்கப்பட்டுவிட்ட அந்த தகுதியை நிலைநிறுத்திக் கொள்ள அதிகமாக கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியுள்ளது.

இளைஞர்களைப் பொருத்தவரையில், தவறு கண்டால் எதிர்த்துப் புரட்சி செய்வதில் முன்னே நில்லுங்கள் என்று கூறுகிறேன். உங்கள் முதியவர்கள் பெண்களை அவமதித்தால், எதிர்ப்பை வலுவாகக் காட்டுங்கள். உங்கள் அரசியல்வாதிகள் ஊழல் மிக்கவர்களானால் எதிர்த்து, எதிர்ப்பாக ஓட்டளித்து வெளியேற்றுங்கள். உங்கள் மதத்தலைவர்கள் வெறுப்பைப் போதித்தால், அவர்கள் தவறு என்பதை எடுத்துச் சொல்லி அவர்களுடைய தீவிரமான கருத்துக்கு வேதங்களைக் காட்டி எதிர்த்து வாதிடுங்கள். ஆனால் புரட்சி என்பது எதிர்ப்பு தெரிவித்து மாற்றுவது என்பதைவிட அதிகமானவலுவுள்ள ஒன்று. இது உங்களுடைய வாழ்க்கை பற்றியதும் கூட. நீங்கள் படிக்க வற்புறுத்திய பாடத்தைப் படிப்பதைவிட நீங்கள் விரும்பும் பாடத்தைப் படிப்பது புரட்சியாகும். நீங்கள் உங்கள் சொந்த கம்பெனியைத் தொடங்கி மற்றவர்களின் ஏச்சு பேச்சுகளைப் பொருட்படுத்தாமல் அதில் வெற்றி பெறுவதும்கூட புரட்சிதான். பெற்றோர் தேடிவைத்த சொத்தில் வாழ்வதைவிட, தானே உழைத்து சம்பாதித்து தன்னுடைய வாழ்க்கைச் செலவுகளை ஈடுகட்டுதல் சுயமரியாதையோடு பின்னப்பட்ட புரட்சியாகும். மதத்தையோ சமுதாயப் பிரிவையோ கருதாமல் நீங்கள் காதலித்தவரை மணந்தால் அதுவும் கூட மிகவும் அழகான புரட்சியாகும். எல்லா புத்தாக்கங்களின் அடிப்படை புரட்சிமனப்பான்மைதான்.

ஆனால் புரட்சி வன்முறையையும் மோசான வார்த்தைகளையும் பயன்படுத்தினால் அது கூலிப்படையும் குண்டர் கூட்டும் என்றாகிவிடும். நீங்கள் வன்முறையைப் பயன்படுத்தத்தொடங்கிய அந்த நொடியே நாங்கள் எதை எதிர்த்துப் போராடுகின்றீர்களோ அதில் தார்மீக அடித்தள மாற்றத்தையும் அதற்கான உழைப்பையும் இழந்து விடுகிறீர்கள். அத்தோடுகூட, தனிப்பட்ட கடமையும் குறிக்கோளும் இல்லாத

புரட்சித்தன்மை, இந்தியாவின் அண்மைக்கால கடந்த காலத்தில் ஏற்பட்டதுபோல அடிக்கடி குழப்பத்திற்கு இட்டுச் சென்றுவிடுகிறது. மற்றவர் உங்கள் மரியாதையைப் பெறவேண்டும் என்று எதிர்பார்ப்பதைப்போல, உங்கள் நடத்தையின்மூலம் நீங்களும் மற்றவர் மரியாதையைப் பெறுகின்ற பொறுப்பு உங்களிடம் இருக்க வேண்டும். ஆகவே முன்னேறுங்கள், புரட்சி செய்யுங்கள். ஆனால் எப்போதும் சட்டத்திற்கு உட்பட்டும் எப்போதும் குறிக்கோள் எண்ணத்தோடும் இருக்க வேண்டும்.

இன்னும் இதையும் விடவும் அதிகமான புரட்சித்தன்மையும், நியாயான கோப உணர்வும் கொண்ட இந்தியாவை நான் விரும்புவேன். ஒரு மிகப்பெரிய இந்தியாவிற்கு அதுவே முன் வருகையாகும்!

---

**2013 ஆம் ஆண்டு ஹிந்துஸ்தான் டைம்ஸ் இதழில் முதலில் வெளிவந்தது.**

# ஆங்கிலேய பம்பாய், ஆம்ச்சி (நம்முடைய) மும்பை

இது மிகவும் அழுக்கடைந்துள்ளது என்பது ஒவ்வொரு இந்திய நகரமும், குறிப்பாக மும்பையும் எதிர்கொள்கிற நிரந்தரமான விமர்சனமாகும். காற்று மாசடைந்துள்ளது, கழிவுநீர் மற்றும் வடிகால்முறை பாழ்பட்டுள்ளது, பசுமைநிலை குறைவாய் உள்ளது, அத்தோடு எங்கு பார்த்தாலும் அழுக்கும் குப்பைகளும் நிறைந்துள்ளன. நான் பெருமைமிக்க மும்பைக்காரராக இருந்தபோதிலும், இத்தகைய விமர்சனங்கள் உண்மையானவை என்று ஒத்துக்கொள்ளத்தான் வேண்டியுள்ளது. நல்லவேளையாக, காலம்கடந்து நாங்கள் இந்த பிரச்சனைகள் பற்றித் தீவிரமாகக் கலந்தலோசிக்கத் தொடங்கியுள்ளோம்; தயக்கத்துடனே பசுமைநிலை முன்னேற்றம் ஆங்காங்கே உருவாகியுள்ளது. நாடு செல்வநிலையில் அதிகரித்து வருவதால், எல்லாம் சிறப்பாக நடந்தாக வேண்டும். அதனை நான் நம்புகிறேன்.

ஆங்கில காலனி ஆதிக்க நிர்வாகிகள் மிகவும் சிறந்த நிலையில் இருந்தார்கள் என்று முன்வைத்துக்கூறும் முணுமுணுப்புகள் இருந்தபோதிலும் இந்த விமர்சனங்கள் வியப்பு மிக்கவை. அந்த பம்பாய் (ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் சுதந்திரம் பெற்ற ஆரம்ப காலங்களிலும் மும்பை இப்படி அழைக்கப்பட்டதால்) சுத்தமாக இருந்தது; மிகப்பெரிய கட்டிடங்களும் அகலமான சாலைகளும் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டன.

இது என்னை இப்படி சிந்திக்க வைத்தது : வெளி சுற்றுப்புரங்களுக்கு மட்டும்தான் தூய்மை என்பது பொருந்துமா? அல்லது இது தொட்டறியமுடியாதவற்றிற்கும், உதாரணமாக கர்மா போன்றவற்றிற்கும் கூட பொருந்துமா? ஆம், தெற்கு மும்பையில் உள்ள ஆங்கிலேயர் காலத்திய ஆசிய - கோதிய முறை கட்டிடங்கள் அழகானவை. நவீன மும்பையின் கட்டிடங்களை விட முந்தைய தோற்றம் காரணமாக இவை மிகவும் அழுக்காகக் காணப்பட்டாலும், இது உங்கள் அறிந்து கொள்ளும் ஆவலைத் தூண்டும். நான் விரிவாகச் சொல்கிறேன்.

தற்போதைய 'இந்திய' மும்பையின் கர்மா என்னும் செயல்பாட்டை சிந்தியுங்கள். இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சி நிலையில் ஆறு சதவிகிதத்திற்கு மேலாகவும், வருமான வரி செலுத்துதலில் 30 சதவிகிதமும் நாங்கள் வழங்குகிறோம். இந்தியாவில் மற்றவர் பொறாமை கொள்ளும் அளவிற்கு செயல்திறனை மும்பை பெற்றுள்ளது. இதற்கு நிரூபணம் அதிகம் தேவையில்லை. தீவிரவாதத் தாக்குதல் முதல் வெள்ளம் என்பதுவரை பல பேரிடர்களை நாங்கள் சந்தித்துள்ளோம். ஆனால் விரைந்தெழுகின்ற மும்பை ஆர்வத்தால் காலதாமதமே இல்லாமல் சகஜநிலைக்கு வந்துவிடுகிறோம். சிலசமயங்களில் தற்காலிக சமூக வன்முறைகளில் விழுந்து தவறிழைத்திருக்கிறோம். ஆனால் வியக்கத்தக்க வேகத்தில் சகஜநிலைக்கு வந்திருக்கிறோம். எண்ணிக்கையில் குறைவான காவல்துறையினர் மற்றும் சிதைந்து நிற்கும் நீதிமுறை என்பவற்றையும் மீறி மும்பையின் வன்முறைக் குற்றங்கள் விகிதம் நியூயார்க் அல்லது பாஸ்டன் நகரின் குற்றங்களில் ஒரு சிறுபகுதிதான். மகாராஷ்டிர மாநிலம் முழுவதும் சொல்லப்போனால் உண்மையில் இந்தியாவின் அதிகமான பகுதிகள் மும்பை உருவாக்கும் செல்வ வளத்தையும் ஆதாரநிலைகளையும் நம்பி சார்ந்து இருக்கிறது. ஒரு நண்பர் ஒருமுறை குறிப்பிட்டதுபோல, மகாராஷ்டிர மாநிலமும் இந்தியாவும் மும்பையின் பரந்த தோள்களில் நிற்கின்றன. இந்த வாசகம் மிகைப்படுத்தப்பட்டதாகத் தோன்றினாலும் உண்மைக்கு வெகு தொலைவில் இல்லை. இந்திய மும்பையின் முன்செயல்பாடு தூய்மையானது. இது நன்மையானது.

ஆங்கிலேய மும்பையைப் பற்றிய பெற்று அறிந்த வரலாற்றை இப்போது மீண்டும் எண்ணிப்பார்ப்போம். அப்போதைய ஆங்கிலேய அரசர் சார்லஸ் II 1662 ஆம் ஆண்டில் போர்ச்சுகலின் கேதரினிடமிருந்து, பின்னர் பம்பாய்நகரம் என்று உருப்பெற்ற ஏழு தீவுகளைச் சீதனமாகப் பெற்றார். இந்த தீவுகளில் இந்தியர்கள் குடியேறி ஆயிரம் ஆண்டுகள் ஆனபோதிலும் அதுவரை எந்தவித முக்கியத்துவமும் இல்லாமல் இருந்தன. ஆங்கிலேயர்கள் தலைசிறந்த வணிகநோக்கம் உள்ளவர்கள் என்பதால் பம்பாய் பொன்விளையும் பூமியாக மாறியது என்று கூட நாங்கள் சொல்லக்கேட்டிருக்கிறோம். அங்குள்ள அப்பகுதி மக்களைப் 'பொறுத்துக்கொள்ள முடியாத' சிலர் இந்தியர்களையும் நாய்களையும் விடுதிகளுக்குள் அனுமதிக்கக்கூடாது என்று கூறிவந்ததாக ஒரு சாதாரண வழக்கு உள்ளது. இவையெல்லாம் இருந்தபோதிலும்,

வெள்ளைக்காரர்களின் திறமையாலும் வணிகச்சிறப்பாலும் ஆங்கிலேய பம்பாய் உலகத்தின் செல்வம் மிகுந்த நகரங்களில் ஒன்றாக உருப்பெற்றது.

அது அப்படியே இருக்கட்டும். ஆனால் ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்களாலும், வருந்தத்தக்க வகையில் இந்திய வரலாற்றாளர்களாலும் கூட மிகக்கவனமாக சுத்தமாக இந்தக் கதை உருவாக்கப்பட்டது. ஆங்கிலேயர் உருவாக்கிய அஸ்திவாரம் அமைவதற்கான அபரிமிதமான இந்த வளத்திற்கான உண்மையான ஆதாரம் எது? ஓபியம் (போதைப்பொருள்) கடத்தல், மனித வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய போதை மருந்து கடத்தும் கும்பல் ஆகியவைதான். சுதந்திரமாக வணிகம் செய்யும் பிற பொருள்களைப்போல எண்ணியதால், மேற்கத்திய உலகம் இதனை ஓபியம் 'வணிகம்' என்று அழைத்தது. இதனைத் தாண்டி, இது மனித இனத்திற்கு எதிரான வரலாற்றில் பதிவான குற்றங்களில் ஒருவேளை மிகவும் பெரிய குற்றமாக கருதப்பட்டது.

கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் உண்மையில் ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கும் இந்த போதைமருந்து கடத்தும் தொழிலே சம்பாதிப்பதற்கான அடிப்படை ஆதாரமாக இருந்தது. ஆங்கிலேயர்கள் இந்திய விசாயிகளை உணவுப்பொருள் விளைவிப்பதை விட்டுவிட்டு ஓபியம் உற்பத்திக்கு வற்புறுத்தினார்கள். அவை பின்னர் சீனாவுக்குள் கடத்தப்பட்டது. உணவுப்பொருள் உற்பத்தியைத் தடுத்து செயற்கையாக உருவாக்கப்பட்ட உணவுப் பற்றாக்குறை மில்லியனின் பத்துமடங்கான இந்தியர்களின் சாவிற்கான காரணமாக அமைந்தது. ஆம், மில்லியனின் பத்துமடங்கான இந்தியர்கள். ஆங்கிலேயர்கள் உருவாக்கிய "பஞ்சத்தால்" நாட்டின் கிழக்குப் பகுதிகளில் இது நிகழ்ந்தது. இந்தியர்கள் எதிர்த்துப் புரட்சி செய்தபோது, 'கம்பெனி' அதனை கொடுமையுடன் அடக்கிவிட்டது. மில்லியன் கணக்கான சீனர்களும் கூட இறந்து விட்டனர் அல்லது போதைமருந்துக்கு அடிமையாகி அழிவைத்தேடினர். சீனர்கள் புரட்சி செய்தபோது, இங்கிலாந்து சீனாவின்மீது போர்தொடுத்து அவர்களைத் தோற்கடித்தது. இது "ஓபியம் போர்" என்று அழைக்கப்பட்டது. இதன்மூலம் அவர்களை போதைமருந்து கடத்தும் வணிகத்தை ஏற்குமாறு பலவந்தப்படுத்தி விட்டது. சீனாவின் இந்த மறைமுக வணிகத்திற்கு ஹாங்காங் மற்றும் கான்டோன் முக்கியமான தளங்களாக இருந்தன. ஆங்கில கல்கத்தாவும், ஆங்கில

பம்பாயும் இந்தியாவில் முக்கியமான தளங்களாக இருந்தன. வருந்தத்தக்க வகையில், சில சீனர்களும் இந்திய வணிகர்களும் தங்கள் தாய்நாட்டை கொள்ளையிடுவதில் கூட்டாளிகளாக இருந்தனர். அவற்றுள் சில வணிக நிறுவனங்கள் இன்றுவரை தொடர்கின்றன. அவற்றில் இந்தியாவில் இருந்த பல, மனிதநேய செயல்பாட்டின் அடிப்படையில் போதை மருந்து கடத்தல் வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். ஆனால் ஆங்கிலேயர்கள், தொடக்கி வைத்தவர்கள், மனித இனத்திற்கு எதிரான இந்த குற்றத்தை நடத்திச் சென்றவர்களும் தலைமை ஏற்றவர்களும் செய்த பாவத்திற்குப் பரிகாரம் தேடவில்லை. எல்லா கல்விகற்ற சீனர்களும் இந்த சோகமான கதையை அறிவார்கள். ஆனால் பெரும்பாலான கல்வி கற்ற இந்தியர்கள் இதனை அறியவில்லை. இந்த வணிகத்தில் இதயமாக விளங்கிய ஆங்கிலேய பம்பாய் இரண்டு பழமை வாய்ந்த நாகரீக இனங்களை நேரடியான அழிவுக்கு இட்டுச் சென்றது.

ஆம்ச்சி மும்பையாகிய இன்றைய மும்பை, கண்பார்வைக்கு அழுக்காகவும் பசுமை குறைந்தும் இருக்கலாம். ஆனால் பழைய பொலிவை நாங்கள் மெதுவாக ஆனால் நிச்சயமாகப் பெற்று வருகிறோம். மீண்டும் அற்புதமான கட்டிடங்கள் உருவாகி வருகின்றன. நகரத்தின் உள்கட்டமைப்பு வசதிகள் மெதுவாக ஆனால் நிச்சயமாக மீண்டும் மேம்பட்டு வருகின்றன. இந்தியா முழுவதிலுமிருந்தும் மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை உருவாக்கவும் பொருளீட்டவும் இந்த கனவு நகரத்திற்கு வருகிறார்கள். ஆனால் மிகமுக்கியமானதாக 'இந்திய' மும்பையில் ஆங்கிலேயர் செய்தது போல் அல்லாமல், நேர்மையான வழிகளில் நாம் பொருள் ஈட்டுகிறோம்; இந்த பிரபஞ்சத்தையே கெடுத்துவிடும் தன்மையுள்ள செயல்களால் நாம் பொருள் சம்பாதிக்கவில்லை. நம்முடைய செயல்பாடான கர்மா தூய்மையானதாக இருக்கிறது. இந்த ஏழு பெரிய தீவுகளிலும் ஆங்கிலேயர் குவித்து வைத்த செயல்பாட்டு அழுக்கை ஆம்ச்சி மும்பை மக்களான நாம், பெருமளவுக்கு சுத்தம் செய்துள்ளோம்.

ஆம், அந்த வெளித்தோற்ற தூய்மையையும் கூட நாம் செய்து விடுவோம். எங்களுக்கு கால அவகாசம் தாருங்கள்.

---

**2015 ஆம் ஆண்டு ஏப்ரல் இந்தியா டுடே இதழில் முதலில் வெளிவந்தது.**

# நவீன இந்தியாவில் பிரித்தாளும் சட்டங்கள்

நம்முடைய அரசியல் சட்டத்தின் முகப்புரை சுருக்கமாக வழிகாட்டு நோக்கத்தைக் குறிப்பிடுகின்றது, அதில் ஒன்று: அந்தஸ்திலும் வாய்ப்பிலும் சமம் என்பதாகும். எந்த ஒரு சமூகமும் உண்மையில் சமமாக இல்லை (அல்லது ஒருபோதும் இருக்கவில்லை). இது எப்போதும் தப்பித்துக்கொள்கிற விருப்பத்தை அனைவருக்கும் கொண்டுள்ளது. 'சட்டத்தின்முன் சமம்' என்ற முதல் படியிலிருந்தபோதிலும் இது உதவுகிறது. சட்டத்தின் முன் சமம் என்பதை எல்லா நாகரீகமடைந்த நாடுகளும் பின்பற்றுகின்றன; மதநம்பிக்கை அடிப்படையில் பாகுபடுத்தக்கூடாது என்பதை இது உண்மையில் பெற்றிருக்க வேண்டும். நாம் ஒரு மதச்சார்பற்ற நாடு என்று பெருமையுடன் கூறிக்கொள்கிறோம்; அதனால், நம்முடைய சட்டங்கள் மதநம்பிக்கையைக் கருதாமல் எல்லா இந்தியர்களும் ஒன்று என்பதை இது பின்பற்ற வேண்டும். வருந்தத்தக்கவகையில், அது அப்படி இல்லை.

இந்தக் கருத்தில் இந்த கட்டுரை ஒரே மாதிரியான பொதுச் சட்டம் என்பதைப் பற்றி சிந்திப்பதால் நீங்கள் மன்னிக்க வேண்டும். திருமணம், விவாகரத்து, சொத்துரிமை, சுவீகாரம் என்ற விசயங்களில் எல்லோருக்கும் ஒரேமாதிரியான சட்டம். அது இல்லை. அரசியல் சட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளில் ஒரே மாதிரியான பொதுச்சட்டத்தின் தேவை பற்றி எடுத்துரைத்துள்ளார் என்பதில் அய்யமில்லை. அதைப்பொருட்படுத்தாமல், மதசமூகத்திற்கு ஏற்ப நாம் பல்வேறுவிதமான தனிப்பட்ட சட்டங்களைப் பெற்றுள்ளோம். இதனை பலர் இஸ்லாமியர்களைத் திருப்திப்படுத்தும் வகை என்று விவரிக்க முனைகிறார்கள். அதைப் புரிந்து கொள்வதில் நான் தவறுகிறேன். திருப்திப்படுத்தல் என்றால் மற்றவர்களைவிட மிக அதிகமாக சாதகம் செய்வது அல்லது மற்றவர்களை ஒப்பிடும்போது அதிக உரிமைகள் என்பதாக இருக்க வேண்டும். உண்மையில், மற்ற தங்களை ஒத்த இந்து மற்றும் கிருத்தவ சகோதரிகளுடன் ஒப்பிடும்போது குறைவான உரிமைகள் பெற்றுள்ளார்கள். இது பழமை உணர்வு இஸ்லாமிய ஆண் தலைவர்களை திருப்திப்படுத்துவதாகும்.

மிகப்பெரும்பான்மையான இஸ்லாமிய சமூகத்தினர் துன்புறுகிறார்கள்.

ஆனால் இந்த பிரச்சனை தனிப்பட்ட சட்டங்களுக்கு மட்டும் கட்டுப்பட்டதல்ல. மற்ற சட்டங்களிலும் கூட சமூகம் சார்ந்த மாறுபாடு உள்அமைந்துள்ளது என்பதை கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த சட்டங்களில் பலவும் ஆங்கில காலனி ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டவை. வருந்தத்தக்க வகையில், இன்னும் அதிகமானவை சுதந்திரம் அடைந்ததிலிருந்து இந்திய உயர்நிலை ஆட்சியாளர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக, இந்து கூட்டுக்குடும்ப கொள்கையின்படி இந்துக்கள் வரிச்சலுகைகள் வழங்கப்படுகின்றனர். அத்தகைய சலுகை இஸ்லாமியர்களுக்கும் கிருத்தவர்களுக்கும் இல்லை. வரி விதிப்பு அதிகாரிகளால் காட்டப்படும் இத்தகைய மாறுபாட்டைப்பற்றி பல இஸ்லாமியர்களும் கிருத்தவர்களும் குறை கூறுகிறார்கள். நாடு முழுவதிலும் உள்ள மாநில அரசுகள் அந்தந்தப் பகுதி சமுதாயத்தினரிடமிருந்து இந்து கோயில்களை எடுத்துக்கொள்வதற்கு நடைமுறையில் உள்ள இந்த சட்டங்களைப் பயன் படுத்துகின்றன. ஆச்சரியப்படத்தக்க வகையிலன்றி, இத்தகைய கோயில்களை நிர்வகிக்கும் பல அதிகாரிகளுக்கு எதிராக ஊழல் மற்றும் தவறான நிர்வாகம் பற்றிய கடுமையான குற்றச்சாட்டுகள் அடிக்கடி எழுகின்றன. ஆச்சரியப்படத்தக்கவகையில், அரசு இஸ்லாமிய அல்லது கிருத்தவ மதச்சொத்துக்களை சட்டத்திற்குப் புறம்பானது என்பதால் எடுத்துக்கொள்ள முடியாது. இதன் விளைவாக, இந்த வேறுபாட்டின்காரணமாக பல இந்துக்கள் தங்கள் மதத்தைப் பின்பற்றுவதற்குள்ள தங்கள் உரிமையைப் பற்றி ஆச்சரியப்படுகிறார்கள். கல்வி உரிமைச் சட்டம் மதப்பிரிவு சார்ந்த 93 வது திருத்தத்துடன் வேறுபாட்டிற்கான ஒரு கருவியாகவும் உள்ளது. உதாரணமாக, இந்துக்களால் நடத்தப்படும் பள்ளிகளில் மட்டுமே (இந்துக்கள் அல்லாத பள்ளிகளில் அல்ல) 25 சதவிகித இலவச இடத்தை வலியுறுத்துகிறது. அது அரசால் கொள்கைப்படி ஈடுசெய்யப்பட வேண்டும். நடைமுறையில் இந்த ஈட்டுத்தொகை அடிக்கடி காலதாமதப்படுகிறது அல்லது மறுக்கப்படுகிறது. இதன்காரணமாகவும் இதுபோன்ற பிறகொள்கைகள் காரணமாகவும், இந்துக்களால் நடத்தப்படும் ஆயிரக்கணக்கான பள்ளிகள் மூடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. 93 வது

திருத்தமும் கல்வி உரிமைச் சட்டமும் இணைந்து அட்டவணை இனத்தவர் மற்றும் பழங்குடியினரையும் கூட அவர்களுக்கான ஒதுக்கீட்டையும் பல அரசு உதவிபெறும் சிறுபான்மையினத்தவர் பள்ளிகளில் கட்டுப்படுத்துவதால் வருத்தமுறச் செய்து துன்புறுத்துகிறது. மாற்றுவகையில், சில சிறுபான்மையினரும் மனத்திருப்தி இல்லாமல் இருக்கிறார்கள். கல்வி உரிமை யில் உள்ள வேறுபாட்டின் காரணமாக, மகாராஷ்ட்ராவில் சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகள் ஆசிரியர்களை வழக்கமான ஆசிரியர் தகுதி தேர்வு இல்லாமல் நியமித்துக் கொள்ள முடியும். தகுதிபெறாத ஆசிரியர்களை வாடகை அடிப்படையில் அமர்த்துகிற குற்றச்சாட்டிற்கு இட்டுச் செல்கிறது.

மகாராஷ்ட்டிர மூடநம்பிக்கை எதிர்ப்புச் சட்டத்தை எண்ணிப் பார்ப்போம். இந்த சட்டத்தை நிறைவேற்றும்வகையான 'பகுத்தறிவு சட்டம்' தாழ்ந்த வகுப்பு இந்துக்கள், அஜ்லஃப் அல்லது அர்ஸல் இஸ்லாமியர்கள், தாழ்ந்த வகுப்பு கிருத்தவர்கள் பின்பற்றும் 'மூடநம்பிக்கைகள்' என்பவற்றைக் குறிவைத்தும் தடுத்தும் வருவதான குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்த சட்டம் உயர் வகுப்பு இந்துக்கள், அஸ்ரஃப் இஸ்லாமியர்கள், உயர்வகுப்பு அல்லது வெள்ளைநிற கிருத்தவர்கள் என்பவர்களை அரிதாகவே குறிவைக்கின்றது. உதாரணமாக, அற்புதங்கள் மூலம் வியாதிகளைக் குணப்படுத்துவதாகக் கூறிய ஒரு வெளிப்பாடற்ற கிருத்துவ பாதிரியார் அண்மையில் கைது செய்யப்பட்டார். என்றாலும், இதே செயலைச் செய்தமைக்காக அன்னை தெரசா மிகவும் போற்றப்பட்டார்; உண்மையில், அத்தகைய அற்புதங்கள்தான் உண்மையில் அவரைப் புகழ்நிலைக்குக் கொண்டு சென்றது. இந்த சட்டத்தின் மூலம் இந்தியாவில் அகோரிகள் (சிலரால் வெளி ஜாதி என எண்ணப்பட்டவர்கள்) என்பது ஒன்று மட்டுமே இந்தியாவில் இந்த சட்டத்தின்படி தங்கள் மதநம்பிக்கைகளைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்தைத் தடைசெய்யப்பட்ட மதக்குழுவாகும்.

இத்தகு சட்டங்களின் தாக்கம் பல்வேறுபட்ட சமுதாயங்களின் இடையே தெளிவான வேற்றுமையை உருவாக்குகிறது என்பதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்களால் கற்பனை செய்ய முடிந்தது போலவே, இது சச்சரவுகளுக்கும் சண்டைகளுக்கும் இட்டுச் செல்கிறது. நீதிமன்றங்களால் ஜல்லிக்கட்டு (காளை- சண்டை) தடைசெய்யப்பட்டபோது, பல

தமிழ் இந்துக்கள் ஏன் இஸ்லாமியர்களின் பக்ரீத்தில் தடைசெய்யப்படவில்லை என்று கோபமாகக் கேட்டார்கள். மிருகம் அரிதாக இறப்பதான ஜல்லிக்கட்டை எண்ணிப்பார்க்கும் நீதிமன்றங்கள், மதச்சடங்காக பல மிருகங்கள் வலிகுறைப்பு இன்றி பலியிடப்படுவதை ஏன் கருதிப்பார்க்கவில்லை? அதற்காக சொல்லப்படுவது, இஸ்லாமிய சமூகத்தினர் ஜல்லிக்கட்டைத் தடைசெய்யச் சொல்லவில்லை என்பதாகும். அவர்களை ஏன் குற்றம் சொல்கிறீர்கள்?

இத்தகைய சட்டங்களும் கொள்கைகளும் முதன்முதலாக காலனிய சக்திகளால் சமூகங்களிடையே பிளவுகளையும் உரசல்களையும் ஏற்படுத்த உருவாக்கப்பட்டவை. அதன்பிறகு, உயர்நிலை 'கோராமாய்பாப்' (ஆங்கிலேய அதிகாரிகள்) சண்டையிடும் சமூகங்களுக்கிடையில் 'அமைதித் தரகர்' வேலை செய்வார்கள். அந்த பிரிவினைகளை தங்கள் ஆட்சிக்கு தொடர்ந்து பயன்தரச் செய்வார்கள். வரலாற்று நூல்கள் இதனை பிரித்தாளும் கொள்கை என்று அழைக்கின்றன. ஆங்கிலேயர்கள் இதனைச் செயல்படுத்துவதில் நிபுணர்களாகத் திகழ்ந்தார்கள்.

சுதந்திரத்திற்குப் பிறகான உயர்நிலை ஆட்சியாளர்கள் (சில அரசியல் வாதிகள் மற்றும் கல்வியாளர்கள், தேசிய ஊடகத்திலும் சட்ட சமூகத்திலும் இருந்த சிலர், சில அரசுபதிவிலா ஊழியர்கள் மற்றும் உயர்நிலை ஆட்சியாளர்கள் உள்ளிட்டோர்) இந்த பிரித்தாளும் கொள்கையைத் தொடர்ந்து கடைபிடித்தார்கள். இந்த சுழற்சியை நாம் முறியடிக்க வேண்டியது அவசியம்.

இந்தியர்களை அவர்களுடைய மதநம்பிக்கைகள் அடிப்படையில் வேறுபடுத்தும் ஒவ்வொரு தனிப்பட்ட பிரித்தாளும் சட்ட விதியையும் எதிர்த்து போராடுவதும் அதனை நீக்குவதும் மிகச்சிறந்த வழியாகும். மதநம்பிக்கைகள் அடிப்படையில் சமுதாயங்களை வேறுபடுத்தும் வகையில் பாராளுமன்றம் எந்தவித சட்டமும் இயற்றாமலும், அல்லது நீதிமன்றங்கள் அத்தகைய தீர்ப்புகளை வழங்காமலும் இருக்கும் வகையில் அரசியலமைப்பு சட்ட திருத்தம் கூட இருக்க வேண்டும்.

ஆங்கிலேயர் இந்த மண்ணைவிட்டுச் சென்று ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் ஆகிறது. அவர்கள் நிகழ்த்திய அந்த

விளையாட்டுகளைத் தாண்டி நாம் உயர்ந்தெழுவதற்கு இது சரியான நேரம்.

---

**2016** ஆம் ஆண்டு மே தி டைம்ஸ் ஆஃப் இந்தியா இதழில் முதலில் வெளிவந்தது.

## மன்னியுங்கள்... வரலாற்றை மறக்காதீர்கள்

தங்கள் பெற்றோர்களிடமிருந்து குழந்தைகள் பெற முடிந்த மிகப்பெரிய வெகுமதிகளில் ஒன்று உணர்வுபூர்வ நிலைப்பாடுள்ள குழந்தைப் பருவம் ஆகும். நல்லமுறையில் ஒத்துப்போகிற, மகிழ்ச்சியான குடும்பங்களில் உள்ள வளர்ந்து கொண்டிருப்பவர்களுக்குக் கிடைக்கும் ஆசிர்வாதங்களை பொருளாதார பிடிப்புகளால் ஈடுசெய்ய முடியாது; அது மோதிக்கொள்ளும் பெற்றோர், உள்பகுதி வன்முறை, உடல்ரீதியாக அல்லது உணர்வுரீதியாக உள்ள தீச்சொற்கள் ஆகியவற்றிற்கு உட்படாத குழந்தையாக இருக்கிறது. வருந்தத்தக்கது என்னவெனில், ஆராய்ச்சி, எடுத்துக்காட்டு கதை சான்றுகள் ஆகிய இரண்டும் அதிகமான குழந்தைகள் இத்தகைய ஆசிர்வாதம் இல்லாமல் செயல்பாடற்ற குடும்பங்களில் வளர்கிறார்கள் என்பதை தெரிவிக்கின்றன. அதன்காரணமாக, அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றதாக இருந்தபோதிலும், அவர்கள் அபாயகரமான அனுபவங்களைக் கையாள்வதற்கு காப்பாற்றும் திறமைகளை வளர்த்துக் கொள்கிறார்கள்: சில நேரங்களில் மறுத்தல் (எந்த தவறும் நடக்கவில்லை என்று தங்கள் உள்மனத்தை சமாதானப்படுத்திக்கொண்டு) மற்ற நேரங்களில் குறிவைக்கப்படாத கோபம் (அவர்கள் வெறுத்தக்க அளவுக்கு, குற்றத்திற்கு சம்பந்தப்படாதவற்றின் மேலும் கூட வெறுத்திடும் அளவுக்கு தங்கள் உள்ளங்கள் விஷமாகும் வண்ணம் உள்நிலை கடுஞ்சீற்றத்தை அனுமதித்துக்கொண்டு). இந்த இரண்டு அணுகுமுறைகளும் நல்ல முறைகள் அல்ல என்பதை அறிவதற்கு ஒருவர் ஒரு மனோதத்துவ நிபுணராக இருக்க வேண்டியதில்லை.

இது குழந்தைகளிடம் இருப்பதுபோலவே நாடுகளிடமும் இருக்கின்றது. தாங்கள் திருப்தி அடைந்ததாக 'வரலாறு' இல்லை என்று சிலர் உரிமையோடு கூற முடியும். ஆனால் நாடு வெற்றியில் இருக்கும்போது, கடந்த காலத்தை கருணை உள்ளத்தோடு நோக்குவது எளிதானதாகும். ஒரு நட்புணர்வு திட்டத்திற்காக அண்மையில் அமெரிக்க நாட்டில் பயணம் மேற்கொண்டபோது, ஆங்கிலேய - சாக்ஸன் அமெரிக்கர் மனம்

ஆங்கில காலனி ஆட்சியின் அழுத்தத்தால் பாதிக்கப்படாமல் இருந்தநிலை வெளிப்படையாக இருந்தது (இந்த விஷயத்தில் ஆஃப்ரிக்க - அமெரிக்கர் மனம் மற்றுமொரு வகை). என்றாலும் அரபு உலகத்தில் என்னுடைய பயணம் ஒரு மாறுபட்ட கதை கூறியது. மங்கோலியர், துருக்கியர், ஐரோப்பியர் ஆகியோரது ஆட்சியின்கீழ் நூற்றாண்டுகளாக அடக்குமுறை அட்டூழியங்களாலும் அழுத்திவைத்த நிலையாலும் பட்ட துன்பத்தை அவர்கள் இன்னும் நினைவில் பதிய வைத்துள்ளார்கள். அரபு உலகத்தில் தற்காலத்து 'குறிவைக்கப்படாத கோபத்தின்' வெளிப்பாடு இந்த வரலாற்று குற்றத்தோடும் மற்ற பிரச்சனைகளோடும் வலிமையாக பொருந்துவதை காண முடியும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்..

எனினும் 'மறுப்பு' என்பதன் மனோதத்துவக் கொள்கை இந்தியாவில் ஏறக்குறைய பொருந்தாத சொல் வழக்கைக் காண்கிறது. அதில் பாதிக்கப்பட்டவர் எந்தவித குறைபாடும் (அல்லது குறைந்தபட்சக் குறைபாடும்) தனக்கு நிகழவில்லை என்று தனக்குத்தானே சமாதானம் பெறுகிறார்கள். இதற்கு ஒரு உதாரணம் பெரும்பாலான இந்தியர்கள் ஆங்கிலேய ஆட்சி பற்றிக் கொண்டுள்ள செயல்பாடாகும்.

ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் சில அநீதிகள் இழைக்கப் பட்டிருந்தாலும், ஒட்டுமொத்தத்தில், காலனி ஆட்சி பயனுள்ளதாக இருந்தது என்று பலர் நம்புகிறார்கள். ஆங்கிலேயர் வரும்வரை நாம் 'ஒரே மக்கள்' என்று இல்லாமல் இருந்தது வெளிப்படையாக தெரிந்ததை ஆங்கிலேயர் இந்தியாவை ஒன்றாக்கினார்கள் என்று கூட சிலர் உரிமையுடன் கூறுகிறார்கள். ஆங்கிலேயர் கால அத்துமீறல்களை ஒருவர் பட்டியலிடும்போது, ஆயிரத்துக்கு மேற்பட்ட இந்தியர்கள் இரத்தம் கொட்டக்கொட்ட கொல்லப்பட்டதான ஜாலியன் வாலாபாக் படுகொலை என்று சொல்லப்பட்டதே மிகவும் கொடூரமானது. ஆனால் இதுதான் அவர்கள் செய்ததில் மிகக்கொடியதா? நீண்ட பார்வையில் இது இல்லை. 1940 ஆம் ஆண்டின் ஆரம்பக் காலங்களில், கிழக்கு இந்தியாவில் ஜப்பானியப் படைகள் முன்னேறுவதைத் தடுத்து நிறுத்துவதற்காக, சர்ச்சில் துணிந்து உத்தரவிட்ட, நம்பத்தகுந்த மதிப்பீடு காட்டும் 1.5 முதல் 4 மில்லியன் இந்தியர்கள் கொல்லப்பட்டதான கருகும் பூமி கொள்கை என்பது ஆகும். அதாவது ஹிட்லர் உத்தரவிட்டுக் கொன்ற

யூதர்களின் எண்ணிக்கையை ஏறக்குறைய ஒத்தது. மைக் டேவிஸ் எழுதிய லேட் விக்டோரியன் ஹாலோகாஸ்ட்ஸ் ஆங்கிலேயரின் கொள்கைகளால் கொல்லப்பட்ட மில்லியன் கணக்கிலான அதிக எண்ணிக்கை பற்றிய துன்பகரத் தகவலைக் கொடுக்கிறது. ஆங்கிலேய அரசாட்சிக் கட்டிடம் (மற்றும் வெள்ளை மனிதனின் 'நாகரிக செயல்நோக்கம்') மனித வரலாற்றில் மிகப்பெரிய போதைமருந்துக் கடத்தல் என்பதன்மேல் தான் கட்டப்பட்டது என்பது இந்தியாவில் மிகக்குறைவாக அறியப்பட்ட உண்மையாகும். ஆங்கிலேயர்கள் இந்திய விவசாயிகளை ஓபியம் வளர்ப்பதற்குக் கட்டாயப் படுத்தினார்கள். அது பின்னர் சீனாவிற்குள் கடத்தப்பட்டது. சீனப் பொருளாதாரம் இந்த வணிகத்தின்மூலம் அழிக்கப்பட்டது. மில்லியன் கணக்கான சீனமக்களின் உயிர்களை இதில் சொல்லவில்லை. அதே சமயத்தில், ஓபியம் வளர்ப்பதன்மூலம் (ஆங்கிலேய வணிகத்திற்குத் தேவையான மற்ற பணப்பயிர்களும் சேர்த்து) உணவுப்பயிர்கள் கட்டாயப்படுத்தி நீக்கப்பட்டதால் தொடர்ந்து உணவுப்பற்றாக்குறையும் பஞ்சங்களும் ஏற்பட்டு மில்லியன் கணக்கான இந்தியர்கள் இறந்தனர்.

இந்த சம்பவங்கள் கவனமாக இந்திய வரலாற்றிலிருந்து துடைத்து நீக்கப்பட்டுள்ளன. ஏன்? இந்திய சுதந்திர வரலாற்றில் இந்திய கற்பனைகளால் மிகுதியும் மேம்பட்டு நின்றவர்களான ஆங்கில சார்பு உயர்வகுப்பினர் அவர்களது ஆங்கிலேய 'பண்பாட்டு' முன்னோர்களானவர்களுக்கு காட்டும் வெளிப்படையான விசுவாசத்தை சில ஆர்வமுள்ளவர்கள் குரல் எழுப்பி குற்றம் சாட்டினர். ஆனால் அவைகள் கடுமையானவையும் சாதனை நிறைந்தவைகளுமானவை. நான் ஆங்கிலச் சார்புடைய உயர்வகுப்பினர் பலருடன் கலந்துரையாடினேன். அவர்களுடைய விநோதமான பண்பாட்டை சிலசமயம் புரிந்துகொள்வது எனக்குக் கஷ்டமாக இருந்தது என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அவர்கள் துரோகிகள் அல்ல. அவர்களும் தங்களுக்குரிய தனிப்பட்ட முறையில் இந்தியாவை விரும்புகிறார்கள்; அவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியர்கள் உண்மையையும் 'சமூக அமைதியையும்' நிர்வகிக்க இயலாது என்று நம்பியபோதும், அந்த இழிவான பகுதிகளை வரலாற்றிலிருந்து நீக்குவதன்மூலம்தான் அது முடியும் என்று நினைத்தார்கள். ஆங்கிலேய ஆட்சிக்காலத்தோடு, இத்தகைய பாதுகாப்பு முறைகளான "புகைப்பட சீரமைப்பு" முயற்சிகள்

இடைக்காலத்தில் செய்யப்பட்ட வரலாற்றின் இரத்தம் சிந்திய படையெடுப்பு என்று கருதப்பட்ட கொடூரமான துருக்கிப் படையெடுப்பு போன்ற மற்ற துன்பகரமான வரலாற்று நிகழ்வுகளிலும் செய்யப்பட்டுள்ளன (மேலும் தகவல் அறிய தாரிக்-இ-ஃபெரிஷ்டா வைப் படிக்கவும்).

இந்தியாவின் சில பகுதிகளில் நாம் இப்போது பார்ப்பது போல, வெறுப்பும் கோபமும் ஏற்படுத்தும் அசிங்கத்தில் மறுப்பானது நசுக்கப்பட்ட உண்மையை அறியும் உணர்வுக்கு இட்டுச் செல்கின்றன. நீண்ட காலப்போக்கில் சமூகங்களுக்கு ஒத்துக்கொண்டு, விவாதித்து அதன்பிறகு உண்மையைக் கையாளக் கற்றுக்கொள்வதற்கு இது ஆரோக்கிய மானதாகும். மன்னித்து விடுங்கள், ஆனால் மறந்து விடாதீர்கள். ஆங்கிலேயர்களின் கொள்கைகளால் உருவாக்கப்பட்ட பஞ்சங்கள், அதைப்போலவே ஆங்கிலேயர்களின் மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல் வணிகம் ஆகியவற்றைப் பற்றி நம்முடைய வரலாற்று நூல்கள் உண்மையுடன் விரிவாக எடுத்துரைக்க வேண்டும். இந்திய மாணவர்களுக்கு கொடுமையான கொடூரமான இடைக்கால துருக்கி படையெடுப்பாளர்கள் பற்றியும் உண்மையுடன் வெளிப்படுத்த வேண்டும். ஆனால் வரலாறு தற்காலத்தில் தானாகப் புகுந்து இன்றைய மக்களின் தன்மைகளையும் நிறத்தையும் மாற்றுமாறு ஆகிவிடக்கூடாது. உதாரணமாக, அவர்களின் முன்னோர் செய்த செயல்களுக்காக இன்றைய இங்கிலாந்துடன் நாம் கணக்குத் தீர்க்கத் தேவையில்லை. அதற்கு மேலும், ஆங்கிலேயர்கள் கிருஸ்தவர்கள் என்பதனால் ஆங்கிலேயரின் அத்து மீறல்களுக்காக இந்திய கிருஸ்தவர்களைக் குற்றம் சொல்ல முடியாதது என்றால் வஞ்சகச் செயல் துருக்கியர் அல்லது மொகலாயர்கள் அல்லது பாரசீகர்கள் படையெடுப்புக்காக அவர்கள் இஸ்லாமியர்கள் என்பதால் இந்திய இஸ்லாமியரைக் குறை சொல்ல முடியுமா? நாம் வெளிநாட்டு ஆட்சியாளர்களிடம் பலநூறு ஆண்டுகள் அடிமைகாளாக இருந்தோம். அந்த கொடுமையான வெளிநாட்டவர்களுக்காக நம்முடைய சகோதர இந்தியர்களை குறைகூற வேண்டாம்.

பல நாகரீகங்கள் சில நேரங்களில் பலியானவர்களாகவும் பிற சில சமயங்களில் அடுக்கிவைப்பவர்களாகவும் இருந்திருக்கின்றன. அப்படி இருந்தால் கடந்த கால நடவடிக்கைகளைவிட தற்கால பண்புநலன் மட்டுமே மக்கள்

எப்படி மதிக்கப்படவேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

என்னுடைய முன்மொழிவு: வரலாற்றின் துக்ககரமான பகுதிகளை நியாய உணர்வோடு ஆராய்ந்து அவற்றிலிருந்து பாடம் கற்போம். மன்னியுங்கள், ஆனால் மறந்து விடாதீர்கள். இந்தியாவில் உள்ள சில தீவிரவாதிகளின் இரத்தத்தில் பாயும் விஷத்தை இந்த உண்மை கொன்றுவிடும். மறுப்பு, வரலாற்றுக் குறைபாடுகளுக்கு ஒரு தீர்வல்ல. உண்மைதான் தீர்வாக இருக்கிறது. சத்யமேவ ஜயதே.

---

**2014 ஆம் ஆண்டு நவம்பர் ஹிந்துஸ்தான் டைம்ஸ் இதழில் முதலில் வெளிவந்தது.**

# மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்கும் போராட்டம்

"நாம் இப்போது தவறான பாதையில் போய்க் கொண்டிருக்கிறோம்!" இந்தியாவின் எதிர்காலம் பற்றி திசைமாற்றிப் பேசுபவர்கள் இப்படிக் கூறுவதை அண்மைக் காலங்களில் எவ்வளவு தடவை நாம் கேட்டிருக்கிறோம்? இன்று நம்மிடையே எல்லாவற்றையும் விஞ்சுகிறதான, எல்லாம் குயுக்தியான எதிர்மறைச் சிந்தனைப்போக்கு நிறைந்து காணப்படுகிறது. அவைகள் குறுகிய கால அரசியல் பிரச்சனைகள் என்பதில் சந்தேகமில்லை. மிகுந்த அறிவு பெற்றவர்கள் நிறையவே இத்தகைய விஷயங்களில் என்னால் முடிவதைவிட சிறப்பாக இதைப்பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். ஒரு தேசம் என்ற அடிப்படையில், நம்முடைய அரசியல் பிரச்சனைகளுக்கு நாம் தீர்வுகளைக் கண்டு விடுவோம் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

இந்த கட்டுரையில் நீண்ட கால பிரச்சனைகள் பற்றி நான் கவனம் செலுத்துகிறேன். நாம் வலிந்து ஏற்றுக்கொண்டு திருப்தி அடைகின்ற கூட்டணி முறைதான் இத்தகைய தவறான நிர்வாகத்திற்கு அடிப்படை என்று வருத்தப்படும் நிலை உள்ளது. பகுத்தாய்ந்து பார்க்கும் சிந்தனை மிக்க மக்களிடமும் டெல்லி மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு அதிகாரங்கள் சென்று வற்றிப்போகும் நிலை ஏற்பட்டுள்ளதான கவலை இருக்கிறது. நாம் ஒரு கட்சி ஆட்சிக்காக ஏங்குகிறோம். ஏனென்றால் அப்போது மட்டும்தான் விரும்பும் விளைவுகள் கிடைக்கும் என்று நாம் கருதுகிறோம். இதை நான் ஒத்துக் கொள்கிறேனா? வெளிப்படையாகச் சொல்கிறேன். நான் ஒத்துக்கொள்ளவில்லை,

இந்தியத் துணைக் கண்டத்தில் நம்முடைய நாகரீக வரலாற்றில் இதுவரை எத்தனை சில சக்திவாய்ந்த ஆட்சியாளர்கள் மக்களிடத்தில் தங்கள் முத்திரையைப் பதித்துள்ளார்கள்? அடிக்கடி யாரும் இல்லை. கடந்த 2500 ஆண்டுகளாக நம்முடைய நாட்டின் 50 சதவிகித பகுதிக்குமேல் நிலையான நிலையில் மௌரியர்கள், குப்தர்கள்,

மொகலாயர்கள், மராட்டியர்கள், ஆங்கிலேயர்கள் என்பவர்களுடன் நம் சுதந்திரத்திற்குப் பிந்தைய ஆட்சி என்று எல்லா சக்திமிக்க ஆட்சிகள் ஒட்டுமொத்தமாக 800 ஆண்டுகளுக்கு மேல் இருக்கவில்லை.

இந்தியா உண்மையில் ஒருபோதும் ஒரு நாடாக இருக்கவில்லை ஆங்கிலேயர்கள்தான் நமக்காக அதனை உருவாக்கிக் கொடுத்தார்கள் என்ற குழப்பமான உருவாக்கக்கருத்தை இந்த வரலாற்று உண்மைக்குக் கூறுபவர்கள் இருந்தார்கள். என்னுடைய கருத்துப்படி, இது மோசமான நோய் கொண்ட பார்வை ஆகும். ஏழாம் நூற்றாண்டில் மேற்கத்திய கொள்கையாளர்கள் பல ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ளுமுன்னர் இத்தகைய தேசிய - மாநிலம் என்ற நிலை இருக்கவில்லை. பதினாறாம் நூற்றாண்டில் லண்டன், நீங்கள் இங்கிலாந்துக்கு விசுவாக இருப்பதாகவும் மன்னர் ஜார்ஜ்ஜக்கு அல்ல என்றும் கூறினால் நீங்கள் துரோகி என்று முத்திரை குத்தப்படுவீர்கள். முற்காலத்திலும் இடைக்காலத்திலும் 'நாடுகள்' கலாச்சார அடிப்படையில், நாகரீக அடிப்படையில் அல்லது மரபின அடிப்படையில் இருந்தனவேயன்றி அரசியல் பகுதி அடிப்படையில் இல்லை. பண்பாட்டுப்படி, இந்தியா ஒரே நாடாக அல்லது ஒரே நாகரீகமாக இருந்தது. இருப்பினும் அரசியல் அடிப்படையில் அடிக்கடி பிரிக்கப்பட்டோம்.

அரசியல் அடிப்படையிலான பிரிவு, நமக்கு ஒரு போட்டிமனப்பான்மைக்கான வலிமையைக் கொடுத்தது. ஏனென்றால் செல்வம் உருவாக்குவதற்கான மிகச்சிறந்த கருவியாக அமையும் பல புத்தாக்க உயர்வுகளைத் தோற்றுவித்தது. இந்தியா அதிகமான வரலாறுகளின்படி புத்தாக்க உருவாக்கத்தின் நாற்றங்காலாக விளங்கியது. பூஜ்யத்தின் இருப்பிட மதிப்பு, கர்மா பற்றிய தத்துவ அம்சம், ஆகிய எண்ணற்ற மக்களுக்கு புத்தாக்கத்தை அளித்ததோடு, கட்டிட வடிவமைப்பு, அறுவை சிகிச்சை, கப்பல் கட்டுதல், விவசாய நுட்பங்கள், போன்ற பலவற்றுக்கான செயல்முறை தோற்றத்திற்கு சிறப்புற்றிருந்தது. அதன் உள்ளார்ந்த தன்மையின்படி, புத்தாக்கம் இடையூறு உள்ளதாகவும் புரட்சிகரமானதாகவும் இருக்கிறது. நம்முடைய அரசியல் பிரிவினைகள் விருப்பங்களைத் தேர்ந்தெடுக்க நம்முடைய புத்தாகச் சிந்தனையாளர் களையும், சுயசிந்தனையாளர்களையும் அனுமதித்தது. உங்கள்

கருத்துக்களை பல்லவர்கள் விரும்பவில்லை என்றால் நீங்கள் சோழர்களிடத்தில் செல்ல முடியும். விஜயநகர துளுவர்கள் உங்கள் எண்ணங்களை விரும்பவில்லை என்றால், நீங்கள் பாமினி சுல்தான்களிடம் போய்விடலாம். நாம் பண்பாட்டு அடிப்படையில் ஒரே நாடு என்பதால், பயணம் செய்வது எளிதாக இருந்தது. பரவலாக்கி வைத்ததால் அது புத்தாக்கத்திற்கு உதவியாக அமைந்து நம்மை செல்வந்தர்களாக வைத்திருந்தது.

நாம் எதிர்மறையில் விவாதிக்கலாமா? மத்தியில் அதிகாரம் குவிப்பது, புத்தாக்கத்தை பாதிக்குமா? ஆமாம், பாதிக்கும். இரும்புக் கரத்தோடு சீனாவை ஒரு சீனநாட்டு சக்ரவர்த்தி, அட்மிரல் ஜெங்குக்குப்பிறகு சில பத்தாண்டுகள் திருமண நடவடிக்கைகளுக்குத் தடைவிதித்தார். அவர் பதினைந்தாம் நூற்றாண்டு கடல் பயணங்களில் மாற்று வழிகள் அமைத்துக் கொண்டிருந்தார். சக்ரவர்த்தியின் இந்த புத்தாக்கமற்ற முடிவை எதிர்க்கும் துணிவு எந்த சீனருக்கும் இல்லை. நீண்ட கால பாதிப்பில் சீனர்களின் கப்பல்கள் உலகத்தில் நிறுவவில்லை, அதற்கு மாறாக ஐரோப்பிய கப்பல்கள் நிறுவி விட்டன. இதைப்போலவே அதிகப்படியான அதிகாரக்குவிப்பு நிலையிலிருந்து இந்தியாவிலும் நிறைய உதாரணங்கள் உண்டு, உதாரணமாக சக்ரவர்த்தி அக்பரால் கூடன்பர்க் பிரஸ் மறுக்கப்பட்டது (அதைவிட்டுவிட்டால் அவர் ஒரு மிகச்சிறந்த ஆட்சியாளர்) அல்லது 1950 முதல் 1991 ஆம் ஆண்டுகளில் நம்முடைய தற்கொலை போன்ற பொருளாதாரக் கொள்கை ஆகியவை. அந்த சமயத்தில் இந்தியா அரசியலால் பிரிவு பட்டிருந்தாலும் அல்லது அதிகாரம் பரவலாக்கப்படிருந்தாலும் இத்தகைய துரதிஷ்டவசமான முடிவுகள் எதிர்த்து சவால் இடப்பட்டிருக்கும்.

ஆகவே பரவலாக்கப்பட்ட, குழப்பமான, அரசியல் காரணமாக பிரிவு பட்டிருக்கும் நாடு உண்மையில் புத்தாக்கத்திற்கு நன்மையானதாக இருக்கும். என்றாலும் அரசியலால் பிரிவுபட்டிருக்கும் பிரச்சனை வன்முறைக்கும் கலகத்திற்கும் இட்டுச் செல்லும் அபாயத்தைக் கொண்டது. இந்தியாவின் வரலாற்றில் இத்தகைய நிகழ்வுகள் நடந்துள்ளன. ஆனால் இப்போது, நம்முடைய குடியாட்சி தொடரும் வன்முறை எதுவும் இல்லாமல் இத்தகைய அரசியல் பிரிவினைகளை சமாளிக்கும் வகைமுறைகளைக் கொடுத்துள்ளது. ஆகவே நான் அதிகாரம் மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கூறுகிறேன். மத்திய அரசு கொஞ்சம் வலிமை குறைவாக இருக்கட்டும். சில

மாநிலங்களில் ஏற்படும் வியக்கவக்கும் முன்னேற்றம் ஒரு நிரூபன தாக்கத்தை ஏற்படுத்தி பல்வேறு முதலமைச்சர்களிடையே ஆரோக்கியமான போட்டியை உருவாக்கும். ப்ரேக்அவுட் நேஷன்ஸ் என்ற நூலின் ஆசிரியரான ருசிர் ஷர்மா இந்தியாவைப் பற்றிய எதிர்மறைஎண்ணம் காண தேசியத் தலை நகருக்கும், நேர்மறையான நிலையை உணர விரும்பினால் மாநிலங்களுக்குச் செல்லுங்கள் என்று கூறியுள்ளார்.

வலிமையற்ற கூட்டணி அரசாங்கங்களின் காரணமாக இந்தியாவில் நாம் காணும் வலிந்து அமைத்த அதிகாரப் பரவலாக்குதல் நமக்கு நன்மையானதாக இருக்கிறது. இன்னும் பல அரசியலமைப்பு அதிகாரங்கள் மத்தியில் இருப்பதால் இத்தகைய நிலையை நாம் அரசியலமைப்பு அடிப்படையில் உறுதியாக்க வேண்டும். இது சில விஷயங்களை செய்ய முடியாது, ஆனால் மாநிலங்களை மேலே செல்வதிலிருந்து தடுக்க முடியும். பல விஷயங்கள் மத்தியப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டிய தேவையுள்ளது. மாநிலங்கள் அரசியலமைப்புப்படி வலிமை பெற்று விட்டால், பிராந்திய கட்சிகள் மத்தியிலிருந்து சலுகைக்காக சண்டையிடுவதில் நேரத்தைச் செலவழிப்பதற்குப் பதிலாக தங்கள் மாநிலங்களை நிர்வகிப்பதில் நேரத்தைச் செலவழிப்பார்கள். நம்முடைய நாடு மீண்டும் புத்தாக்கத்தின் விளைநிலமாக ஆகிவிடும்.

புத்தாக்க உருவாக்கத்திறன் சாதாரணத் திறமையுடன் ஒப்பிடும்போது மிகவும் சக்தி மிக்கதாகவும் போட்டியின் நல்விளைவு கொண்டதாகவும் இருக்கிறது. அமெரிக்காவைப்பற்றிக் கேளுங்கள். ஆர்வமூட்டும் வகையில் அமெரிக்க அரசியலமைப்பு மாநில உரிமைகளில் அதிக கவனம் செலுத்தி இணைப்பு அரசை ஒப்பீட்டுநிலையில் வலிமை இல்லாததாக வைத்திருக்கிறது. சமமான அளவுக்கு வியப்பூட்டும் வகையில் இந்தியாவின் நவீன மற்றும் பொற்கால பொருளாதார காலத்தில் (1991க்குப் பிறகு) பாராளுமன்றத்தில் எந்த ஒரு கட்சியும் தனிப்பெரும்பான்மை பெறாதபோது இருந்தநிலை இதனோடு ஒத்திருக்கிறது. தற்செயலான இணைப்பா? நான் அப்படி நினைக்கவில்லை.

கடந்த இருபத்தைந்து ஆண்டு காலத்தில் முதல் முறையாக ஒரு கட்சிப் பெரும்பான்மை என்ற நிலையை உருவாக்கிய 2014

ஆம் ஆண்டு தேர்தல் அதிகாரப் பரவலாக்கப்பட்ட இந்தியா முன்னேற்றத்தின் சரியான வழியா? இல்லை. கடந்த இருபத்தைந்து ஆண்டு காலத்தின் இயற்கையான அதிகாரப் பரவலாக்கல் முறையை வலுப்படுத்துவதற்கு முறையான முயற்சி இருக்கின்றது என்பதைப் பார்க்க மகிழ்ச்சி அடைகிறேன். 14 ஆவது நிதிக்குழுவின் பரிந்துரைகள் ஏற்கப்பட்டுள்ளன. மாநிலங்கள் அதிக நிதி பெறுகின்றன என்பது மட்டுமல்ல, ஆனால் மிகவும் முக்கியமானதாக, அவர்கள் நிதியின்மேல் கட்டுப்பாடு வைத்துள்ளனர். டெல்லியில் வடிவமைக்கப்பட்ட மத்திய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பதிலாக, அவர்கள் தங்கள் முக்கிய முதன்மையை அறிந்து அதற்கு ஏற்ப செலவு செய்ய முடியும். இந்த முறையை முன்னெடுத்துச் செல்வது தேவையானதாகும். நகர நிர்வாகங்களும் கிராம பஞ்சாயத்துகளும் கூட இத்தகைய அதிகாரங்களைப் பெறவேண்டும். மற்ற பல அதிகாரங்கள் (வெளிப்படையாக, பொறுப்புகள்) கூட அதைப்போல பரவலாக்கப்பட வேண்டியது தேவையானதாகும்.

---

**2013 ஆம் ஆண்டு தி ஆசியன் ஏஜ் மற்றும் டெக்கான் க்ரானிகல் இதழ்களில் முதன்முதலில் வெளிவந்தது.**

# சக்தி உங்களோடு இருக்கட்டும்!

முனகல்களும் பெருமூச்சும்! முதியவர்கள் இந்திய இளைஞர்களைப் பற்றியும், அவர்களுக்கு நம்முடைய கலாச்சாரம், மதம், நாடு ஆகியவற்றின்பால் உள்ள அக்கறையில்லாமை குறித்தும் கலந்துரையாடல் திடீர் திசைமாற்றம் பெறும்போதெல்லாம் ஏற்படும் முக்கிய விளைவுதான் இது. முதியவர்களின் பார்வையில், இளைஞர்கள் மேற்கத்திய பண்பாட்டோடு கொண்டுள்ள தலைக்கு மீறிய மோகத்தின் காரணத்தால்தான் இந்திய நிலைப்பாடுகள் குலைந்து போகின்றன என்று தெரிகிறது. நவீனமயம் மற்றும் அதன் பிந்தைய கட்டுப்படுத்த முடியாத பின் விளைவுகளான" மிகுந்த உணர்வு நிலை உண்மையான தொலைக்காட்சி, கடிவாளமில்லாத இணையத் தளம் போன்றவைகளான புயலில் சிக்கிய இலைகளைப்போல நம்முடைய கலாச்சாரம் காற்றில் பறந்து போய்விடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். இது உண்மையானது தானா? நிச்சயம் இல்லை!

உண்மையில் நம்பிக்கை, திறந்த மனத்துடன் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை உள்ளீடாகக் கொண்டுள்ள இந்தியாவின் பழைய கலாச்சாரத்தோடு முதியவர்களில் பலர் தொடர்பு அற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது உண்மை. நான் சில உதாரணங்களைத் தருகிறேன் (உதாரணங்கள் மிகவும் பழையனவாக இருக்கவேண்டியது தேவையானதாகும். ஏனென்றால், கடந்த சில நூற்றாண்டுகளில் இந்தியா தன்னுடைய பழமைவாய்ந்த கலாச்சாரத்தின் உண்மையான சாரத்தை மறந்து விட்டது என்று நான் நினைக்கிறேன்).

சம்ஸ்கிருதம் மாற்றம் செய்யமுடியாத மொழி என்று நம்பப்படுகிறது. அது உண்மை அல்ல. நாம் இப்போது அறிந்திருப்பது இலக்கிய சம்ஸ்கிருதம், பழமையான வடிவத்தில், வேத சம்ஸ்கிருதம் வலுவான கணித உள்கட்டமைப்போடு இலகுத்தன்மையைத் தன்னுள் ஏற்றுக் கொண்டதாக இருந்தது.

பழமையான இந்தியா அகதிகளையும் புலம்பெயர் வோரையும்

உலகெங்கிருந்தும் வரவேற்றது. ஐரோப்பாவின் பல நாடுகளுக்குச் செல்லும் முன்பே கிருஸ்தவ மதம் இந்தியாவிற்கு வந்து விட்டது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான காலத்திற்கு முன்பே யூதர்கள் இந்தியாவின் உதவியைப் பெற்றுவிட்டனர். ஜொராஷ்டியர்கள் பழங்கால குஜராத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். அராபியர்களாலும் போர்த்துக்கீசியர்களாலும் அடிமைகளாகக் கொண்டுவரப்பட்ட சித்தி முஸ்லீம்கள் விலங்குளை உடைத்துத் தப்பிச் சென்று மேற்கு இந்தியாவில் சிறு சிறு அரசாட்சிப் பகுதிகளை உருவாக்கிக் கொண்டனர். துணிச்சலானவர்கள், கெட்டவர்கள், சாதனைபுரிவதும் துன்புறுத்தப்பட்ட வர்களுமானவர்கள் ஆகிய ஆர்வமும் சிறப்பான வாழ்க்கையில் நாட்டமும் உள்ள அனைவரையும் தன்னுள் ஏற்றுக்கொண்டு பழங்கால உலகில் இந்தியா ஒரு அமெரிக்காவாக இருந்தது.

இப்போது உலகம் முழுவதிலும் மக்கள் அமெரிக்க பாணியில் தங்களை அமைத்துக்கொள்வதுபோல, வெளிநாட்டவர்கள் (தென் கிழக்கு ஆசியர்கள்) இந்திய பெயர்களை, வாழ்க்கை முறை மற்றும் பண்பாட்டை அதன் உயிரோட்டத்தன்மையால் கவரப்பட்டு ஏற்றுக்கொண்டனர். அதற்கு மேலும், பழங்கால இந்தியர்கள் மற்ற பண்பாடுகளையும் வெளிப்படையாக ஏற்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் கிரேக்கர்கள் இந்தியாவின் மீது படையெடுத்தபோது அவர்கள் முறியடிக்கப்பட்டு தோல்வி அடையச்செய்திருக்கலாம். ஆனால் இந்தியர்கள் தோல்வியடைந்த கிரேக்கப் படையெடுப்பாளர்களிடமிருந்து அழகான வண்ணமயமான காந்தாரக் கலையைக் கற்றுக் கொண்டார்கள். இந்திய சிற்றுண்டிகளில் மாறுபட்ட கருத்தில்லாமல் சிறந்த ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் புகழ்பெற்ற இட்லி இந்தோனேஷியக் கடற்கரைப் பகுதியிலிருந்து வந்திருக்க வேண்டும்.

நம்முடைய திறந்த மனப்போக்கு உணர்வு பூர்வமான மதம் என்பதிலும் கூட விரிவடைந்து சென்று விட்டது. இராமாயணம் இந்தியாவின் நூற்றுக் கணக்கான பாரம்பரிய புராண வாக்கியங்களைக் கொண்டுள்ளது. இவற்றில் பல ஒன்றுக்கொன்று மிகுந்த அளவில் வேறுபடுகின்றன. சிலவற்றில் இராவணன் முற்றிலும் கொடிய அரக்கனாகச் சொல்லப்பட்ட போதிலும், சிலவற்றில் குற்றம் குறைகள் இருந்தபோதும் திறமைமிக்க மிகப்பெரிய அரசனாகவும் அர்ப்பணிப்புள்ள சிவபக்தனாகவும் காட்டப்படுகிறான். சீதாதேவி சொற்களுக்குக்

கட்டுப்பட்டு நடக்கும் பணிவும் அடக்கமும் கொண்ட பெண்ணாக சில விவரிக்கின்றன, அதேநேரத்தில் வேறு சிவற்றில் கொள்கைத்தீ ஒளிவிடுகின்றவளாகவும் போராட்ட குணம் மிக்கவளாகவும் வர்ணிக்கப்படுகின்றாள். இத்தகைய எல்லா மாறுபட்ட வாக்கியங்கள் கொண்ட இராமாயணங்கள் ஒன்றோடொன்று இணைந்த இணக்கத்தோடு நிலைபெற்று சமநிலையில் விரும்பவும் போற்றவும்பட்டு வருகின்றன.

மிகப்பெரிய இஸ்லாமிய சூஃபி ஞானிகள் இந்துமதத் தத்துவங் களுக்கும், இஸ்லாமிய தத்துவங்களுக்கும் இடையில் ஆழ்ந்த ஒற்றுமை இருப்பதாகக் கண்டனர். டாரா ஷிகோஹ் என்ற மொகலாய இளவரசர் தன்னுடைய தி மிங்க்லிங் ஆஃப் டூ ஓஷன்ஸ் என்ற நூலில் இஸ்லாமிய அபு அர்வாஹ் (எல்லா ஆன்மாக்களின் தந்தை) மற்றும் இந்து பரமாத்மா (உயர்நிலை ஆன்மா) இடையே இருக்கும் வியப்பூட்டும் ஒற்றுமைகளை வெளிப்படுத்திக் காட்டுகிறார். நம்முடைய மிகப்பெரிய சக்ரவர்த்திகளில் ஒருவரான ஜஹன்பனஹ் அக்பர், வழக்கமான "உலகை வெற்றி கொண்டவர்" மட்டுமல்ல ஆனால் அவர் "உலகின் பாதுகாவலர்" என்ற பட்டத்தையும் அடைந்தவராவார். தங்கள் காலத்தில் மிகப்பெரிய சக்திமிக்க ஆட்சியாளர்களாக விளங்கிய மகா மௌரியர்கள், தங்கள் குடும்பத்தில் பலமதத்தைப் பின்பற்றியவர்கள் ஒருங்கிணைந்து வாழ்ந்தனர்; சந்தரகுப்த மௌரியர் ஜைன மதத்தையும் பிந்து சாரர் ஒரு அஜிவிகாவாகவும், அசோகர் புத்தமதத்தையும் கடைப்பிடித்தனர். ராஜராஜ சோழர் அதிதீவிர சைவ இந்துவாக இருந்தபோதும் புத்த விகாரங்கள் கட்டுவதற்கு உதவினார்.

நாம் ஒருகாலத்தில் திறந்த மனத்தோடும், ஆர்வத்துடனும் ஒருவருக்கொருவர் ஒத்துவாழும் சமுதாயமாக இருந்தோம் என்பதனை ஏராளமான சான்றுகள் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாகச் சொன்னால், இதுதான் நம்முடைய வெற்றியின் ரகசியமாய் இருந்தது. மனத்தை நெகிழச்செய்யும் ஒரு வெற்றியாக இருந்தது இது: ஆங்கில பொருளாதார நிபுணர் ஆங்கஸ் மட்டிசன் கூறிய பரவலாகக் குறிப்பிடப்பட்ட கூற்றுப்படி, பதிவான மிக அதிகமான வரலாற்றுச் செய்திகளின்படி உலகிலேயே இந்தியாதான் பணக்காரநிலைப் பொருளாதாரத்தைப் பெற்றிருந்து உலக ஒட்டுமொத்த வருமானத்தில் 25 மற்றும் 33 க்கு இடையிலான சதவிகிதப் பங்களிப்பை வழங்கியுள்ளது. வெஸ்பாசியன் என்ற ரோமப் பேரரசர் இந்தியாவுடனான வாணிபத்தைத் தடை செய்தார்.

ஏனென்றால், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்காக தங்கம் அல்லது வெள்ளி நாணயத்தைக் கொடுக்க நேர்ந்ததால் அவரது சாம்ராஜ்யம் பணத்தாள்கள் பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்தியாவில் பெருமளவில் தங்கச்சுரங்கங்கள் இல்லையென்ற போதிலும், தனிப்பட்ட நபர்களிடம் அதிகமான அளவு தங்கம் குவிந்திருந்தது என்பதில் இந்தியா நன்கு அறியப்பட்டிருந்தது. இந்தியா பெற்றிருந்த தங்க நாணயத்தில் நடைபெற்ற மிகுநிலை வர்த்தகம் இருந்த நூற்றாண்டு வரலாறு இது என்று சில வரலாற்று ஆசிரியர்கள் நம்புகிறார்கள்.

நமக்கு என்ன நேர்ந்தது? ஆயிரக்கணக்கான ஆண்டு நாம் பெற்றிருந்த வியப்பூட்டும் உயர்நிலையிலிருந்து இவ்வளவு தாழ்ந்த நிலைக்கு நாம் எப்படி வந்தோம்? வெளிநாட்டு படையெடுப்பாளர்களான துருக்கியர்களும் ஆங்கிலேயர்களும் இப்படிச் செய்து விட்டனர் என்ற ஒரு பொதுவான பிரபலமான கருத்து இருக்கிறது. அது உண்மையல்ல. அவர்கள் நம்மை அழிக்கவில்லை. நாம் நம்மையே அழித்துக் கொண்டுவிட்டோம்.

நாம் யார் என்பதையே மறந்து விட்ட காரணத்தால், நம்முடைய கவர்ந்திழுக்கும் பழம்பெருமையை இழந்து விட்டோம். நாம் நம்முடைய உயர்நிலை மிக்க அடிப்படைப் பண்பாட்டை மறந்துவிட்டோம். நம்பிக்கையூட்டும் நம் வெளிப்படைத் தன்மையை இழந்து விட்டோம். வெளிநாட்டுப் பயணத்தைத் தடைசெய்யும் "காலா-பானி" என்ற கொள்கை அம்சம் இந்துக்களின் ஆழ்மனத்தில் உள்நுழைந்து விட்டது; பழங்காலத்தில் கடல்பயணிகளாகவும், கடல்வணிகர்களாகவும் உருவாகி இருந்த மக்களுக்கு வருந்தத்தக்க வகையில் இப்படி நேர்ந்துவிட்டது. தன்உறுதியுடன் கூடியநிலையில் பல்வேறு மதங்களும் கலாச்சாரங்களும் ஒன்று கலந்து இருந்த நிலை இப்போது பாதுகாப்பற்ற, தனக்கேயுரிமை என்ற எண்ணத்திற்கு வழிவிட்டு விட்டது. இந்திய மதத்திடம் அறிவியல் ஒருபோதும் மாறுபட்டு இல்லாத நிலையிலும் கூட அறிவியல் மனப்பான்மை சீரழிந்து விட்டது. ஜப்பானைப் போல் இல்லாமல், நாம் மேற்கத்திய உலகின் மிகப்பெரிய தொழில் முன்னேற்றங்களில் முதலீடு செய்யவில்லை. மெதுவாக ஆனால் உறுதியாக, தொடர்ந்தது என்னவென்றால் அது சீரான வீழ்ச்சிதான். இதையும் தாண்டி, ஆங்கிலேய ஆட்சியின் தொடக்க காலத்தில் இந்தியா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடாக விளங்கியது. ஆனால் தனிநபர் வருமான அடிப்படையில் நாம்

ஏற்கனவே வேகமாக முன்னேறும் ஐரோப்பாவைவிட பின்னிலையில் இருக்கிறோம்.

நம்முடைய பழைய வெற்றிகளின் மிகுதியான கதைகளால் மறைக்கப்பட்டதான உண்மையை நம் விளிம்புநிலை அழிவை ஆங்கிலேயர்கள்தான் வெளிப்படுத்திக் காட்டினார்கள். 100,000 எண்ணிக்கையிலிருந்த ஆங்கிலேயர் மட்டுமே 300 மில்லியன் அளவிலான இந்தியர்களை ஏறக்குறைய 200 ஆண்டுகள் அழுத்திக் கொண்டிருந்தார்கள். இது ஒரு சாதாரண படையெடுப்பு வெற்றி மட்டுமில்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இது மனிதவரலாற்றில் இணையில்லாத ஒரு அவமானம். ஆங்கிலேயர்கள் சார்பாக இந்தியாவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த இந்தியர்களின் ஒருபிரிவினரால்தான் இது நடந்தது. ஜாலியன்வாலாபாக்கில் பாதுகாப்பற்ற இந்தியர்களை சுடுவதற்கு ஜெனரல் டைர் உத்தரவு பிறப்பித்திருக்கலாம். ஆனால் மக்களை சுட்டவர்கள் நம்முடைய சக இந்தியர்களே.

இந்திய மண்ணில் இரண்டு வகையான சிந்தனை மறந்த குழுக்கள் அண்மைக்காலத்தில் உருவாகி உள்ளனர்: அவர்கள் இந்திய மறுப்பாளர்கள் மற்றும் இந்தியப் பெருமையாளர்கள். நான் இந்த கருத்தில் தக்க நிலையைப் பெற இந்த விஷயத்தை சுருக்கமாகக்கூற அனுமதிக்கவும். இந்திய மறுப்பாளர்கள் நம்முடைய பழமை நிலையை மறுக்கிறார்கள். அவர்கள் தங்கள் இந்தியப் பாரம்பரியத்தை மறுத்து வெளிநாட்டு மதிப்பீடுகளையும் தாக்கங்களையும் வற்புறுத்துகிற வாழ்க்கை அர்த்தமற்றதென் எண்ணும் மனப்பான்மை கொண்ட மக்கள். உதாரணமாக: ஆங்கிலமோகம் கொண்டவர்கள் மற்றும் மார்க்ஸியவாதிகள். இந்தியாவின் கடந்தகால பழமையில் மதிப்புமிக்கதாக எதுவும் இல்லை (அல்லது மிகச்சிறிய அளவே உள்ளது) என்ற நம்பிக்கையை மேற்கொண்டு அவர்கள் இதனைத் தேர்ந்தெடுத்ததுபோல் தெரிகிறது. இந்திய மறுப்பாளர்களின் இத்தகைய வாதங்கள் இந்தியப் பெருமையாளர்கள் உதாரணமாக மதவாத தீவிரமானவர்களால் மறுக்கப்பட்டது. இந்த இந்தியப் பெருமையாளர்கள் இந்தியாவின் பழமையான அனைத்தும் முற்றிலும் சரியானவை என்றும் மூலாதாரமானவை மற்றும் எப்போதும் கேள்விகேட்க முடியாத தன்மை மிக்கவை என்றும் மிகக்குறைந்த அளவுக்கே மறுபரிசீலனைக்கு உட்பட்டவை என்றும் திருப்தி அடைந்தார்கள். வெளிநாட்டு மண்ணிலிருந்து தெரிந்து

கொள்வதற்கோ பின்பற்றுவதற்கோ அதிகமாக எதுவும் இல்லை என்பதையும் அவர்கள் கண்டார்கள்.

இந்திய மறுப்பாளர்களும் இந்தியப் பெருமையாளர்களுமாகிய இந்த இரண்டு குழுவினருமே இந்தியாவுக்கோ அல்லது இந்தியத் துணைக் கண்டத்திற்கேகூடத் தேவையானவர்கள் இல்லை. சுதந்திரத்திற்குப் பிந்திய நாற்பது ஆண்டுகளில் இந்திய மேன்மக்களில் பெரும்பாலானோர் இந்திய மறுப்பாளர்களாக இருந்தனர். நம்முடைய தேசத்தில் அவர்கள் எத்தகைய பொருளாதார குழப்பநிலையையும் அறிவார்ந்த செயலின்மையையும் ஏற்படுத்தினார்கள் என்பதை நாம் கண்டுள்ளோம். மற்றொரு பக்கத்தில் பாகிஸ்தான் இப்போது மதத்தீவிரவாதிகளின் பிடியில் சிக்கித் தவிக்கிறது. ஒருநாட்டை அசிங்கமாக்குவதிலிருந்து கடவுள் காப்பாற்றுகிறார். பழங்கால இந்திய கலாச்சாரம் இந்த இரண்டு தீவிரவாத குழுக்களையும் மறுத்திருக்க வேண்டும்.

முந்தைய தலைமுறைக்கு தீவிரமான மாற்றமாக, இன்றைய இளைஞர்கள் என் மனத்திற்கு நம்பிக்கை ஊட்டுகிறார்கள். அது ஏன் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்: ஏனென்றால் கடந்தகாலத்தில் இந்தியர் பின்பற்றிய வலியுறுத்திக் கூறத்தக்கதான தன்னம்பிக்கையுடைய வெளிப்படையான தன்மையை அவர்கள் வெளிக்காட்டுகிறார்கள். அவர்கள் இப்படி இருப்பதற்குப் பெருமைப் படுகிறார்கள். ஆனால் விட்டுவிட்ட பாரம்பரியநிலைகளின் சில அம்சங்களை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு விரும்புகிறார்கள். உதாரணமாக, என்னுடைய பெரும்பாலான இளம் வாசகர்கள் என்னுடைய நூல்களின் அட்டையில் என்னுடைய சாதித்துணைப்பெயரைப் பயன்படுத்தாமலிருப்பதைப் பற்றிப் பாராட்டு கிறார்கள். ஆனால் சிவபெருமானின் மகிமைகளை அதிகமாகத் தெரிந்து கொள்வதில் ஆர்முடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பண்பாட்டைப்பற்றிப் பெருமையுடன் இருக்கிறார்கள். ஆனால் அதைப்போலவே மற்றவர்களின் பண்பாடுகளையும் வெளிப்படுத்து கிறார்கள். உதாரணமாக ஒரு இஸ்லாமிய இளைஞர் தான் ஒரு இஸ்லாமியனாக இருப்பதில் பெருமைப் படுவதாக என்னிடம் கூறினார். ஆனால் ஹர ஹர மகாதேவ் என்பதில் கூட ஈர்க்கப்படுவதாகவும் கூறினார்; ஒரு இந்து இளைஞர் தான் பக்திமிக்க இந்துவாக இருந்தபோதிலும் அடிக்கடி 'இன்ஷா அல்லாஹ்' சொல்வதாக எழுதினார். இன்றைய இளைஞர்கள் மேற்கத்திய நாடுகளிலிருந்து கற்றுக்

கொள்வதற்கு ஆர்வமாக இருக்கிறார்கள், ஆனால் இந்தியராக இருப்பதில் அவர்கள் எந்த வகையிலும் தயக்கம் கொள்வதில்லை. உதாரணம் எம். டி.வி அது தன்னை இந்தியநிலைக்கு ஏற்ப தகவமைத்ததால்தான் மட்டுமே நிலைத்திருக்கிறது. வெகுஜன நன்மைக்காக பிரிவு சாராத பிரச்சனைகளில் ஒன்றுபடுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஊழல் என்ற பிரச்சனை மிகுதியான உறுதியான ஆனால் கட்டுக்குள் வைக்கக்கூடிய நிலையை உருவாக்கியதைப் பாருங்கள். பல்வேறு நிலைகளில் தேடிப்படிக்கும் பழக்கத்தில் தங்கள் பெற்றோர்கள் எப்போதும் இருந்ததைவிட மிகவும் சிறந்து விளங்குகிறார்கள். கால் சென்டர்கள் முதல் மத தத்துவங்கள் வரையுள்ள பொருள்களில் உள்ள நூல்களை அவர்கள் பெருமளவில் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாகவும் வெற்றி தருவனவாகவும் உள்ளன. அண்மையில் வெளியான அதிக விற்பனை நூல்களின் ஆசிரியர் வரிசையில் இந்தியர்களே உள்ளனர். ஆனால் இளைஞர்கள் திறந்த மனத்துடன் இருக்கிறார்கள். பௌலோ கோயல்ஹோ போன்ற வெளிநாட்டினர் தத்துவங்களோடு வந்தபோது அவை அவர்களைக் கவர்ந்தன. அவர்கள் அவற்றையும் ஏற்றுக் கொண்டார்கள்.

இன்றைய இளைஞர்கள் பெருந்தன்மைகொண்ட காலத்தின் குழந்தைகள். அவர்கள் வயதுவந்தநிலையில் நம்மை ஒருநாள் பெருமைப் பட வைப்பார்கள். இந்தியாவை மீண்டும் மிகப்பெரிய தேசமாக ஆக்குவார்கள். எளிதில் வெற்றிகொள்ள முடியாத கண்முன்னே இருக்கும் சவால்களை எதிர்நோக்கி உள்ளோம். சரியான அணுகுமுறைச் செயல்பாட்டோடு அவற்றையெல்லாம் தகர்த்திடுவோம்!

அவுட் லுக் இதழ் இளைஞர்களுக்கு அறிவுரைச் செய்தி வழங்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டது. நான் அதற்குத் தகுதியானவன்தானா என்பதில் நான் உறுதியாக இல்லை. ஆனால் ஊக்கமூட்டும் சொற்களைப் பகிர்ந்து கொள்ள முடியும். இது என்னுடைய இளம் வயதிலிருந்து வெளிப்பட்ட அழியாத சொற்கள் ஆகும்; இது இன்றுவரை நினைவில் நிற்கும் ஸ்டார் வார்ஸ் என்ற திரைப்படத்திலிருந்து பெற்றது: இயக்க சக்தி உங்களோடு இருக்கட்டும்! உண்மையில், இதனை நாம் இந்திய முறையில் சிறிது மாற்ற முடியும். சக்தி உங்களோடு இருக்கட்டும்!

---

**2011 ஆம் ஆண்டு அவுட் லுக் இதழில் முதலில் வெளிவந்தது.**

# வேதங்கள் கற்றல்

இந்த உலகாயப்பார்வையில் அமைந்த படைப்புகளைப் படிப்பதில் ஏற்படும் தூண்டுதலை மட்டும் நாம் தடுத்துக் கொள்வது புத்திசாலித்தனமாகும். எல்லாவித கருத்துக்களுக்கும் நம்முடைய மனத்தைத் திறந்து வைப்பது அறிவை மேம்படுத்தும். இல்லையென்றால் நாம் ஒரு 'எதிரொலி அறையில்' அடைபட்டு நம்மைநாமே முன்னிறுத்தப்படும் இந்த சமுதாயப் பிரிவினைகளில் உட்பட்டு அரிஸ்டாடிலின் தனித்த நடுநிலை என்ற விதிப்படி உருவான நாடகத்தில் வரும் நிலைக்கு இட்டுச் சென்று விடுவோம்.

பகுத்தாய்வுச் சிந்தனைக்கு வாய்ப்பளிக்காமல் மிகவும் அரசியலாக்கப்பட்டு பேசப்படும் அத்தகைய விஷயங்களில் ஒன்று வேதிய அறிவியல், கணிதம், பெருந்தன்மை தத்துவங்கள், இலக்கியம், அரசியல், நீதிநெறி தத்துவம் போன்ற வேதம் பற்றிய அறிவுக்கான ஆய்வாகும். ஆர்வமிக்கவகையில், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் இப்பொருள்கள் பற்றிய துறைகளுக்கான முழுவசதிபெற்ற கட்டமைப்புகளைப் பெற்றுள்ளன. ஆனால் அவற்றுள் இயற்கைகடந்த புரிந்துணர்தல் நுழைக்கப்பட்டுள்ளன. இந்தியப் பல்கலைக் கழகங்களில் உள்ள இத்துறைகள் வருந்ததக்க அளவில் குறைந்த ஊழியர்களையும் குறைவான ஆதார வசதிகளையும் கொண்டுள்ளன.

கட்டுரைகளும் வாய்ப்பேச்சுகளும் வழங்கும் கருத்துக்கள் வேதிய கல்வியின் கடுமையான எச்சரிக்கைகளை வெளியிடுகின்றன; இது 'காவிமயமாக்கலுக்கு' இட்டுச் சென்றுவிடும் என்பதுதான் அந்த பயம். இந்த 'வலதுசாரி வேதங்கள் பற்றிய தற்பெருமை கூட்டும் திட்டமானது தீவிரநிலைக்கும் வெறுப்புக்கும் இட்டுச் சென்றுவிடும்: வீழ்ச்சிக்குமுன் தற்பெருமை வரும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்' என்று ஒரு நேர்மையான நண்பர் கூறினார்.

வேத கல்வியை வெறும் 'வலதுசாரி திட்டம்' என்ற நிலைக்குக் குறைத்துவிட்டால், அது நம்முடைய கடந்த காலத்தின் அறிவுச்

செல்வத்தை நாம் பெறுவதில் குறைகிறோம் என்ற குறை ஏற்படும். நம்முடைய வேத பாரம்பரியம் 'வலது சாரி இந்துக்களுக்கு' மட்டும் என்று ஒதுக்கப்பட்டதல்ல; இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் சொந்தமானது. துணைக் கண்டத்தில் உள்ள அதிகமான மக்கள் பாரம்பரிய வட இந்திய மற்றும் பாரம்பரிய தென்னிந்திய மரபு இணைந்த குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்று மரபின ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. இந்த குழுக்கள் துணைக்கண்டத்தை 6000 ஆண்டுகள், அதற்கு மேலாக இல்லாவிட்டாலும், ஒன்றோடொன்று இணைந்து கடந்த பழங்காலங்களில் வாழ்விடமாக்கியுள்ளனர்.

வட இந்தியர்கள் மற்றும் தென்னிந்தியர்கள் இடையே பிரபலமாக உள்ள 'இன பாகுபாடுகள்' நம்பிக்கை என்பதற்கு மாற்றமாக, வட இந்தியர்களில் சில விகிதத்தில் பாரம்பரிய தென்னிந்திய மரபுகளும், தென்னிந்தியர்களில் சில விகிதத்தில் பாரம்பரிய வட இந்திய மரபுகளும் அவர்கள் மரபுவழியில் உள்ளன. அது எதைக்குறிக்கிறதென்றால், இந்தியத் துணைக்கண்டத்தில் இன்று இருக்கின்ற ஏறக்குறைய எல்லாக்குழுக்களும் பழமையான வேதகால மக்களில் இருந்து வந்தவர்கள் என்பதைத்தான். மதங்கள், மொழிகள், ஜாதிகள் ஏன் தேசிய எல்லைகள் என்பதிலும் இது உண்மையாகிறது. எந்த ஒரு தனிக்குழுவும் வேத அறிவில் தனிப்பட்ட உரிமை கொண்டாட முடியாது; இது துணைக் கண்டத்தின் பாரம்பரியம். அதைப் படிப்பது என்பது 'வலது சாரி' திட்டமல்ல. இது நம் எல்லோருக்கும் உரியது.

'தற்பெருமை' என்ற பிரச்சனை பற்றிப் பேசுவோம். வேத வாழ்க்கைபற்றி ஆய்வது நமக்குள்ளே தற்பெருமை உருவாக்கும் என்ற எண்ணம் உள்ளது. இது பொருத்தமானது அல்ல, மிகவும் ஆபத்தானது. அதற்கு மாறாக நாம் எதிர்காலத்தின்மீது கவனம் செலுத்த வேண்டும். உண்மையில் நாம் பழமை பற்றியவற்றை மனத்தில் நிறைத்துவைத்து எதிர்காலத்தைக் கைவிடுவது முதிர்ச்சி இல்லாத தன்மையாகும். என்றாலும், நாம் மறுமுனைக்கு ஊசலாடிச் செல்வதால் கடந்த கால பழமையை முற்றிலும் மறந்து விடவேண்டுமா? இதையெல்லாம் அடக்கிய எதிர்மறைத் தன்மையா தற்பெருமை என்பது?

அழிவுக்கு முன்னே தற்பெருமை வருகிறது என்று கூறப்படுகிறது. ஆனால் தொடக்கமாக உயரவில்லை என்றால்

ஒருவரால் விழுவது இயலாது; அல்லது அறியாத அச்ச உணர்வால் தாழ்த்துவதும் முடியாது. தற்பெருமை அடைவதில் பல படித்தரங்கள் உள்ளன. அது வெற்றிக்கு உதவக்கூடிய தன்னம்பிக்கை மற்றும் சுயமரியாதையில் தொடங்குகிறது. காலப்போக்கில் இது தற்பெருமையாக மாறலாம். நீங்கள் வீழும்போது வருந்தத்தக்கதாகவும் ஏன் அறியாமையாகவும் மாறுகிறது.

வெற்றியடைவதில் சுய மரியாதை வகிக்கும் பங்கை எல்லா தலைவர்களும் நாடுகளும் அறிந்து வைத்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் சமூகத்தைப் பற்றியும் கடந்த காலத்தைப் பற்றியும் புராணங்களை உருவாக்குகிறார்கள். பலசமயங்களில் இந்த புராணங்கள் அறிந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு அமைவதில்லை. என்றாலும், இவற்றை மக்கள் நம்புகின்றவரை, தன்னம்பிக்கையில் சக்தி பெற்று சமுதாயம் முன்னேறிச் செல்கிறது. அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தின் ஆங்க்லோ சாக்ஸன்கள் தாங்கள் வேறுவகை இனக்குழுவாக இருந்தபோதும் கிரேக்க புராணக்கதைகளை உரிமைகொண்டு கலந்து விட்டனர். அவர்கள் கலாச்சாரத்திலும் வேறுபட்டவர்கள். ஏனென்றால் பழங்கால கிரேக்கர்கள் கிருஸ்துவர்கள் அல்ல, ஆனால் வேறுபட்ட 'பகன்'கள்.

ஆரிய படையெடுப்புக் கொள்கை (இது ஒரு கற்பனைக்கதை என்று இப்போது பலரால் நம்பப்படுகிறது) இதே எண்ணத்துடன் ஜெர்மானியர்களாலும் ஆங்கிலேயர்களாலும் முன்வைக்கப்பட்டது. ஜெர்மானியர்கள் மிகப்பெரிய கடந்தகாலத்தில் உரிமை கொண்டாடி தங்கள் வேதவழி என்ற நிலையை கடுமையாக வலியுறுத்தினர். அவர்கள் ரோமானிய பாரம்பரியத்தில் உரிமை கொண்டாட முடியாது; ஏனென்றால் ஜெர்மானியர்கள் ரோமப்பேரரசை அழித்தனர் என்பதை வரலாறு பதிந்து வைத்துள்ளது. ஆரிய புராணம் ஆங்கிலேயர்க்கும் தங்கள் காலனி ஆதிக்கத்தில் இருந்த அடிமை இந்தியர்களுக்கு எதிராக அதேபோல பயன்படுத்த உதவியது. அவர்கள் தங்கள் மிகப்பெரிய சாதனையாக நினைக்கும் வேதமுறை வாழ்க்கை உண்மையில் படையெடுத்த 'வெள்ளையர்' வழங்கிய நன்கொடை என்று திருப்தியடையச் செய்வது அவர்களை அடக்குவதற்கு மனோதத்துவ அடிப்படையிலான சக்திமிக்க வழியாக அமைந்தது. அழிந்தபோன தற்பெருமை நாட்டு மக்களிடம் பிரபலமாகப் பயன்படுத்தப்பட்டது.

தற்பெருமை நன்மை தருவது. எல்லா பெரிய நாடுகளும் இதனை அறிந்துள்ளன. நம்முடைய நிலையில், நமக்குள்ளே தற்பெருமையை ஏற்படுத்துவதற்கு கற்பனைக்கதைகளைப் பயன்படுத்தத்தேவையில்லை. வேதகால மக்கள் நம் முன்னோர்கள். அவர்களின் சாதனைகளிலும் அவர்கள் விட்டுச் சென்ற பரந்த அறிவுச் செல்வத்தை அடைவதிலும் நியாயமான தற்பெருமை நாம் கொள்ள வேண்டும். தற்பெருமையைத் தொடரும் கொடுமை என்ற அச்சத்தைப் பொறுத்தவரையில், அந்த எதிர்பாராத அபாயங்களை நம்முடைய வளமான பொக்கிஷக் குவியலின் சிறப்பான தன்மைகளைக் கொண்டு தடுத்துவிட முடியும். ஒருங்கிணைந்த ஒற்றுமை மற்றும் ஒன்றுபட்ட தன்மை போன்ற அம்சங்கள் மற்றவர்களை வெறுக்கும் போக்கிலிருந்தும் அது இட்டுச்செல்லும் அக்கிரமத்திலிருந்தும் நம்முடைய நன்மைக்காக நம்மைக் காத்துக் கொள்வதற்கு கற்றுக் கொடுக்கிறது. ஆனால் இப்போதைக்கு, நம்முடைய தற்பெருமையை உருவாக்கிக் கொள்வது முக்கியமானதாகும்; ஏனென்றால் நம்முடைய நாட்டை நிர்மாணிப்பதற்கு அது சக்தியாக இருக்கிறது.

நம்முடைய வேதகால முன்னோர்கள் படைத்தவற்றைக் கற்போம். நம்முடைய பழமையைக் கட்டுக்குள் வைத்து, தன்னம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்கி, மீண்டும் ஒரு பெரிய, உண்மையில் பெருந்தன்மை மிக்க, வளமான, நீதியில் சிறந்த சமுதாயத்தை உருவாக்குவோம்.

---

**2014** ஆம் ஆண்டு செப்டம்பர் மாத டைம்ஸ் ஆஃப் இந்தியா இதழில் முதலில் வெளிவந்தது.

# வஜித் அலி ஷா: நுண்கலைத்திறனாளர்

சந்தேகமில்லாமல் ஆங்கில ஆட்சி நமக்கு உணரமுடியாத மற்றும் உணரக்கூடிய பல சொத்துக்களை, நான் என் கருத்துக்களை இங்கு முன்வைக்கும் குறிப்படத்தக்க மொழி உள்ளிட்டவற்றை, விட்டுச் சென்றிருக்கிறது. அதற்கு மாறாக, அது பல துன்பம்தரத்தக்க அபாயங்களை கொடுத்திருக்கிறது என்பதையும் கூட ஒருவர் ஒத்துக்கொள்ள வேண்டும். அளவீடுகள் மாறுபடுகிறது, ஆனால் ஆங்கில ஆட்சியாளர்களால் மற்றவர்களைப் பற்றி எண்ணியே பார்க்காமல் உருவாக்கப்பட்ட பஞ்சத்தினால் நாற்பது முதல் அறுபது மில்லியன் இந்தியர்கள் இறந்துள்ளார்கள்; ஒப்பிட்டுப் பார்த்தால் ஆங்கில ஆட்சிக் காலத்திற்குமுன் பஞ்சம் என்பது அரிதாகவே இருந்திருப்பதை வரலாறு பதிவு செய்துள்ளது.

பஞ்சம் விட்டுப் பின்னோக்கிப் போயிருக்கலாம், ஆனால் காலனியாதிக்கத்தின் மற்ற தொடரும் துன்பங்களின் விளைவுகள் நம்மைத் தொடர்ந்து துன்புறுத்துகிறது. 'மக்களை அழிப்பதற்கு மிகவும் சக்திவாய்ந்த வழி அவர்களின் வரலாற்றை அவர்கள் அறிந்திருப்பதற்கு மறுப்பதும் முற்றிலும் அழித்துவிடுவதும் ஆகும்' என்று ஜார்ஜ் ஆர்வெல் கூறியுள்ளார். வருந்தத்தக்க வகையில், காலனியாதிக்க வரலாற்று நிலைப்பாடுகள் சுதந்திரத்திற்கு முந்திய பல இந்திய வரலாற்று ஆசிரியர்கள் கருத்தூட்ட கல்வியினால் நிலைத்திருக்கிறது. கற்பனையான 'ஆரிய படையெடுப்பு கொள்கை' அல்லது ஏஐடி என்பதைப்பற்றி நான் இந்த நூலில் (108-116 பக்கம் பார்க்க) எழுதியுள்ளேன்.

இந்த கட்டுரையில், இந்திய பாரம்பரிய இசையில் மிகுந்த திறமையுடைய என்னுடைய மைத்துனர் ஹிமாஸ்ய மூலம் என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஒரு விஷயத்தைப் பற்றி நான் சிறப்பான கவனத்துடன் விவரிக்கிறேன். ஆங்கிலேயர் காலத்து நவாப் வஜித் அலி ஷா உருவாக்கிய ஒரு சிறப்பம்சத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வருந்தத்தக்க வகையில், நம்மில் பலர் (லக்னோவைச் சேர்ந்தவர்களைத்தவிர) இந்த அவாத்தின் முஸ்லீம் அரசரை மறந்து போயிருக்கிறோம்

அல்லது அவர் ஒரு ஆடம்பரவாதி என்றும் பெண்போன்ற தனித்துவ உடையணியும் விந்தையானவர் என்ற ஆங்கிலேயர்களின் எண்ணத்தைக் கொண்டிருக்கிறோம். இது இந்தியாவின் மிகப்பெரிய மைந்தரை கூச்சசமடையச் செய்யும் துன்பமான செயலாகும். பல்வேறு காரணங்களால் மொகலாயர் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதிகளில் வட இந்தியாவில் பழமையான இந்திய நிகழ்த்துக் கலைகள் பெருமளவில் அழிந்து விட்டன. தொடர்ந்து வந்த ஆங்கில ஆட்சியின் கடுமையான வரி விதிப்பும் கலாச்சார கொள்கைகளும் இந்த அழிவை வேகப்படுத்தின.

சாம வேதத்தில் குறிப்பிடப்பட்ட ஹிந்துஸ்தானி மற்றும் கர்னாடக சங்கீதத்தின் அடிப்படை பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பின்னோக்கிய காலத்தைச் சேர்ந்தது. பழங்காலத்து உருவாக்கமான ராகங்களின் கட்டமைப்பு பாரசீக அடிப்படையிலும் கணிதத்தின் இணைப்பிலும் உள்ளது. என்றாலும், இந்த அகலமான கட்டமைப்பில் மிகப்பெரிய சோதனைகள் அனுமதிக்கப்பட்டன. ஒரே ராகம் பல்வேறுபட்ட கலைஞர்களால் பாடப்படும்போது மாறுபாடுகளைக் காட்டுகிறது. வியக்கத்தக்க வகையில் பல்வேறு கால கட்டத்தில் பல்வேறு வகையில் ஒரே கலைஞர் ராகத்தைப் பிரதிபலிக்கிறார். இந்திய நுண்ணிய இசை ஆகவே ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் தனித்திருக்கிறது. குரு - சிஷ்ய பரம்பரை (ஆசிரியர்- மாணவர் பரம்பரை) இந்த வழிமுறையை உயிர்ப்புடனும் துடிப்புடனும் வைத்திருப்பதில் முக்கியமான அம்சமாகும். அந்தச் சமயத்தில் ஆதரிக்கும் புரவலர்கள் இல்லாத நிலையால் இது வருந்தத்தக்க வகையில் மறைந்து விட்டது.

இந்த பாரம்பரியம் வாழ்வுக்குப் போராடிக் கொண்டிருந்தபோது, அந்த நவாப் மிக அதிக அளவிலான பெருந்தன்மையால் அதனை மறுபரிசீலனை செய்தார். அவர் மிகச்சிறந்த போர்வீரராக இல்லாமல் இருக்கலாம். ஆனால் எல்லா அரசர்களும் போர்க்களம் சென்று தங்கள் மதிப்பைத் தேடியதில்லை. அவர்களில் பலர் தங்கள் நாட்டின் கலாச்சார மகிமையை சிறப்பிக்க பங்களித்ததன் மூலம் பெருமை அடைந்திருக்கிறார்கள். நிகழ்த்துக் கலைஞர்கள், இசை வல்லுநர்கள், நாடகாசிரியர்கள், கவிஞர்கள், நடனக்கலைஞர்கள் ஆகியவர்களுக்கு வஜித் அலி ஷா மிகப்பெரும் அளவில் பொருள் கொடுத்தார். அவர்கள்

பிரகாசமான அவரது தலைநகர் லக்னோவுக்குப் பெருமளவில் வந்து குவிந்தனர். பல அழிவுநிலை கரனாக்கள் (இசை முறை உருவான 'குடும்பங்கள் அல்லது இடங்கள்) மறுபரிசீலனை பெற்றன. மிகநெருக்கமான கலைநுணுக்கக் கலப்பினால் புதிய ராகங்களும் அதைப்போல புத்தாக்க சொல்லாக்கங்களும் உருவாக்கப்பட்டன. அதிகமாக பகவான் கிருஷ்ணரைக் கவர்ந்த புதிய வடிவமான தும்ரி நவாப் அரண்மனையில் உருவான புத்தாக்கம், உஸ்தாத் பாசித்கான், ப்யார்கான், ஜாஃபர்கான் போன்ற மிகப்பெரிய கலைஞர்கள் அந்த மிகப்பெரிய ஆட்சியாளரின் அரவணைப்பில் உருவானவர்கள். இந்திய கவர்ச்சி மிகு நடனமான கதக் அவருடைய மிகப்பெரிய அளவிலான புரவலரான தன்மையில் துர்கா ப்ரசாத்ஜி மற்றும் தாகுர் பிரசாத்ஜி ஆகிய கலைஞர்களால் புனரமைப்பு செய்யப்பட்டது.

வஜித் அலி ஷா தானே ஒரு மிகச்சிறந்த கலைத்திறமையுள்ளவராக விளங்கினார். கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள் என்று நாற்பது நூல்களை எழுதியுள்ளார். ஜோகி மற்றும் ஜுஹி போன்ற பல புதிய ராகங்களை அவர் உருவாக்கினார். தன்னுடைய பருத்த இடுப்பையும் தாண்டி அவர் ஒரு சிறந்த நடனக்கலைஞர் என்று சொல்லப்படுகிறது.

வரலாற்று ஆசிரியர் ஜி.டி.பட்னாகர் எழுதியவற்றைப் படித்து நாம் ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட கதைகளான அவர் 'பாலியல் நேர்மையற்றவர் என்றும் மதுவுக்கு அடிமையானவர் என்றும் சொல்வது உண்மையல்ல என்பதை அறியலாம். அது அவாத் என்ற அப்போது வளமாக விளங்கிய பகுதியைக் கைக்கொள்வதற்காக ஆங்கிலேயர்களால் பரப்பப்பட்ட வதந்தியாகும். வஜித் அலி ஷா ஒரு பக்திமிக்க இஸ்லாமியர். அவர் இந்துக்களின் கடவுளான பகவான் கிருஷ்ணரை மதித்தார். அவர் கிருஷ்ண ரச லீலை பற்றிய நாடகங்களை எழுதி பல சமயங்களில் தானே அவற்றில் நடித்துள்ளார். அவர் தந்தையின் வீட்டைவிட்டுப் பிரிந்து செல்லும் ஒரு மணப்பெண்ணின் கண்ணீர் மல்கப் பிரியும் நிலையைப் பாடலாக பபுல் மோரா நைஹர் என்ற பெயரில் எழுதினார். வரலாறு திரும்பி இந்த பாடல் அவர் பொருள்வளமிக்க லக்னோவை விட்டுப் பிரிந்து போனநிலையை குறிப்பாக உணர்த்தியது.

ஆங்கில ஆட்சிப் பிரதிநிதியான ஜெனரல் ஸ்லீமன் வஜித் அலி

ஷாவின் புகழைக்குறைப்பதற்கு முக்கியப் பங்கு வகித்தபோதிலும், வரலாற்று ஆசிரியர்கள் அவருடைய அறிவார்ந்த நிர்வாகச்சிறப்புகள் சிலவற்றைப் பதிவு செய்துள்ளனர். ஆங்கிலேய ஆட்சியாளர்கள் ஆடம்பரச்செலவு செய்தார் என்று குற்றம் சுமத்தியபோதும் தேவையில்லாத பொருளாதார சரிவை ஏற்படுத்தினார் என்றும் கூறினாலும் நவாப் தனிப்பட்டவர்களிடம் கடனோ காலனி ஆதிக்கத்தினரிடம் நிலுவைகொடுக்க உதவியோ பெறவில்லை என்று ஜி.டி. பட்னாகர் குறிப்பிட்டுள்ளார். அவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டபோது எந்தவித நிலுவைத்தொகையோ கடனோ விட்டுச் செல்லவில்லை. அவாத் உண்மையில் மிகச்சிறந்த புகழ்பெற்ற வளம்நிறைந்த அரசாட்சிப் பகுதியாக இருந்தது. அதனால்தான் ஆங்கிலேயர் இதனை 'அரசியின் ஆட்சிப் பகுதி' என்று இணைத்துக் கொண்டனர்.

இப்பொழுது சொல்லுங்கள், மிகவும் இன்னல்நிறைந்த காலங்களில் நம்முடைய கலைகளை உயிர்ப்புடன் காப்பாற்றி வைத்த குறிப்பிடத்தக்க செயலுக்காக நாம் இந்தியாவின் மிகச்சிறந்த மகனை நினைவில் வைத்திருக்க வேண்டுமா, வேண்டாமா?

நான் என்ன செய்யப்போகிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? நான் சுற்றவிட்டு மாங்கான் ராகத்தை மீண்டும் கேட்பேன். என்னுடைய கடவுள் சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த ராகத்தின் சிறப்பை உணர்ந்து கேட்பேன். பல காலத்துக்குமுன் மறந்துவிட்ட, தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட லக்னோவின் இஸ்லாமியரை, நம்முடைய பாரம்பரியச் சிறப்பின் அழகை இன்னலுற்ற வேளையில் கட்டிக்காத்து உயிர்ப்பித்ததில் குறிப்பிடத்தக்க பங்காற்றியவரை நான் நன்றி கூறி நினைக்கிறேன்.

---

**2016 ஆம் ஆண்டு மார்ச் மாத தி டைம்ஸ் ஆஃப் இந்தியா இதழில் முதலில் வெளிவந்தது.**

# எங்கு பேச்சு பயமின்றி இருக்கிறதோ...

மிக முக்கியமான அந்த நள்ளிரவு வேளையில் பண்டித ஜவஹர்லால் நேரு வழங்கிய 'நீண்ட காலம் ஒடுக்கப்பட்டிருந்த தேசத்தின் ஆன்மா பேசுகிறபொழுது' என்ற சொற்கள் இந்தியர்களின் மனங்களில் முத்திரையாகப் பதிந்துவிட்டது. அந்த மதிப்புமிக்க வேளையில் ஒவ்வொரு இந்தியனின் இதயமும் தங்களின் அன்புமிக்க இந்தியா சிறகை விரித்து வானத்தில் பறக்க வேண்டும் என்று விரும்பி இருக்க வேண்டும். இன்று நான் வியப்படைவதெல்லாம், அந்த சிறகுகள் தவறான திசையில் பறப்பதற்குப் பயன்படுத்தப் பட்டிருந்தால் என்னவாகி இருக்கும் என்பதுதான்? அது நம்முடைய ஒன்றிய கலாச்சாரத்திற்கு ஏற்ப அமையவில்லை என்றால் என்னவாகும்? நம்முடைய சுதந்திரத்திற்குப் பிந்தைய வரலாற்றில் நாம் அத்தகையதொரு துரதிஷ்டவசமான திருப்பத்தைச் செய்து விட்டோம்.

நம்மிடையே உள்ள சுதந்திரம் விரும்பும் பெருந்தன்மையாளர்கள் 1951 ஆம் ஆண்டு மே மாதம் பத்தாம் நாளன்று ஏற்பட்ட வருத்தப்படத்தக்க திருப்பத்தைப் பற்றி நினைத்துப்பார்த்து வெட்கத்தால் தலைகுனிய வேண்டும். அன்றுதான் பண்டித ஜவஹர்லால் நேரு இந்திய அரசியல் சட்டத்தின் முதலாவது திருத்தத்தை எடுத்து வைத்தார் (அது அடுத்த சில வாரங்களில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டுவிட்டது). நம்முடைய அடிப்படை உரிமைகளில் உள்ள மற்ற கட்டுப்பாடுகளோடு, இது பேச்சுரிமையையும் கூட கட்டுப்படுத்தியது.

1950 ஆம் ஆண்டில் 'ரோமேஷ் தாப்பர் என்பவருக்கும் மெட்ராஸ் மாகாணத்திற்கும் நடைபெற்ற வழக்கில்' உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்காரணமாக இது அமைந்தது என்று நம்பப்படுகிறது. இதன்மூலம் ரோமேஷ் தாப்பரின் பத்திரிகைக்கு (க்ராஸ்ரோட்ஸ் என்ற மார்க்ஸிஸ்ட் பத்திரிகை) இருந்த தடை நீக்கப்பட்டது. இதன்விளைவாக பல வழக்கறிஞர்கள் உச்ச நீதி மன்றம் நம்முடைய மூலமான அரசிலமைப்புக்கு ஏற்ப தடையே இல்லாத கருத்துச் சுதந்திரத்திற்கு வழிவகுத்து விட்டதென்று கருத்துத்

தெரிவித்தார்கள்; அமெரிக்க நாட்டில் இருப்பது போன்றும் உண்மையில் அந்த சமயத்தில் ஐரோப்பாவில் இருந்ததைவிட மிகவும் சிறந்ததாகவும் அது இருந்தது. சட்டம் பற்றிய தெளிந்த அறிவுள்ளவர்களும் கூட தடையில்லாத கருத்துச் சுதந்திரம் அடிப்படை உரிமை என்று உறுதிபடுத்தப்பட்டால், ஆங்கில அரசால் பல நூல்களைத் தடைசெய்வதற்கு ஏதுவான கடுமையான இந்தியக் குற்றவியல் சட்டப்பிரிவு 295 (a) செல்லுபடியாததாகிவிடும் என்று கருதினார்கள்.

நேருவின் அரசு இந்த முதல் திருத்தத்தை ஏன் நிறைவேற்றியது? பிரதமர் நேருவை விமர்சிக்கின்றவர்கள் அவர் தன்னை சிறப்பான பெருந்தன்மை உள்ளவர் (எல்லாருக்குமான அரசியல் மற்றும் பொருளாதார சுதந்திரத்தைக் காப்பவர் என்று வர்ணிக்கப்படுபவர்) இல்லை என்பதை காட்டிவிடுகிறார் என்றனர். பிரதமரின் ஆதரவாளர்கள் சுதந்திரம் பெற்ற முதல் சில ஆண்டுகள் ஒற்றுமை என்ற நோக்கத்தை உறுதி செய்வதற்கு இதனைச் செய்யவேண்டும் என்று கூறுவார்கள். நாட்டின் ஒழுங்கு நிலை என்ற பெரிய நோக்கத்திற்காக இத்தகைய சில சுதந்திரங்கள் சிறிய விலையாகக் கொடுக்க வேண்டியவை. இந்த பிரச்சனையில் வரலாற்று அறிஞர்கள் சொல்லும் தீர்ப்பை எடுத்துக் கூறுகிறேன்.

அந்தச் சமயத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் பற்றி மட்டும் நான் பணிவுடன் எடுத்துக் கூறுகிறேன். அது கருத்துச் சுதந்திரம் பற்றிய என்னுடைய நம்பிக்கையால் கவனத்தில் கொள்ளப்பட்டது. இது வெறும் பெருந்தன்மை மட்டுமல்ல, ஆனால் பெருமைப்படத்தக்க, ஆயிரமான ஆண்டுகள் முந்திய பாரம்பரிய கொள்கைமிக்க சுதந்திரம் என்பதும் கூட ஒரு கலாச்சாரத்தின் பரம்பரை என்பதைப் போலத்தான் உள்ளது.

கருத்துச் சுதந்திரம் என்பது வெளிப்படையாகச் சொன்னால் இந்திய மதிப்பீட்டை மிகுதியாகக் கொண்டது; நாட்டிய சாஸ்திரத்தில் பிரம்மதேவர் இதனை வலிமையாக எதிர்த்துள்ளார். பழங்கால இந்தியா உருவாக்குவதற்குச் சுதந்திரம் கொடுத்து இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணங்கள் தோன்ற ஊக்கம் கொடுத்தது; சில ஆச்சாரம் இல்லாமல் இருந்தபோதிலும் எல்லா வாக்கியங்களும் போற்றப்பட்டன. சர்வாகர்கள் இருந்ததுபோல, கடவுள் நம்பிக்கையற்றவர்களும் பழங்கால இந்தியாவில் இருந்தனர். அவர்களை யாரும் தத்துவங்களைப் படிப்பதை விட்டும்

வெளியேற்ற முடியாது. அவர்களை யாரும் 'கடவுள் மறுப்பாளர்கள்' என்பதால் தீமைதரும் வன்முறைக்காகத் தனிமைப் படுத்தவும் முடியாது. சாதாரண சடங்குகளை விட்டு விலகி ஒருவர் 'அகோரிகள்' சடங்கான பாலியலைப் பின்பற்ற முடியும். நவீன இந்தியாவில் இருப்பது போலல்லாமல், அவர்களுடைய செயல்முறைகள் மற்றவர்களைப் பாதிக்காத வரையில் ஒருவரும் அதனைத் தடை செய்ய முடியாது. ஒவ்வொருவரும் ரிக் வேதத்தில் சொல்லியிருக்கும் "ஏகம் சத் விப்ர பஹுவடோ வடன்டி" சொல்கின்ற கருத்தை உள்வைத்து அவரவர் உண்மைக்குப் பயிற்சிக்கிறார்கள். உண்மை என்பது ஒன்றே, ஆனால் அறிவாளிகள் அதனை பலவாகப் பேசுகிறார்கள் (அல்லது அறிகிறார்கள்).

மற்றவர் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டால் அல்லது நேரடியான வன்முறைக்கு அது அழைக்குமென்றால் கருத்துச் சுதந்திரத்தின்மேல் இரண்டு கட்டுப்பாடுகளை விதிக்குமாறு நான் கேட்பேன். நாகரிகமடைந்த சமுதாயத்தில் மற்ற எந்த நிலையிலும் முழுமையான தடையில்லாத கருத்துச் சுதந்திரம் அனுமதிக்கப்பட வேண்டும். தடை செய்யப்பட்ட எல்லா நூல்களுக்கும் தடையை விலக்கவேண்டும். ஒவ்வொரு விவாதமும், அது துன்பம்தரத்தக்கதானாலும் அல்லது 'குற்றமானதாகவே' இருந்தாலும்கூட, கருத்து வெளியிட அனுமதிக்க வேண்டும். இந்தச் சூழலில், சிக்மண்ட் ஃப்ராய்ட் சரியாகச் சொன்ன வார்த்தைகளைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். ஒரு கல்லடியைக் காட்டிலும் ஒரு அவமானத்தால் துன்புற்ற முதல் மனிதன்தான் நாகரீகத்தைத் தோற்றுவித்தவர் ஆவார்.

நம்மைப் பெருந்தன்மையாளர்களாகவும், பெருமிதம் மிக்க இந்தியர்களாகவும் கருதி இருக்கும் நாம் அனைவரும் இந்த முதல் திருத்தத்தை விலக்குமாறு கேட்க வேண்டும். அதற்கு மேலும், நாம் கருத்துச் சுதந்திரத்தைப்பற்றி வேஷதாரிகளாக மேற்கத்தியர்களைப்போல இருக்கக்கூடாது. மேற்கத்திய பார்வையில் இருக்கின்ற கடுமையான நெறிகளை ஒடுக்கும்போக்கு வரக்கூடாது. அது வன்முறையாக இல்லாவிட்டாலும், பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்கத் தடை விதிப்பது அல்லது அவர்களின் படைப்புகளை வெளியிடாமல் இருப்பது போன்றவையாகும். உதாரணமாக, அயான் ஹிர்ஸி அலியின் வாயை அடைத்ததும் அவரை சாதி விலக்கு செய்ததும்

ஆகும். நான் குமாரி அலி சொல்வதில் பெரும்பாலானவற்றை ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் கருத்துக்கள் மிகுந்த துன்பம் தருபவையாக இருந்த போதிலும் நேரடியான வன்முறைக்கு அழைக்கவில்லை என்றால், பேசும் உரிமையை நாம் பாதுகாக்க வேண்டும்.

கருத்துகள் தடையின்றி வெளிவருவதை நிறுத்துவது இந்தியாவின் இயற்கையான கலாச்சாரத்திற்கும் பாரம்பரியத்திற்கும் எதிரானது. தடையில்லாத கருத்துச் சுதந்திரத்தைக் கோருவதால், நாம் எந்த வகையிலும் மேற்கத்தியர்களைப்' போல ஆக மாட்டோம். உண்மையில் நாம் சிறந்த இந்தியராக இருக்கிறோம்.

இன்னும் மேலாக, நம்முடைய முன்னோர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே பெருந்தன்மையும் நாகரீகமும் உள்ள சமுதாயத்திற்கு கருத்துச் சுதந்திரம் அடிப்படை என்பதை அறிந்திருந்தார்கள். ரிக் வேதம் கூறுவதுபோல "பேச்சில் ஆசிர்வதிக்கப்பட்ட புகழ் இருக்கும்போது அது லட்சுமி தேவியால் ஆசிர்வாதம் பெற்றிருக்கும்."

---

**2014** ஆம் ஆண்டு நவம்பர் மாத தி டைம்ஸ் ஆஃப் இந்தியா இதழில் முதலில் வெளிவந்தது.

# ஒரு அமைதியான புரட்சிக்காரன்

நேர்மையாகச் சொல்ல வேண்டும் என்றால், என்னுடைய பின்னணியில் இருந்து வந்து ஒரு வெற்றி பெற்ற நூலாசிரியரைப்போல உங்களிடம் பேசிக்கொண்டிருப்பது நம்பமுடியாத ஒன்று. தொடக்கமாக, இந்தியாவில் ஆங்கில மொழியில் எழுதி நூல் வெளியீட்டுத்துறையில் நுழைவதற்கு 'நான் அந்த தகுதியோடு பிறக்கவில்லை.' இது ஏன்? இந்திய சமுதாயத்தில் உயர்குடிமக்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் அளவுக்கான மேல்வகுப்புப் பின்னணியிலிருந்து நான் வரவில்லை. அதற்கு மேலும், நான் என்னுடைய பெற்றோர்களிடம் ஹிந்தியில்தான் பேசினேன். பேசிக்கொண்டிருக்கிறேன். ஆகவே, இந்திய மேல்தட்டு மக்களை நினைக்கும்போது, எனக்கு ஆங்கில மொழித்திறமையில் தடங்கல்களுடன் நான் ஒரு ஹிந்தி ஆங்கிலம் கலந்த கலவையாகவே நினைக்கிறேன். இந்திய ஆங்கிலமொழி நூல் வெளியீட்டுத் துறைக்கானதாக என்னுடைய உயர்கல்வி சரியானதாக அமையவில்லை. நான் கணிதத்தில் பட்டமும் ஐஐஎம் கொல்கத்தாவில் வணிகமேலாண்மையும் முடித்து அதன் பிறகு வங்கியாளனாக வந்தேன். உலகத்தின் பல வங்கியாளர்கள் இருக்கிறார்கள்; ஏன் இந்த அரங்கத்திலேயே கூட இருக்கிறார்கள். கணிதப் பட்டமும் வணிகமேலாண்மைப் படிப்பும் குறைவான கல்வித் தகுதிகள் அல்ல. அல்லது குறிப்பாகச் சொன்னால், வங்கித்துறைக்கு ஒருபோதும் குறைவான தகுதியல்ல. ஆனால் ஆங்கில மொழி நூல் வெளியீட்டுத்துறைக்கு ஒருவேளை தகுதியானதல்ல. இன்றும் கூட எம்பிஏ படித்தவர்கள் கலைத்துறைக்குத் தொடர்பில்லாத அவர்கள் புதிதாக வருபவர்களாகக் கருதப்படுகிறார்கள். அதற்கு மேலும், நான் ஒரு நூலாசிரியராக வந்திருக்க முடியாது என்பதற்கான காரணம் எனக்கு எழுத்துத்துறையில் முன் அனுபவமோ பயிற்சியோ இல்லை. இம்மார்டல்ஸ் ஆஃப் மெலுஹா வுக்குமுன் நான் எந்தவித புனைகதையும் எழுதவில்லை. என்னுடைய கல்லூரிக் காலத்தில் சில கவிதைகள் கிறுக்கியிருக்கிறேன். ஆனால் அவை பயிற்சிநிலை முயற்சிகள்தான். அவற்றை விரும்பிய ஒரேநபர் அந்த காலத்தில் என் பெண் நண்பராக இருந்த என் மனைவிதான். ஆகையால்,

ஒரு எழுத்தாளராவதற்கு சரியான பின்னணி, கல்வித்தகுதி அல்லது அனுபவம் எதையும் நான் பெற்றிருக்கவில்லை. இந்த வெற்றிக்கு நான் பாராட்டைக் கோர முடியும். ஆனால் அது நேர்மையாகப் பார்த்தால் பொய்யாகத்தான் இருக்கும். இது உங்களில் பலருக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் சிவபெருமானின் அருள் கடாட்சம் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் அவர்தான் சரியான இடத்தில் சரியான நேரத்தில் நான் இருப்பதை உறுதி செய்தார்.

இன்று இந்தியாவில் ஒரு புரட்சிகர சூழல் இருக்கிறது. வெளியாளாக இருக்கின்றவர் கதவைத் தட்டி வரவேற்பைப் பெறுகிறார். நான் உண்மையிலேயே வெளியாளரான கடவுளைப் பற்றி நூல் எழுதிய அதிர்ஷ்டசாலி வெளியாளாக ஆகிவிட்டேன். புரட்சியாளர்களின் கடவுள். கீழ்நிலையாளர்களுக்கு ஆதரவான கடவுள் சிவபெருமான். ஆகையால் வெளிப்படையாகச் சொன்னால் நான் இந்த புரட்சிச்சூழ்நிலையின் அதிர்ஷ்டம் பெற்றவனாகவும், இப்போது நாட்டில் இருக்கும் மேல்வர்க்கத்தின்மேல் கோபமும் உள்ளவனாகவும் இருக்கிறேன். ஆகவே நான் இந்த புரட்சிகர சூழ்நிலைக்கு ஆதரவாளனாக இருக்க வேண்டும். சரிதானா? நான் ஆம் என்று சொல்ல வேண்டும். ஒரு புரட்சியாளனாகத் தொடர்ந்து செல்ல வேண்டும். ஒருகாரணமில்லாத புரட்சியாளனாக இருக்கவும்.

ஆனால் இங்கே சற்று மாறுபட்ட ஒன்றைச் சொல்லப் போகிறேன் - அது இந்த புரட்சி எண்ணத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொள்வது தேவை என்பதாக இருக்கலாம். நாம் இந்தியர்கள் என்பதை நான் அறிவேன், நாம் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். 'அமைதியாக இருப்பது' என்பதை நாம் பின்பற்ற மாட்டோம். ஆனால் நாம் அதைக் கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டும். அதனை நான் ஏன் முன்வைக்கிறேன்? கோபம் சில நன்மைகளைக் கொண்டுள்ளதுதான். ஆனால் அந்த நேரங்களில் நாம் அமைதி என்ற எண்ணத்தைப் பயன்படுத்தாவிட்டால், உண்மையான பிரச்சனைகளில் நம்முடைய கவனம் சிதைந்து போய்விடும். முடிவாக, நாம் நம்முடைய கோபத்தை கோபப்பட வேண்டாதவற்றில் செலுத்தி விடக்கூடும். இப்போது இந்தியாவில் நம்மைக் கோபமடையச் செய்து கொண்டிருக்கும் மூன்று முக்கிய பிரச்சனைகள் மூலம் நான் விளக்குகிறேன்.

முதலாவது இலஞ்சம். கலாச்சார அடிப்படையிலேயே நாம்

இலஞ்சத்தை உள்வைத்திருக்கிறோம் என்று சிலர் கருத்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சாதாரணமாகச் சொல்வது என்னவென்றால், கடவுள் நமக்கு ஆசிர்வாதம் வழங்குவதற்கும் நம்முடைய வேண்டுகோள்களை நிறைவேற்றுவதற்கும் நாம் கடவுளுக்குக்கூட இலஞ்சம் கொடுக்கிறோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே நாம் அடிப்படையில் ஒரு இலஞ்சக் கலாச்சாரத்தைப் பெற்றிருக்கிறோம் என்றும் இதனை ஒன்றும் செய்ய முடியாது என்றும் சொல்லப்படுகிறது. இந்தியாவில் இந்த பிரச்சனை பற்றி அதிகமான கோபம் உள்ளது. சரிதானா? நம்முடைய இந்த முன்னேற்ற நிலையில் நாம் மற்றவர்களிடமிருந்து அதிகமான வேறுபாட்டில் இல்லை என்ற கருத்தை இத்தருணத்தில் நான் சொல்ல விரும்புகிறேன். அநேகமாக ஒவ்வொரு நாடும் மிகுந்த அளவிலான விருப்பமில்லாத இத்தகைய சூழலை ஏதாவது ஒரு நேரத்தில் சந்தித்திருக்கிறது. இங்கிலாந்து பதினெட்டு மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலும், அமெரிக்கா பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளிலும், சீனா இன்றைய நிலையிலும் சந்திக்கின்றன. ஆர்வமூட்டும் வகையில், இத்தகைய அதிகப்படியான இலஞ்ச ஊழல் பொருளாதார வளர்ச்சியில் ஏற்படும் கழுத்தை நெறிக்கும் ஆரம்ப அழுத்தத்தைப் பின்தொடர்கிறது. இந்த நாடுகள் காலப்போக்கில் இலஞ்சப் பிரச்சனையை சமாளித்து ஒரு நியாமான அளவுக்குக் கொண்டு வந்து விட்டன. சீனா நம்மைவிட முன்னால் இருந்த போதிலும் சீனா பயணத்தைத் தொடர்கிறது. இது எதைக் குறிக்கின்றதென்றால், அதைப்போல நாமும் செய்ய முடியும் என்பதைத்தான். நாம் இப்போது சந்தித்து வருகின்ற வேகமான பொருளாதார வளர்ச்சியின் ஒரு பகுதியாக இது இருக்கலாம். உதாரணமாக, தொலைத்தொடர்பு ஊழல் முன்னுள்ள காலத்தில் நடைபெறவில்லை; ஏனென்றால் நாம் அப்போது ஏழையாக இருந்தபோது அலைக்கற்றை எந்தவித மதிப்பும் பெற்றிருக்கவில்லை. அபரிமிதமான தொலைத்தொடர்பு வளர்ச்சி இந்த வாய்ப்பைத் தொடங்கிவிட்டது. இந்த ஊழலில் ஈடுபட்ட குற்றவாளிகளை சட்டத்தின் மூலம் தண்டிக்க வேண்டும். இலஞ்சத்திற்கு இன்னும் பல பிற உதாரணங்கள் உள்ளன. இவற்றிலிருந்து நாம் விடுபட வேண்டும் என்றால், சட்டத்தின் சரியான முறைகளை நாம் கடைபிடிக்க வேண்டும். இருந்தபோதிலும், அதிகப்படியான கோபம் கும்பலானவர்களின் ஆசைகளால் ஊக்குவிக்கப்பட்டு உண்மையில் நம்முடைய நாட்டுக்குத் தீமையில் கொண்டு போய்விடும்.

இலஞ்சத்தை ஒழிப்பது என்பது மிகவும் முக்கியமானது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் வேகமான பொருளாதார வளர்ச்சி அதைவிடவும் முக்கியமானது என்பதை நாமெல்லோரும் ஒத்துக் கொள்வோம் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். இந்தியாவில் உள்ள இளைஞர் பட்டாளத்திற்கு நாம் போதுமான வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும். அவர்களுக்கு நாம் வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கவில்லை என்றால், நம்முடைய மக்கள்தொகை இலாபமே வெகு விரைவிலேயே மக்கள்தொகை சாபமாகி வன்முறையிலும் குழப்பத்திலும் கொண்டு சேர்த்துவிடும். ஆகவே நாம் இலஞ்சத்தை எதிர்க்க வேண்டும். ஆனால் நம்முடைய பொருளாதாரத்தை தடம்புரளச் செய்யக்கூடிய கும்பல் நீதி என்ற உணர்வோடு அல்ல.

நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரும் இரண்டாவது பிரச்சனை சாதிய வன்முறையாகும். இது நம் அனைவரையும் துன்பத்திற் குள்ளாக்குவதாகும். இந்த சந்தர்ப்பத்தில், 'இனப்படுகொலை' என்ற வார்த்தை சிறிது எச்சரிக்கையுடன் எல்லா இடங்களிலும் பயன்படுத்தப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். கடந்த ஐம்பது ஆண்டுகளில் இந்தியாவில் அறுபது பெரிய மத வன்முறைகள் (ஐந்து நபர்களுக்குமேல் கொல்லப்பட்ட நிகழ்வுகள்) நடந்துள்ளன. இவற்றில் ஐந்து ஆயிரம் பேருக்கு அதிகமாகக் கொல்லப்பட்ட மிகப்பெரிய வன்முறை நிகழ்வுகள் ஆகும். நான் மீண்டும் சொல்கிறேன் ஒரு சிறு உயிரழப்புகூட மத வன்முறையால் ஏற்படுவதை ஒத்துக் கொள்ள முடியாது. இத்தகைய கலகங்கள் நடக்காமல் தடுப்பதற்கு நம்முடைய காவல்துறையும் பொது நிர்வாக அமைப்புகளும் வற்புறுத்தப்பட வேண்டுமா? இருக்கலாம். குற்றவாளிகள் உடனே நீதியின் முன் நிறுத்தப்படுவதற்கு நம்முடைய நீதித்துறையும் நீதி மன்றங்களும் மேம்படுத்தப்பட வேண்டுமா? ஆம் மிகவும் நிச்சயமாக. ஆனால் நாம் தாமதப்படுத்தி அமைதியாக சிந்தித்தால் இந்த கலவரங்களில் எதையாவது இனப்படுகொலை என்பதாகக் கொள்ள முடியுமா? வெளிப்படையாகச் சொன்னால், இல்லை. இனப்படுகொலை என்பது மில்லியன் கணக்கில் அல்லது இலட்சக் கணக்கிலும்கூட கொல்லப்படுவதைக் குறிக்கும். இந்தியாவில் நிகழும் இயற்கைக்கு மாறான இறப்புகளின் காரணத்தை ஆராய்ந்தால் மத வன்முறை உண்மையில் மிகமிக குறைவான அளவேயாகும். சந்தேகமே இல்லை, நாம் மத வன்முறை என்ற இந்தப் பிரச்சனை நேரடியாக தடுக்கப்பட வேண்டும். ஆனால்

நம்முடைய பொது சமுதாயத்தில் இதனை ஊக்குவிக்கிற கோபமான அளவு சரியானதுதானா? மத சகிப்பின்மை மனித இனத்தை முழுமையும் எதிர்கொண்டுள்ள பிரச்சனை; அதற்குத் தீர்வு காண வேண்டும். ஆனால் மத வன்முறை விரும்புபவர்கள் இந்தியாவை அழித்துவிட இயலும் என்று நான் நினைக்கவில்லை. நாம் அப்படிப்பட்ட நிலையைக் கடந்து விட்டோம். இந்தப் பிரச்சனையில் உள்ள கோபத்தை நாம் குறைத்து விடுவோம். தேவையான கோபத்தை உருவாக்கக் கூடியதாக நான் முன்வைக்கும் விஷயம் பற்றியது என்னுடைய மூன்றாவது கவலை. இன்று நம்முடைய நாட்டில் ஒரு இனப்படுகொலையை நினைத்தால் அது இந்தியப் பெண்களிடம் உள்ளது. கடந்த இருபது ஆண்டுகளில் பத்து மில்லியன் பெண்சிசுக்கள் சட்டவிரோதமான முறையில் கருக்கலைக்கப்பட்டுள்ளார்கள். கடந்த இருபது ஆண்டுகளில் பத்து மில்லியன் பெண்கள் கருவறையிலேயே கொல்லப்பட்டுள்ளார்கள். இது இனப்படுகொலை. இதைப்பற்றி நாம் கோபப்படவில்லை. சீனா இதைவிட மோசமாக இருக்கிறது என்று சொல்வது ஒரு காரணமல்ல. உண்மையில் இந்தப் பிரச்சனையில் நமது மற்றொரு அண்டைநாடான பங்களாதேஷிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ள முடியும். ஜப்பானின் மெய்ஜி புனரமைப்பு காலத்திற்குப்பிறகு, மனித வரலாற்றில் சமூக வெளிப்பாடுகளில் இது மிகப்பெரிய மேம்பாட்டைக் காட்டியது. அவர்கள் மிகப்பெரிய வறுமை நிலையில் இருந்தபோதும் இதனை அவர்கள் சாதித்துள்ளார்கள். அவர்களது வெற்றியின் ரகசியம் பெண்களுக்கு அதிகாரம் கொடுத்ததுதான். அதை உடனே அவர்கள் பெற்றதற்கு அதுதான் மந்திர மருந்தாக அமைந்தது. ஆண்களிடம் கடன் கொடுப்பதற்குப் பதிலாக பெண்களிடம் கொடுத்தால் அது சமுதாயத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதை மீண்டும் மீண்டும் முன்னேறும் நாடுகளில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. பெண்கள் அந்த பணத்தைப் புத்திசாலித்தனமாக தங்கள் குடும்பத்தின் ஊட்டச்சத்துக் காகவோ குழந்தைகளின் கல்விக்காகவோ செலவு செய்ய பெண்கள் விரும்புகிறார்கள். நாம் பெண்களுக்கு அதிகாரம் வழங்கும் நாள் நாம் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் நாளாகும்.

இப்போது, நம்முடைய கோபம் மற்றும் புரட்சிகர நிலையில் அரசாங்கத்தை இந்த பிரச்சனைக்காகக் குறைகூற விரும்புகிறோம். எப்படியாவது இந்தியாவில் உள்ள

பெண்களின்மீதான ஒடுக்குமுறை பிரச்சனையை தீர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதாரப் பற்றாக்குறை போன்ற நிர்வாகப் பிரச்சனைகளில் கவனம் செலுத்தினால் அது மிகுந்த அளவுக்கு நன்மை பயக்கும். பாரம்பரிய சாணக்கிய ஆட்சி மாதிரி முறையைப் பின்பற்றுவதாயிருந்தால், சமுதாயப் பிரச்சனைகள் சமுதாயத்திடமே விடப்படும். எந்த நிலையிலும் பிரச்சனை சமுதாயத்தினால் ஏற்பட்டதேயன்றி அரசாங்கத்தினால் அல்ல. ஆகையால், இத்தகைய பிரிச்சனைகளைத் தீர்க்கும் பொறுப்பு காவல்துறையிடமோ அல்லது எந்த ஒரு பாதுகாப்பு அமைப்பிடமோ இருக்கக்கூடாது. சமுதாயம்தான் அதனுள் நுழைந்து அந்தப் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். நாம் அனைவரும் நம்மளவில் உலகத்தின் நாம் இருக்கும் சிறு பகுதியில் இந்த நல்ல யுத்தத்தை நடத்த வேண்டும். உதாரணமாக, உங்கள் தந்தை உங்கள் தாயை அவமதித்தால், நீங்கள் எதிர்த்துப் புரட்சி செய்ய வேண்டும். ஒரு மருமகள் மாமியாரால் ஒடுக்கப்பட்டால் (அல்லது மாற்றுநிலையில் இருந்தாலும், அதுவும் வருந்தத்தக்க வகையில் பொதுவாக நிகழ்வதால்) நீங்கள் பெண்களுக்கான உரிமைகளுக்காக குரல் கொடுப்பதற்கு முன்வரவேண்டும். உங்கள் இல்லம் சார்ந்த உதவி அவர்களுடைய மகன் அல்லது மகளை உணரவைக்கவில்லை என்றால், அவர்கள் கடமையைச் செய்வதற்கு உதவி செய்ய வேண்டிய தேவை உள்ளது. இந்த பிரச்சனையை உங்கள் வீட்டில் மட்டுமல்லாமல் உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் சந்திக்க வேண்டும். எங்கெங்கும் இந்த யுத்தத்தை நாம் அனைவருமே நடத்த வேண்டும். அது ஒன்றே மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான வழியாகும். இது நாம் கோபம் கொள்ள வேண்டிய பிரச்சனை.

பெண்கள் மதிக்கப்படாத இடத்தை இறைவன் கூட கைவிட்டு விடுகிறான் என்பதை நம்முடைய பழங்கால வேதங்கள் கூறுகின்றன. ஆகையால், இந்தப் பிரச்சனையில் நாம் போராடுவது நம்முடைய தேசப்பற்றுக் கடமையாகும் என்று நான் நம்புகிறேன்.

உடனடியாக நம்முடைய புரட்சி எண்ணத்தையும் கோப உணர்வையும் காட்டக்கூடிய பிரச்சனைகளை அமைதியாக சிந்தித்து கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டியது சில நேரங்களில் பயனுள்ளதாக இருக்கும் என்பது நான் என்னுடைய வாழ்க்கையில் கற்றுக்கொண்ட விஷயங்களில் ஒன்றாகும்.

மற்ற எல்லா நேரங்களிலும் 'அமைதியாக இருப்பது' என்பது அப்படி ஒன்றும் தீமையான கருத்து அல்ல.

---

**2014** ஆண்டு ஜுன் மாதத்தில் அமெரிக்க ஐக்கிய இளம் மாற்றம் காண்போர் கூட்டத்தில் உரையாற்றியது.

# ஆழ்ந்த சிந்தனைகள்

# நான் ஏன் எழுதுகிறேன்

இன்றைய நிலையில் எனக்குள்ள அடையாளங்களில் ஒன்று ஒரு நூலாசிரியர் என்பது. ஆறுமாதங்களுக்கு முன் என் வேலையின் அடையாளம் வேறாக இருந்தது. நான் ஒரு பாரம்பரியமான வணிகமேலாண்மைப் படிப்புடன், ஏற்புடைய ஆர்வமிக்க, கலந்துரையாடி வழிநடத்தும் நிதி நிறுவன வகை வங்கி ஊழியன். நிதி வேலையிலிருந்து புனைகதை எழுதுவதற்கு வந்தது அது மிக நீண்ட வியப்பான பயணம். சிலர் நீண்ட பயணமா என்று கேட்கலாம்? ஆம், இந்தக் கருத்தை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், வினோதமானதா? நன்று, அதற்கும் காரணங்கள் உள்ளன. ஆகவே நீங்கள் அனுமதித்தால்...

என்னுடைய நூல்கள் வரலாறு சார்ந்தவை; அவை 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தியாவைப் பற்றி இருக்கும். வியப்பான பகுதி என்னவென்றால் நான் என்னுடைய உயர்நிலைகளில் வரலாறு படிக்கவில்லை. நான் கணிதப்பாடத்தில் பட்டப்படிப்புப் படித்தேன். இப்படிச் செய்வதால் நான் மிகுந்த இன்பம் அனுபவிக்கிறேன் என்று சிலர் கூறலாம். நான் புனைகதைகள் எழுதுகிறேன் என்பது இரண்டாவது தனித்தன்மை. ஆனால் கடந்த வருடம் என்னுடைய முதல் நூலான தி இம்மார்டல்ஸ் ஆஃப் மெலுஹா வெளிவருவதற்குமுன், நான் ஒருபோதும் புனைகதைகள் எழுதவில்லை. உண்மையிலேயே யாருமே விரும்பாத கொடூரமான சில கவிதைகளைக் கல்லூரி நாட்களில் எழுதியதைத்தவிர, ஒரு சிறிய சிறுகதையைக் கூட என் கல்லூரி நாட்களில் எழுதவில்லை. என்னை மதித்து என்னுடைய கவிதைகளை விரும்பிய ஒரேஒருவர் என்னுடைய பெண் நண்பர் மட்டும்தான்; அவர்தான் இப்போது என்னுடைய மனைவி. மூன்றாவது விநோதமான விஷயம் இந்து கடவுளான சிவபெருமானின் அற்புதங்கள் பற்றி எழுதியிருக்கிறேன் என்பதுதான். என்னுடைய புத்தகங்கள் சிவபெருமான் 4000 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த ஒரு வரலாற்று மனிதர் என்றும் அவருடைய அற்புதங்களாலும் கர்மாவினாலும் உயர்ந்து கடவுளானார் என்ற முந்தைய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கின்றன. ஆகவே இந்து கடவுளைப் பற்றி

நான் சிறப்பாக எழுதி இருக்கிறேன். ஆனால் எட்டு ஒன்பது ஆண்டுகளுக்குமுன் நான் கடவுள் மறுப்பாளனாக இருந்தேன். இன்று, நான் மிகப்பக்தியுள்ள சிவ பக்தராக இருக்கலாம். ஆனால் என்னுடைய இளைய வாலிபப் பருவத்தில் கோயில்களுக்குள் செல்ல வேண்டும் என்ற தேவையைக்கூட நான் உணரவில்லை. இது உண்மையிலேயே நீண்ட விநோதமான பயணம். ஆகவே இது எப்படி நடந்தது? ஒரு நாத்திகனான, கணிதத்தில் பட்டம் பெற்ற, எத்தகைய கற்பனை விட்டும் விலகியிருந்த என்னைப்போன்ற ஒருவர் இறைவனைப் பற்றி வரலாற்றுப் புதினம் எழுதுவதில் எப்படி முடிந்தது?

என்னிடம் ஒரு தத்துவம் உள்ளது. என்னுடைய நூல்கள் எல்லாம் ஆசிர்வாத் என்று நான் நம்புகிறேன். பல ஆண்டுகளாக என்னுடைய ஆன்மா இந்த ஆசிர்வாதத்தைப் பெறுவதற்காக தயாரித்துக் கொண்டிருந்தது. அதற்குமேலும், என்னுடைய உள்ளுணர்வு அறிவிற்குத் தெரியாமலேயே இது நடந்திருக்கிறது. இது எவ்வாறு நடந்தது? முதலில் நான் வரலாற்றுப் 'பகுதியை' எடுத்துச் சொல்கிறேன். என்னுடைய குழந்தைப்பருவம் வரை தாண்டி என்னால் முடிந்தவரை எண்ணிப்பார்த்தால் நான் வரலாற்றுப் பாடத்தில் எப்போதும் ஈர்க்கப்பட்டிருந்தேன். ஏன்? எனக்குத் தெரியவில்லை. இப்போது நான் ஒரு நடைமுறை நம்பிக்கையுள்ள மனிதன். உங்களுக்கு என்னுடைய வங்கித் தொழில் விபரம் தெரியும். சரிதானா? நான் வளர்ந்து கொண்டிருந்த 1990 ஆம் ஆண்டின் முற்பகுதியிலாவது வரலாற்று ஆசிரியனாவது நல்ல சம்பளம்தரும் வேலை வாய்ப்பல்ல என்பது எனக்குத் தெரியும். அதில் விழுந்து முயற்சிப்பதற்கு எனக்குக் குடும்பவசதி எதுவும் இல்லை. ஆகவே நான் எம்.பி.ஏ முடித்து கவர்ச்சிகரமான வங்கிப் பணியில் சேர்ந்தேன். ஆனால் வாழ்க்கை 'இது அல்லது அது' என்று இருக்கத் தேவையில்லை. ஒருவர் ஒன்றில் ஈடுபடுவது மட்டுமே எப்போதும் இயலக்கூடியதாக இருக்கும். ஆகவே நான் தொடர்ந்து பல வரலாற்று நூல்களை ஆர்வத்துடன் படித்துக்கொண்டே இருந்தேன். அது என்னுடைய வேலையில் பயன்படும் என்பதற்காகவோ அதிக மதிப்பெண் பெறலாம் என்பதற்காகவோ இல்லாமல், அத்தகையதொரு நூல் என் கையில் இருந்தால் மகிழ்ச்சி அளித்தது என்பதற்காகவே படித்தேன்.

இப்போது எழுத்து என்ற மற்றொரு தனித்தன்மை. ஏறக்குறைய எட்டு ஒன்பது ஆண்டுகளுக்குமுன் என் மனத்தில்

ஒரு யோசனை தோன்றியது. அதைப்பற்றி எழுத வேண்டும் என்று தேவையாக உணர்ந்தேன். ஆனால் எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. என்னுடைய குடும்ப நடவடிக்கைகள் ஊக்குவித்தன. அவர்கள், 'இது நன்றாகத் தோன்றுகிறது. எழுதிவிடு' என்று கூறினார்கள். அவர்கள் கூறுவதைக் கேட்க எனக்குள் கட்டாயம் தோன்றியது. என் குடும்பத்தினர் சொல்வதை நான் எப்போதும் செய்வேன் என்பதற்காக அல்ல. நான் புத்தகம் எழுதுவது பற்றிய முயற்சியில் இல்லை என்றால் மகிழ்ச்சி இல்லாமலிருந்தேன் என்பதே உண்மையான காரணம். அந்த கால கட்டத்தில், நான் வேலையில் மிகவும் அழுத்தத்தில் இருந்தேன். நான் வங்கிப்பிரிவில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். நாங்கள் நிதி உலகத்தைப் பாழ்படுத்திக் கொண்டிருந்தோம். அது மிகுந்த நேரத்தை எடுத்துக் கொண்டது என்பது சரிதானா? ஒரு நூலை எழுதும் அளவுக்கு நேரமில்லை. நான் பின்னோக்கி எண்ணிப்பார்ப்பவன் ஆகையால், நான் ஒரு கொள்கைமுடிவு செய்தேன். என் வாழ்க்கையில் நேரத்தை எடுத்துக்கொள்ளும் செயல்களை ஒவ்வொன்றாக விட்டுவந்தேன். மூன்று செயல்பாடுகளுக்கு மட்டுமே வரையறை செய்துகொண்டேன். என் வேலையைச் செய்வது, குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிடுவது, நூல் எழுதுவது என்ற மூன்றில் மட்டுமே நேரத்தைச் செலவிட்டேன். தொலைக்காட்சி பார்ப்பது, விருந்துகளில் கலந்து கொள்வது, உடற்பயிற்சி செய்வதைக்கூட நிறுத்தி விட்டேன். ஆனாலும் எழுதுவதற்குப் போதிய நேரம் எனக்குக் கிடைக்கவில்லை. முக்கியமாக ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டுமே எழுதிக்கொண்டிருந்தேன்.

பிறகு என் மனைவி ஒரு யோசனை சொன்னார். நான் அலுவலகத்திற்குப் போய் வருவதற்கு மட்டுமே இரண்டு மூன்று மணிநேரம் வீணடிப்பதாகக் குறிப்பிட்டுக் காட்டினாள். மும்பையில் ஒவ்வொரு நாளும் காரை ஓட்டிக்கொண்டு அலுவலகம் சென்று வந்தேன். இதைவிட அதிகமாக நான் சொல்ல வேண்டுமா? ஒரு டிரைவரை அமர்த்திக் கொள்ளலாம் என்று அவள் யோசனை கூறினாள். அந்த நாட்களில் டிரைவர் எளிதாகக் கிடைத்தனர். ஒரு 5000 ரூபாயை மாதத்திற்கு செலவிட முடிந்தது. நான் காரின் பின்இருக்கையில் அமர்ந்துகொண்டு நூல் எழுதிக் கொண்டிருந்தேன். நூல் உருவாகிவர, எனக்கு நான்கு ஐந்து ஆண்டுகள் ஆனது.

இதே நிலையில் பல எழுத்தாளர்கள் இருப்பதாக எனக்குச்

சொன்னார்கள். பிரபலமில்லாத எழுத்தாளர்களுக்கு நூல் எழுதுவதோடு வேலை முடிவதில்லை. உண்மையில் இல்லை. அதனை புத்தகமாகப் பதிப்பிக்க வேண்டும் என்பது மற்றொரு புதிய கதை. இந்திய நூல்வெளியீட்டுத் தொழில் அலுவலகங்களில் நானும் என்னுடைய முகவரும் பலமுறை அலைந்தோம். இந்திய வெளியீட்டு நிறுவனத்தினர் கோபகுணம் கொண்டவர்கள் என்று நான் எச்சரிக்கப்பட்டேன். ஒரு அறையில் பன்னிரண்டு வெளியீட்டாளர்களை ஒன்றுகூட்டி வைத்துக் கருத்துக் கேட்டால் அது பன்னிரண்டு முடிவுகளுடன் நிறைவடையும். ஆனால் ஆச்சரியப்படும் விதத்தில் என்னுடைய நூலைப்பற்றி எல்லோரும் ஒருமித்த கருத்துக் கொண்டிருந்தார்கள்.

என்னுடைய புத்தகத்தைப் படித்த ஒவ்வொரு பதிப்பாளரும் இது சரிப்பட்டு வராது என்றே எண்ணினார்கள். எத்தனை பேர்? மிகவும் வெளிப்படையாக என்றால், நான் இருபதுக்குப் பிறகு எண்ணிக்கைப் பார்ப்பதை நிறுத்திக்கொண்டேன். இது எங்கேயும் செல்லவில்லை. சில பதிப்பாளர்கள் மறுப்பதற்கான காரணத்தைக் கூறும் பெருந்தன்மையும் அன்பும் கொண்டிருந்தார்கள். நான் ஒவ்வொரு வாசகரையும் தனித்தனியாக எண்ணிப்பார்க்க வேண்டும் என்று ஒருவர் கூறினார். சரி, அது எப்படி என்று நான் கேட்டேன். அவர் என்னிடம், 'இதோ பாருங்கள் இளைஞர்களுக்குப் பிடிக்காத மதத்தைப்பற்றி நீங்கள் எழுதுகிறீர்கள். நீங்கள் உங்களுக்கென்று மதத்தைப்பற்றி ஒரு கருத்துக் கொண்டுள்ளீர்கள். நீங்கள் ஒரு மிகுந்த பற்றாளர் அல்ல, எனவே முதியவர்கள் இதனை விரும்பவில்லை. இறுதியாக நீங்கள் எளிமையான நவீன ஆங்கிலத்தில் எழுதுவதைக் கைக்கொண்டுள்ளீர்கள், இலக்கியவாதிகள் இதனை விரும்பமாட்டார்கள். ஆகவே நீங்கள் எந்த கடவுள் பெயரில் எழுதுகிறீர்கள்? நீங்கள் விற்பனை செய்ய விரும்பும் வாசகர்கள் எந்தவகை?" என்று கூறினார். இதோ பாருங்கள் நான் புத்தகத்தை எழுதுவதற்கு முன் விற்பனைபற்றி எந்த ஆராய்ச்சியும் செய்யவில்லை. நான் புத்தகத்தை மட்டும் எழுதி விட்டேன் என்று கூறினேன். எது எப்படியாயினும், என்னுடைய நூல் ஒவ்வொருவராலும் மறுக்கப்பட்டு விட்டது என்பதே மொத்த கருத்து.

இப்போது, என் மனைவி அன்போடும் ஆதரவோடும் இருக்கின்ற பெண்மணி. என்னுடைய மனைவி அதிர்ந்து போய்

விட்டார் என்று நினைக்கிறேன். என்னைப்போன்ற படைப்பாக்கத் திறன் சவால் உள்ள ஒருவர் புத்தகம் எழுதியுள்ளார் அதற்கு எப்படியாவது எந்த வகையிலாவது ஆதரவளிக்க வேண்டும் என்று வலிந்து முடிவெடுத்தார். மற்ற பல செலவுகளைக் குறைத்துக் கொண்டு இந்தப் புத்தகத்தை நாமே வெளியிடலாம் என்று யோசனை கூறினார். புத்தகத்தை நாம் அச்சிட்டு நம் உறவினர்களுக்கு இலவசமாகக் கொடுத்துவிடலாம் என்று கூறுவதாகத் தோன்றியது. சரி, நன்றி என் இனிய இதயமே என்று நான் கூறினேன். ஆனால் எனக்கு இன்னொரு ஆச்சரியம் காத்திருந்தது. ஒவ்வொரு பதிப்பாளரிடமும் என்னுடைய புத்தகத்தை அனுப்பி அவமானப்பட்டுவந்த நீண்ட நாட்களாகத் துன்பத்தை ஏற்றுவரும் என்னுடைய முகவர் என்னுடைய நம்பிக்கையில் நெகிழ்ந்து போய் விட்டார். நான் வர்த்தகத்திற்காக முதலீடு செய்வதானால் தான் அச்சிடுவதற்கு முதலீடு செய்வதாகக் கூறி முன்வந்தார். சரி, நன்றி சான்றோரே என்று நான் கூறினேன். சரியான நேரத்தில் வந்த இந்த பங்குதாரரின் மூலம் என்னுடைய நூல், தி இம்மார்டல்ஸ் ஆஃப் மெலுஹா 2010 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. நம்புங்கள், எந்தவித எதிர்பார்ப்பும் எனக்கு இல்லை, ஆனால் வெளியிட்ட முதல் வாரத்திலேயே உண்மையில் நூல் விற்பனைப் பட்டியலில் இடம் பெற்று விட்டது.

என்னுடைய உரையின் கருத்து என்ன? உங்கள் மனத்தின் அறிவுரையை முழுமையாகப் பின்பற்றினால், நீங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவீர்கள் என்பதுதானா? அது உண்மையாக இருக்கலாம். ஆனால் இந்தக் கருத்து என்னைவிடவும் அறிவானவர்களாலும், என்னைவிட சிறந்த கவிதைநடையிலும் பலரால் சொல்லப்பட்டுள்ளது. என்னுடைய கருத்து முற்றிலும் மாறுபட்டது. உங்களுடைய ஆன்மாவின் குரலை கவனித்து வாழ்க்கையின் நோக்கத்தைக் கண்டுகொண்டு உழைத்தால் வெற்றியோ தோல்வியோ அதைப்பற்றிக் கவலை இல்லை. அதுதான் நான் கண்டுகொண்ட வியப்பான இடம்.

நான் வங்கிப் பணியில் இருந்தபோது, கண்ணாடி அலுவலக அறை, ஊக்கத்தொகை, சம்பளம், தனிப்பட்ட உதவியாளர், மேல்நிலை மேலாண்மை தகுதி ஆகிய அனைத்து வெற்றிதரும் வாய்ப்புகளை விட்டுவிடச் சொன்னால், அவற்றை விட்டுவிட்டு வங்கிப்பணியில் மகிழ்ச்சியாகவும் இருக்கவேண்டும் என்று கூறினால், என்னுடைய நேர்மையான பதில் என்னால் முடியாது

என்பதுதான். என்னுடைய வங்கிப் பணியின் விருப்பத்திற்கான முன்கூட்டிய தேவையே வெற்றி என்பதுதான். எனக்குக் கிடைக்கவேண்டிய பதவி உயர்வு கிடைக்காதபோது, அல்லது நான் பெறவேண்டிய அளவுக்கு ஊக்கத்தொகை கிடைக்காதபோது என்று அந்த காலங்கள் இருந்தன. அப்பொழுதெல்லாம் என்னுடைய தன்னம்பிக்கை மட்டுமல்ல என்னுடைய தனிப்பட்ட மகிழ்ச்சியும் தலைகீழாகக் கவிழ்ந்து போனது. ஆனால் என்னுடைய எழுத்துப் பணியில் இது முற்றிலும் கதையே வேறானது. யாராவது ஒருவர் என்னிடம் என் நூல்கள் எல்லாம் தோல்வி என்று சொன்னால், தி இம்மார்டல்ஸ் ஆஃப் மெலுஹா மற்றும் தி சீக்ரெட் ஆஃப் நாகாஸ் அவை விற்ற நிலையைச் சொல்லாமல் அவை வெறும் இருபத்தைந்து பிரதிகள்தான் விற்கும் என்று சொன்னால், நான் இருந்தும் மகிழ்ச்சியாக இருப்பேனா? நேர்மையான பதில் ஆம் என்பதுதான். என்னுடைய எழுத்துப் பணியில் வெற்றியோ தோல்வியோ பொருந்தாததாகிவிடும். ஒவ்வொரு பதிப்பாளராலும் என் நூல் மறுக்கப்பட்ட அந்த நேரத்திலும் கூட, எத்திசையில் பார்த்தாலும், நான் ஒரு வினாடிகூட நூல் எழுதுவதில் என்னுடைய நேரத்தை வீண்டித்து விட்டேனே என்று எண்ணவில்லை. என்னுடைய முதல்நூல் வெளியிடுவது முடியாது என்று தோன்றிய நிலையிலும் கூட, நான் என்னுடைய இரண்டாவது நூலை முன்பே எழுதத் தொடங்கி விட்டேன். என்னுடைய நூல்கள் தோல்வியடைந்தாலும், நான் வங்கிப்பணியில் இருந்திருப்பேன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் என்னுடைய நூல்கள் என்னுடைய கணினியிலேயே இருந்தாலும் அப்போதும்கூட நான் எழுதிக்கொண்டிருப்பேன். என்னுடைய நூல்களை வாசிப்போர் நீண்ட துன்பம் கண்ட என்னுடைய குடும்பத்தினர் மட்டுமேயானாலும் நான் எழுத்தைத் தொடர்வேன். அது நான் வசிக்கக்கூடிய விந்தையான இடம். இதற்கான பயணம் என்பதே இனிமையானது. சேருமிடம் பற்றிய கவலை இல்லை.

மிகவும் புத்திகூர்மை மிக்கப் பெண்மணியான என் அன்னை, ஒருமுறை என்னிடம், தோல்வி மனத்தில் வருத்தத்தைக் கொடுக்காமலும், வெற்றி உன்மனத்தைக் கர்வத்தால் நிறைக்காமலும் இருந்து செய்யும் பணியால் மகிழ்ச்சி கிடைக்குமென்றால், நீ உன் ஆன்மாவோடு இணைந்து பணியாற்றுகிறாய் என்பதை அறிவாய், அதுதான் ஸ்வதர்மா என்று கூறினார்கள். நான் அத்தகைய அற்புதமான இடத்தில் இருக்கிறேன். எப்பொழுதெல்லாம் எழுதுவதோ, நூல்

தொடர்பான வேலைகளைச் செய்வதோ என்று இருக்கும்போது ஆழ்ந்த, நிறைந்த, முடிவில்லாத இன்பத்தை என்னுள் உணர்கிறேன். எனக்கு, அதுதான் வாழ்க்கையின் மிகப்பெரிய ஆசிர்வாதம். நம் ஒவ்வொருவருக்கும் அத்தகைய ஆசிர்வாதம் கிடைக்கிறது. நாம் செய்யவேண்டியதெல்லாம் என்னவென்றால், நம்முடைய ஆன்மாவின் குரலைக்கவனித்து நம்முடைய வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தைக் கண்டு கொள்வதுதான். உங்களுக்கு நன்றி.

---

**2012 ஆம் ஆண்டு ஜெய்ப்பூரில் பேசியது.**

# அறிவியல், ஆன்மீகம் மற்றும் என்மகன் நீல்

நான் கொஞ்சம் தயக்கத்துடன் காண விரும்பிய ஒரு இடம் இருந்தது. அது ஜெனிவாவில் உள்ள அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பு (European Organisation for Nuclear Research) ஆகும். இதற்கான காரணங்கள் பல உண்டு. நான் எப்போதும் அறிவியலை விரும்புவதுடன் முறையாக அறிவியல் படைப்புகளைப் படித்து வருகிறேன். அத்தோடுகூட, அங்கே ஒரு அழகான சிவபெருமான் சிலையை என்னுடைய கடவுளின் பிரபஞ்ச நடனத்தை ஆராதிக்கும் வகையில் நடராஜர் கோலத்தில் அமைத்துள்ளார்கள். அங்கே செல்வது எனக்கு ஒரு புனித யாத்திரை போலத் தோன்றியது. மேலும் நான் எப்போதும் அந்த நிலையான மாதிரியில் மகிழ்ச்சி அடைந்து போற்றுவதும் அதைப்பற்றிப் படித்து புனேயில் விஞ்ஞானியாக இருக்கும் என்னுடைய அத்தை பையனுடன் இந்த பொருளைப்பற்றி நினைவுகூரத்தக்க மாலை வேளைகளில் நீண்ட கலந்துரையாடல்களில் ஈடுபட்டதும் மகிழ்ச்சி அளிக்கிறது. "பொருள்" என்பதைப்பற்றி நாம் பள்ளியில் படித்தவை முழுமை பெற்றவை அல்ல என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். பொருளின் எல்லா உள்ளடக்கங்களும் ஃபெமியான்கள் (இந்திய இயற்பியல் விஞ்ஞானி இ.ஃபெமி என்பவர் பெயரில் அழைக்கப்படுவது) மற்றும் போஸான்கள் (நம்முடைய விஞ்ஞானி எஸ். என்.போஸ் பெயரில் அழைக்கப்படுவது) அடங்கியவையாக வகைப்டுத்தப்படுகின்றன. அத்தோடு கூட, பிரபஞ்சத்தில் நான்கு அடிப்படை ஈர்ப்பு விசைகள் உள்ளன: அவை மின்காந்த ஈர்ப்புவிசை, புவி ஈர்ப்பு விசை, வலிவற்ற ஈர்ப்புவிசை, வலிவான ஈர்ப்பு விசை என்பனவாகும். இந்த வலிமையான ஈர்ப்பு விசை என்பது மகிழ்ந்து போற்றத்தக்கதாகும். நாம் ஊகிப்பதற்கு மாறாக, இந்த ஈர்ப்பு விசை துகள்களை தனியே இழுத்தாலும் வலிவற்றுப் போவதில்லை. இதில் ஏறக்குறைய ஒரு ஆன்மிகத் தத்துவம் அடங்கியுள்ளது. அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்புக்குச் சென்று பார்த்ததில் இந்த கருத்தை மேலும் ஆராய வாய்ப்பாக அமைந்தது. இதனை மிகச் சிறப்பாக என் மகன் கற்றுக் கொடுக்க முடியும் என்பதை என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை. எப்படி?

நன்று, நீல் அந்த அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்புக்கு வருவதற்கு விரும்பவில்லை. அது இயற்கையானது தான். அவனுக்கு வயது நான்கு. அவன் டைனோசர்களையும் இயற்கை காட்சிகளை பார்ப்பதில்தான் அதிக ஆர்வம் காட்டுவான். துகள்கள் பற்றிய இயற்பியலில் அவன் ஆர்வம் கொள்வதற்கு இன்னும் காலம் இருக்கிறதல்லவா! ஆகவே நாங்கள் ஒரு திட்டம் தீட்டினோம். என்னுடைய மனைவியும் மகனும் பூங்காவுக்குச் செல்வதென்றும் நான் "அறிவியல் பயணம்" தொடர்வதென்றும் முடிவெடுத்தோம். என்றாலும், புறப்படும் அன்று காலையில் அவன் அங்கே வருவதென்று முடிவெடுத்து விட்டான். எனக்கு அறிவார்ந்த வியப்பு ஏற்பட்டது. என்னுடைய மனைவி ப்ரீதியும் ஆச்சரியப்பட்டாள். ஆகவே அவள் 'ஏன் சிஜஆர்என் க்கு வருவதற்கு விரும்புகிறாய்?' என்று என் மகனிடம் கேட்டாள்.

நீல் கூறிய பதில் எளிமையாக இருந்தது: 'நான் அங்கே வர விரும்புவதற்குக் காரணம் அப்பா அங்கே போக விரும்புகிறார்' என்பதுதான் அவன் அளித்த பதில்.

துகள்களை வெளியே இழுத்தாலும் 'வலிமையான ஈர்ப்புவிசை' வலிமை குறைவதில்லை. இதில் ஒரு ஆன்மிக தத்துவம் அடங்கியுள்ளது. அதனை என் மகன் நீல் கற்றுக் கொடுத்துவிட்டான். இது அத்தகைய நெகிழ்ச்சியான பாடம் என்பதால் என் கண்களில் கண்ணீர் வழியச்செய்து விட்டது.

---

**2013 ஆம் ஆண்டு ஹிந்துஸ்தான் டைம்ஸ் இதழில் முதலில் வெளிவந்தது.**

# அறிவுகூர்மைமிக்க மூன்று பெண்கள்

நான் என்னை ஆழமாகப் பாதித்த மூன்று நிகழ்வுகள் பற்றிமட்டும் எழுதுவதற்கு முடிவெடுத்தேன். அவை எல்லாம் என் வாழ்க்கையில் ஏற்பட்ட பெண்கள் தொடர்பான நிகழ்வுகள் என்பதை சொல்லத்தேவையில்லை.

முதல் நிகழ்ச்சி, என்னை நான் சுமார் எட்டு வயதாக இருந்த என் குழந்தைப் பருவத்திற்குப் பின்னோக்கி இட்டுச் சென்றது. ஒதிசாவில் ரூர்கேலாவிற்கு அருகில் கன்ஸ்பஹல் என்றழைக்கப்பட்ட அடக்கமான ஒரு கம்பெனி குடியிருப்பில் வசித்தோம்; அந்த சமயத்தில் என்னுடைய அப்பா லார்சன் - டூப்ரோ நிறுவனத்தில் பணியில் இருந்தார். என் அம்மா ஒழுக்கமாக இருக்க வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பாக இருப்பவர். அதேசமயத்தில் என் அப்பா எப்போதும் சாதாரணமாக இருப்பார். ஒருநாள் மாலை, என் இரட்டைப்பிறவி சகோதரர் அஷிஷ் உடன் நானும் கம்பெனி பொழுதுபோக்கு கிளப்பிற்குச் செல்ல முடிவு செய்தோம். அம்மாவிடம் அனுமதி கேட்டோம், நாங்கள் வீட்டுப் பாடங்களை எழுதி முடிக்கவில்லை என்று கூறி அவர் முடியாது என்று சொல்லி விட்டார். ஒருமணி நேரம் கழித்து அப்பா அலுவலகத்திலிருந்து வந்தபிறகு அவரிடம் கேட்போம். அவர் சரியென்று சொல்லிவிட்டார். நாங்கள் மகிழ்ச்சியுடன் சென்று ஆனந்தமாகச் சுற்றித் திரிந்துவிட்டு, இரவு சாப்பாட்டு நேரத்திற்குச் சரியாகத் திரும்பிவிட்டோம்; அங்கே ஒரு குழப்பமான நிலை இருந்தது. அப்பா மிகவும் கோபமாக இருந்து எங்களிடம் பேசினார்; இது வழக்கத்திற்கு மாறான ஒன்றாக இருந்ததால் நாங்கள் அழத்தொடங்கினோம். நாங்கள் அவரிடம் வீட்டுப்பாடத்தை உடனே முடித்து விடுவதாக உறுதி கூறினோம். ஆனால் அவர் வேறு எதையோ எண்ணி கோபமாகவே இருந்தார்; அம்மா முன்னமே முடியாது என்று கூறிய பிறகு அனுமதி கேட்பதற்கு எவ்வளவு துணிச்சல் என்று அவர் நினைத்தாரா? பெற்றோரில் ஒருவர் முடியாது என்று சொன்னால் அது தானாகவே மற்றவரும் அனுமதிக்க முடியாது என்று அர்த்தம் என்று அவர் கூறினார். குடும்பத்துக்குள் நீங்கள் விளையாட்டு காட்டாதீர்கள். அது நான் மிகவும் கற்றுக்கொண்ட

மிகச்சிறந்த பாடம். நீங்கள் உங்கள் குடும்பத்துக்குள் இப்படி விளையாட்டு காட்டாதீர்கள். அம்மா அப்பா இருவருமே சமமானவர்கள் என்பது மிகவும் முக்கியமானது.

இரண்டாவது நிகழ்ச்சி உண்மையில் சிவபெருமான் பற்றிய மூன்று நூல் உருவாக்கம் பற்றியதாக இருந்தது. என்னுடைய குடும்பத்தில் கலந்துரையாடல் செய்து ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி அமைக்கப்பட்டது; அது என்னை எனக்குள் ஒரு தத்துவார்த்த கருத்து உருவாகும் நிலைக்கு கொண்டு சென்றது; குற்றம் என்பது என்ன? குற்றம் என்பது ஏதாவது நோக்கம் கொண்டதா? தெளிவற்ற வழியில் முன்னர் நான் கவிதை எழுதிக் கொண்டிருந்ததை மனத்தில் கொண்டும், என்மீது அவர்கள் கொண்டிருந்த அன்பின் காரணமாகவும், அவர்களின் நல்ல தீர்ப்புக்கு எதிராகவும் என்னுடைய கருத்துக்களை எழுத்தில் கொண்டுவர என் குடும்பத்தினர் ஊக்கம் கொடுத்தனர். ஆனால் நான் உறுதியாக இருக்கவில்லை. என்னுடைய மூத்த சகோதரி பாவனா என் இரட்டைப்பிறவி சகோதரன் அஷிஷ் இருவரும் என்னோடு கலந்துரையாடியது எனக்கு நினைவுக்கு வருகிறது. பாவனாஜி என்னிடம் நான் எதையும் முயற்சி செய்யாமல் அது என்னால் முடியாது என்று எப்படி நினைக்க முடியும் என்று அவர் சொன்னார். மற்றவர்களைக் கவர்வதற்காக எழுத வேண்டிய தேவையில்லை, ஆனால் என்னுடைய மனத்தில் உள்ள எண்ணங்களை நன்மையானது எது என ஆராய்ந்து குடும்பத்தினரிடம் பகிர்ந்து கொண்டால், அவர்கள் அதனை எடையிட்டுப் பார்க்க மாட்டார்கள். ஆகையால் எழுத்தின் தரம் குறித்து யார் கவலைப்படப் போகிறார்கள்? அப்படியே எழுதத்தொடங்கி தொடர்ந்து எழுது. அதுதான் நான் கற்றுக்கொண்ட பாடம்: எதையும் முயற்சி செய்யத் தயங்கக் கூடாது. புதியதாக ஒன்றை ஏற்றுக் கொள்வதற்கு உன்னுடைய தோல்வி பற்றிய பயம் ஏன் குறுக்கிட வேண்டும்? மிக முக்கியமானதாக, நீங்கள் உங்களுக்குள் ஏதேனும் செய்யும்போது உலகம் என்ன நினைக்கிறது என்று ஏன் கவலைப்பட வேண்டும்?

மூன்றாவது நிகழ்ச்சி, சிவபெருமான் பற்றிய மூன்று நூல்களில் இரண்டாவது நூலாகிய தி சீக்ரெட் ஆஃப் நாகாஸ் உருவாக்கும் சமயத்தில் நிகழ்ந்தது. இறைவன் அருளால், மூன்று நூல்களில் முதலாவது நூலான தி இம்மார்டல்ஸ் ஆஃப் மெலுஹா மிகச்சிறப்பாக அமைந்து விட்டது. இரண்டாவது நூலுக்கான முன்பதிவுகள் இதுவும் மிகவும் வெற்றிகரமாக அமைந்துவிடும்

என்ற நம்பிக்கையைக் கொடுத்தது. அதுவரை நான் ஒரு காப்பீட்டு நிறுவனத்தில் முதுநிலை மேலாண்மை குழு உறுப்பினராகப் பணியாற்றிக் கொண்டே எழுதிக் கொண்டிருந்தேன். நான் வர்த்தகம், பொருள்கள், சேவைகள் ஆகியவற்றின் தரம்காப்பு துறைகளைக் கவனித்துக் கொண்டேன். வாரத்தின் ஆறு நாட்கள் வேலையில் சுறுசுறுப்பாக இருக்க வேண்டிய அதிக பளுவுள்ள வேலை. அத்தோடு கூட, எனக்கு கிடைக்கும் நேரத்திலெல்லாம் நான் நூல்கள் எழுதிக் கொண்டும் அவற்றை விற்பதற்கான முயற்சிகள் செய்து கொண்டும் இருந்தேன். முக்கியமாக, மெழுகுவர்த்தியை இருபுறமும் ஏற்றிக்கொண்டிருந்தேன். ஏதாவது ஒன்றை விட்டுக் கொடுக்க வேண்டும்.

ஆனால் நான் வேலையை விடுவதில் அதுவரை முடிவாக இருக்கவில்லை. எனக்கு நூலுக்கான ஊக்கத் தொகையாக வந்த காசோலைகள் என் மாதச் சம்பளத்தைவிட அதிகமாக வளர்ந்து இருந்த நிலையிலும் இப்படி இருந்தேன். நான் மிகப்பெரிய செல்வப் பின்னணியில் இருக்கவில்லை. என்னுடைய வேலைவாய்ப்புகளைப் பொறுத்தவரை நான் பொறுப்பற்று இருக்க முடியாது. அத்தோடு கூட, எங்களுக்கு இறைவன் ஆசிர்வாதத்தால் அப்போது குழந்தை பிறந்து என் மனைவி குழந்தையைக் கவனிப்பதற்காக தான் பார்த்த வேலையை விட்டிருந்தாள்.

பிறகு என் மனைவி ப்ரீதியும் என்னுடைய மூத்த சகோதரர் அனிஷவும் என்னோடு பேசினர். நான் முழுநேர எழுத்துப் பணியை ஏற்காமல் மிகவும் எச்சரிக்கை உணர்வோடு இருப்பதாக விளக்கிக் கூறினார்கள். நான் எப்பொழுது வேண்டுமானாலும் வங்கிப் பணிக்குத் திரும்பப் போகமுடியும் என்று அனிஷா கூறினாள். ஆனால் எழுத்தாளராகப் பணியாற்றும் வாய்ப்பு ஆசிர்வாதம் மிக்கது. அது சரியாக அமைந்து விட்டால், நான் விரும்பிய படிப்பது, எழுதுவது, பயணம் செய்வது, குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருப்பது என்ற வாழ்க்கையை வாழமுடியும்; குடும்பத்துக்கான பொறுப்புகளுடன் கூட எனக்கென்றும் பொறுப்புகள், என்னுடைய கனவுகளைத் தொடர்வதற்கும், என்னுடைய வாழ்க்கைக்கு ஒரு அரத்தத்தைக் கொடுப்பதற்கும் இருக்கிறது என்றும் ப்ரீதி சிலவற்றை அழகாக எடுத்துக் கூறினாள். பலருக்கு இத்தகைய வாய்ப்புகள் கிடைப்பதில்லை என்றும் அவள் கூறினாள். நான் அத்தகைய ஒன்றை வழங்கி ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறேன். உண்மையான பொறுப்பு

என்பது அதனை முழுவதுமாகவோ முற்றிலுமாகவோ விட்டு விடுவதல்ல.

ஆகவே நான் என் வேலையை ராஜினாமா செய்தேன். மீண்டும் வேலைக்குப் போக நேர்ந்தாலும் பயன்படுமாறு நான் அலுவலகத்தை விட்டு நல்ல உறவுநிலையில் வெளிவருவதாக உறுதியும் செய்து கொண்டேன்; நாம் நம்மை விரும்புகின்றவர்கள் மேலும் பொறுப்பு மிக்கவர்கள் என்பதையும் ஆனால் நம்மைப்பற்றியும் அதேபோல் பொறுப்பு மிக்கவர்கள் என்பதையும் இதனை நாம் மறக்கக் கூடாது என்பதையும் நான் பாடமாகக் கற்றுக் கொண்டேன்.

இவை மட்டும்தான் என்னுடைய வாழ்க்கையில் திருப்பு முனைகள் என்று சொல்லவரவில்லை, ஆனால் அவை முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கூறுகிறேன். வாழ்க்கை என்பது அடைய வேண்டிய இலக்கு மட்டுமல்ல, அதற்கான பயணமும்தான். சிறுசிறு நிகழ்வுகளைக் கொண்ட வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்ப்பது, நமக்கு ஆக்க உணர்வை அளித்து எஞ்சிய பயணத்தை உறுதியுடன் மேற்கொள்ள வழிகாட்டும்.

சிவபெருமானும் அவரது அருள்பெருக்கும் உங்களை உங்கள் பயணத்தில் சிறப்பாக வழிநடத்தட்டும்.

---

2014 ஆம் ஆண்டு ஃபெமினா இதழில் முதலில் வெளிவந்தது.

# ஒரு தேசப்பற்று பிரகடனம்

பரந்து விரிந்த ஆனால் சிறப்பில்லாத நிலையில் இருந்த ஆங்கில ஆட்சி பற்றிய ஆய்வை எடுத்துரைக்கும் சசி தரூரின் அன் எரா ஆஃப் டார்க்னஸ் (An Era of darkness) என்ற உயர்ந்த நிலையில் உள்ள நூலை இப்போதுதான் படித்து முடித்தேன். பல ஆண்டுகளுக்கு முன் வில் டூரன்டின் தி கேஸ் ஃபார் இன்டியா அல்லது மைக் டேவிஸின் விக்டோரியன் ஹாலோகாஸ்ட்ஸ் என்ற நூல்களைப் படித்தபோது பெற்ற அனுபவத்தைப்போல, ஒரு வழக்கமான கோபத்தை உணர்ந்தேன். ஆங்கிலேய காலனி ஆதிக்கத்தினர் இழைத்த மனித இனத்திற்கு எதிரான குற்றங்களை இதுபோன்ற பல நூல்களில் நான் பட்டியலிட்டுக் காட்டியிருந்தேன். மனிதரால் உருவாக்கப்பட்ட பஞ்சங்களினால் அவர்கள் ஏறக்குறைய நாற்பது மில்லியன் இந்தியர்களைக் கொன்றிருக்கிறார்கள் என்று மதிப்பிடப்படுகிறது. வரலாற்றிலேயே மிகப்பெரியதான, இந்தியாவையும் சீனாவையும் முற்றிலும் அழித்த, போதை மருந்து கடத்தல் வணிகத்தை அவர்கள் நடத்தினார்கள். தாவூத் இப்ராஹிம் மறைமுகநிலையில் வேகமாக நடத்திய போதைமருந்து வணிகத்தைப் போல விக்டோரியா மகாராணி சிறந்த தலைமைப்பதவியை வைத்துக் கொண்டு நடத்திய ஒரு போதைமருந்து வணிகத் தலைவர்தான் என்று ஒரு விமர்சகர் சரியாகச் சொல்லியுள்ளார். இந்த சிறிய கட்டுரையில் அடங்காத அளவுக்கு மற்ற குற்றங்களும் அதிகமாக உள்ளன.

ஆனால் அதே சமயத்தில் என் உள்ளத்தில் ஒரு கேள்வி எழுந்தது. ஆங்கிலேயர்கள் அவர்களாகவே நம்மை வெற்றி கொள்ளவில்லை; அவர்கள் மிகமிகச் சிலராகத்தானே இருந்தார்கள். பல இந்தியவீரர்கள் அவர்களுக்காக இந்தியாவை வென்று கொடுத்தார்கள். ஆங்கிலேயர்கள் அவர்களாக போதை மருந்து வணிகத்தைச் செய்யவில்லை; பல இந்தியவணிகர்களும் (சீனர்களும்) இந்த அசிங்கமான வேலையை அவர்களுக்காகச் செய்தார்கள். ஜாலியன் வாலா பாக்கில் பாதுகாப்பற்ற இந்தியர்களை சுடுவதற்கு ஜெனரல் டயர் உத்தரவிட்டிருக்கலாம், ஆனால் துப்பாக்கியைத் தாங்கிப் பயன்படுத்திய வீரர்கள் பெரும்பாலும் இந்திய துணைக்

கண்டத்தைச் சேர்ந்தவர்களே. 1940 ஆம் ஆண்டின் முற்பகுதிகளில் வங்காளத்தில் ஏற்பட்ட ஏற்பட்ட பஞ்சத்திற்கான (இறப்பு எண்ணிக்கை 1.5 மில்லியனிலிருந்து நான்கு மில்லியன்களாக மதிப்பிடப்பட்டது) நிகழ்வுகளுக்கு வின்ஸ்டன் சர்ச்சில் (ஹிட்லரிலிருந்து சிறிதும் வேறுபடாத ஒரு போர்க்குற்றவாளி) உத்தரவுகள் பிறப்பித்திருக்கலாம், ஆனால் அதை நடைமுறைப் படுத்திய அதிகமான அதிகாரிகள் இந்தியர்கள்.

இத்தகைய குற்றங்களை தங்கள் சொந்த மக்கள்மீது நிகழ்த்திய இந்தியர்கள் ஏன் அதனை எதிர்த்துப் புரட்சி செய்யவில்லை? 'என்னுடைய மக்களுக்கு இதனை நான் செய்யமாட்டேன்' என்று ஏன் அவர்கள் கூறவில்லை? ஆங்கில சாம்ராஜ்யத்திற்காக வெறுப்புமிக்க மன்னிப்புக்கோருவோர் (அவர்களில் பலர் இந்தியர்கள்) நாங்கள் நம்மை 'இந்தியர்'களாக நினைக்கவில்லை என்று கூறுவார்கள். ஏனென்றால் ஆங்கிலேயர் வருவதற்கு முன்பு ஒரே நாடாக இருக்கவில்லை. அது அறிவீனம்.

பல்லாயிரக்கணக்ககான ஆண்டுகளாக கலாச்சாரம் மற்றும் நாகரீகம் என்ற வகையில் இந்தியா ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. இதை நிரூபிப்பதற்கு போதுமான உதாரணங்களும் ஆவணங்களும் உள்ளன. அவற்றில் சிலவற்றைக் காண்பதற்கு நான் மேலே குறிப்பிட்டுள்ள நூல்களை நீங்கள் படிக்க முடியும். எப்படிப் பார்த்தாலும், பதினேழாம் நூற்றாண்டில் ஏற்பட்ட வெஸ்ட்ஃபாலியா ஒப்பந்தங்களுக்குமுன்பு 'நாடுகள்' அரசியல் பகுதி என்ற வகையில் இருக்கவில்லை, ஆனால் கலாச்சார அடிப்படையில் இருந்தன. பதினாறாம் நூற்றாண்டு இங்கிலாந்தில், எட்டாம் ஹென்றி மன்னருக்கு விசுவாசமாக இல்லாமல் இங்கிலாந்துக்கு விசுவாசமாக இருந்தால் நீங்கள் துரோகி என்று முத்திரை குத்தப்படுவீர்கள். ஆனால் அந்த நேரத்தில் இந்தியாவில் கலாச்சார கருத்து இருந்தது போலவே இங்கிலாந்தின் கலாச்சார கருத்து நிலவி வந்தது.

ஆகவே, இந்திய கூட்டாளிகள் தனிப்பட்ட பேராசையில் உந்தப்பட்டு இருந்தார்களா? இது ஆங்கில ஆட்சியை ஆதரித்த வணிகர்களின் உள்நோக்கத்தையும் அவர்கள் மிகப்பெரும்செல்வந்தர்கள் ஆனதையும் புரிந்து கொள்வதற்கு உதவக்கூடும். ஆனால் ஆங்கில அரசுக்காகப் போரிட்டு

உயிர்நீத்த இந்திய வீரர்களின் நடத்தையை இது விளக்குகிறதா? மற்றவர்களுக்காக உயிர்துறத்தல் என்பதை விட ஒரு மிகப்பெரிய தன்னலமில்லாத தன்மை இருக்க முடியாது என்பது சரிதானா? ஆங்கிலேயர்களுக்காகப் போரிட்டு உயிர் துறந்த இந்தியர்கள், பெரும்பாலும் தாழ்ந்த இனத்தைச் சார்ந்தவர்கள் என்றும் அவர்கள் தங்கள் சமூகத்தினரால் இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்து, வெளிநாட்டு சக்தியுடன் இணைந்து போராடிக்கொண்டிருந்தார்கள் என்றும் சிலர் குறைகூறுகிறார்கள். இது உண்மைகளில் வெளிப்படையானது. பதினெட்டாம் நூற்றாண்டிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஆங்கிலேயப் படையில் சேர்ந்து இந்தியாவை அவர்கள் வெல்வதற்கு உதவியவர்களில் பெரும்பாலான இராணுவ வீரர்கள் உண்மையில் மேல்தட்டு வகுப்பு மக்கள்தான் (பக்கக்குறிப்பு: இந்த மாதிரியான வீரர்கள்தான் 1857 ஆம் ஆண்டில் முதலாம் சுதந்திரப் போரில் புரட்சி செய்தவர்கள்). பிறகு ஏன் அவர்கள் தங்கள் சொந்த நாட்டு மக்களுக்கு எதிராகச் செயல்பட்டார்கள்?

எனக்கு ஒரு சிந்தனை தோன்றியது. அதனை நான் உங்கள் சிந்தனைக்கு வைக்க விரும்புகிறேன்.

வரலாற்றின் அறிந்த பகுதிகளின் பெரும்பாலானவற்றின் படி, சொத்து மற்றும் தனிநபர் வருமானம் என்ற முறையிலும் அதைப்போலவே அறிவு மற்றும் அறிவியல் என்ற வகையிலும் இந்தியா முன்னிலையில் சென்றுள்ளது. கணிதம், மருத்துவம், உலோகவியல், கடல்பயணம், வானிவியல் மற்றும் இதுபோன்ற பலதுறைகளிலும் நம்முடைய முன்னோர்கள் கண்டுபிடிப்புகளையும் புதிய உருவாக்கங்களையும் செய்துள்ளனர். ஆனால் நம்முடைய உயர்வான பங்களிப்பு ஆன்மிகத்திலும் தத்துவத்திலும் இருந்தது. இந்த தளத்தில் கண்டுபிடித்த ஒன்று, உச்ச நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டதால் ஒருவேளை நமக்கு சாதகமாகச் செயல்படவில்லையோ என்று நான் கருதுகிறேன்.

அந்த தத்துவார்த்த கண்டுபிடிப்பு சுயதர்மம் என்பதுதான். அல்லது நவீன ஆங்கில வார்த்தை 'குறிக்கோள்' என்று வழக்கமாக விளக்குகிறது.

ஒரு பயனுள்ள வாழ்க்கை வாழ்வதற்கான உதவி செய்வதற்கு தத்துவார்த்த கட்டமைப்பு என்ற வகையில், ஒரு குறிக்கோளைக் காண்பது என்பது உண்மையில் மிகவும் நல்ல வழிமுறைதான்.

வேண்டும். அதன் எளிமையான கருத்துரு இதுதான். உங்கள் குறிக்கோளான சுயதர்மத்தை

கண்டுபிடிக்க வேண்டும். அதை வாழ்ந்து காட்ட வேண்டும். அதற்குப்பிறகுதான் நீங்கள் உண்மையான சாதனையையும் சுய மகிழ்ச்சியையும் காண்பீர்கள். இருந்தாலும் உங்களுக்கு உரிய குறிக்கோளை நீங்களேதான் கண்டு பிடிக்க வேண்டும். சமுதாயம் தன் கருத்தை உங்கள்மீது திணிக்க அனுமதிக்கக் கூடாது. குறிக்கோளைக் கண்டுபிடிப்பதில் உள்ள அழகு நீங்கள் உங்கள் வாழ்க்கையை அதனோடு ஒத்து வாழ்வதில் இருக்கிறது. அதன் பிறகு வெற்றியோ தோல்வியோ ஒரு பொருட்டாக இருக்காது. நீங்கள் மகிழ்ச்சியைத் தவிர வேறு எதனையும் அனுபவிக்க மாட்டீர்கள். நான் செய்வதைப்போல், என்னுடைய குறிக்கோளுக்கேற்ப நான் வாழும்போது, நான் விரும்பும் என் தேசமான இந்தியாவின் கலாச்சாரத்தின் தத்துவங்களின் சிறப்பை வெளிக்கொண்டு வந்து நூல்கள் எழுதுகிறேன்.

ஆனால் சுயதர்மம் அதன் உச்ச நிலையை எடுக்கும்போது கடிவாளமிடாத தனித்தன்மைக்கும் தன் விருப்பத்திற்கும் இட்டுச் செல்ல முடியும். தங்கள் குறிக்கோளான தங்கள் சுயதர்மம் மற்றவர்கள் மீதோ அல்லது முழுமையான சமுதாயத்தின் மீதும் கூட உள்ள தாக்கத்தைக் கருதுவதை நிறுத்தாத குடிமக்களுக்கு இது உயர்வை அளிக்கக் கூடும். தங்கள் குறிக்கோளை உணர்வதற்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதில் அவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். சமுதாயத்தின்மீது எதிர்மறை நிலையில் வெளிப்படையாகத் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய திட்டங்களின் மீது இன்று சில விஞ்ஞானிகள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மரபணுமாற்ற குழந்தை உருவாக்கம் அதில் ஒன்று. இருந்தபோதிலும் அவர்கள் தங்கள் குறிக்கோளான தூய்மையான அறிவியல் முன்னேற்றம் என்பதில் தொடர்வதையே தேர்ந்தெடுக்கின்றனர்; அவர்கள் சொந்த சமுதாயத்தின் மீது ஏற்படும் தாக்கத்தை நினைப்பதில்லை.

ஆங்கிலேயர்கள் நம்முடைய கலாச்சாரத்தை நன்கு புரிந்து கொண்டுள்ளார்கள். இந்தியர்களில் உள்ள இராணுவத்தினரின் சுயதர்மத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்களுக்கு ஒரு குறிக்கோளைக் கொடுத்து அவர்களின் சிறப்பான திறமையை நமக்கு எதிராகப் பயன்படுத்தினார்கள். பொதுமக்களின் விழாக்கள், கொண்டாட்டங்கள், சடங்குகள்

மூலம் இதனைச் செய்தனர். தங்கள் குறிக்கோளை மட்டுமே முக்கியமாகக் கொண்டு வாழும் தனிப்பட்டவர்களைக் கொண்ட ஒரு சமுதாயம் எளிதாக அழிக்கப்பட்டுவிட முடியும். தன்னுடைய ஒன்றிணைந்த குறிக்கோளை உருவாக்க முயற்சி செய்வதில் சமுதாயமே கூட தோற்றுப் போகலாம்.

நாம் நம்முடைய சுயதர்மத்தை ஒதுக்கி வைக்கிறோம் என்று இப்போது நான் சொல்வதற்கு வரவில்லை. நம்முடைய குறிக்கோளோடு ஒருங்கிணைந்து நம்முடைய வாழ்க்கையை வாழவேண்டியது நம்முடைய கடமையாகும். ஆனால் அதேவைளேயில் நம்முடைய நாட்டுக்கான தர்மத்தையும் நாம் மறக்காதிருக்க வேண்டும். நாட்டுக்கான தர்மம் ஏதோ நம்முடைய தலைவர்கள் காத்து வைத்தது மட்டுமல்ல. நம்முடைய இந்த மிகப்பெரிய நாட்டில் வசிக்கும் குடிமக்களாகிய பொதுமக்களாலும் கூட பின்பற்றப்பட வேண்டும்.

இன்னொரு வகையில் சொல்வதானால் நம்முடைய தனிப்பட்ட குறிக்கோளைப் போலவே நாட்டுப்பற்றும் மிகவும் முக்கியமானது.

இந்த நாட்களில் நாட்டுப்பற்று என்பது ஒரு தவறாகப் பேசப்படும் சொல்லாக இருக்கிறது. பலர் இந்த சமயத்திற்குப் பொருத்தமில்லாத சாமுவேல் ஜான்சன் கூறிய ஒரு தொடரை எடுத்துக் கூறுகிறார்கள். அவர், 'தேசப்பற்று என்பது இழிவுமிக்கவர்களின் இறுதிப் புகலிடமாக இருக்கிறது' என்று கூறியுள்ளார். சாமுவேல் ஜான்சன் பொய்யான நாட்டுப்பற்றைக் குறிப்பிட இதைக் கூறியுள்ளார் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. உண்மையான நாட்டுப்பற்றை அவர் மதித்துப் போற்றியுள்ளார்.

அதைத்தான் நான் முன்வைக்கிறேன். உண்மையான நாட்டுப்பற்று. ராஜிய தர்மம். நம் சொந்த நாட்டிற்காக ஆழமான கட்டுப்படுத்தும் அன்பு. இங்கு வாழும் அனைவர் மீதும் அன்பு செலுத்துவது. நம்முடைய தலைவர்கள் நாட்டின் நலனுக்காக அல்லது மாநிலத்தின் நலனுக்காக செயல்படவில்லை என்று நம்பினால் அவர்களைக் கேள்வி கேட்பதற்கு நம்மை அனுமதிக்கும் ஆக்கபூர்வமான அன்பு. நம்முடைய சொந்தக் குடிமக்களையே நாம் முன்னேற்ற வேண்டிய விஷயங்கள் பற்றி கேள்வி கேட்பதற்கு நம்மை ஊக்குவிக்கின்ற அன்பு, ஏனென்றால் நம்முடைய நாடு நம்முடைய முன்னோர்கள்

வாழ்ந்ததற்கு உள்ள தகுதியோடிருக்கவேண்டும் என விரும்புகிறோம்.

என்னைப் பொருத்தவரையில் நம்முடைய நாட்டுக்காகக் கொள்கின்ற அன்பு சமரசம் செய்து கொள்ளத்தக்கதல்ல. நாம் நம்முடைய அரசாங்கத்தை வெறுப்பதற்கு எல்லாவித உரிமையும் பெற்றுள்ளோம். ஆனால் நம்முடைய நாட்டை நேரடியாக வெறுத்துக்கொண்டு நாம் இந்தியாவில் வாழ முடியாது. ஒரு நாடு அதனை வெறுத்துக் கொண்டிருப்பவர்களால் உருவாக்கப்பட்டிருப்பதல்ல. அது அதனை விரும்புகின்றவர்களின் தோள்களின் மீது அமைக்கப்படிருக்கிறது.

கடந்த சில நூற்றாண்டுகளில் இந்தியர்கள் செய்த தவறுகளிலிருந்து கற்றுக்கொள்வோம். நம்முடைய குறிக்கோளான சுயதர்மத்தில் கவனம் செலுத்துவோம். ஆனால் நாம் நம்முடைய நாட்டுக்கான தர்மத்தை மறந்துவிடக்கூடாது. அது இந்த மிகப்பெரிய நாட்டுக்கான நம்முடைய கடமையாகும்.

பாரத் மாதா கி ஜே! இந்தியத்தாய்க்குப் புகழ் நிறைக!

---

**2017ஆம் ஆண்டு தி டெலிகிராஃப் இதழில் முதலில் வெளிவந்தது**


# அமீஷின் பிற நூல்கள்...

## சிவா முத்தொகுதி










## இராமச்சந்திரா தொகுதி

